Koviloor Digital Library

# ஞானச்சுடர்

5-6

மா.சண்முகசுப்பிரமணியம்

ACC NO! 2443
R. 65

Koviloor Digital Library

Koviloor Digital Library

5-6

# ஞானச்சுடர்

2443

மா. சண்முக சுப்பிரமணியம், பி.எ., பி.எல்.
(தமிழ் நாடு சட்டமன்ற முன்னாள் செயலாளர்)

கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்-630 307

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 2443

விற்பனை உரிமை:
தமிழ்ப் புத்தகாலயம்
576, பைகிராப்ட்ஸ் ரோடு,
சென்னை-5

1976 15/00

Koviloor Digital Library

# BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| 1. | Title | "Gnanachudar" |
| 2. | Author | M. Shanmugasubramaniam |
| 3. | Date of Birth | 15—8—1922 |
| 4. | Language | Tamil |
| 5. | Edition | First |
| 6. | Copy right holder | M Shanmugasubramaniam |
| 7. | Paper used | White Printing 14·2 kg, Mysore |
| 8. | Size of the book | $8\frac{1}{2}'' \times 5\frac{1}{2}''$ |
| 9. | Printing Point | 10 pt. |
| 10. | No. of pages | 326+IV |
| 11. | No. of copies printed | 2000 |
| 12. | Printer | Kandeepam Printers, Madras-40 |
| 13. | Binding | Section with jacket |
| 14. | Price | Rs. 15/- |
| 15. | Publisher | Saradha Ammal |
| 16. | Subject | Spiritual knowledge as man. fest in the ancient scriptures and the devotional songs of the saints of India. |
| 17. | Call No. | Q:3 L 8 |

Koviloor Digital Library

உ

முருகா

# அணிந்துரை

(திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்)

நேரிசை வெண்பா

**மக்களெலாம் ஓதி மனநலம் மாண்புபெற
தக்கநெறி நீதி தழைக்கவே-மிக்க புகழ்
சண்முக சுப்ரமணிச் சாந்தமணி தந்தனஞல்
தண்முகத் தெய்வநெறி சார்ந்து.**

பஞ்சு நூல் மரக் கோணலை மாற்றும்; சான்ருேர்களின் செஞ்சொல் நூல் மனக்கோணலை மாற்றும் மகிமையுடையது. நமது தண்டமிழ் நாட்டில் திருவள்ளுவர் முதல் பாம்பனடிகள் ஈருக உள்ள நுண்ணிய மதிநலம் படைத்த மகான்கள் பலப்பல அரிய பெரிய கருத்துக்களை அவ்வப்போதுள்ள மாந்தர்கள் உய்யும் வண்ணம் வாரிவாரி வழங்கியுள்ளார்கள்.

இத்தகைய வித்தக அறிவு நூல் கடலில் முழுகித் தத்துவ முத்துக்களை எடுத்து, அறிவு ஒளி வீசும் வண்ணம் அன்பு நூலில் கோத்துத் தமிழ் மக்களுக்கு என் ஆருயிர் நண்பர், விழுமிய கெழுதகை நண்பர், உயர்திரு மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள் வழங்குகின்ருர். ஆ! ஆ! இந்த நூலின் தரம், தண்டமிழ்த் திறம் அன்பர்க்கு வரமாகத் திகழ்கின்றது. என்னே இவருடைய கூரியமதி! சீரியநிதி!

பாரிலுள்ளார்க்கு இது என்றும் நின்று உதவும். கற்பார்க்கு உள்ளத்தில் அன்பு வெள்ளம் கரைபுரண்டு ஓடும்வண்ணம் இந் நூல் அமைந்துள்ளது. "உணர்வின் மூர்த்தி" என்று தொடங்கி "ஞானச்சுடர்" என்று கீர்த்தி யுடன் பூர்த்தி பெறுகின்றது. ஆழ்ந்தகன்று நுணுகி இதனை எழுதியுள்ளார்.

Koviloor Digital Library

ஆன்றோர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சென்று, அளிந்த கனிரசம் போல், தெளிந்த அறிவினுல் இதனைப் படைத்தனர்.

ஆங்கில நூலில் வல்ல சண்முகசுப்பிரமணியம் அவர்கள், வேத உபநிடத சாரமாக இதனைத் தீட்டியுள்ளார். பலப்பல சமய சாத்திரங்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார். இந்த நூல் கற்பாரின் அறிவுக்கு விருந்தாகவும், பிறவிப் பிணிக்கு மருந்தாகவும் திகழ்கின்றது.

இவருடைய உழைப்பு பாராட்டுதற்கு உரியது. சமரச நோக்குடன் இந்நூல் வரையப்பட்டு, குறைவு இன்றி நிறைவு பெறுகின்றது. கொஞ்சும் செஞ்சொல் விஞ்சி கம்பீரமாக நடைபோடுகின்றது. ஆசிரியரின் அறிவுத்திறனை, ஆராய்ச்சிப் பாங்கினை எத்துணைப் பாராட்டினுலும் தகும்.

அன்பர்கள் இதனை விரும்பிப் படித்துப் பண்பும் பயனும் பெறுவார்கள். வயலூர்ப் பெருமானது கருணை இவருக்கு என்றும் நின்று துணை புரியுமாக.

அன்பன்,

கிருபானந்தவாரி.

Koviloor Digital Library

# அணிந்துரை

## (உயர்திரு. ஏ. என். சிவராமன் அவர்கள்)

"ஞானச்சுடர்" என்ற இந்த நூலில் அடங்கியுள்ள கட்டுரைகள் 1976ஆம் ஆண்டில் "தினமணி" ஞாயிறு "சுடரில்" தொடர்ந்து வெளிவந்தன.

இந்து சமயத்தின் சாரத்தினை எளிய இனிய தமிழில், எவரும் புரிந்துகொள்ளும் விதத்தில், ஆசிரியர் திரு **மா. சண்முக சுப்பிரமணியம்** எழுதியுள்ளார். இக்கட்டுரைகள் வெளி வந்த பொழுது, படித்தவர்கள் பாமரர்கள் பலரிடம் இருந்தும் பாராட்டுக் கடிதங்கள் வந்து கொண்டே இருந்தன. சமய நூல்களில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர்களும் கூட இக்கட்டுரைகளைப் பாராட்டி எழுதியிருந்தனர்.

இந்தக் கட்டுரைகள் இப்பொழுது நூல் வடிவில் வெளி வருவது குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். பகுத்தறிவு வாதிகளும் பக்தியில் தோய்ந்தவர்களும் விரும்பிப் படிக்கும் விதத்தில் இக்கட்டுரைகள் அமைந்துள்ளன.

ஆழ்வார்கள் நாயன்மார்கள் ஆகியோர் அருளியுள்ள பாசுரங்களும் பக்திப் பாடல்களும் எத்தகைய நுட்பமான தத்துவங்களைக் கொண்டுள்ளன என்பதை இந்நூலில் இருந்து நாம் எளிதில் தெரிந்து கொள்ளுகிறோம். ஆங்காங்கு பொருத்தமான உபநிடதக் கருத்துக்களும், மேனாட்டு அறிஞர்களின் கருத்துக்களும் இடம் பெறுகின்றன.

நம் இந்திய நாகரிகத்திற்கு அடிப்படையான ஆன்மீக ஞானத்தினைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பும் அனைவரும் படிக்க வேண்டிய நூல் இது.

நன்னெறி நின்று நல்வாழ்வும் மன அமைதியும் பெறுவதற்கு வழிகாட்டியாக இந்நூல் விளங்குகிறது. இந்த "ஞானச்சுடர்" நம் ஒவ்வொருவர் உள்ளத்திற்கும் ஒளி ஊட்டுவதாக.

சென்னை
30—12—77

ஏ. என். சிவராமன்

Koviloor Digital Library

Koviloor Digital Library

# முகவுரை

ஆன்மீக உணர்வு இல்லாத மனிதர்கள் இல்லை என்றே சொல்லலாம். நம் கண்ணுக்குத் தெரியும் எழில் மிக்க இயற்கைப் பொருள்களுக்கு அப்பால் ஏதோ ஒரு சக்தி உள்ளது என்பதை நாம் உணருகின்றோம், நம் முன்னோர்களும் உணர்ந்திருந்தனர். அந்த உணர்விலே உதிக்கும் உயர்ந்த எண்ணங்களே நம் ஆன்மீக ஞானத்திற்கு அடிப்படை ஆகின்றன.

உபநிடத முனிவர்கள் நமக்கு உணர்த்தும் ஒப்பற்ற ஆன்மீக உண்மைகளை ஆழ்வார்களும் நாயன்மார்களும், அவர்களுக்குப்பின் வந்த அடியார்களும் தேனொழுகும் தமிழிலே திரட்டித் தந்துள்ளனர்.

இவ்வளவு எளிதாகவும் இனிதாகவும் உள்ள ஆன்மீக ஞானத்தைப் பெறுவதில் நம்மில் பெரும்பாலோர்க்கு அக்கறை இருப்பதில்லை! இதற்கான காரணங்கள் இரண்டு; ஒன்று, ஆன்மீக ஞானத்தினை நாம் எளிதில் புரிந்து கொள்ள முடியாது என்ற பொய்யான அச்சம்; இரண்டு, ஆன்மீக ஞானம் நம் அன்றாட வாழ்விற்கு உதவுவதில்லை என்ற தவறான எண்ணம்.

ஆன்மீக ஞானத்தைப்போல் நாம் எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடியது வேறு இல்லை! அது எளிதானது மட்டுமன்று, இன்ப அனுபவமும் ஆகும். ஈடில்லாத இன்பத்தை அளிக்கும் அந்த ஞானந்தான் நம் வாழ்விற்கும் வழி காட்டி நிற்கிறது! இன்பமாக வாழ்வதற்கு, எதையும் கண்டு அஞ்சாமல், அயராமல் வாழ்வதற்கு இதைவிட வேறு துணை நமக்கு இல்லை!

இத்தகைய இன்ப ஞானத்தினைப் பெறும் ஆர்வம் எல்லோருக்கும் எழ வேண்டும் என்ற வேட்கையில் விளைந்ததே இந்நூல். இந்த முயற்சியில் இறங்குவதற்கான தகுதி ஏதும் என்னிடம் இல்லை என்பதை நான் நன்கு உணர்ந்துள்ளேன். இருப்பினும், ஏதோ ஒன்று இடைவிடாது தூண்டியதால் துணிந்து இதனை எழுத முற்பட்டேன்!

இம் முயற்சிக்கு ஊக்கம் அளிக்கும் முறையில் "தினமணி" ஞாயிறு "சுடரில்" 1976ஆம் ஆண்டில் இதனைத் தொடர்ந்து வெளியிட்டனர்.

ஆன்மீக ஞானமும் அரசியல் புலமையும், நாட்டுப்பற்றும் நல்லெழுத்துத் திறனும் ஒருங்கே பெற்று உயர்ந்து திகழும் ஆசிரியர் உயர்திரு. ஏ. என். சிவராமன் அவர்கள் அன்புடன் இந்நூலுக்கு அணிந்துரை நல்கியுள்ளனர். அன்னாருக்கு என் உளங்கனிந்த நன்றி.

இதனைச் சிறந்த முறையில் அச்சேற்றி உதவிய காண்டீபம் அச்சகம், திரு. எம். எஸ் ராஜன் அவர்களுக்கும் எனது நன்றி.

ஆன்மீக உணர்வு என்ற "ஞானச்சுடரின்" ஒளி எங்கும் பரவி இன்பம் பெருகுவதாக.

3084, அண்ணாநகர்,
சென்னை,
30—12—1977.

மா. சண்முக சுப்பிரமணியம்

Koviloor Digital Library

# பொருளடக்கம்

## முதற்பாகம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | உணர்வின் மூர்த்தி ... | 1 |
| 2. | பூத மூர்த்தி ... | 13 |
| 3. | ஒரு மூர்த்தி ... | 21 |
| 4. | ஞான மூர்த்தி ... | 28 |
| 5. | இதய மூர்த்தி ... | 36 |
| 6. | மாய மூர்த்தி ... | 45 |
| 7. | அற்புத மூர்த்தி ... | 53 |
| 8. | சொல்லரிய மூர்த்தி ... | 63 |
| 9. | அறிவரிய மூர்த்தி ... | 72 |
| 10. | நினைப்பரிய மூர்த்தி ... | 82 |
| 11. | அருவுருவ மூர்த்தி ... | 92 |
| 12. | ஆதி மூர்த்தி ... | 105 |
| 13. | காரண மூர்த்தி ... | 117 |
| 14. | ஆன்ம மூர்த்தி ... | 128 |
| 15. | ஆனந்த மூர்த்தி ... | 147 |
| 16. | பிறப்பறுக்கும் மூர்த்தி ... | 165 |
| 17, | பக்தி வலைப்படுவோன் ... | 178 |
| 18. | ஆத்திகமும் நாத்திகமும் ... | 189 |
| 19. | விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் ... | 202 |
| 20. | இயற்கையும் இறைமையும் ... | 214 |
| 21. | ஞான நாடகம் ... | 225 |


## இரண்டாம் பாகம்


| | | |
|---|---|---|
| 22. | இறையுணர்வால் எய்தும் நலன்கள் ... | 237 |
| 23. | அன்புடைமை ... | 243 |
| 24. | அறம் பேணல் ... | 252 |
| 25. | அச்சமின்மை ... | 261 |
| 26. | ஒழுக்கமுடைமை ... | 268 |
| 27. | அடக்கமுடைமை ... | 277 |
| 28. | கடமையாற்றும் கலை ... | 285 |
| 29. | ஆற்றலுடைமை ... | 295 |
| 30. | அருளுடைமை ... | 303 |
| 31. | ஞானச்சுடர் ... | 313 |

Koviloor Digital Library

# ஞானச் சுடர்

## முதற் பாகம்

Koviloor Digital Library

Koviloor Digital Library
KOVILUR ADHEENAM
KOVILUR B. O.
(Via) MANAGIRI
RAMANATHAPURAM DIST.
PIN: 623 307

# 1. உணர்வின் மூர்த்தி

" அண்ட சராசரங்களுக்கும் ஆதாரமானது பிரமம். அது தூய அகவுணர்வாக உள்ளது."

(ஐத்ரேய உபநிடதம்.)

அழகான பெயர்களைத் தெய்வத்திற்கு வைத்துப் போற்றினார்கள் நம் முன்னோர்கள். அப் பெயர்களை நம் குழந்தைகளுக்கும் இட்டு நாம் மகிழ்கின்றோம். இராமமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, சுந்தரமூர்த்தி என்ற எத்தனையோ தெய்வப் பெயர்களைக் கொண்டு மனிதர்களை நாம் அழைக்கிறோம்.

மனிதர்களுக்கு வைக்க முடியாத தனிச் சிறப்பான ஒரு பெயரை ஆண்டவனுக்குச் சூட்ட விரும்பினார் ஞானி நம்மாழ்வார். எவருக்கும் பொருந்தாமல் இறைவனுக்கு மட்டுமே பொருந்தக் கூடிய பெயர் ஒன்றை அவர் தேடினார். முடிவில் ஒரு பெயரைக் கண்டு அதனை இறைவனுக்குச் சூட்டினார் அந்த மெய்ஞ்ஞானி.

மனிதர் எவருக்கும் பொருந்தாமல் இறைவனுக்கு மட்டுமே இனிது பொருந்தும் அந்தப் பெயர் என்ன?

"உணர்வின் மூர்த்தி."

என்பதே அந்த ஒப்பற்ற திருநாமம்!

"உணர்வின் மூர்த்தி" — வியப்பூட்டும் பெயராக அல்லவா இருக்கிறது? ஆம்! மிகவும் வியப்பான பெயர்தான்!

ஆனால், அதிசயமான இந்தப் பெயரே இறைவனின் ஒப்பற்ற தன்மையினை உள்ளபடி உணர்த்தும் பெயராகும்!

"தோய்விலன் புலனைந்துக்கும்
சொலப்படான் உணர்வின் மூர்த்தி"

(திருவாய்மொழி—3 ப. 4 தி.)

Koviloor Digital Library



நம ஐம்புலன்களுக்கும் புலப்படாமல் சொற்களிலும் அடங்காத படி நம் உணர்வாக இருக்கிறது இறைமை என்பது நம்மாழ்வாரின் ஞானவாக்கு.

ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்டு, ஆனல் உள்ளத்து உணர் வாக இறைவன் இருப்பது எவ்வாறு என்பதைக் காண்போம்.

★ ★ ★

**சிந்தனை செய்யும் மனிதன்**

இவ்வுலகத்தில் பிறந்து வளரும் மனிதன் தன்னைச் சுற்றியுள்ள உலகப் பொருள்களையெல்லாம் பார்க்கிறன். உயர்ந்து நிற்கும் மலைகள், அடர்ந்து வளர்ந்த காடுகள், நீண்டு செல்லும் நதிகள், இப்படி எத்தனை எத்தனையோ இயற்கைப் பொருள்களை அவன் காணுகிறன். பரந்த கடல், விரிந்த வானம், வானிலே உதித்து மறையும் கதிரவன், வளர்ந்து தேயும் சந்திரன், இரவில் மின்னு கின்ற எண்ணற்ற நட்சத்திரங்கள் இவையெல்லாம் மனிதனை வியப்பிலே ஆழ்த்துகின்றன.

காலந் தவருமல் சூரியன் உதிப்பதும் மறைவதும், பருவ காலங்கள் முறைப்படி வருவதும் போவதும், இன்னும் எத்தனையோ இயற்கை நிகழ்வுகள் ஒழுங்கு தவருமல் நடப்பதும் மனிதனின் சிந்தனையைக் கிளறுகின்றன.

மனிதனேடு உலகத்தில் வாழும் பிற உயிரினங்கள் எவையும் இதைப்பற்றிச் சிந்திப்பதில்லை. பசிக்கும்பொழுது அவை இரை தேடிக்கொள்ளுகின்றன; வளர்கின்றன; காலப்போக்கில் அவை மடிந்து மறைகின்றன. உணவு தேடுதல், இனப் பெருக்கம் இவை இரண்டுமே அவற்றின் தொழில்கள். நம்மைச் சுற்றியுள்ள உலகப் பொருள்களைப்பற்றி எண்ணிப் பார்ப்பதற்கான சிந்தனையே அவற்றுக்கு இல்லை.

ஆனல், மனிதனே மற்ற உயிரினங்களிலிருந்து எவ்வளவோ வேறுபட்டவன். ஆறறிவு படைத்தவன். எப்பொருளையும் பகுத் தறியும் திறம் உடையவன். இந்தச் சிறப்பான பகுத்தறிவுத் திறனைப் பெற்றிருப்பதால்தான் உலகப் படைப்புக்களிலே அவன் உயர்ந்து விளங்குகிறன்.

'மனிதன்' என்றலே மனத்தை உடையவன், சிந்தனை செய்பவன் என்றல்லவா பொருள்?

Koviloor Digital Library



எனவே, இயற்கைப் பொருள்களைக் காணும் மனிதனது உள்ளத்திலே வினக்கள் எழுகின்றன.

இயற்கைப் பொருள்களெல்லாம் எவ்வாறு தோன்றின?

ஏன் தோன்றின?

அவை எவ்வாறு இயங்குகின்றன?

இப்படியாகப் பல கேள்விகள் மனிதனின் மனத்திலே எழுகின்றன. இக் கேள்விகளுக்கு விடை காண முயலுவது மனித குலத்தின் சிறப்பான இயல்பாகிறது.

ஆனல், இவ்வினக்களுக்கு ஏற்ற விடைகளைக் காண மனிதனல் இயலவில்லை. எவ்வளவோ சிந்தித்துப் பார்த்தும் அவனது அறிவுக்கு எதுவும் புலப்படவில்லை.

"எதுவும் தெரியவில்லையே, அதை விட்டுவிடுவோம்" என்று அவனல் இருக்கவும் முடியவில்லை. "தெரியவில்லை என்று விட்டு விட்டால் பகுத்தறிவுள்ள உனக்கும் மற்ற விலங்கினங்களுக்கும் வேறுபாடு இல்லாமல் போய்விடுமே!" என்று மனிதனின் உள் மனம் உறுத்துகிறது.

அவன் மீண்டும் சிந்திக்கிருன்; ஆழ்ந்து சிந்திக்கிருன்; அவனது அறிவு அத்தனையும் கொண்டு சிந்தனை செய்கிருன். ஆனலும் பயனேதும் இல்லை! அவனுக்கு எதுவுமே புலப்படவில்லை!

தன் உள்ளத்தில் உதித்த வினக்களுக்குத் தனது அறிவுத் திறனல் விடைகள் காண இயலாது என்ற நிலையினை அவன் அடைந்துவிடுகிருன்.

### அறிவு அடங்குகிறது ; உணர்வு உதிக்கிறது

சிந்தனை செய்து செய்து அவன் மனம் ஓய்ந்து போகிறது. அறிவும் ஒடுங்கிவிடுகிறது. அவன் உள்ளத்திலே ஓர் அமைதி நிலவுகிறது. அறிவு அடங்கி நிற்க, அமைதியான உள்ளத்துடன் இயற்கைப் பொருள்களை அவன் மீண்டும் நோக்குகிருன்.

அந்தி வானத்தின் அழகு, ஆழ்கடலின் அமைதி, நீண்ட மலைத் தொடர்கள், நீல வானப் பரப்பு இவ்வியற்கைக் காட்சிகளோடு மனிதனின் உள்ளம் ஒன்றியது. ஒலித்துச் செல்லும் நதிக்கரையில் ஓங்கி வளர்ந்த மரத்தடியில் அமைதியான மனத்துடன் அவன்

Koviloor Digital Library



அமர்ந்துகொண்டு இயற்கைக் காட்சிகளின் மாட்சியை எண்ணி எண்ணிப் பார்த்தான்.

அறிவையும் ஆராய்ச்சியையும் கைவிட்டு, அடங்கிய உள்ளத்துடன் அமைதியாக இயற்கைக் காட்சிகளை நோக்கும்பொழுது அவன் இதயம் இயற்கையோடு இணைந்தது, இளகியது. இவ்வாறு, உருகிய அவன் உள்ளத்திலே ஓர் உணர்வு மெல்ல மெல்ல உதித்தது.

அலைகடல் ஓசையும் ஆழ்கடல் அமைதியும் மனிதனின் இதயத்தை ஈர்த்தன. எட்டாத வானத்தில் இரவு நேரத்தில் எழிலுடன் மின்னும் எண்ணற்ற நட்சத்திரங்கள் எதையோ ஒன்றை உணர்த்தின! உதயசூரியனின் ஒப்பற்ற காட்சியில் ஏதோ ஒன்றை அவன் உணர்ந்தான்! ஓடும் நீரின் ஒலியும் பாடும் பறவைப் பண்ணும் அவன் உள்ளத்தை உருக்கி உணர்வொன்றை எழுப்பின! இவ்வாறு, இயற்கையோடு இயைந்து இளகிய அவன் இதயத்திலே ஒளி போன்ற ஓர் உணர்வு உதித்தது!

அது என்ன உணர்வு?

இயற்கைப் பொருள்களுக்கெல்லாம் மூலமாக ஏதோ ஒன்று இருக்கிறது என்ற உணர்வுதான் அது! அண்டங்களனைத்தையும் ஆட்டி வைக்கும் ஆற்றல் ஏதோ உள்ளது என்ற உணர்வுதான் அது!

**மெய்யுணர்வு**

நம் முன்னோர்கள் எய்திய இந்த உணர்வினை நாமும் இன்று எய்துகிறோம்.

இயற்கைக் காட்சிகளின் மாட்சியை ஓர்ந்து காணும்பொழுது நம் இதயம் நெகிழ்கின்றது. இதயத்தின் நெகிழ்ச்சியிலே எழும் உணர்வுதான் இயற்கையனைத்துக்கும் மூலமாக ஏதோ ஒன்று இருப்பதை உணர்த்துகிறது.

அந்த ஒன்று எப்படிப்பட்டது? இன்னபடி உள்ளது என்பது பற்றி எதுவும் தெரியாவிட்டாலும், ஏதோ ஒரு சக்தி இருக்கிறது என்பதை மட்டும் நாம் உணருகிறோம்.

இந்த உணர்வினையே "**மெய்யுணர்வு**" என்கின்றனர் சான்றோர்.

Koviloor Digital Library



இதுதான் "மெய்யுணர்வு" என்றால் மற்றவை எல்லாம் பொய்யுணர்வுகளா?

மின் விளக்கு எரிகின்றது; மின் விசிறி சுழல்கின்றது. இவற்றை நாம் பார்க்கிறோம். விளக்கும் விசிறியும் தாமாகவே இயங்குகின்றன என்று நாம் எண்ணினால் அது பொய்யறிவு தானே. விளக்கினை எரியச் செய்வதும் விசிறியைச் சுழலச் செய்வதும் நம் கண்ணுக்குத் தெரியாத மின்சாரந்தான் என்பதை அறிவதே மெய்யறிவாகும்.

இதுபோல், உலகப் பொருள்களை எல்லாம் உள்நின்று இயக்கும் சக்தி ஒன்று உள்ளது என்பதை உணர்வதே "மெய்யுணர்வு" என்கின்றனர் ஞானிகள்.

எத்தனை எத்தனையோ காலங்களாக இயற்கைக் காட்சிகளையெல்லாம் கண்டு அவற்றில் ஒன்றி உருகிய மனித உள்ளத்திலே உதித்து எழுந்த ஒப்பற்ற உணர்வே இந்த மெய்யுணர்வு.

இந்த "மெய்யுணர்வினை"யே "இறையுணர்வு" என்று குறிப்பிடுகின்றனர்.

தன் உள்ளத்தால் உணரப்படும் அந்தச் சக்தியைத்தான் நாளடைவில் மனிதன் "தெய்வம்" என்றான்; "இறைவன்" என்றான்; "ஆண்டவன்", "கடவுள்" என்றெல்லாம் குறிப்பிட்டான்.

அண்டங்களனைத்திற்கும் ஆதாரமாக இறைமை என்ற பொருள் ஒன்று உள்ளது என்ற எண்ணம் நம் உணர்வில்தானே உதிக்கின்றது? இயற்கையின் ஏற்றத்தில் இறைவனைக் காண வைப்பது நம் உள்ளத்து உணர்வுதானே? எனவே, அந்த உணர்வாகவே இறைவனைப் போற்றுகின்றனர் மெய்யடியார்கள்.

**"உணர்வினில் நின்ற ஒன்றை உணர்ந்தேனே"**

**(திருவாய்மொழி—8 ப. 8 தி.)**

என்கிறார் நம்மாழ்வார்.

**"உடையாய் போற்றி, உணர்வே போற்றி"**

**(திருவாசகம்—போற்றித் திருவகவல்)**

என்று பாடுகின்றார் மாணிக்கவாசகர்.

Koviloor Digital Library



"உள்ளத்தினுள்ளே உணரும் ஒருவனை"

(திருமந்திரம்—511)

என்று இறைவனைப் போற்றுகிறார் திருமூலர்.

"உணர்வாகி அடியேனது உள்ளே நின்ற தேனமுதை"

(தேவாரம்—திருவாலவாய்)

என்று துதிக்கின்றார் திருநாவுக்கரசர்.

"உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே"

(திருவிசைப்பா)

என்று இறைஞ்சுகின்றார் திருமாளிகைத் தேவர்.

"உள்ளொளியே, உள்ளத்து உணர்வே"

(மகாதேவமாலை—25)

என்று ஏத்துகின்றார் இராமலிங்க அடிகள்.

"அண்ட சராசரங்களுக்கும் ஆதாரமான பிரமம்
அகவுணர்வாக உள்ளது"

என்று தெளிவாகக் கூறுகின்றது ஐத்ரேய உபநிடதம்.

பரம ஞானத்தினைப் பாமரர்களும் புரிந்துகொள்ளவேண்டும் என்ற பரிவுடன் பாடும் ஞானக் கவி பாரதியார், "உண்மைப் பொருளான பிரமம் நமது உணர்வாகவே உள்ளது" என்று பாடுகின்றார் :

"ஒன்று பிரமம் உளது உண்மை அஃதுன்
உணர்வு எனும் வேதமெல்லாம்—என்றும்
ஒன்று பிரமம் உளது உண்மை அஃதுன்
உணர்வு எனக் கொள்வாயே."

(அறிவே தெய்வம்)

இந்த உணர்வினை நாம் எவ்வாறு பெறுகின்றோம்?

இயற்கையின் எழிலான தோற்றத்தினைக் கண்டு நம் உள்ளம் உருகி இதயம் நெகிழும்பொழுதுதான் "இறையுணர்வு" எழுகின்றது. "உள்ளம் உருகி நிற்கும் அடியார்களின் நெகிழ்ந்த இதயத்திலே எழும் உணர்வின் ஒளியே" என்று இறைவனைத் துதிக்கின்றார் குமரகுருபரர்.

"உருகும் அடியர் இதயம் நெகிழ
உணர்வில் எழுநல் உதயமே"

(முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழ்)

Koviloor Digital Library



ஈடில்லாத இயற்கையின் தோற்றத்தைக் கண்டு உருகும் உள்ளத்தில்தான் உதிக்கின்றது இறையுணர்வு.

சூரியன் உதிக்கிறது, மறைகிறது. சந்திரன் வளர்கிறது, தேய்கிறது. பருவங்கள் வருகின்றன, போகின்றன. எண்ணற்ற உயிர்கள் பிறக்கின்றன, இறக்கின்றன. செடி கொடிகள் முளைக்கின்றன, அழிகின்றன. இவ்வாறு, தன்னைச் சுற்றியுள்ள பொருள்களும் உயிர்களும் மாறுவதையும் மறைவதையும் மனிதன் காணுகின்றான். இவற்றை ஓர்ந்து ஓர்ந்து காணும் மனிதனின் உள்ளத்திலே ஓர் உண்மை தோன்றுகிறது.

மாறும் பொருள்களுக்கெல்லாம் ஆதாரமாக மாறாத பொருள் ஒன்று இருக்கவேண்டும்; மறையும் பொருள்களுக்கெல்லாம் அடிப்படையாக மறையாத ஒரு பொருள் இருக்கவேண்டும் என்பதே அந்த உண்மையுணர்வாகும். இவ்வாறு, மாறுகின்ற, மறைகின்ற இயற்கைப் பொருள்கள் அனைத்திற்கும் மூலமாக மாறாத மறையாத ஆற்றல் ஒன்று இருக்கிறது என்ற உண்மையை உணர்வதுதான் "மெய்யுணர்வு" என்கின்றனர் சான்றோர்.

### ஐயுணர்வும் மெய்யுணர்வும்

இயற்கையின் தோற்றங்களை ஐம்புலன்களின் வழியாகத்தான் நாம் கண்டு அனுபவிக்கிறோம். மணம், சுவை, ஒளி, ஊறு, ஓசை என்பன ஐம்புலன்களின் உணர்வுகள். இந்த ஐந்து உணர்வுகளையும் நாம் பெற்றதன் பயன் மெய்யுணர்வு எய்துவதுதான் என்கிறது திருக்குறள் :

> "ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
> மெய்யுணர்வு இல்லா தவர்க்கு."
>
> (குறள், 354)

ஐம்புலன்களின் உணர்வுகளால் இயற்கையின் மாட்சியினைக் கண்டு அதில் மறைந்து நிற்கும் இறைமையினை நாம் உணர்தல் வேண்டும். இந்த மெய்யுணர்வு பெறுவதற்கு உற்ற கருவிகளாகவே ஐம்புலன்களின் உணர்வுகள் உள்ளன. எனவே, மெய்யுணர்வினை நாம் பெறவில்லையெனில் நமக்கு ஐயுணர்வுகள் இருந்தும் பயனில்லை என்று அறிவுறுத்துகிறார் வள்ளுவர்.

### அறிவும் உணர்வும்

இதனை "மெய்யறிவு" என்று குறிப்பிடாமல் "மெய்யுணர்வு" என்று கூறுவதன் காரணத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

Koviloor Digital Library



அறிவு கொண்டு ஆராய்ந்து அடைவதல்ல இந்த உணர்வு. இயற்கைக் காட்சிகளைக் கண்டு உள்ளத்தால் ஓர்ந்து ஓர்ந்துதான் இந்த உண்மையுணர்வினை நாம் பெறுகின்றோம்.

**''ஓர்ந்தனன் ஓர்ந்தனன் உள்ளத்துள்ளே நின்ற ஒண்பொருள்''**
**(தேவாரம்—திருஆமாத்தூர்)**

என்று பாடுகின்றார் சுந்தரமூர்த்தி நாயனார்.

ஒன்றை அறிவது வேறு, அதை உணர்வது வேறு.

தேனை ஒருவர் சுவைத்துப் பார்த்து அது இனிப்பாக இருக்கிறது என்கிறார். அந்த இனிப்புச் சுவை எவ்வாறு இருக்கிறது என்பதை அவர் மற்றொருவருக்கு அறிவிக்க முடியுமா? முடியாது. அவரவர் தேனைச் சுவைத்துப் பார்த்தால்தான் அந்த இனிப்புச் சுவையினை உணர்தல் இயலும்.

மலர்களில் இருந்து தேனை எவ்வாறு தேனீக்கள் சேகரிக்கின்றன; தேன் கூட்டிலிருந்து தேனை நாம் எவ்வாறு எடுக்கின்றோம்; தேனில் அடங்கியுள்ள சத்துக்கள் எவை என்பனபற்றி ஒருவர் மற்றொருவருக்கு அறிவிக்கலாம். ஆனால் அதன் சுவையினை அவரவர் சுவைத்துப் பார்த்தே உணரவேண்டியிருக்கிறது.

ஒரு பொருள் பற்றிய விவரங்களை ஒருவர் பிறரிடமிருந்து தெரிந்துகொள்வதை **அறிதல்** என்கிறோம். அப்பொருளை அவரவர் நேரடியாக அனுபவிப்பதை **உணர்தல்** என்கிறோம்.

எனவேதான், இயற்கைக் காட்சிகளை ஓர்ந்து ஓர்ந்து ஒவ்வொருவரும் தம் உள்ளத்தில் உணரும் உண்மையினை ''மெய்யுணர்வு'' என்று சிறப்பித்துக் கூறுகின்றனர்.

**இந்த மெய்யுணர்வு நம் ஒவ்வொருவருக்குமே ஏற்படுவது தான்.**

மாலை நேரத்தில் கடற்கரைக்குச் செல்லுகிறோம். நில்லாது அலை வீசும் நீலக்கடல், மாலை நேர மஞ்சள் வெயில், இதமான இளங்காற்று, இவையெல்லாம் நம் இதயத்திலே இன்பத்தை ஏற்றுகின்றன.

கடற்கரை மணலில் அமர்ந்து, மேற்கு வானத்தைப் பார்க்கிறோம். பெரிய பொன் வட்டமாகச் சுழன்றுகொண்டே சூரியன்

Koviloor Digital Library



அடிவானத்தில் இறங்கிக்கொண்டிருக்கிறது. அச் சூரியனின் ஒளியிலே மின்னும் மேலே வானத்து மேகங்களின் நிறங்கள்தான் எத்தனை! கருமை நிறம், கரு நீல நிறம், செம்பொன் நிறம், செம் மஞ்சள் நிறம்! இன்னும் எத்தனையோ நிறங்கள்!

இவற்றைப் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே பொன் தகடு பூரணமாக மறைந்துவிடுகிறது! செவ்வொளி படர்ந்திருந்த மேற்கு வானம் கரு நீலமாக மாறுகின்றது! அதிலே பிறை நிலவு தவழுகின்றது. சூரியனின் ஒளியிலே மங்கிக்கிடந்த பிறை மதி பிரகாசமடைகிறது! அங்கொன்றும் இங்கொன்றுமாக வானப் பொய்கையிலே மலர்கின்றன விண்மீன்கள். சிறிது நேரத்திற் கெல்லாம் எண்ணற்ற நட்சத்திரங்கள் எழில்காட்டி ஒளிர்கின்றன!

நீல நெடுங்கடல் இருளோடு கலந்து நம் கண்ணுக்குத் தெரிய வில்லை. ஆனால் அலைகளின் மெல்லிய ஓசை ஆழ்கடலில் அமைதியை ஒலிக்கின்றது!

இந்த இயற்கையின் ஈடில்லாத அழகிலே நம் இதயம் இளகுகிறது. இவ்வாறு இளகி நிற்கும் நம் இதயத்திலே ஏதோ ஓர் உணர்வு எழுகின்றதல்லவா? வியப்பூட்டும் இக்காட்சியிலே உருகி நிற்கும் நம் உள்ளத்தில் ஓர் உணர்வு உதிக்கின்றதல்லவா?

அற்புதமான இக்காட்சிக்கு அப்பால் இன்னது என்று புரியாத ஏதோ ஒன்று இருப்பதாக நாம் உணருகின்றோமே, அந்த உணர்வுதான் **"மெய்யுணர்வு"** என்கின்றனர் மெய்ஞ் ஞானிகள்.

இவ்வாறு, நம் உள்ளத்திலே உதிக்கும் உணர்வினைப் பிறர் அறியும்படி எடுத்துச் சொல்ல இயலுவதில்லை. அவரவர்கள் தாமாக உணர்ந்து பெறவேண்டிய அனுபவம் அது. எனவே, எடுத்துச் சொல்ல முடியாத நுட்பமான உணர்வாக இறைவன் இருக்கிறான் என்கிறார் மாணிக்கவாசகர்:

**"தோற்றச் சுடரொளியாய், சொல்லாத நுண்ணுணர்வாய்"**
**(திருவாசகம்—சிவ புராணம்)**

நுண்ணுணர்வான இறைமை நம் உணர்வுக்கும் உணர்வாக உள்ளது என்கிறார் கம்பர்:

**"ஆய்ந்த உணர்வின் உணர்வே"**

**(சரபங்கன் பிறப்பு நீங்கு படலம்—ஆரணியகாண்டம்)**

Koviloor Digital Library



**"சான்றுரு உணர்வினுக்கு உணர்வும் ஆயினன்"**
**(கிட்கிந்தா காண்டம்—கடவுள் வாழ்த்து)**

சுவையை நாவினால், ஒலியைக் காதுகளால், காட்சியினைக் கண்களால் நம் உள்ளம் உணருகின்றது. ஆனால், இயற்கையிலே அடங்கியுள்ள இறைமையினை உள்ளமே நேரடியாக உணருகின்றது. புலன்களின் உதவியின்றி உள்ளமே ஒன்றை உணருவது என்றால், அந்த ஒன்றைவிட உண்மையானது வேறு எது இருக்க முடியும்?

காதால் உணர்வதை ஒலி என்கிறோம்; கண்ணால் உணர்வதைக் காட்சி என்கிறோம்; மூக்கால் உணர்வதை மணம் என்கிறோம். புலன்கள் உதவியின்றி உள்ளமே நேரடியாக உணர்வதை எவ்வாறு குறிப்பிடுவது? அதனை "உணர்வு" என்றே குறிப்பிடுகின்றனர். எனவே, உள்ளத்தால் நேரடியாக உணரப்படும் இறைவனை "உணர்வே" என்று போற்றிக் குறிப்பது இறைமையின் தனிப் பெருமையினைக் காட்டுகிறது. ஆதலால், "உணர்வு" என்று அழைக்கப்படும் தனிப் பெருமை உடையவன் இறைவன் என்கிறார் நாவுக்கரசர்:

**"உள்குவார் உள்ளத்தானை, உணர்வெனும்**
**பெருமையானை"**
**(தேவாரம்—பொது)**

திருமங்கை யாழ்வார்,

**"உணர்வு எனும் பெரும் பதம்"**
**(பெரிய திருமொழி—1)**

என்று ஏத்துகின்றார்.

இன்னது, இப்படிப்பட்டது என்று எவரும் வருணிக்க முடியாத இறைமையினை நம் "உள்ளத்து உணர்வு" என்று கூறி, உயர்ந்த ஞானத்தினை நமக்குப் புகட்டுகின்றனர் மெய்யடியார்கள்.

**விஞ்ஞானி கூறும் மெய்ஞ்ஞானம்!**

இருபதாம் நூற்றாண்டு அறிவியல் மேதைகளில் தலைசிறந்த ஆல்பெர்ட் ஐன்ஸ்டின் (Albert Einstein) என்ற சிந்தனையாளரும் இதனையே கூறுகின்றார்:

"புரியாத புதிராக ஒன்றை உணருகின்றோமே அதுதான் அழகு மிக்க அனுபவமாகும்...இந்த அற்புதத்தினைக் கண்டு

Koviloor Digital Library


ஆச்சரியத்தில் திளைக்கும் அனுபவத்தைப் பெறுதவன் உயிரோடு வாழ்ந்தாலும் உயிரற்றவனேயாகிருன். கண்கள் இருந்தும் காணுத குருடனுகின்ருன். வாழ்வின் புதிரைப் புரிய முற்படும் பொழுது ஓர் அச்சம் எழுகின்றது. அதனுடன் சேர்ந்து சமய உணர்வும் தோன்றுகிறது. நம்மால் அணுகி அறிந்துகொள்ள முடியாத ஒன்று உண்மையில் இருக்கிறது; உன்னதமான ஞான மாகவும் ஒளிமிக்க அழகுடையதாகவும் பரிணமிக்கும் அதனை நம் அற்பமான அறிவினுல் புரிந்துகொள்ளுதல் இயலாது; ஏதோ ஒன்று இருக்கிறது என்று மட்டுமே தெரிந்துகொள்ளுகிருேம். இந்த ஞானந்தான், இந்த உணர்வுதான், சமயத்தின் சாரமாகும். இதுவே சமயத்தின் சாரம் என்று கொண்டால், அழுத்தமான சமயவாதிகளில் நானும் ஒருவன்.''

இவ்வாறு கூறுகின்ருர் அறிவியல் மேதை ஆல்பர்ட் ஐன்ஸ்டின்.

"The most beautiful thing we can experience is the mysterious...He to whom this emotion is a stranger, who can no longer pause to wonder and stand rapt in awe, is as good as dead; his eyes are closed. The insight into the mystery of life, coupled though it be with fear, has also given rise to religion. To know that what is impenetrable to us really exists, manifesting itself as the highest wisdom and the most radiant beauty which our dull faculties can comprehend only in their most primitive forms—this knowledge, this feeling, is at the centre of true religiousness. In this sense, and in this sense only, I belong to the ranks of devoutly religious men."

—Albert Einstein in "I believe"—
Unwin Books-London.

**"உணர்வின் மூர்த்தி"**

இறைமை என்ற சக்தியை நாம் கண்ணுல் காணவோ, காதால் கேட்கவோ, மூக்கால் முகரவோ, நாவினுல் சுவைக்கவோ இயலாது. உடலாலும் உற்றுணர முடியாது. உள்ளத்தால் தான் இறைவனை நாம் ஓர்ந்து உணர முடியும். இவ்வாறு, ஐம்புலன்களுக்கும் அகப்படாமல், உள்ளத்து உணர்வாக உள்ள இறைமையினை எவ்வாறு சொற்களால் வருணிக்க முடியும்? முடியாது.

Koviloor Digital Library



"புலன்களுக்கு எட்டாதது பிரமம். சொற்களுக்கும் அது அப்பாற்பட்டது அதன் உண்மையினை ஓர்ந்து உணரத்தான் முடியும்"—என்று கூறுகிறது கதோபநிடதம்.

"வேதம் பகர்ந்திட்ட மெய்ப்பொருளின் உட்பொருளை ஓதும் சடகோபன்" என்று போற்றப்படும் நம்மாழ்வார், உபநிடதம் புகட்டும் உண்மையினை நாமெல்லாம் புரிந்துகொள்ளும் பொருட்டு ஒரே வரியில் அதனைப் பாடிவிட்டார்.

"தோய்விலன் புலனைந்துக்கும்
சொலப்படான் உணர்வின் மூர்த்தி"
(திருவாய்மொழி—3 ப. 4 தி.)

ஐம்புலன்களுக்கும் எட்டாமல் சொற்களிலும் அடங்காமல் உள்ளத்து உணர்வாக உள்ளான் இறைவன். எனவே, அவன் "உணர்வின் மூர்த்தி" என்கிறார்.

இணையில்லாத இயற்கைக் காட்சிகளில் இருந்தும் அதன் இயக்கங்களில் இருந்தும் நாம் இறைமையினை ஓர்ந்து உணர்ந்து கொள்ளவேண்டும் என்ற உயர்ந்த ஞானத்தினை நமக்கெல்லாம் போதிக்கும் வகையில்தான் "உணர்வின் மூர்த்தி" என்ற ஒப்பற்ற நாமத்தினை இறைவனுக்குச் சூட்டுகின்றார் நம்மாழ்வார்.

"உணர்வின் மூர்த்தி"
ஆண்டவனைக் குறிக்கும் அற்புதமான சொற்றொடர்!

இரண்டே சொற்கள்! எத்தகைய ஞானத்தினைப் போதிக்கின்றன! அவை சொற்களா? அல்ல; சுடர்கள்! ஞானச் சுடர்கள்!

அரிய உண்மையினை எவ்வளவு எளிய முறையில் நமக்குப் புரிய வைக்கின்றனர் மெய்யடியார்கள்!

Koviloor Digital Library

# 2. பூத மூர்த்தி

''ஆகாயம், காற்று, நெருப்பு, நீர, நிலம் என்ற
பூதங்களாக உள்ளது பிரமமே."

(பிரஸ்ன உபநிடதம்)

ஞானிகள் நமக்குக் கதைகளைக் கூறி அக் கதைகளின் மூலமாக உண்மைகளைப் போதிப்பது உண்டு. அப்படி ஒரு கதை கேனோப நிடதத்தில் வருகிறது.

**உபநிடதக் கதை**

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் சண்டை நடந்தது. அதில் தேவர்கள் வெற்றி பெற்றனர். வெற்றியடைந்த களிப்பில் தேவர்களுக்கு ஆணவம் வந்துவிட்டது. "நம்முடைய வீரத்தால் அல்லவா பகைவர்களை வென்றோம்" என்று கருதி இறுமாப்புக் கொண்டனர் தேவர்கள்.

தேவர்களின் அறியாமையைப் போக்க வேண்டுமே! எனவே, ஒளி வடிவில் தேவர்களுக்கு முன்னால் இறைவனாகிய பிரமம் தோன்றியது. அந்த ஒளி என்ன என்பதைத் தேவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அவர்கள் அக்கினிதேவனை அழைத்து "நீ போய், யார் அந்த ஒளி என்று அறிந்து வா," என்று அனுப்பினார்கள். அந்த ஒளியுருவத்திற்கு அருகில் அக்கினிதேவன் சென்றான்.

"நீ யார்?" என்று கேட்டது ஒளி.

"என்னைத் தெரியாதா! நான் தான் அக்கினி. என்னை உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே!" என்று பதில் கூறினான் அக்கினிதேவன்.

"அவ்வளவு பெரியவனா நீ! உனது சக்தியை நான் தெரிந்து கொள்ளலாமா!" என்று ஒளி கேட்டது.

Koviloor Digital Library


"உலகத்தில் எதையுமே எரித்துவிடும் சக்தி எனக்கு உண்டு," என்றான் அக்கினிதேவன் இறுமாப்புடன்.

"அப்படியா! எங்கே இதை எரியும்படி செய், பார்க்கலாம்," என்று கூறி ஒரு சிறு துரும்பை எடுத்து அக்கினிதேவனின் முன்னால் ஒளியுருவம் வைத்தது.

அக்கினிதேவன் தன் சக்தி அனைத்தையும் பயன்படுத்தியும் அந்தத் துரும்பை எரிக்க இயலவில்லை. அக்கினிதேவனுக்கு ஒன்றும் புரியவில்லை. மனத்தில் ஆச்சரியமும் அவமானமும் பொங்க அக்கினி திரும்பினான்.

வாயுதேவன், "நான் போய் அந்த ஒளியுருவம் என்ன என்று கண்டு வருகிறேன்," என்று ஒளிக்கு அருகில் சென்றான்.

"நீ யார்" என்றது ஒளி.

"நான்தான் வாயுதேவன். வானில் அசையும் வல்லமை மிகுந்த காற்று. நான் எந்தப் பொருளையும் பறக்கும்படி செய்து விடுவேன்," என்று இறுமாந்து கூறினான் வாயுதேவன்.

"அப்படியா! இந்தத் துரும்பை அசைத்துவிடு பார்க்கலாம்," என்று கூறி ஒரு சிறு துரும்பை வாயுதேவனுக்கு முன் வைத்தது ஒளி.

எவ்வளவோ முயன்று பார்த்தான் வாயு. அந்தத் துரும்பைச் சிறிதுகூட அசைக்க முடியவில்லை! வாயுதேவனுக்கு அவமானம் தாங்க முடியவில்லை.

தேவர்கள் திகைத்தார்கள். முடிவில் தேவர்கள் தலைவன் இந்திரனே அந்த ஒளியுருவத்தை நெருங்கி வந்தான்.

அதற்குள் அந்த ஒளி மறைந்துவிட்டது!

பிறகுதான் இந்திரனும் இதர தேவர்களும் உணர்ந்தார்கள் அந்த ஒளியாகத் தோன்றியது பிரமம்தான் என்பதை. அக்கினி தேவனுக்கு எரியும் சக்தியைக் கொடுப்பதும், வாயுதேவனுக்கு எதையும் அசைக்கும் ஆற்றலைக் கொடுப்பதும் பிரமம்தான் என்பதை மீண்டும் நினைவிற் கொண்டனர். தாங்கள் போரில் அடைந்த வெற்றிக்குக் காரணமும் இறைவனே என்பதையும் அவர்கள் உணர்ந்தனர்.

Koviloor Digital Library



"கண்கள் இமைப்பதும் கருமேகங்கள் மின்னுவதும் இறைவனின் ஆற்றலால்தான்," என்று கூறி இக்கதையை உபநிடதம் முடிக்கிறது.

இயற்கைப் பூதங்களான நெருப்பிலும் காற்றிலும் உள்ள சக்தி இறைவன்தான் என்ற உண்மையினை இந்த உபநிடதக் கதை எடுத்துக் கூறுகின்றது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கூறப்பட்ட இவ்வுண்மையினை வழிவழி வந்த மெய்யடியார்கள் நமக்கு விளக்கியுள்ளார்கள்.

★ ★ ★

**ஐம்பூதங்களும் இறைமை**

இயற்கைப் பொருள்களை நமக்குள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்களின் வழியாகத்தான் நாம் உணருகின்றோம். ஐம்புல உணர்வுகள் ஊறு, சுவை, ஒளி, மணம், ஓசை என்பன.

ஐம்புல உணர்வுகளின் அடிப்படையில் உலகப் பொருள்களனைத்தையும் ஐந்து வகைகளாகப் பிரித்துள்ளனர் நம் முன்னோர்கள்.

**நிலம்** என்பது மண். மண்ணிற்கு மணம், சுவை, ஒளி, ஊறு (உடலால் உணர்தல்), ஓசை என்ற ஐந்து குணங்களும் உண்டு.

**நீருக்கு** மணம் இல்லை; சுவை, ஒளி, ஊறு, ஓசை என்ற நான்கு பண்புகளும் உண்டு.

**நெருப்புக்கு** மணமும் சுவையும் இல்லை; ஒளி, ஊறு, ஓசை என்ற மூன்று குணங்கள் உண்டு.

**காற்றுக்கு** மணம், சுவை, ஒளி இவை இல்லை; ஊறு, ஓசை என்ற இருபண்புகள் மட்டுமே உண்டு.

இனி, **ஆகாயம்.** இதற்கு மணம், சுவை, ஒளி, ஊறு இவை நான்கும் இல்லை; ஓசை என்ற ஒரே பண்புதான் உண்டு.

இவ்வாறு, மனிதனுக்குள்ளே ஐம்புலன்களில் உணர்வுகளான மணம், சுவை, ஒளி, ஊறு, ஓசை இவற்றின் அடிப்படையில் இயற்கைப் பொருள்களை நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்று ஐந்துவகைப் பூதங்களாக வகுத்துள்ளனர்.

Koviloor Digital Library



இயற்கைப் பொருள்களிலே உள் நின்று நிலவும் சக்தியினை இறைவனாக ஓர்ந்து உணர்ந்தனர் சான்றோர் எனக் கண்டோம்.

உலகப் பொருள்கள் அனைத்தும் இவ் ஐம்பூதங்களால் ஆனவை. இப் பூதங்களை ஆங்கிலத்தில் 'Elements of Nature' என்பார்கள். உலகத்திலுள்ள இயற்கைப் பொருள்களுக்கெல்லாம் மூலங்களாக உள்ளவை இப் பூதங்கள்தாம். எனவே, இப் பூதங்கள் ஐந்திலும் நிலவுவது இறைமைதான் என்பதை உணர்ந்து கண்டனர் ஞானிகள். இவ்வைந்து இயற்கைப் பூதங்களையும் இறைவனாகப் போற்றினர்.

"நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்"
(திருவாய்மொழி–6 ப. 9 தி)

"அம்பரம் அனல் கால் நிலம் சலம்
ஆகிநின்ற அமரர் கோன்"
(திருமங்கையாழ்வார்—பெரிய திருமொழி.)

"போற்றியிப் புவன நீர் தீக் காலொடு வானமானாய்"
(திருவாசகம்—திருச்சதகம்)

"அலைக்கின்ற நீர் நிலம் காற்று அனல் அம்பரமாகி
நின்றீர்"
(திருநாவுக்கரசர்—தேவாரம்—திருவீழிமிழலை)

"தீ வளி விசும்பு நிலன் நீர் ஐந்தும்"
(பரிபாடல்—3)

என்று இறைவனைப் போற்றுகிறது சங்ககாலப் பாடல்.

"ஆகாசம் தீ கால் நீர் மண்
அத்தனை பூதமும் ஒத்து நிறைந்தாய்"
(பாரதியார்—சாகாவரம்)

**பூதங்களின் குணங்களும் இறைமை**

ஐம்பூதங்களைப் போற்றியதோடு நிற்கவில்லை அடியார்கள்.

நிலத்திற்கு ஐந்து குணங்கள் என்றும், நீருக்கு நான்கு குணங்கள் என்றும், நெருப்பின் குணங்கள் மூன்று எனவும், காற்றுக்கு இரண்டே குணங்கள் என்றும், ஆகாயத்திற்கு உள்ள பண்பு ஒன்றுதான் எனவும் கண்டோம். பூதங்கள் இறைமை என்றால் பூதங்களின் தன்மைகளும் இறைமைதானே? ஆதலால்,

Koviloor Digital Library



நிலத்தின் ஐந்து குணங்களாகவும், நீரின் நான்கு குணங்களாகவும் தீயின் மூன்று குணங்களாகவும், காற்றின் இரண்டு குணங்களாகவும், ஆகாயத்தின் ஒரே குணமாகவும் நிலவுவது இறைமை தான் என்பதை விளக்கிப் பாடியுள்ளனர்:

"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்ருய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்ருய் விளேந்தாய் போற்றி."

(திருவாசகம்—போற்றித் திருவகவல்)

"மண்ணதனில் ஐந்தை மாநீரில் நான்கை வயங்கெரியில்
மூன்றை மாருதத்து இரண்டை
விண்ணதனில் ஒன்றை........."

(திருநாவுக்கரசர்—தேவாரம்—திருக்கற்குடி)

உண்ணுசுவை ஒளி ஊறு ஒலி நாற்றம் முற்றும் நீயே

(திருவாய்மொழி—7 ப—8 தி)

இவ்வாறு, இறைவனைப் பஞ்ச பூதங்களாகக் கண்ட அடியார்கள் அப்பூதங்களின் குணங்களாகவும் கண்டார்கள்.

**குணங்களைக் கொடுத்ததும் இறைமை**

அப்பூதங்களுக்கு அவற்றின் குணங்களைக் கொடுத்தது யார்? அதுவும் இறைவன்தான்.

"......................திண்திறல்
தீயில் வெம்மை செய்தோன், பொய்தீர்
வானில் கலப்பு வைத்தோன், மேதகு
காலின் ஊக்கங் கண்டோன், நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்த்தோன், வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன்........."

(திருவாசகம்—திருவண்டப்பகுதி)

எனவே, ஐம்பூதங்களும் இறைவன்தான், அவற்றின் குணங்களும் இறைவன்தான், அப்பூதங்களுக்கு அக்குணங்களை அமைத்ததும் இறைவன்தான் என்ற உண்மையினை உணர்த்துகின்றனர் மெய்யடியார்கள்.

Koviloor Digital Library


ஆதிகால மனிதன் இயற்கைப் பொருள்களைக் கண்டு அஞ்சினன். இந்த அச்சத்தால் அவற்றைத் தெய்வங்களாகத் தொழுதான் என்ற கொள்கையும் உண்டு.

இருட்டிலே நாம் எதையும் கண்டு அஞ்சுவது போல் அறியாமை என்ற இருளால் ஆதி மனிதன் இயற்கைப் பொருள்களைக் கண்டு அஞ்சியிருக்கலாம். ஓங்கி உயர்ந்த மலைகளும், ஓடிப் பெருகும் நதிகளும், கடுமையாக ஒலிக்கும் இடியும், கண்ணைப் பறிக்கும் மின்னலும் ஆதி மனிதனின் மனத்திலே அச்சத்தை ஏற்படுத்தியிருக்கலாம். அந்த அச்சத்தால் அவற்றைத் தெய்வங்களாக அன்றைய மனிதன் கொண்டிருக்கலாம்.

**விஞ்ஞான அறிவும் மெய்ஞ்ஞான உணர்வும்**

. காலப்போக்கில் மனிதனின் அறிவு வளருகின்றது. இயற்கைப் பொருள்களை எல்லாம் ஆய்ந்து காணும் திறமை பெருகுகிறது. அறிவு வளர வளர அச்சம் விலகுகிறது. இந்த அறிவு வளர்ச்சியால்தான் உலகப் பொருள்கள் அனைத்திற்கும் மூலமாக உள்ளவை நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐம்பூதங்கள் என்று மனிதன் ஆய்ந்து கண்டான். அவற்றின் தன்மைகளையும் ஆய்ந்து அறிந்தான். இப்பூதங்களின் கலப்புகளால்தான் மற்ற எல்லாப் பொருள்களும் உள்ளன என்ற உண்மையினையும் அவன் அறிந்துகொண்டான்.

இதற்கு மேலும், மனிதனின் அறிவு ஆராயத் தலைப்பட்டது. உலகப் பொருள்களுக்கு எல்லாம் மூலமாக உள்ளவை ஐம்பூதங்கள் என்றால், ஐம்பூதங்களுக்கும் மூலம் எது? அப்பூதங்களுக்கு அவற்றின் குணங்கள் எவ்வாறு வந்தன? நிலத்திற்குத் திண்மையும், நீருக்குக் குளிர்ச்சியும், நெருப்புக்குச் சூடும், காற்றுக்கு அசைவும், ஆகாயத்திற்கு விரிவும் வந்தது எப்படி? இவ்வினாக்களுக்கான விடையினைக் கண்டுகொள்ளுவதற்கு மனிதனின் அறிவும் ஆராய்ச்சியும் பயன்படவில்லை. எனவேதான் அடங்கிய அறிவும் ஒடுங்கிய உள்ளமும் கொண்டு ஓர்ந்து உணர்ந்து, இவையெல்லாவற்றுக்கும் மூலமாக, முதற்பொருளாக, ஏதோ ஒரு சக்தி இருக்கிறது என்று மனிதன் கண்டான்.

உலகப் பொருள்களுக்கெல்லாம் மூலமானவை ஐம்பூதங்கள் என்றும், இப்பூதங்களின் தன்மைகள் இவை என்றும் மனிதனின் மெய்யறிவு காட்டியது. இவையனைத்திற்கும் மூலமாக உள்ளது இறைமை என்பதை அவனது மெய்யுணர்வு காட்டியது. அறிவால் தெரிந்துகொள்ளக் கூடியதை மனிதன் தனது அறிவால் கண்டான்; அறிவால் தெரிந்துகொள்ள இயலாததைத் தன் உணர்வால் அவன் கண்டு கொண்டான்.

Koviloor Digital Library



ஆதலால்தான், ஐம்பூதங்களையும் அவற்றின் தன்மைகளையும் மனிதன் இறைவனாகக் கொள்ளுகிறான். மேலே கண்ட பாடல்கள் இவ்வுண்மையினையே நமக்கு உணர்த்துகின்றன.

இப் பாடல்களில் மெய்யறிவும் மெய்யுணர்வும் இணைந்து நிற்பதைக் காணுகிறோம். விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்து ஒலிப்பதைக் கேட்கிறோம்.

**"பூதங்கள் ஐந்தில் இருந்தெங்கும் கண்ணிற்**
**புலப்படும் சக்தியைப் போற்றுகின்றோம்"**

**(பாரதியார் - "வையம் முழுதும்")**

என்று பாடும் மெய்யறிவும் மெய்யுணர்வும் பெற்ற ஞானிகள்,

**"பூத நாதனைப் பூம்புகலூரனை"**

**(திருநாவுக்கரசர்—தேவாரம்—திருவெண்ணியூர்)**

என்று இறைவனைப் போற்றுகின்றனர்.

உலகப் பொருள்களுக்கெல்லாம் மூலப் பொருள்களாக உள்ளவை பஞ்ச பூதங்கள். பஞ்ச பூதங்களுக்கும் மூலமாக உள்ளது இறைமை. இந்த உண்மையினை நமக்கு உணர்த்தும் வகையில்தான் இறைவனாகிய உலகநாதனைப் "பூதநாதன்" என்று கூறி ஏத்துகின்றனர்.

**இயற்கையில் இசைந்து நிற்கும் இறைமை**

மேலைநாட்டுச் சிந்தனையாளர்களும் இயற்கையினைத் தெய்வங்களாகக் கொள்ளும் நிலையைச் சிறப்பித்துக் கூறுகின்றனர்:

"மனிதன் இயற்கையோடு ஒன்றிணைந்து உள்ளவன். இயற்கையின் கருணையில் வாழ்ந்த ஆதி மனிதன் அதைக் கண்டு வியந்தான். அதை மதித்தான், துதித்தான். நம் முன்னோர்கள் அகவுணர்வால் விழிப்புற்று, மனிதனுக்கும் மற்றவற்றுக்கும் அப்பால் உள்ள ஆன்மீகப் பொருளைக் கண்டது இயற்கையின் வாயிலாகத்தான். இயற்கையினை வழிபடுதலே மனித குலத்தின் ஆதி சமயமாக இருந்தது. இயற்கைத் தெய்வங்கள் எல்லாம் இயற்கையின் உருவங்கள் அன்று. இயற்கையைக் கடந்து அண்டங்களுக்கு அப்பால் இருக்கும் ஒன்றையே அவை குறித்து நிற்கின்றன. தன்மீது கருணை காட்டும் இயற்கையின் மூலமாகத் தான் அடிப்படையான உண்மைப் பொருளை மனிதன் கண்டான்."

இவ்வாறு ஆர்னல்டு டாய்ன்பி என்ற உலகப் புகழ் பெற்ற வரலாற்று ஆசிரியர் கூறுகின்றார்.

Koviloor Digital Library



"Man is an integral part of nature...Primitive man had no difficulty in feeling respect for nature, because he was at nature's mercy. Non human nature was the first medium through which our ancestors, after they had awoken to consciousness, got into touch with the spiritual presence that is behind both non-human nature and human nature. Nature-worship was thus the earliest form of man's religion. The so called nature Gods are not just embodiments of nature; they are embodiments of what lies beyond nature, behind the universe; but man saw this ultimate reality through the nature at whose mercy he was."

—Arnold Toynbee in
"Surviving the Future"

முன்னர்க் கண்ட கேனுபநிடதக் கதை நமக்குப் புகட்டும் உண்மை என்ன?

நெருப்பை அக்கினி தேவன் என்றும், காற்றை வாயுதேவன் என்றும் கொண்டாலும், அவற்றுக்கு அத்தன்மைகளை அளிப்பது பரம்பொருளே என்ற உண்மையினைத்தான்.

எனவே, 'பூத மூர்த்தி' என்று கூறி, பூதங்களையே மூர்த்தியாகப் போற்றவில்லை நம் முன்னோர்கள். பஞ்ச பூதங்களிலும் பரவி நின்று, அவற்றுக்கும் அப்பாலுள்ள பரம்பொருளையே பூதங்களின் வாயிலாக அவர்கள் போற்றினார்கள்.

Koviloor Digital Library

# 3. ஒரு மூர்த்தி

**ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் என்ற பஞ்ச பூதங்களாக உள்ள பிரமமே நம் ஐம்புலன்களாகவும் உள்ளமாகவும் உயிராகவும் இருக்கிறது.**

**(முண்டக உபநிடதம்)**

*பஞ்ச பூதங்களின் மூர்த்தியாக இறைவனைக் கண்ட மனிதன் பூமியிலுள்ள மற்ற உயிரினங்களைப் பற்றியும் எண்ணிப் பார்த்தான்.*

**ஐந்து வகை உயிரினங்கள்**

*ஐந்து வகைப் பூதங்கள் இருப்பதுபோல் ஐந்து வகையான உயிரினங்கள் உலகில் வாழுகின்றன.*

*உடலால் உணர்தல் (ஊறு) என்ற ஓர் உணர்வு மட்டும் உள்ளவை புல், பூண்டு, மரம் ஆகியவை.*

*ஊறு, சுவை என்ற இரண்டு உணர்வுகள் உடையன நத்தை, சிப்பி போன்ற உயிர்கள். இவற்றின் உடலில் வாய் மட்டுமே உண்டு.*

*ஊறு, சுவை, மணம் என்ற மூன்று உணர்வுகளைக் கொண்டவை எறும்பு போன்ற உயிர்கள். இவற்றுக்கு சுவை பார்க்கும் வாயோடு மணத்தை உணரும் உறுப்பும் உண்டு.*

*ஊறு, சுவை, மணம், ஒளி என்ற நான்கு உணர்வுகள் உடையன வண்டு, தும்பி போன்ற உயிர்கள். வாய், மூக்கு இவற்றுடன், கண்களும் இவற்றுக்கு உண்டு.*

*ஊறு, சுவை, மணம், ஒளி, ஒலி என்ற ஐந்து உணர்வுகளும் உடையவை பறவைகளும் விலங்கினங்களும். இவற்றுக்கு மெய், வாய், மூக்கு, கண்கள், காதுகள் என்ற ஐந்து புலன்களும் உள்ளன.*

Koviloor Digital Library


**ஆறறிவுடைய மனிதன்**

ஐந்து புலன்களோடு ஆறுவது புலன் ஒன்றையும் மனிதன் மட்டுமே பெற்றுள்ளான். அதுதான் மனம் என்பது. கண், காது போன்ற புற உருவம் மனம் என்ற புலனுக்கு இல்லை. பகுத்து உணரும் பண்பினை மனிதனுக்கு அளித்து அவனை மற்ற உயிரினங்களில் இருந்து உயர்த்தி நிறுத்துவது மனம் என்ற இந்தப் புலன்தான். இத்தகைய மனத்தினை உடையதால்தான் "மனிதன்" என்ற சிறப்புப் பெயரையும் அவன் பெறுகிறான்.

மற்றப் புலன்களைப்போல் மனம் வெளியே தெரிவதில்லை. தோற்றம் இல்லாத இப்புலனை "அகம்" என்றும் கூறுகிறோம். உடலுக்கு உள்ளே நின்று இயங்கும் இதனை "உள்ளம்" என்றும் குறிப்பிடுகிறோம்.

மனிதனிடம் உள்ள பகுத்துணரும் பண்பே அவனது தனிச் சிறப்பாகும். இப்பண்பிற்கு ஆதாரமாக உள்ளது 'மனம்' என்றும் 'அகம்' என்றும் 'உள்ளம்' என்றும் வழங்கப்படுவதுதான்.

இந்த உள்ளமே அவன் அறிவுக்கு ஆதாரமாகவும் உணர்வுக்கு உறைவிடமாகவும் இருக்கிறது.

ஒப்பற்ற இந்த உள்ளம் மனிதனுக்கு இல்லையெனில் ஆய கலைகள், அறிவு நூல்கள், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் இவையெல்லாம் தோன்றி இருக்க முடியாது. உள்ளத்தில் எழும் சீரிய சிந்தனைத் திறனால்தான் இயற்கைப் பொருள்களின் இரகசியங்களை ஆய்ந்து அறிகிறான் மனிதன். இதன் பயனாக, விண்ணிலே பறக்கும் அவன் வெண்ணிலவையும் இன்று எட்டிவிட்டான்.

இவ்வளவு திறம் படைத்த உள்ளம் ஓர்ந்து ஓர்ந்து உணர்ந்த உண்மைதான் இயற்கைப் பொருள்கள் எல்லாவற்றுக்கும் ஆதாரமாக ஏதோ ஒரு சக்தி நிலவுகிறது என்பது.

**உயிர்களனைத்தும் இறைமை**

உலகப் பொருள்களில் எல்லாம், அவற்றுக்கு மூலங்களான ஐம்பூதங்களில் எல்லாம் அமைந்துள்ளது இறைமை என்பதை உணரும் உள்ளம், உலகத்து உயிர்களைப்பற்றியும் எண்ணுகிறது. ஓருணர்வில் இருந்து ஐயுணர்வுகள்வரை பெற்றுள்ள உயிரினங்கள் ஒன்றா இரண்டா? கோடிக்கணக்கில் அல்லவா உள்ளன? அவ்வுயிரினங்களில் நிலவுவது எது? அவற்றின் உடல்களிலும் உயிர்களிலும் உள்ளது எது?

Koviloor Digital Library



இவ்வாறு மனிதனின் சிந்தனை சென்றது.

ஜடப் பொருள்கள் அனைத்திற்கும் மூலமாக உள்ள இறைமை தானே உயிர்கள் எல்லாவற்றுக்கும் மூலமாக இருக்க வேண்டும் !

பஞ்ச பூதங்களிலும் நிலவுகிற சக்திதானே பாரில் வாழும் உயிர்களிலும் நிலவ வேண்டும் ?

நெருப்புக்கு வெப்பத்தையும் நீருக்குக் குளிர்ச்சியையும் அளிப்பது எதுவோ அதுதானே உயிர்களுக்கு உயிர்த்தன்மையினை அளிக்கவேண்டும் ?

நெருப்புக்கு நெருப்பாய், நீருக்கு நீராய், காற்றுக்குக் காற்ருய் உள்ள இறைமைதான் உயிர்களுக்கும் உயிராய் இருக்க வேண்டும் !

இவ்வாறு எண்ணி உண்மையினை உணருகின்றது மனித உள்ளம்.

இயற்கைப் பூதங்களிலே இசைந்து நிற்கும் சக்திதான் எல்லா உயிர்களிலும் இசைந்து நிற்கிறது என்ற உண்மையினை உணர்ந்த ஞானிகள், “உயிரே” என்றும், “உயிர்களுக்கெல்லாம் உயிரே” என்றும் இறைவனைப் பாடுகின்றனர் :

“உறவே போற்றி, உயிரே போற்றி”

(திருவாசகம்—போற்றித் திருவகவல்)

“உணர்வும் அவனே உயிரும் அவனே”

(திருமூலர்—திருமந்திரம், 3035)

“தானேயாகி நிறைந்து எல்லாவுலகும் உயிரும்
தானேயாய்”

(திருவாய்மொழி—10 ப—7 தி)

“ஊனவன்காண் உடல்தனக்கோர் உயிராஞன் காண்”

(திருநாவுக்கரசர்—தேவாரம்—திருவலிவலம்)

எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங்கு இருப்பது நீயன்ருே பராபரமே.

(தாயுமானவர்—பராபரக்கண்ணி—84)

Koviloor Digital Library



உயிர்களில் எல்லாம் இருப்பது கடவுள் என்றால் மனிதனாகிய தன் உயிரிலும் உறைவது கடவுள்தான் என்பதையும் அவன் உள்ளம் உணர்ந்தது.

"உன்னிலிருந்து உலகம் வேறாக இல்லை. பஞ்ச பூதங்களாகப் பரந்து நிற்பதும் நீதான். உன்னையன்றி வேறெதுவும் இல்லை யென்றால் நான் மட்டும் வேறாகவா இருக்க முடியும்?" என்ற வினாவை எழுப்புகிறது சிந்திக்கும் உள்ளம்.

"நெறிபார்க்கில் நின்னையன்றி அகிலம் வேறோ
நில நீர் தீக் கால் வானு நீயலாத
குறியாதும் இல்லையென்றால் யாங்கள் வேறோ
கோதையொரு கூறுடையாய் கூறாய் கூறாய்!"

(தாயுமானவர்—கல்லாலின்)

இந்த அடிப்படைக் கேள்வியை இறைவனைப் பார்த்தே கேட்கிறது மனிதனின் உள்ளம். அதற்கான விடையையும் உணர்ந்து கொள்ளுகிறது. "பாரனைத்தும் நீதான் என்று கூறினால், என் அகமாக நின்று இதையெல்லாம் ஆராய்கின்றதே எனது உயிர், அதுவும் நீதான்" என்ற அடிப்படையான உண்மையினைக் காண்கிறது நம் உள்ளம்.

"பாராதி நீயாப் பகர்ந்தால் அகமெனவும்
ஆராயும் சீவனும்நீ யாங்காண் பராபரமே"

(தாயுமானவர்—பராபரக்கண்ணி—104)

நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உதிக்கும் வினாவும் உணரப் படும் உண்மையும் இதுதானே!

ஐம்புலன்களால்தான் நாம் இயற்கையிலுள்ள ஐம்பூதங்களை யும் உணருகின்றோம். ஐந்து பூதங்களாக இருக்கும் இறைமையே தான் நம் ஐந்து புலன்களாகவும் இருக்கின்றது என்று நமக்குப் புரியும்படியாகப் பாடியுள்ளனர்:

"செவி வாய் கண் மூக்கு உடல் என்ற
ஐம்புலனும், செந்தீ
புவி கால் நீர் விண் பூதம் ஐந்தும்
............ஏனமாய் நின்றார்க்கு இயல்வு"

(பொய்கையாழ்வார்—திருவந்தாதி)

"ஐந்து பூதங்களாகவும், அவற்றாலான எண்ணற்ற பொருள் களாகவும், பொருள்களை உணரும் நம் புலன்களாகவும் உள்ளது

Koviloor Digital Library



கடவுள்; இவ்வளவு பேதங்களோடு இருப்பினும் அது பேதம் இல்லாத ஒரே பொருள். அதுதான் அதனுடைய தனிப் பெருமை" என்கிறார் மாணிக்கவாசகர்:

"பூதங்கள் ஐந்தாகி புலனாகிப் பொருளாகி
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனை"
(திருவாசகம்—கண்டபத்து)

"பஞ்ச பூதங்கள், அவற்றின் கலப்பாகப் படர்ந்து நிற்கும் பல பொருள்கள், இவை ஒவ்வொன்றிலும் இறைமை நிலவுகிறது. உடலில் உயிர் மறைந்து நிற்பதுபோல் அது கரந்து நிற்கிறது" என்கிறது திருவாய்மொழி:

திட விசும்பு எரி வளி நீர் நிலம் இவைமிசை
படர்பொருள் முழுதுமாய் அவையவை தொறும்
உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே.
(1 ப—1 தி)

**எல்லாப் பொருள்களும் உயிர்களும் இறைமை**

இயற்கைப் பொருள்கள் எல்லாம், உலகில் வாழும் உயிரினங்கள் எல்லாம், நம் உயிர்கள் எல்லாம் இறைமை என்ற சக்தியால்தான் இயங்குகின்றன என்ற உண்மையினை நாம் உணருகின்றோம்.

உலகில் தோன்றிய மனிதன் இந்தப் பேருண்மையை உணர்வதற்கு முன் எத்தனை யெத்தனை நூறாண்டுகள் சிந்தித்திருக்க வேண்டும்!

அறிவைக்கொண்டு மட்டும் அறிய முடியாத இந்த அரிய ஞானத்தை ஓர்ந்து உணர்வதற்கு மனித குலம் எவ்வளவு காலமாக முயன்றிருக்கவேண்டும்!

"மனித குலம் எத்தனையோ காலமாக எண்ணி எண்ணிச் சோர்வு இன்றி முயன்று இந்த மகத்தான உண்மையினை—விண்ணிலும் மண்ணிலும் கண்ணிலும் கருத்திலும் மேவி நிற்பது பராசக்தியே என்ற உண்மையினை—உணர்ந்துள்ளது" என்கிறார் பாரதியார்:

"எண்ணிஎண்ணிப் பல நாளும் முயன்றிங்கு
இறுதியிற் சோர்வோமோ?--அட
விண்ணிலும் மண்ணிலும் கண்ணிலும் எண்ணிலும்
மேவு பராசக்தியே!"
(ஆத்ம ஜயம்)

கோவிலூர் ஆதீனம்
2443

Koviloor Digital Library



*பராசக்தியான தெய்வம் எல்லாப் பொருள்களாகவும் எல்லா உயிர்களாகவும் உள்ளது என்ற உண்மையினைத் தேனெழுகும் தமிழில் தெவிட்டாத ஞானமாக நமக்குத் தருகின்றார் மகாகவி பாரதியார்:*

உயிர்களெலாம் தெய்வமன்றில் பிறவொன் றில்லை;
ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்;
பயிலும் உயிர்வகை மட்டும் இன்றி இங்குப்
பார்க்கின்ற பொருளெல்லாம் தெய்வம் கண்டீர்.
வெயிலளிக்கும் இரவி, மதி, விண்மீன், மேகம்
மேலும் இங்குப் பலபலவாம் தோற்றங்கொண்டே
இயலுகின்ற ஜடப்பொருள்கள் அனைத்தும் தெய்வம்;
எழுதுகோல் தெய்வம்; இந்த எழுத்தும் தெய்வம்.

(சுயசரிதை—18)

*"எல்லாவற்றிலும் இறைமை உள்ளது; இறைமை இல்லாத பொருள் ஏதும் இல்லை. இந்த உண்மையினை உணர்தல்தான் பரமஞானம் ஆகும்" என்று தீர்க்கமாகப் பாடுகின்றார் ஞானக் கவிஞர் பாரதி:*

"அன்றியோர் பொருளுமில்லை அன்றி ஒன்றும் இல்லை;
ஆய்ந்திடில் துயரமெல்லாம் போகும்—இந்த
அறிவுதான் பரம ஞானமாகும்."

(மகா காளியின் புகழ்)

*ஆம். இந்த உணர்வுதான் பரமஞானமாகிறது.*

*இந்தப் பரமஞானத்தினை நம் உள்ளத்தில் நின்று உணர்த்துவதும் கடவுள்தானே? ஆதலால் அதனை "மெய்ஞ்ஞானச் சோதி" என்று போற்றுகின்றார் நம்மாழ்வார்:*

"எஞ்ஞான்றும் எங்கும் ஒழிவற நிறைந்து நின்ற
மெஞ்ஞானச் சோதிக் கண்ணனை மேவுதுமே!"

(திருவாய்மொழி—3 ப—2 தி)

*எந்நாட்டினராயினும் எக்காலத்தினராயினும் உள்ளத்தால் ஓர்ந்து உண்மையினை நாடினால் இந்த மெய்ஞ்ஞானத்தினைப் பெறுகின்றனர். இதற்கு உதாரணமாக அறிஞர் ஆர்னல்டு டாய்ன்பி கூறுவதைக் காணலாம்:*

Koviloor Digital Library



"அண்டத்திற்கெல்லாம் அர்த்தத்தையும் அருமையையும் அளிக்கும் அடிப்படையான ஆன்மீக உண்மை ஒன்று இருக்கிறது என்பதே எனது நம்பிக்கை. இந்த அடிப்படை உண்மை பலவாக அன்றி ஒருமையாகவே உள்ளது. இதனையே "பிரமம்" என்றும் "கடவுள்" என்றும் வழங்குகின்றனர்."

"My belief is that there is an ultimate spiritual reality which gives the universe its meaning and value and that this ultimate reality is something single, not multiple .............. they have called it by different names: Brahma, God."

Arnold Toynbee in
"Surviving the Future."

**ஒரு மூர்த்தி**

ஒருமையாக உள்ள அடிப்படையான இந்த ஆன்மீக உண்மையினைத்தான்,

"ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி"

(திருவாசகம்—போற்றித் திருவகவல்)

என்று பாடுகிறார் மாணிக்கவாசகர்.

"உலப்பிலானே! எல்லா உலகுமுடைய ஒரு மூர்த்தி"

(திருவாய்மொழி – 5 ப—8 தி)

எல்லா உலகங்களுக்குமான "ஒரு மூர்த்தி" என்று இறைவனைப் போற்றுகிறார் நம்மாழ்வார்.

"பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணத்தை" உலகங்கள் அனைத்துமான ஒரே மூர்த்தியாக உணர்தல் பரமஞானம் மட்டும் அன்று, பவித்திரமான வாழ்விற்கும் அதுவே அடிப்படை ஞானமாகும்.

Koviloor Digital Library

# 4. ஞான மூர்த்தி

பொருள்கள் அவற்றின் இயக்கங்கள் பற்றியது அறிவு; பொருள்களுக்கும் அவற்றின் இயக்கங்களுக்கும் அப்பாற்பட்ட பிரமத்தைப்பற்றியது ஞானம்.

(முண்டக உபநிடதம்)

இருட்டில் நமக்குப் பயம் ஏற்படுகிறது. வீட்டில் ஆகட்டும் வெளியில் ஆகட்டும், இருளாக இருக்கும்பொழுது நம் மனத்திலே ஒரு மருள், அச்சம் தோன்றுகிறது. இருள் நீங்கி வெளிச்சம் வந்துவிட்டால் மனத்திலுள்ள மருள் அகன்றுவிடுகிறது.

காரணம் என்ன?

இருளில் நமக்குக் கண் தெரிவதில்லை. நம்மைச் சுற்றியுள்ள பொருள்கள் கண்களுக்குத் தெரிவதில்லை. ஆதலால், ஓர் அச்சம். இருள் அகன்று பொருள்கள் எல்லாம் நன்றாகத் தெரியும்பொழுது அச்சத்திற்கு இடம் இல்லை.

**மாசற்ற காட்சி**

இதுபோன்றே, உலகக் காட்சி நமக்குத் தெரிகின்றது. இப் பூமியிலுள்ள பொருள்கள், மக்கள், மற்ற உயிரினங்கள், வானத்திலே சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் எல்லாவற்றையும் நாம் காணுகிறோம். இருப்பினும் அந்தக் காட்சி தெளிவான காட்சியாக இல்லை; மாசற்ற காட்சியாக இல்லை. எனவே, அதில் ஒரு மயக்கம் இருக்கிறது என்கின்றனர் சான்றோர்.

அது என்ன மயக்கம்?

ஒரு பொருளை நன்றாகப் பார்த்தாலும், அந்தப் பொருளின் உண்மைத் தன்மை என்ன என்பதை நாம் தெரிந்துகொள்ளவில்லை என்றால் அது நம் மனத்திலுள்ள அறியாமைதானே? மனத்திலுள்ள அறியாமை என்ற இருள் நீங்கினால்தான், நாம் காணும் காட்சி

Koviloor Digital Library



மாசற்ற காட்சியாகிறது, மயக்கம் இல்லாத காட்சியாகிறது. அதனால் மனத்திலே இன்பம் எழுகின்றது என்கிறது திருக்குறள்:

> **"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி**
> **மாசறு காட்சி யவர்க்கு"**

**(குறள், 352)**

உலகப் பொருள்களின் உண்மைத் தன்மையினைக் கண்டு அதனால் இன்பம் பெறவேண்டும் என்றால் அதற்கு மருள் நீங்க வேண்டும், மாசற்ற காட்சி வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

**இயற்கையும் நாமும்**

இரயில் வண்டியில் பிரயாணம் செய்யும்பொழுது நமக்கு முன்னால் ஒருவர் இருக்கிறார். அவரை யாரோ எவரோ என்று கருதுகிறோம். அவர்மீது நமக்கு அக்கறை ஏற்படுவதில்லை. சிறிது நேரம் கழித்து அவருடன் பேசிக்கொண்டிருக்கையில் அவர் நமது தூரத்து உறவினர் என்று தெரியவருகிறது. உடனே அவர்மீது நமக்கு எவ்வளவு அக்கறையும் அன்பும் ஏற்படுகின்றன.

இதுபோலவே, உலகத்துப் பொருள்களுக்கும் நமக்கும் உள்ள உறவு தெரியாத நிலையில் அவற்றின்மீது நமக்கு அக்கறை ஏற்படுவதில்லை. உண்மையான உறவு தெரிந்தவுடன் நம் உள்ளத்திலே உவகை எழுகின்றது.

கடலையும் மலையையும் காணுகிறோம்; ஆனால், அவற்றுக்கும் நமக்கும் தொடர்பு எதுவும் இல்லை என்று எண்ணிக்கொள்கிறோம். காக்கையையும் குருவியையும் பார்க்கிறோம்; அவற்றுக்கும் நமக்கும் உறவேதும் இல்லை என்று கருதுகிறோம். எனவே, ஓங்கி நிற்கும் மலையைக் கண்டால் ஓர் அச்சம் பிறக்கிறது. பரந்து கிடக்கும் கடலைப் பார்க்கும்பொழுது ஒரு பயம் எழுகின்றது. காக்கை, குருவி போன்ற உயிரினங்களையும் ஏதோ தொல்லை விளைப்பனவாகவே எண்ணுகிறோம்.

ஆனால், மலையிலும் கடலிலும் மறைந்து நிற்பது எது என்று சிந்திக்கும்பொழுது அது இறைமை என்று உணருகின்றோம். காக்கையிலும் குருவியிலும் கரந்து உறைவது இறைமைதான் என்பதையும் உணருகின்றோம். பஞ்ச பூதங்களாகவும் எல்லாமாகவும் இருக்கும் இறைமைதானே மலையாகவும், கடலாகவும், காகமாகவும், குருவியாகவும் இருக்க வேண்டும்? அதே இறைமை தான் நம் உயிராகவும் உள்ளது.

Koviloor Digital Library



எனவே, கடலும், மலையும், காக்கையும், குருவியும் இறைமை என்ற இணைப்பினால் நம்மோடு உறவுடையன என்ற உண்மையினை நாம் உணருகின்றோம். இந்த மெய்யுணர்வு ஏற்பட்டவுடன் நம் உள்ளத்திலே உவகை பொங்குகிறது.

பார்க்கும் பொருள்களெல்லாம் நோக்கும் திசைகளெல்லாம் நாம்தான் என்ற உணர்வால் களிப்பெய்தும் ஞானக்கவி பாடுகின்றார்:

**காக்கை, குருவி எங்கள் ஜாதி—நீள்**
**கடலும் மலையும் எங்கள் கூட்டம்;**

**நோக்குந் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை;**
**நோக்க நோக்கக்களி யாட்டம்.**

**(பாரதியார்—ஜயபேரிகை)**

காலை இளவெயிலில் உலகம் எவ்வளவு அழகாக இருக்கிறது! இந்தக் காட்சியில் கடவுளின் மாட்சியைக் காணுகிறது கவி உள்ளம். நீல வானத்தை இரவு நேரத்தில் பார்த்தால் அது எத்தகைய காட்சி. அந்த வைரச் சுடர் வானத்தில் இறைமையின் ஆட்சியைக் காணுகின்றனர் கவிஞர்கள்:

**காலை இளவெயிலின் காட்சி—அவள்**
**கண்ணொளி காட்டுகின்ற மாட்சி;**

**நீல விசும்பினிடை இரவில்—சுடர்**
**நேமி அனைத்தும் அவள் ஆட்சி.**

**(பாரதியார்—சக்தி விளக்கம்)**

இதுவே, மருள் நீங்கிய மாசறு காட்சியால் இருள் நீங்கிப் பெறும் இன்பமாகும்.

இத்தகைய இன்பத்திலே திளைத்து, எல்லாவற்றிலும் இறைமையினைக் காண்கின்றனர் மெய்யடியார்கள்.

**"கருவுடை மேகங்கள் கண்டால்**
**உன்னைக் கண்டால் ஒக்கும் கண்கள்"**

**(திருமொழி—2 ப—7 தி)**

என்று பாடும் பெரியாழ்வாரின் ஞானக்குரல்தான்,

Koviloor Digital Library



காக்கைச் சிறகினிலே
நந்த லாலா!—நின்றன்
கரிய நிறம் தோன்றுதையே
நந்த லாலா!

(நந்த லாலா)

என்று பாரதியாரின் குரலாகவும் ஒலிக்கின்றது.

மலையின் பசுமை நிறத்திலும், பவளத்தின் சிவப்பு வண்ணத்திலும், தாமரை இதழின் வடிவழகிலும் இறைமையின் பேரழகைக் காணும் அடியாரின் உள்ளம்,

"பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமர ரேறே!
ஆயர்தம் கொழுந்தே!"

(தொண்டரடிப்பொடியாழ்வார் — திருமாலை — 2)

என்று பாடுகிறது.

**எல்லாம் இறைமை**

உடலாக, உயிராக, உலகமாக, கடலாக, கார்முகிலாக, வானாக, எங்கும் நிறைந்து, இவற்றையெல்லாம் கடந்து நிற்கும் பெருவெளியாகவும் இறைமை இலங்குகிறது.

"உடலாய் உயிராய் உலகம தாகிக்
கடலாய் கார்முகில் நீர்பொழி வானாய்
இடையாய் உலப்பிலி எங்குந் தானாகி
அடையார் பெருவெளி அண்ணல் நின்றானே!"

(திருமந்திரம்–413)

எல்லையில்லாத அந்தப் பெருவெளியை இரவு நேரத்தில் அண்ணாந்து பார்த்து மனிதன் ஆச்சரியத்தில் மூழ்கிவிடுகிறான்! எத்தனை நட்சத்திரக் கூட்டம்! எத்தனை எத்தனை அண்டங்கள்! அவை ஒரு சிறிதும் தவறாமல் தங்கள் கதியிலே சுழன்று கொண்டிருக்கின்றனவே! அவ்வாறு இவற்றைச் சுழற்றும் அந்த மகாசக்தி என்னுள்ளும் இருக்கிறதல்லவா? எனவே, நான்தான் அவற்றை எல்லாம் சுழற்றுகிறேன்! அண்டங்களாக இருப்பதும் நான்தான்! அவற்றை ஆக்கியதும் நான்தான்! அவற்றைச் சுழல வைப்பதும் நான்தான்!—இவ்வாறு பெருமிதம் எய்துகிறது ஞானியின் மனம்.

Koviloor Digital Library



விண்ணில் தெரிகின்ற மீனெலாம் நான்;
வெட்ட வெளியின் விரிவெலாம் நான்;
.........................................
அண்டங்கள் யாவையும் ஆக்கினேன் நான்,
அவை பிழையாமே சுழற்றுவோன் நான்.''

(பாரதியார்—'நான்')

''விண்ணிலே ஒளிர்கின்ற விண்மீன்கள் மட்டுமல்ல நான். மண்ணிலே நெளிகின்றனவே புழுக்கள் அவையும் நான்தான்'' என்கிறது அந்த ஞான உள்ளம்:

''மண்ணில் கிடக்கும் புழுவெலாம் நான்
வாரியிலுள்ள உயிரெலாம் நான்.''

விண்ணிலே ஒளிரும் மீன்களையும் மண்ணிலே நெளியும் புழுக்களையும் இணைத்து, அவற்றோடு தானும் இணைந்து, இவை யனைத்தும் ஒரே சக்தியின் உருவ வேறுபாடுகள்தான் என்று உணருகின்றது மெய்ஞ்ஞானிகளின் உள்ளம்!

இந்த ஞானம் இல்லாமல் அறியாமை என்ற இருளிலே நாம் இருக்கும்பொழுது, உலகத்தையும், உலகப் பொருள்களையும், நம்மையும் சம்பந்தமில்லாத வெவ்வேறு பொருள்களாகக் காணு கின்றோம். நாம் உலகைக் காணும் காட்சி தெளிவாக இருப்ப தில்லை. ஞானம் இல்லாததால் நம் மனம் மருளுகிறது. எதை எதையோ கண்டு அஞ்சுகிறது. எதையெல்லாமோ எண்ணித் துன்பப்படுகிறது. இத்துன்பம் நீங்கி இன்பம் பெற வேண்டு மெனில், நம் மனத்திலுள்ள மருள் அகல வேண்டும். அப்பொழுது தான் நாம் உலகைக் காணும் காட்சி மாசற்றதாக இருக்கும்.

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

(திருக்குறள்)

'விண்ணிலே சுழலும் பேரண்டங்களும் மண்ணிலே நெளியும் அற்பமான புழுக்களும் நாமும் ஒன்றுதான். ஒரே சக்தியைச் சார்ந்து நிற்பவர்கள்தாம்' என்பதை உணரும்பொழுது நம் மனம் எத்தகைய மகத்தான மாறுதலைப் பெறுகின்றது; மருள் நீங்கிய மாசறு காட்சியால் எத்தகைய எக்களிப்பை எய்துகிறது!

Koviloor Digital Library



உருவம் உள்ளவை உருவம் இல்லாதவை, உணர்வு உள்ளவை உணர்வு அற்றவை, பருப் பொருள் நுண் பொருள் இவை எல்லாமே இறைமைதான். அதனுல் தான் இறைமையை ஞானிகள் "மெய்ப் பொருள்" என்கின்றனர்—இவ்வாறு கூறுகிறது தைத்திரீய உபநிடதம்.

சாதாரணமான ஒரு மாவட்டத்தின் தலைமை அதிகாரி நமக்கு உறவினர் என்ருல் நாம் தலை நிமிர்ந்து நடக்கிறோம். அமைச்சர் ஒருவர் நமக்கு உறவு என்ருல் சொல்ல வேண்டியதில்லை. இதற்கே இப்படி இருந்தால், நட்சத்திரங்களும், சூரியனும், சந்திரனும், மலைகளும், மாநதிகளும் இவற்றையெல்லாம் ஆட்டிப் படைக்கும் அளவில்லா ஆற்றலும் நம்மோடு உறவுடையன என்பதை உணரும்பொழுது எத்தகைய பெருமிதம் நம் உள்ளத்தில் ஏற்பட வேண்டும்!

**"நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை ;**
**நோக்க நோக்கக் களியாட்டம்"**

**(ஜய பேரிகை)**

என்று பாரதியார் பாடுகிருர் என்ருல் அது நம் உள்ளத்திலே எழும் உண்மையான களியாட்டத்தைத்தான் காட்டுகிறது.

**ஞானக் காட்சி**

ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகளுக்கு முன் இத்தாலிய நாட்டில் பிரான்சிஸ் என்ற புகழ்பெற்ற சமய ஞானி (Saint Francis of Assissi) வாழ்ந்து வந்தார். அவர் எழுதிய துதிப்பாடலில்,

"சூரியன், காற்று, மேகம், நெருப்பு என்ற சகோதரர்களையும், சந்திரன், நட்சத்திரங்கள், நீர், பூமி என்ற சகோதரிகளையும் அளித்ததற்காக இறைவனே, உன்னை ஏத்துகிறேன்" என்று கூறுகின்ருர்!

ஆம்! உண்மையினை உணரும் ஞானிகள் எங்கிருந்தால் என்ன? அவர்கள் உணரும் ஞானம் ஒன்றேதான்!

"இயற்கை நம் உள்ளத்தைத் தொட்டால் போதும், உலகனைத்தும் உறவாகிவிடுகிறது"

என்கிருர் உலகப் புகழ் பெற்ற ஆங்கில நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியர்.

Koviloor Digital Library



"One touch of nature makes the whole world kin"
(Shakespeare—Troilus and Cressida.)

"பரி பூரணமான ஒன்றின்
பகுதிகளே பொருள்கள் அனைத்தும்
இயற்கை அதன் உடம்பாகும்,
இறைமை அதனின் உயிராகும்"

என்று பாடுகிறார் போப் என்ற ஆங்கிலக் கவிஞர்.

All are but parts of one stupendous Whole,
Whose body Nature is, and God the soul.
(Pope—Essay on Man)

எல்லாவற்றிலும் இறைவனைக் காணுவதால், "பொலிந்திடும் நட்சத்திரங்களைவிடப் புல்லிதழ் புன்மையானதன்று" என்று பாடுகிறார் வால்ட் விட்மேன் என்ற புகழ்பெற்ற அமெரிக்கக் கவிஞர்.

"I believe a leaf of grass is no lesss than the journey-work of the stars."
(Walt Whitman—Song of Myself)

மின்னும் விண்மீன்களிலே இறைவனைக் காணும் அடியார்கள் தின்னும் வெற்றிலையிலும் உண்ணும் சோற்றிலும் பருகும் நீரிலும் இறைவனைக் காணுகின்றனர் !

"உண்ணும்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம்
கண்ணன் எம்பெருமான் என்றென்றே கண்கள் நீர்கள் மல்கி"

(திருவாய்மொழி—6 ப. 7 தி.)

பஞ்ச பூதங்கள், பாரிலுள்ள பிற பொருள்கள், உயிர்கள் இவை அனைத்திலும் அமைந்திருப்பது இறைவன்தான் என்ற உணர்வு தோன்றுகிறது. இந்த உணர்வின் பயனாக, விண்ணிலே சுழலும் பேரண்டங்களும் சூரியனும் சந்திரனும் மலைகளும் மாநதிகளும் பிற உயிரினங்களும் நாமும் நெருங்கிய உறவுடையோம் என்ற மெய்ஞ்ஞானத்தைப் பெறுகிறோம்.

இதனால் நமது ஒப்பற்ற பெருமையை நம் இதயம் உணருகிறது. உலகத்தில் இருந்து வேறாக ஏதோ ஐந்தடி உடம்பிற்குள் அடங்கிக் கிடக்கிறோம் என்று அறியாமையால் நாம் கொண்டிருந்த தவறான எண்ணம் அகன்றுவிடுகிறது. அண்டங்களையெல்லாம்

Koviloor Digital Library



பரவெளியிலே கதி தவருமல் ஆட்டிக்கொண்டிருக்கும் மகா சக்தியோடு நாமும் தொடர்பு உடையோம் என்ற உண்மையுணர்வால் நம் இதயம் பூரிக்கின்றது. இந்தப் பூரிப்பால் எழும் இன்பம் இருக்கிறதே அது ஈடற்றது, இணையற்றது.

"அண்டங்கள் யாவையும் ஆக்கினேன் நான்
அவை பிழையாமே சுழற்றுவோன் நான்"

(பாரதியார்—'நான்')

என்று எக்களிப்போடு எண்ணும் அளவிற்கு நம் உள்ளத்தை உயர்த்திவிடுகிறது இந்த மெய்ஞ்ஞானம்!

ஒப்பற்ற இந்த உயர்வினை நம் முதாதையர் விட்டுச் செல்லும் சொத்துக்களால் அடைய முடியுமா? நாம் ஈட்டும் பொருளால் பெற முடியுமா? நம் கல்வியறிவால்தான் இதனை எய்த இயலுமா? இயலாது.

ஓர்ந்து உணரும் உண்மை ஞானத்தால் மட்டுமே இந்த உயர்வினை நாம் எய்த முடியும்.

ஞான மூர்த்தி

"இந்த உயர்ந்த ஞானம் இருக்கிறதே அதுவே கடவுள்" என்று கூறுகிறது முண்டக உபநிடதம்.

இந்த உண்மை ஞானத்தினை நாம் உணர்ந்து கொண்டால் நம் கண்கள் ஞானக் கண்களாக மாறி விடுகின்றன. ஞானக் கண்களைக் கொண்டு காணும்பொழுது கடவுள் எங்கும் எதிலும் ஞான மூர்த்தியாக விளங்குகிருர்! எங்கும் நிறைந்திருக்கும் இந்த ஞான மூர்த்தியை ஞானக் கண்களால் கண்டு தழுவுகின்றனர் மெய்யடியார்கள்!

"மிக்கஞான மூர்த்தியாய வேதவிளக்கினை என்
தக்கஞானக் கண்களாலே கண்டு தழுவுவனே!"

(திருவாய்மொழி—4 ப 7 தி.)

"நம்பனே நான்முகத்தாய் நாதனே ஞானமூர்த்தி"

(திருநாவுக்கரசர் – தேவாரம்-திருவாலவாய்)

உணர்வின் மூர்த்தியாகவும் ஒரே மூர்த்தியாகவும் கண்ட இறைவனை இப்பொழுது நாம் ஞான மூர்த்தியாகக் காணுகிறோம்!

Koviloor Digital Library

# 5. இதய மூர்த்தி

"உலகனைத்தையும் கடந்து அண்டங்களுக்கெல்லாம் அப்பால் ஒளிரும் ஒளிதான் மனிதனின் உள்ளத்திலும் ஒளிவீசி நிற்கிறது."

(சாந்தோக்கிய உபநிடதம்.)

"கடவுள், கடவுள் என்கிறீர்களே! அந்தக் கடவுள் எங்கே இருக்கிறார்? காட்ட முடியுமா?"

இந்தக் கேள்வி இன்றும் கேட்கப்படுகிறது; அன்றும் கேட்கப் பட்டது.

இதற்கு என்ன விடை கூறுவது என்று தயங்கவில்லை மெய்ஞ் ஞானம் பெற்ற அடியார்கள்.

**உள்ளத்தில் உள்ளான்**

பொய்கையாழ்வார் என்ற ஞானி இத்தகைய கேள்வியைக் கேட்ட ஒருவனைக் கையோடு ஆற்றங்கரைப் பக்கமாக அழைத்துச் சென்றார்.

மாலை நேரம். சூரியன் மேற்கு வானத்தில் இறங்கி மறைந்து கொண்டிருக்கிறது.

"அதோ, அந்தி வானத்தைப் பார்! பொன் தகடுபோல் சுழன்றுகொண்டு மேலை அடிவானத்தில் மெதுவாக இறங்கிக் கொண்டிருக்கிறதே சூரியன், அதன் அழகைப் பார். கதிரவனின் பொன்னிறக் கதிர்களால் மேகங்கள் எத்தனை நிறங்களில் காட்சி யளிக்கின்றன. "தக தக" வென்று மின்னும் மேகக் கூட்டங்கள் தங்கப் பஞ்சுப் பொதிகளாக அல்லவா தோன்றுகின்றன! மஞ்சள் கலந்த சிவப்பு, கருமை கலந்த நீலம், ஊதா இப்படி எத்தனை எத்தனை கண்ணைப் பறிக்கும் நிறங்கள்! மேகங்களின் வடிவங்கள் தான் எத்தனை! வண்ணங்கள்தான் எத்தனை! நாம் பேசிக்

Koviloor Digital Library



கொண்டிருக்கும்பொழுதே சூரியன் முழுதுமாக மறைந்து விட்டதே! மாலை வானத்தின் கோலம் மாறிக்கொண்டே இருக் கிறது பார்!

நட்சத்திரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக மின்னு கின்றனவே! மூன்றாம் பிறைச் சந்திரன் மேற்கு வானத்தில் ஒளிக் கீற்றுப்போல் எவ்வளவு அழகாகத் தொங்குகின்றது! அதற்குள் நீலவானப் பொய்கையில் பூத்துச் சுடர் விடும் நட்சத்திரங்கள் தான் எத்தனை! இத்தனையும் பார்த்தாயா?'' என்று கேட்டார் ஆழ்வார்.

"ஆம்! நன்றாகப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன்'' என்று பதிலளித்தான், "கடவுள் எங்கே?'' என்று கேள்வி கேட்டவன்.

"இந்தக் காட்சியைக் காணும் உன் உள்ளத்தில் என்ன தோன்றுகிறது? நன்றாக உணர்ந்து சொல்."

மீண்டும் அந்த அழகுக் காட்சியைத் தன்னை மறந்த நிலையில் பார்த்துவிட்டு மெதுவாக அவன் கூறினான்

"ஏதோ ஒரு சக்தி இந்த இயற்கை அழகுக்குப் பின்னால் உள்ளதுபோல் தோன்றுகிறது! விண்ணிலே மின்னும் நட்சத் திரங்கள் என் உள்ளத்தோடு உறவாடுவதுபோல் தோன்று கிறது!''

"எங்கே தோன்றுகிறது?''

"என் உள்ளம் அவ்வாறு உணருகிறது.''

"உன் உள்ளத்தில்தானே அந்த உணர்வு உதித்துள்ளது? அதில் ஒன்றும் சந்தேகம் இல்லையே?'' என்று வினவினார் ஆழ்வார்.

"இதிலென்ன சந்தேகம். என் உள்ளந்தான் அவ்வாறு ஏதோ ஒரு சக்தி இருப்பதை உணருகிறது'' என்று உறுதியாகக் கூறினான் கடவுளைக் காணுவதில் கருத்துக்கொண்டவன்.

"உன் உள்ளத்திலே உணருகின்றாயே அந்த உணர்வுதான் அப்பா, கடவுள்! அவ்வாறு உணரும் உன் உள்ளத்திலேதான்

Koviloor Digital Library



கடவுள் இருக்கிறார்," என்று கூறி, மெய்யறிவினைப் புகட்டினார் பொய்கையாழ்வார்.

உளன் கண்டாய் நன்னெஞ்சே! உத்தமன் என்றும்
உளன்கண்டாய், உள்ளுவார் உள்ளத்து—உளன்கண்டாய்
வெள்ளத்தி னுள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தின் உள்ளா னென்றோர்.

(இயற்பா—முதல் திருவந்தாதி—99)

**இயற்கையில் இறைமை**

இயற்கையின் அழகிலே மூழ்கி இறைவனை உணரும் உள்ளம் இயற்கை அழகினையே இறைவனாகப் பாடுகின்றது.

காலை நேரக் கதிரவனின் ஒளி இறைவனது மேனியின் பொன் னிறம்; இரவு நேரத்து இருட்டு கடவுளது கண்டத்தின் கருப்பு நிறம்; அந்தி வானத்திலே கருநிற மேகங்களிடை தோன்றும் பிறை மதிதான் இறைவன் கற்றைச் சடைகளிலே அணிந்துள்ள சந்திரன் என்று பாடுகின்றார் நாவுக்கரசர்:

"காலையில் கதிர்செய்மேனி கங்குலில் கறுத்தகண்டர்
மாலையில் மதியஞ் சேர்ந்த மகுடத்தர்......"

(நாவுக்கரசர்—தேவாரம்—திருவீழிமிழலை)

இயற்கைப் பொருள்கள் எல்லாவற்றிலும் இசைந்து நிற்கும் இறைமையினை நாம் ஓர்ந்து உணருவதற்கு உதவுவது எது?

உள்ளம் என்ற ஒப்பில்லாத ஆறுவது புலன் மனிதர்களாகிய நமக்கு இருப்பதால்தானே இறைமை நிலவுவதை ஓர்ந்து உணரு கின்றோம்? எனவே இறைவனது உறைவிடம் நம் உள்ளம் என்கின் றனர் ஞானிகள்!

"உளரெம்மொருவர் அவர் வந்து என் உள்ளத்துள்ளே
உறைகின்றார்"

(திருவாய்மொழி—8 ப 8 தி.)

"நினைப்பவர் மனம் கோவிலாக் கொண்டவன்"

(நாவுக்கரசர்—தேவாரம்—கோயில்)

"உள்குவார் உள்ளத்துள்ளார் ஒற்றியூர் உடைய கோவே"

(நாவுக்கரசர்—தேவாரம்—திருவொற்றியூர்)

Koviloor Digital Library



"ஒப்புனக்கில்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே"

(திருவாசகம்—பிடித்தபத்து—5)

**உள்ளத்தில் ஒளிர்ந்திருக்கும் ஒளி**

ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஒளிர்கின்ற ஒளியாகக் கடவுள் இருக்கிறார் என்றால் இறைமை அவ்வாறு இருப்பதை எல்லோருமே எளிதில் உணர வேண்டுமே? இறைமை இவ்வாறெல்லாம் இருக்கிறது என்ற விவரமான விளக்கங்களெல்லாம் தேவை இல்லையே?

இதற்கும் ஞானிகள் பதில் கூறியுள்ளனர்.

பாதரசம் பூசிய கண்ணாடியில் நாம் முகம் பார்க்கிறோம். எதிரிலுள்ள பொருள்களை அக்கண்ணாடி பிரதிபலிக்கிறது. விளக்கின் ஒளியில் அந்தக் கண்ணாடியைக் காட்டினால் அந்த ஒளியை அதே பிரகாசத்துடன் பிரதிபலிக்கிறது. அந்தக் கண்ணாடி அழுக்கடைந்து இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். கண்ணாடியின் முன்புறம் முழுவதும் அழுக்கால் மூடப்பட்டிருக்கிறது என்றால், அது விளக்கின் ஒளியைப் பிரதிபலிப்பதில்லை.

உச்சிவானத்தில் ஒளிரும் சூரியனின் ஒளி வடிவத்தைக் குளத்து நீரிலே நாம் காணுகிறோம். ஆனால், குளத்து நீரின் மேல் பாசி படர்ந்திருந்தால் அந்தப் பிரதிபலிப்பு இல்லை.

அதுபோல், அறியாமை என்ற அழுக்கும் பாசியும் அகற்றப்பட்ட தூய்மையான உள்ளத்தில்தான் இறைமை என்ற ஒளி ஒளிர்கின்றது.

இயற்கைப் பொருள்களை எல்லாம் கண்டு ஓர்ந்து உணரும் ஞானம், அதாவது, எல்லாப் பொருள்களிலும் இறைமை நிலவுகிறது என்ற மெய்யுணர்வு நம் உள்ளத்தில் தோன்றியவுடன் அறியாமை என்ற அழுக்கு அகன்று விடுகிறது. குளத்து நீரை மூடி நிற்கும் பாசியைப்போல் நம் மனத்தினைச் சூழ்ந்து நிற்கும் மருள் என்ற இருள் விலகிவிடுகிறது. உடனே இறைவன் என்ற ஒளி உள்ளத்திலே ஒளிர்கின்றது.

ஓர்ந்து உணரும் மெய்யுணர்வு பெற்றால்தான், உள்ளத்தில் ஒளிரும் இந்த ஒளியினை நம்மால் உணர முடியும். இவ்வாறு, ஓர்ந்து காணாதவர்களின் உள்ளங்களிலும் இறைமை என்ற ஒளி இருக்கிறது; ஆனாலும் அவர்களால் அதை உணர முடிவதில்லை.

Koviloor Digital Library



எனவே, "ஓர்ந்து உணராதவர்களின் உள்ளத்திலே நீ ஒளிந்து மறைந்து கொள்ளுகிறாய்" என்று இறைவனைப் பாடுகின்றார் மாணிக்கவாசகர்:

"ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே."

(திருவாசகம்—சிவபுராணம்)

மண்ணெண்ணெய் விளக்கு, அதன் கண்ணாடிச் 'சிம்னி'யில் கரியேறிப் போயிருந்தால் உள்ளே எரியும் விளக்குத் தெரிவதில்லை. கண்ணாடிச் 'சிம்னி'யை நன்றாகத் துடைத்தவுடன் விளக்குப் பிரகாசமாகத் தெரிகின்றது.

இதுபோல், நமது மனம் கள்ளமான எண்ணங்களால் கறுத்துப் போயிருந்தால் உள்ளத்திலே ஒளிரும் ஒளி தெரிவதில்லை.

"வெள்ள முள்ள விரிசடை நந்தியை
கள்ள முள்ள மனத்தவர் காண்கிலர்"

(நாவுக்கரசர்—தேவாரம்—திரு அன்பிலாலந்துறை)

கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்தைவிட்டு அருத்தியோடு
உள்ளம் ஒன்றி உள்குவார் உளத்துளான்..........."

(சம்பந்தர் — தேவாரம் — திருவாரூர்)

தூய்மையான மனத்தில் துலங்கும் அந்த ஒளியினை, பனிக் கடலைப்போன்ற பவித்திரமான உள்ளத்தில் பள்ளிகொள்ளும் மாயன் என்று ஏத்துகின்றனர்:

"பனிக் கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டு, ஓடிவந்துஎன்
மனக் கடலில் வாழவல்ல மாயமணாள நம்பீ !"

(பெரியாழ்வார்—திருமொழி—5—4)

கடவுள் நம் உள்ளத்தில்தான் இருக்கிறார் என்று கூறுவதில் உளநூல் உண்மை (psychological truth) ஒன்றும் அடங்கியுள்ளது.

**சிந்திப்பார் சிந்தையுளான்**

அந்திவானத்தின் அழகுக் காட்சியைக் கண்டு நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். நம் அருகில் ஒருவர் இருக்கிறார்.

Koviloor Digital Library



ஆனால், அவருக்குக் கண் தெரியாது; பிறவிக் குருடர். அந்தி வானத்து அழகை அவர் எப்படிக் கண்டு களிக்க முடியும்? நாம் அந்தக் காட்சியினை அவருக்கு வருணிக்கிறோம். "எனக்குத் தெரியவில்லையே" என்று அவர் ஏங்குகிறார்.

அந்திவானம் அழகுக் காட்சியாக இருப்பது உண்மைதான். ஆனால் குருடருக்கு அது தெரியவில்லை. "ஏன் எனக்குத் தெரியவில்லை" என்று அவர் கேட்கிறார். "அந்தக் காட்சியினைக் காண வேண்டியது உங்கள் கண்கள் அல்லவா? உங்கள் கண்களில் பார்வை இல்லாததால் அந்தக் காட்சி உங்களைப் பொறுத்தவரை இல்லாதது போல்தான்" என்கிறோம். மேற்கு வானத்தில் தோன்றும் அந்தக் காட்சி அவருக்குத் தெரிவதும் தெரியாமல் போவதும் அவர் கண்களைத்தானே பொறுத்திருக்கிறது? எனவே, அந்தக் காட்சி இருப்பது அவர் கண்களில்தான் என்று கூறுகிறோம்.

பாலின் சுவை இனிப்புத்தான். ஆனால், பித்தக் காய்ச்சல் உள்ள நோயாளிக்கு அந்தப் பால் கசக்கின்றது. பாலின் சுவை மாறிவிடவில்லை; இனிப்பாகவே இருக்கின்றது. இருந்தும் நோயாளியைப் பொறுத்தவரை அது கசப்பாகவே உள்ளது. இப்பொழுது பாலின் சுவை எதில் இருக்கிறது? அதைப் பருகுபவனின் நாவில்தான் உள்ளது.

இதுபோல், நம் உள்ளத்தில் உறையும் உள்ளொளிதான் உயிர்களனைத்திலும் உறையும் இறைமையினை உணர்த்துகிறது. இதயத்தில் இசைந்துள்ள இறையுணர்வே எல்லாப் பொருள்களிலும் நிலவும் இறைமைத் தன்மையை நமக்குக் காட்டுகிறது. ஆதலால்தான், இறைவன் இருப்பது நம் இதயத்தில் என்கின்றனர் ஞானிகள்.

"சிந்திப்பாரவர் சிந்தையுளானை"

என்றும்,

"பாவிப்பார் மனம் பாவிக் கொண்டானை"

(சுந்தரர் — தேவாரம்—திரு ஏகம்பம்)

என்றும் அவர்கள் இறைவனைப் போற்றுகின்றனர்.

ஓர்ந்து உணர்பவர் உள்ளத்தில் மட்டுந்தான் இறைமை நிலவுகிறது, மற்றவர் மனத்திலே இறைமை இல்லை என்று நாம் தவறாகப்

Koviloor Digital Library


புரிந்துகொள்ளக் கூடாது. எல்லோருடைய இதயங்களிலும் இருக்கும் இறைமை ஓர்ந்து உணர்பவர்களுக்கு ஒளியாகத் தோன்றுகிறது; ஓராதவர்களுக்கு அவ்வாறு தோன்றுவதில்லை.

ஓர்ந்து உணர்பவர்கள் உள்ளங்களில் இறைமை ஒளிர்கின்றது; அவ்வாறு உணராதவர்கள் உள்ளங்களில் அந்த ஒளி ஒளிந்து கொள்ளுகிறது என்ற உண்மையினைத் தெளிவாக எடுத்துக் கூறுவதற்காகத்தான்,

**"உள்ளத்து ஒளிர்கின்ற ஒளியே"**

**(திருவாசகம் – பிடித்தபத்து—5)**

என்று பாடும் மாணிக்கவாசகர்,

**"ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே"**

**(திருவாசகம்—சிவபுராணம்)**

என்றும் பாடுகின்றார்.

"இறைவன் வானத்தில் இருப்பதாகச் சொல்லுபவர்கள் சொல்லட்டும். வேறு எங்காவது இருப்பதாகவும் கூறட்டும். நான் இறைவனை 'என் நெஞ்சத்தான்' என்பேன்", என்று பாடுகிறார் காரைக்காலம்மையார்.

**வானத்தான் என்பாரும் என்க; மற்றும்பர்கோன்**
**தானத்தான் என்பாரும் தாமென்க—ஞானத்தால்**
**முன்நஞ்சத்தால் இருண்ட மொய்யொளிசேர் கண்டத்தான்**
**என்நெஞ்சத்தான் என்பன் யான்.**

**(அற்புதத் திருவந்தாதி)**

உலகப் பொருள்களில் எல்லாம் ஒளிந்து நிற்கும் இறைமை நம் உடம்பினுள்ளும் ஒளிந்து நிற்கிறது.

"தேனின் சுவை இனிப்பு. இந்த இனிப்புச் சுவை சிவப்பு நிறமா, கறுப்பு நிறமா என்று காண முடியாது. தேனுக்குள் இனிப்புக் கலந்திருப்பது போல் நம் உடம்பிற்குள் இறைவன் உறைந்திருக்கிறான். ஆதலால் கடவுளை வானத்திலே தேட வேண்டாம். அவன் நம் உடம்பிற்குள் உள்ளத்தில் ஒளிந்திருக்கிறான்" என்கிறார் திருமூலர்.

**தேனுக்குள் இன்பம் சிவப்போ கறுப்போ**
**வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்**
**தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தாற்போல்**
**ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந் தானே.**

**(திருமந்திரம்)**

Koviloor Digital Library



இவ்வாறு நமக்குள்ளேயே ஒளிந்திருக்கும் இறைவனை எவ்வாறு நாம் கண்டுகொள்வது?

நம்முடைய உடம்பு வீடு. உள்ளம் தகளி. அதாவது விளக்கினை ஏற்றி வைப்பதற்குள்ள அகல். உள்ளம் என்ற இந்த அகலில் உணர்வு என்ற நெய்யை ஊற்ற வேண்டும்; நம் உயிர் அதிலே திரியாக அமைகிறது. ஞானம் பெருத நம் உணர்விலே, எங்கும் எல்லாமாகி நிற்பது இறைமைதான் என்ற ஞான விளக்கினை ஏற்ற வேண்டும். இந்த ஞான விளக்கு நம் உள்ளத்திலே இறையொளியாக ஒளிர்ந்து நிற்கிறது. உள்ளத்தில் ஒளிந்து நிற்கும் இறைமை எவ்வாறு ஒளிர்ந்து ஒளி வீசுகிறது என்பதை நாம் எளிதிலே புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நாவுக்கரசர் பாடுகின்றுர்:

**உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக**
**மடம்படும் உணர்நெய்யட்டி உயிர்எனுந் திரிமயக்கி**
**இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்துநோக்கில்**
**கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே.**

(தேவாரம்—பொது)

### இதயத்தின் இன்ப ஒளி

"உன்னைத் தேடுபவர் உள்ளங்களில் எல்லாம் உறைகின்றுய் நீ!" என்று கடவுளைக் கூறுகிறது தைத்திரீய உபநிடதம்.

இந்த உபநிடதம் கூறும் உண்மையின் ஒலியினைத்தான்,

**"ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானை"**

(திருவாசகம்—திருவம்மானை—7)

**"சிந்தையுள்ளே முளைத்தெழுந்த தீங்கரும்பினை"**

(பெரிய திருமொழி—2-5—திருமங்கையாழ்வார்)

என்ற பக்திப் பாடல்களிலும் கேட்கிறோம்.

எல்லாத் திசைகளிலும் இசைந்திருக்கும் இறைமை இதயத்திலே ஊறித் தேனாகத் தித்திக்கின்றது!" என்று பாடுகின்றுர் தாயுமானவர்.

**"எத்திக்கும் தானாகி என் இதயத்தே ஊறித்**
**தித்திக்கும் ஆனந்தத் தேனே பராபரமே."**

(பராபரக்கண்ணி—7)

Koviloor Digital Library



"உள்ளத்திலே இன்ப ஒளியாக ஒளிர்கின்றது" என்கிறார்.

**"உரையிறந்த அன்பர் உளத்து ஓங்கொளியாய் ஓங்கி**
**கரையிறந்த இன்பக் கடலே பராபரமே."**

(பராபரக்கண்ணி—6)

உள்ளத்தின் உணர்வாக உள்ள இறைமை இதயத்தின் இன்ப ஒளியாக இலங்குகிறது. எனவே, உணர்வின் மூர்த்தியாகப் போற்றிய இறைவனை இதய மூர்த்தியாகவும் ஏத்துகின்றனர் அடியார்கள்.

Koviloor Digital Library

# 6. மாய மூர்த்தி

"இதயத்தில் இலங்கும் பிரமம் இதயத்திற்கு அப்பாற் பட்டது. இதயத்தினுள் இதயமாக நின்று இயங்கும் அதனை இதயம் அறிவதில்லை."

(பிரஹதாரண்யக உபநிடதம்.)

"ஞான மூர்த்தி" என்று கடவுளைப் பாடிய நம்மாழ்வார் "மாய மூர்த்தி" என்றும் இறைவனை அழைக்கின்றார்.

"வாரா வருவாய் வருமென்மாயா! மாயா மூர்த்தியாய்!"

(திருவாய்மொழி—5 ப. 8 தி.)

மாணிக்கவாசகரோ "கள்வனே" என்கிறார்.

"அன்பருள்ளம் கரந்து நில்லாக் கள்வனே!"

(திருவாசகம்—திருச்சதகம்—6)

"மாயனை மன்னு வடமதுரை மைந்தனை"

(திருப்பாவை—5)

என்று மாயனைக் கண்ணனைப் பாடுகிறார் சூடிக்கொடுத்த சுடர்க் கொடியான ஆண்டாள்.

'கள்வன்' என்றும் 'மாயன்' என்றும் கடவுளைப் போற்றுவதில் ஏதோ ஒரு கோபம் தெரிகிறதல்லவா? கோபம் மட்டுமல்ல: ஓர் அயர்வும் தெரிகிறது.

தேடித் தேடி பார்த்தும் இறைவனைக் கண்டு கொள்ள முடிய வில்லையே என்ற கோபம். ஓயாது தேடியதால் ஏற்படும் அயர்வு!

**மாயன், கள்வன்**

அயர்வும் கோபமும் அடியார்களுக்கு ஏது? அவர்களுக்கு இல்லை. நமக்கு வந்துவிடக் கூடாதே என்பதுதான் அவர்களுக்

Koviloor Digital Library



குள்ள கவலே. எனவே, நம்மையெல்லாம் அவர்கள் எச்சரிக்கின்ருர்கள். இறைவன் மாயனுகவும் கள்வனுகவும் இருப்பதாகக் கூறி,

"உள்ளத்தில் ஒளியாக இருக்கின்றது இறைமை; ஆயினும், இறைமையின் தன்மை இன்னதென்று யாரும் அறிந்து கொள்ள இயலாது"

என்பதை நமக்கு உணர்த்துவதற்காகத்தான் இறைவனை "மறைந்து நிற்கும் மாயன்" என்றும், "கரந்து நிலவும் கள்வன்" என்றும் காட்டுகின்றனர் ஞானிகள்.

"நம் உள்ளத்தில் ஒளியாக இறைமை உள்ளது. உள்ளத்தை விட்டு அவ்வொளி நீங்குவதில்லே. இருந்தாலும் உள்ளம் இறைமையின் தன்மையினை அறியாது" என்கிருர் திருமூலர்:

**உள்ளத்து ஒருவனை உள்ளுரு சோதியை**
**உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவனை**
**உள்ளமும் தானும் உடனே இருக்கினும்**
**உள்ளம் அவனை உருவறி யாதே.**

**(திருமந்திரம்—431)**

"இறைவனே, நீ என் உள்ளத்தில் நிற்கிருய்; உணர்விலே உதிக்கிருய். இருந்தாலும், கள்ளமாக இருக்கும் உன்னை நான் எப்படிக் காணுவது!" என்று இறைவனிடமே முறையிடுகின்ருர் நாவுக்கரசர்.

**"உள்ளத்தே நிற்றியேனும் உயிர்ப்புளே வருதியேனும்**
**கள்ளத்தே நிற்றி அம்மா எங்ஙனம் காணுமாறே!"**

**(தேவாரம்—பொது)**

"எள்ளினுள் எண்ணெய் போல், பாலினுள் வெண்ணெய் போல், விறகினுள் தீப்போல் பிரமம் உள்ளத்திலே மறைந்து நிற்கிறது"………

இது ஸ்வேதாஸ்வதர உபநிடத வாக்கு.

"விறகினுள் அடங்கி நிற்கும் தீயைப் போலவும், பாலிலே கலந்து நிற்கும் நெய்யினைப் போலவும் இறைவன் நம் முன் நிற்கிருன். உறவு என்ற கோலே நட்டு உணர்வு என்ற கயிற்ருல்

Koviloor Digital Library



கடைந்தால், விறகிலிருந்து தீயும் பாலில் இருந்து வெண்ணெய்யும் வெளிப்படுவது போல் நம் உள்ளத்தில் இறைமை தோன்றுகிறது." இவ்வாறு நமக்குப் போதிக்கின்றார் நாவுக்கரசர்:

"விறகில் தீயினன் பாலிற் படுநெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல் நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே."

(தேவாரம்—பொது)

உள்ளத்திலே உறையும் இறைமைதான் மறைந்து நிற்கிறது; உலகப் பொருள்களில் நிலவும் நிலையிலாவது அது தெளிவாகத் தெரிகின்றதா என்றால் அதுவும் இல்லை.

எள்ளுக்குள் எண்ணெய் மறைந்திருப்பது போல்தான் பாரெங்கும் பரவி நிற்கும் பரம்பொருள் மறைந்து நிற்கிறது:

"எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் வியாபகமாய்
உள்ளவொன்றை உள்ளபடி ஒரு நாள் எந்நாளோ?

(தாயுமானவர்—எந்நாட்கண்ணி)

"எங்கும் பரந்து நிற்கிறது இறைமை. ஆனால், அது நம் ஐம்புலன்களுக்குப் புலப்படுவதில்லை. அதற்கென்று தனி உருவமும் இல்லை. உருவமில்லாத அருவமாகவே அது உள்ளது." இவ்வாறு, இறைமை ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்டு நிற்பதைக் காட்டுகின்றார் நம்மாழ்வார்:

"தளர்வின்றியே என்றும் எங்கும் பரந்த தனிமுதல்
ஞானமொன்றாய்
அளவுடை ஐம்புலன்கள் அறியா வகையால்
அருவாகி நிற்கும்"

(திருவாய்மொழி—3 ப. 10 தி.)

"நீ ஐம்பூதங்களாகவும் இருக்கின்றாய். பாலில் மறைந்து நிற்கும் நெய்யைப் போல நீ அப்பூதங்களிலே மறைந்து நிற்கிறாய்; உன்னை நான் எங்கே காண்பது!" என்று இறைவனிடமே கேட்கின்றார் நம்மாழ்வார்.

பிறந்த மாயா! பாரதம் பொருத மாயா! நீ இன்னே
சிறந்த கால் தீ நீர் வான் மண் பிறவுமாய பெருமானே!
கறந்த பாலுள் நெய்யே போல் இவற்றுள் எங்கும் கண்டுகொள்
இறந்து நின்ற பெருமாயா! உன்னை எங்கே காண்கேனே?

(திருவாய்மொழி—8 ப. 5 தி.)

Koviloor Digital Library



உலகப் பொருள்கள் அனைத்திலும் உறைந்து நிற்கும் இறைமையை உலகப் பொருள்களாகத்தான் காண முடிகின்றது. சூரியனுக்கு ஒளி கொடுப்பது இறைமை. ஆனால், அந்த இறைமை நமக்குத் தெரிவதில்லை; சூரியன்தான் கண்களுக்குத் தெரிகின்றது. சந்திரனுக்குக் குளிர்ச்சியைக் கொடுப்பது இறைமை; ஆயினும் நம் கண்களால் சந்திரனைத்தான் காண முடிகின்றது. பாரனைத்திலும் இறைமை பரவி நிற்கிறது. பாரினைத்தான் நாம் காணுகின்றோம்; பாரினுள் நிலவும் பரம்பொருளைக் காணுவதில்லை.

இது ஏன் என்பதனை எளிதாக நமக்குப் புரிய வைக்கின்றார் திருமூலர்.

**மர யானை**

நாம் ஒரு புது ஊருக்குப் போகின்றோம். அங்குள்ள பூங்காவிற்கு உலாவச் செல்லுகிறோம். பூங்காவின் வாசலில் ஒரு யானை நின்றுகொண்டிருக்கிறது. அந்த யானையின் அருகிலே செல்லுகிறோம். அது அசையாமல் நிற்கிறது. மிக அருகில் போய்ப் பார்க்கின்றோம். அப்பொழுதுதான் நமக்குத் தெரிகின்றது அந்த யானை மரத்தால் செய்யப்பட்டது என்று. யானையின் முழு உருவத்தையும் அதே அளவில் மரத்தால் செய்து நல்ல வண்ணத்தையும் பூசியிருந்ததால் நாம் முதலில் அதை உண்மையான யானை என்று நினைத்து ஏமாந்துவிட்டோம்!

தூரத்தில் நின்று பார்த்து அதை யானைதான் என்று நாம் நினைத்தபொழுது, நம்மைப் பொறுத்தவரை அது யானையாகவே தோற்றமளித்தது. யானை உருவத்தில் இருந்த மரம் நமக்குத் தெரியவில்லை. அருகில் வந்து பார்த்து அது மரத்தால் செய்தது தான் என்பது தெரிந்தபின் மரம் தெரிந்தது; யானை யுருவம் மறைந்துவிட்டது.

முதலில் மரத்தை மறைத்துவிட்டது யானை யுருவம்; அப்பொழுது யானைதான் தெரிந்தது; மரம் தெரியவில்லை. பிறகு மரத்திலே மறைந்துவிட்டது அந்த யானை யுருவம். அப்பொழுது மரந்தான் தெரிந்தது; யானை தெரியவில்லை.

இதேபோல்தான் பூமி முதலிய ஐந்து பூதங்களும் அப்பூதங்களாகவே நமக்குக் காட்சியளிக்கின்றன. அதில் அடங்கியுள்ள இறைமையை (பரத்தினை) அப் பூதங்கள் மறைத்துவிடுகின்றன. ஆனால், நாம் மெய்யுணர்வு பெற்று அப்பூதங்களில் எல்லாம்

Koviloor Digital Library



அடங்கி இருப்பது இறைமைதான் என்பதை உணர்ந்தவுடன் இறைமையை நாம் உணருகின்றோம்; பூதங்கள் மறைந்து விடுகின்றன.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்.

(திருமந்திரம்—2290)

மரம் இன்றி யானையுருவம் இல்லை. நமக்கு உண்மை தெரியாத நிலையில் யானைதான் தெரிந்தது; மரம் தெரியவில்லை. அதுபோல் இறைமை இன்றி இயற்கைப் பொருள்கள் இல்லை. உண்மை தெரியாதவர்கள் இயற்கைப் பொருள்களை அவ்வாறே காணுகின்றனர். மெய்யுணர்வு பெற்றவர்கள் அப் பொருள்களின் தோற்றங்களில் மயங்கிவிடாமல் அவற்றுக்கு ஆதாரமாகவுள்ள இறைமையினையே அப்பொருள்களில் காணுகின்றனர்.

"பொருள்களின் தோற்றத்திலே நாம் மயங்கி நிற்பது மாயை. இந்த மாயை இறைமையினை மறைத்து விடுகிறது. மறைத்து நிற்கும் இந்த மாயை மறைந்துவிட்டால் இறைமை என்ற மெய்ப் பொருள் வெளிப்படுகிறது"—என்கிறார் திருமூலர்.

"மாயை மறைக்க மறைந்த மறைப்பொருள்
மாயை மறைய வெளிப்படும் அப்பொருள்"

(திருமந்திரம்—2548)

மெய்யுணர்வு பெற்ற நாம் எவ்வாறு இயற்கைப் பொருள்களில் இறைமையினை உணருகின்றோம் என்பதை இவ்வாறு எளிதாக விளக்குகிறார் திருமூலர்.

**எல்லாம் இறைமை**

எல்லாம் இறைமை; எங்கும் இறைமை. இறைமை இல்லாத இடம் இல்லை; பொருள் இல்லை. இந்த மெய்யுணர்வு நம் உள்ளத்தில் உதித்தவுடன் நமக்கு ஒரு தெளிவு பிறக்கிறது. எல்லாமே இறைமைதான் என்ற தெளிவு தோன்றுகிறது.

எல்லாமே இறைமை என்றால் எதைத்தான் இறைமை என்பது? பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது இறைமை என்றால், எதைக் காட்டி இதுதான் இறைமை என்று கூறுவது?

Koviloor Digital Library



ஒரு பொருளைக் காட்டி இதுதான் இறைமை என்றால், வேறு பொருளில் இல்லையா என்ற கேள்வி எழுந்துவிடுமே. ஆதலால், குறிப்பிட்ட எந்தப் பொருளையும் காட்டி இதுதான் இறைமை என்று நாம் கூறுதல் இயலாது.

இறைமை இல்லாத இடம் அல்லது பொருள் ஏதேனும் இருந்தால் அல்லவா இறைமை இதில் இருக்கிறது, அதில் இல்லை என்று நம்மால் கூற முடியும். எல்லாமே இறைமையாக இருக்கும் பொழுது, எதனைக் குறித்துக் காட்டி இது இறைமை என்று கூறுவது?

"நீ ஓரிடத்தில் இல்லை. நீ இருக்கும் இடத்திற்கோ எல்லை இல்லை. எந்த இடத்தில் உள்ளாய் என்று கண்டு உன்னைச் சேவிப்பது?" என்று கேட்கிறது ஞானியர் உள்ளம்.

"ஓரிடத்தையல்லை எல்லையில் லையென்பராதலால்
சேர்விடத்தை நாயினேன் தெரிந்து இறைஞ்சுமாசொலே."

(திருமழிசைப்பிரான்—திருச்சந்த விருத்தம்—47)

**தெரிவரிய தெளிவு**

எனவே, இறைமை எங்குமாய் எல்லாமாய் நிற்கிறது என்ற தெளிவு இருந்தாலும், இதுதான் இறைமை, அதுதான் இறைமை என்று எவரும் தெரிந்து கொள்ள இயலாத நிலை உள்ளது. தெளிவு இருந்தாலும் தெரிய இயலாத நிலை. இந்த நிலையில் இருக்கின்றாயே! இறைவனே! என்று கடவுளைத் துதிக்கின்றார் மாணிக்க வாசகர்.

"தெரிவரி தாகிய தெளிவே போற்றி."

(திருவாசகம்—போற்றித் திருவகவல்)

"தெரிவரி தாகிய தெளிவு!"—எதிரிடையான சொற்றொடர். ஆயினும் அதுதான் உள்ள நிலை.

ஒரு பொருள் இருப்பதைத் தெரிந்து கொள்ளுவது ஒன்று; ஆனால் அதன் தன்மையினைத் தெரிந்து கொள்ளுவது வேறொன்று.

கடல் இருப்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆனால், அதன் தன்மை முழுவதையும் நாம் கண்டோமா! இல்லை. சூரியன் இருப்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆனால், அதன் தன்மை அனைத்தையும் நாம் தெரிந்துள்ளோமா? இல்லை.

பருப் பொருள்களான இவற்றின் முழுத் தன்மையே நமக்குத் தெரியாதபொழுது, இப் பொருள்களின் ஆற்றலாக மறைந்து

Koviloor Digital Library



நிற்கும் இறைமையின் தன்மையினை நாம் எவ்வாறு தெரிந்து கொள்ள முடியும்? எனவே, இறைமை இருப்பது தெளிவு; ஆனாலும் அதன் தன்மை தெரிய அரியது. ஆதலால், இறைமை

"தெரிவரிதாகிய தெளிவு"

என்று போற்றப்படுகிறது.

இதே பொருளில்தான், இறைவனை "அறிவதற்கு எளியவன்" என்றும், ஆனாலும் "அறிவதற்கு அரியவன்" என்றும் பாடுகின்றார் நம்மாழ்வார்.

"யாரும் ஓர் நிலைமையன் என அறிவரிய எம்பெருமான்
யாரும் ஓர் நிலைமையன் என அறிவெளிய எம்பெருமான்"

(திருவாய்மொழி—1 ப. 3 தி.)

"தெரிய அரிதானது; ஆனால் தெளிவானது", "அறிவதற்கு அரியது; ஆயினும் அறிவதற்கு எளியது" என்று எதிரிடைத் தன்மைகளைக் கூறி, இறைமை இருப்பதை நாம் உணர்ந்தாலும், அதன் தன்மையினை உணர்தல் இயலாது என்ற உண்மையினை நமக்கு ஊட்டுகின்றனர் ஞானிகள்.

"இன்னதோர் தன்மையை என்று உன்னை யார்க்கும்
தேற்றரியை"

(திருவாய்மொழி – 7ப. 8 தி.)

காயிலே புளிப்பது இறைமை; கனியிலே இனிப்பது இறைமை; கடலில் ஒலிப்பது இறைமை; கதிரவனில் ஒளிர்வது இறைமை; அண்டங்களை ஆட்டுவதும் அவற்றை ஆக்கியதும் இறைமை.

காயிலே புளிப்பது இறைமை என்றால் காய் வேறு, புளிப்பு வேறோ? இல்லை. இரண்டும் ஒன்றுதான். எனவே, காயாகவும் அதன் புளிப்பாகவும் இருக்கிறது இறைமை. கனியாகவும் அதன் சுவையாகவும் உள்ளது இறைமை. அண்டங்களத்தனையாகவும் அவற்றை இயக்கும் ஆற்றலாகவும் இறைமை இலங்குகிறது!

இப்படி இருக்கும் இறைமையை எப்படி நாம் காண்பது?

## மாய மூர்த்தி

மண்ணிலுள்ள உயிர்களும் விண்ணிலுள்ள யாவையும் யாவரும் தானாக அமைந்துள்ள இறைமையின் மாயையினை யாரால் அறிய இயலும்? என்கிறார் ஞானி நம்மாழ்வார்.

Koviloor Digital Library



**"அமைவுடை அமரரும் யாவையும் யாவரும் தானும்
அமைவுடை நாரணன் மாயையை அறிபவர் யாரே?"**

**(திருவாய்மொழி—1 ப. 3 தி)**

"மெய்யுணர்வு பெறுவதற்கு முன் நான் உன்னைக் காணவே இல்லை. மெய்யுணர்வு பெற்ற பின்னும் என் நிலைமை என்ன? உன்னைக் கண்டும் காணாத நிலைதான், இறைவனே!" என்று பாடுகிறார் தாயுமானவர்.

**"பண்டுங் காணேன் நான் பழம்பொருளே இன்றும் உனைக்
கண்டுங் காணேன் எனவும் கைகுவிப்பது எந்நாளோ!"**

**(எந்நாட்கண்ணி)**

தெரிய அரியதான, ஆனால் தெளிவான; அறிவதற்கு அரியதாவ, ஆனால் எளியதான; கண்டும் ஆனால் காணாத நிலையுடையதான பரம்பொருளை எப்படித்தான் வருணிப்பது?

"மாயனே! உன் தோற்றமே மாயமாகத்தான் உள்ளது. நீ எல்லாவற்றிலும் இணைந்து நிற்பதோ மாயத்திலும் மாயம். முற்றுமாக மாயமாகவே நீ உள்ளாய்!" என்கிறார் இறைமையின் மாயத்தினை உணர்ந்து மயக்கந் தீர்ந்த ஞானி திருமழிசைப்பிரான்.

**"மாய! மாய மாயைகொல் அதன்றி நீ வகுத்தலும்
மாய மாயம் ஆக்கினாய் உன் மாயம் முற்றும் மாயமே".**

**(திருச்சந்தவிருத்தம்—41)**

"ஞான மூர்த்தி" என்று இறைவனை அழைத்த நம்மாழ்வார் "மாய மூர்த்தி" என்று கடவுளைக் காட்டுகிறார்.

**"வாரா வருவாய் வருமென்மாயா! மாயா மூர்த்தியாய்!
ஆராவமுதாய் அடியேனாவி அகமே தித்திப்பாய்!"**

**(திருவாய்மொழி—5 ப. 8 தி.)**

இதய மூர்த்தியாக உள்ள இறைமை மாய மூர்த்தியாகத்தான் உள்ளத்திலும் உள்ளது; பார்க்குமிடம் எங்கும் பரவியும் நிற்கிறது.

மயக்கந்தரும் மாயமாக இறைமை நிலவுகிறது என்ற உண்மையினை நாம் உணர்தலே நம் மயக்கத்தைத் தீர்க்கும் ஞானமாகிறது!

Koviloor Digital Library

# 7. அற்புத மூர்த்தி

"வானமண்டலமே பிரமத்தின் தலை. சந்திரனும் சூரியனும் அதன் கண்கள். திசைகள் நான்கும் அதன் காதுகள். ஞானவுரைகளே அதன் குரல். காற்று அதன் மூச்சு. பிரபஞ்சம் அதன் இதயம். எல்லாவற்றுக்கும் உட்பொருளாக நிற்பதும் அதுவே."

(முண்டக உபநிடதம்)

நாம் சென்னையிலிருந்து கல்கத்தாவிற்கு விமானத்தில் புறப் படுகிறோம். மீனம்பாக்கம் நிலையத்தை விட்டு விமானம் மேலே பறந்த சிறிது நேரத்திற்குள் நாம் கீழே பார்த்தோமானால் சென்னை மாநகரத்தின் பல்லடுக்குக் கட்டடங்கள் எல்லாம் ஏதோ பொம்மை வீடுகள் போல் தோன்றுகின்றன. இன்னும் சில விநாடி களில் துறைமுகம் தெரிகின்றது. பெரியபெரிய கப்பல்களைத்தும் சிறுவர்களுக்கு நாம் வாங்கிக் கொடுக்கும் விளையாட்டுக் கப்பல்கள் போல் தெரிகின்றன. சில நிமிடங்களில் விமானம் இரண்டு மைல் உயரத்தை எட்டி விடுகிறது. விமானத்திற்குக் கீழே வங்கக் கடல்; மேலே ஆகாயம்; மேகக் கூட்டங்கள். இன்னும் சிறிது நேரத்தில் ஐந்து மைல் உயரத்தில் விமானம் பறக்கின்றது. கீழே பார்த்தால் மேகத் திரள்கள்; மேலே நிர்மலமான நீலவானம். மேகமண்டலத் திற்கு மேலே பறக்கும் விமானத்தில் இருந்துகொண்டு நீலவானத் தையும் பளீரென ஒளிவீசும் சூரியனையும் கீழே காணும் மேகத் திரள்களையும் கண்டு களிப்பது ஒரு தனியான இன்ப அனுபவம்!

விமானப் பயணத்தில் பூமியிலுள்ள பொருள்கள்தாம் சிறியன வாகக் காட்சியளித்தன. ஆனால் இந்தப் பூமிக் கோளத்தினையே ஒரு சிறு பந்துபோல் கண்டோம் அமெரிக்க விண்வெளி விஞ் ஞானிகள் சந்திரனில் இருந்து எடுத்த வண்ண நிழற்படங்களில்! வெளிறிய பச்சை நிறமான பரவெளியிலே சின்னஞ்சிறு நீலநிறப் பந்தாகக் காட்சியளிக்கிறது நமது பூமி!

நாம் வாழும் இப்பூமி எவ்வளவோ பெரியது. இமயமலை யினைப் போல் எத்தனையோ மலைகள், ஆழ்ந்து பரந்த கடல்கள்,

Koviloor Digital Library


எண்ணற்ற உயிர்கள், இன்னும் எத்தனை எத்தனையோ பொருள்களைக் கொண்டது இப்பூமி. மனிதன் பூமியனைத்தையும் கண்டுவிட்டான் என்று சொல்வதற்கில்லை; பனிமலைகளால் மூடப்பட்டுள்ள வடக்கு, தெற்குத் துருவங்களை மனிதன் இன்னும் பூராவாகக் காணவில்லை. ஆழ்கடலின் அடிப் பரப்பினை நன்கு இன்னும் அறியவில்லை. பூமியில் புதைந்துள்ள கனிப் பொருள்களை இன்னும் கண்டுகொண்டே இருக்கிறன் மனிதன். இவற்றையெல்லாம் அறிந்து கொள்வதற்கென்று மனிதன் ஆராய்ச்சி நடத்திக் கொண்டே இருக்கிறன்.

பூமியின் குறுக்களவு 8000 மைல். இவ்வளவு பெரிய பூமிக் கோளம் பரவெளியிலே பம்பரம் போல் மணிக்கு 1000 மைல் வேகத்தில் சுழன்றுகொண்டிருக்கிறது. மணிக்கு 67,000 மைல் வேகத்தில் சூரியனைச் சுற்றி வருகிறது!

இந்தப் பூமியைவிட 13 இலட்சம் மடங்கு பெரியது சூரியன்!

**எல்லையில்லாப் பரவெளி**

பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலுள்ள தூரம் ஒன்பது கோடியே முப்பது இலட்சம் மைல். சந்திரன் பூமியிலிருந்து இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் மைல் தூரத்தில் உள்ளது.

சூரியனைச் சுற்றிவரும் கோள்கள் ஒன்பது. பூமி, செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, 'நெப்ட்யூன்', 'யூரேனஸ்', 'ப்ளுட்டோ' என்பவை. வெள்ளியும் செவ்வாயும் பூமிக்கு 'அருகில்' உள்ளவை. வெள்ளிக்கும் பூமிக்கும் இடையில் உள்ள தூரம் 2½ கோடி மைல். செவ்வாய் 3½ கோடி மைல் தூரத்தில் உள்ளது. வியாழனின் தூரம் 37 கோடி மைல்; சனியின் தூரம் 74 கோடி மைல்; 'யூரேனஸ்' 160 கோடி மைல்; 'ப்ளுட்டோ' 320 கோடி மைல்.

'ப்ளுட்டோ' என்ற கோளுக்கும் சூரியனுக்கும் உள்ள இடைவெளியின் தூரம் 360 கோடி மைல். இந்தக் கோள் சூரியனைச் சுற்றி வட்டமிடும்பொழுது அந்த வட்டத்திலே அடங்கும் பரப்பளவு நாலு இலட்சம் கோடி கோடி (40000000000000000000) சதுர மைல்கள் என்கின்றனர் விஞ்ஞானிகள்!

சூரியனும் அதைச் சுற்றி வரும் கோள்களையும் கொண்ட அமைப்பினை 'சூரிய மண்டலம்' என்பார்கள். இதைப் போல் பத்தாயிரம் கோடி மண்டலங்கள் பரவெளியிலே உள்ளனவாம்!

Koviloor Digital Library



பொதுவாக, ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குள்ள தூரத்தை இத்தனை மைல்கள் அல்லது கிலோ மீட்டர்கள் என்று குறிப்பிடுகிறோம். வானவெளியிலே சுழலும் அண்டங்களுக் கிடையில் உள்ள வெளியின் தூரத்தை இந்த அளவையினை வைத்துக் கூறுவதற்கு இயலாது. ஏனென்றால் தூரங்களின் அளவு அவ்வளவு அதிகம்!

விண்வெளியின் தூரத்தை ஒளி ஆண்டு (light-year) என்ற அளவையினைக் கொண்டு கணக்கிடுகின்றனர். ஓர் ஒளி ஆண்டு என்பது குறிக்கும் தூரம் எவ்வளவு தெரியுமா? அதைக் கேட்கும் பொழுதே நம் தலை கிறுகிறுத்து விடுகிறது!

வெளிப்புறத்தில் நன்றாக இருட்டி இருக்கும்பொழுது "பாட்டரி" விளக்கை நாம் விசையினை அழுத்தி ஏற்றினால், அதி லிருந்து ஒளிக் கதிர்கள் வேகமாகச் செல்லுவதைக் காணுகிறோம். இம்மாதிரியே சூரியனில் இருந்தும் நட்சத்திரங்களில் இருந்தும் ஒளி விண்வெளியில் பரவுகிறது.

ஒரு விநாடிக்கு 1,82,326 மைல் வேகத்தில் அவற்றின் ஒளிக் கதிர்கள் பரவெளியில் பரவுகின்றன. ஏறத்தாழ மூன்று இலட்சம் கிலோ மீட்டர் வேகத்தில் அந்த ஒளி பரவுகின்றது. அதாவது ஒளிப் பயணத்தின் வேகம் ஒரு விநாடிக்கு மூன்று இலட்சம் கிலோ மீட்டர். இந்த வேகத்தில் ஓர் ஆண்டில் ஒளி எவ்வளவு தூரம் பயணம் செய்கிறது!

சூரியனில் இருந்து வரும் ஒளி பூமிக்கு இந்த வேகத்தில் வந்து சேர எட்டு நிமிடங்கள் ஆகின்றன.

ஒரு விநாடிக்கு மூன்று இலட்சம் கிலோ மீட்டர் வேகம் என்றால் அந்த வேகத்தை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. இந்த வேகத்தில் செல்லும் ஒளி ஓராண்டுக் காலத்தில் எத்தனை கிலோ மீட்டர்கள் செல்லும்? அந்தத் தூரத்தை இத்தனை மைல்கள் என்றோ இத்தனை கிலோ மீட்டர்கள் என்றோ கூறுவது கடினமானதால், வானசாத்திரத்தில் இதனை ஓர் ஒளியாண்டு தூரம் என்பார்கள்!

ஓர் ஒளியாண்டில், இந்த வேகத்தில் செல்லும் ஒளி பரவும் தூரத்தைக் கணக்கிட்டால் ஏறத்தாழ 9460800000000 கிலோ மீட்டர்கள் (ஒன்பது இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து எண்பது கோடி கிலோ மீட்டர்கள்) ஆகிறது.

Koviloor Digital Library



பூமிக்கும் அதற்கு மிக அருகிலுள்ள நட்சத்திரத்திற்கும் இடையில் 4·3 ஒளி ஆண்டுகள் தூரம்!

மிக அருகிலுள்ள நட்சத்திரத்தின் தூரம் 4·3 ஒளி ஆண்டுகள் என்ருல், மிகவும் எட்டியுள்ள நட்சத்திரத்தின் தூரம் என்ன?

இதுவரை கண்டுபிடித்துள்ள விண்மீன்களில் மிகத் தூரத்திலுள்ளது பூமியிலிருந்து ஆயிரம் கோடி ஒளியாண்டுகள் தூரத்திலிருக்கிறதாம்!

மிகச் சமீபத்தில் உள்ள நட்சத்திரம் 4·3 ஒளியாண்டு தூரம்! மிகவும் எட்டியுள்ள நட்சத்திரம் ஆயிரம்கோடி ஒளியாண்டு தூரம்!

இதனை எண்ணிப் பார்க்கவாவது முடிகிறதா ?

**எண்ணற்ற அண்டங்கள்**

இத்தகைய விண்மீன்கள் இலட்சக்கணக்கில் நெருங்கி உள்ளதைத்தான் "மீன் மண்டலம்" (Galaxy) என்பார்கள். பல கோடி "மீன் மண்டலங்கள்" விண்வெளியிலே இயங்குகின்றனவாம்!

அபரிமிதமான சக்திவாய்ந்த 'Spectroscope' போன்ற கருவிகளின் துணை கொண்டு அல்லும் பகலுமாய் வானஇயல் வல்லுநர்கள் கண்டு பிடித்த உண்மைகள் இவை!

ஆயிரங்கோடி ஒளியாண்டுகளுக்கு அப்பால் இருக்கும் சில விண்மீன்களில் (இதை ஆங்கிலத்தில் 'quasar' என்கிருர்கள்) இருந்து ஒவ்வொரு விநாடியும் வெளிப்படும் மின் சக்தியின் அளவு நமது பூமியின் மின்சாரத் தேவையினை கோடிக்கணக்கான ஆண்டுகளுக்குப் பூர்த்தி செய்யப் போதுமானதாம்!

'Neutron Star' என்று புது வகை விண்மீன்களைக் கண்டுபிடித்திருக்கின்றனர். அத்தகைய விண்மீன் ஒன்றிலிருந்து ஒரு தேக்கரண்டிப் பொருளை எடுத்தால், அது 20 கோடி யானைகளின் கனத்தைக் கொண்டதாக இருக்கும் என்கின்றனர்!

இந்தப் பேரண்டங்களில் வேறு உயிரினங்கள் வாழ்கின்றனவா என்பது முக்கியமான கேள்வியாகும்.

Koviloor Digital Library



ஹார்வார்டு (Harvard) பல்கலைக்கழகப் பேராசிரியர் நோபல் பரிசு பெற்ற ஜார்ஜ் வால்டு (George Wald) என்பவர் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றிலே "விண்வெளிப் பிரபஞ்சங்கள் பலவற்றிலும் உயிரினங்கள் உள்ளன என்பதைப்பற்றி சந்தேகம் இல்லை" என்று கூறியுள்ளார்.

வான இயல் வல்லுநரான அமெரிக்க நாட்டுப் பேராசிரியர் 'Richard Berendzen' என்பவர், "உயிரினங்கள் இருக்கின்றனவா என்பது கேள்வி அல்ல. எந்தெந்தப் பிரபஞ்சங்களில் உள்ளன என்பதைத்தான் நாம் காணவேண்டியிருக்கிறது. மனிதர்களாகிய நம்மைக் காட்டிலும் நுண்ணறிவுடையவர்களாகத்தான் அவர்கள் இருப்பார்கள்" என்று கூறுகின்றார்.

(ஆகாரம் — அமெரிக்க நாட்டிலிருந்து வெளிவரும் 'National Geographic' என்ற 1974 மே மாதத்திய இதழ்—'Reader's Digest' —November, 1974).

இதையெல்லாம் எழுத்திலே பார்க்கும்பொழுதே தலையைச் சுற்றுவதுபோல் இருக்கிறதே. இவற்றை எண்ணிப் பார்த்து நாம் புரிந்துகொள்ளுவது இயலுமா?

**அளப்பருந் தன்மை வளப் பெருங் காட்சி!**

நம் முன்னோர்கள் வான இயல் அறிவில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தெளிவு பெற்றிருந்தனர். சூரிய சந்திர கிரஹணங்களையும் சூரியன் உதித்து மறையும் நேரங்களையும் துல்லியமாகக் காணுவதில் திறம் பெற்றிருந்தனர்.

இத்தகைய இயற்கையின் காட்சியினைக் கண்டு இறைமையின் மாட்சியினை எண்ணி வியந்தனர்.

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப் பெருங்காட்சி"

(திருவாசகம்—திருவண்டப் பகுதி)

என்கிறார் மாணிக்கவாசகர், வானிலே சுழலும் மண்டலக் குவியல்களைக் கண்டு!

Koviloor Digital Library


அளப்பருந் தன்மையுடைய வளப் பெருங்காட்சியில் உள்ள அண்டங்கள் நூற்றொரு கோடிக்கு அதிகமாக உள்ளன. (எண்ணி அளவிட முடியாதவற்றை நூற்றொரு கோடிக்கு அதிகமானது என்று கூறுதல் மரபு.) இவ்வண்டங்களனைத்தையும் சேர்த்து இறைமையோடு ஒப்பிடும்போது, இவை ஓர் அணுவாகி விடுகின்றனவாம். இறைமை அண்டம்போல் பெரிதாக உள்ளதாம்!

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறியவாகப் பெரியோன்......"

(திருவாசகம்—திருவண்டப் பகுதி)

கோடிக் கணக்கான அண்டங்களின் குவியல்களையும் இறைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அண்டக் குவியல்கள் அணுவாகிவிடுகின்றன; இறைமை அண்டமாகப் பெரிதாகி நிற்கின்றது என்கிறார் மாணிக்கவாசகர்.

விண்வெளியிலே சுழலும் ஆயிரம் சூரியன்களின் பிரகாசத்துடன் கூடிய ஒளிக்கற்றைகளை கடவுளின் நீண்ட முடியாகப் பாடுகின்றார் பெரியாழ்வார்:

"கதிராயிரம் இரவி கலந்தெரித் தால்ஒத்த நீள் முடியன்."

(திருமொழி, 44-1)

அண்டங்களையெல்லாம் உள்ளடக்கும் விஸ்வ ரூபங் கொண்டவன் இறைவன் என்பதைக் குறிக்கும் வகையில் அண்டங்களையும் அவனிகளையும் உண்ட பிரானைக் கடவுளைப் போற்றுகின்றனர் அடியார்கள்.

"அண்டமும் இவ்வலைகடலும் அவனிகளும் குலவரையும்
உண்டபிரான் உறையுமிடம்.................."

(திருமங்கையாழ்வார்-பெரிய திருமொழி,4-1)

ஓர் அடியால் உலகத்தினை அளந்த உத்தமனைக் கண்டார்கள்:

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி"

(திருப்பாவை)

Koviloor Digital Library



அண்டக் குவியல்களுக்கெல்லாம் அப்பாலாய் நிற்கும் பர வெளி எல்லை இல்லாதது என்பதனை உணர்த்தும் வகையில்,

"அண்டத்துக் கப்பாலைக் கப்பாலானை"

(தேவாரம்-திருத் தலையாலங்காடு)

என்றும்

"அப்பாலைக்கு அப்பாலைக்கு அப்பாலானை"

(தேவாரம்-திருவாரூர்)

என்றும் நாவுக்கரசர் இறைவனை வருணிக்கின்றார்.

"அண்டத்து அண்டத்தின் அப்புறத்தாடும் அமுதன்"

(தேவாரம்-திருநாட்டுத் தொகை)

என்கிறார் சுந்தரர்.

**அற்புதம்! அற்புதம்!**

பரவெளியில் எண்ணில்லாத அண்டங்கள் அசைந்து நிற்பதை வித்தை என்றும், அவதானம் என்றும், அற்புதம் என்றும் பாடுகின்றார் தாயுமானவர்:

"மண்டலத்தின் மிசைஒருவன் செய்த வித்தை
அகோவெனவும் வாரணாதி
அண்டமவை அடுக்கடுக்காய் அந்தரத்தில்
நிறுத்தும் அவதானம் போல்
எண்டருநல் அகிலாண்ட கோடியைத்தன்
அருள் வெளியில் இலக வைத்துக்
கொண்டு நின்ற அற்புதத்தை எவராலும்
நிச்சயிக்கக் கூடாத ஒன்றை."

இயற்கையின் இக் காட்சியிலே இறைமையின் மாட்சியைக் காணும் ஞானக் கவிஞர் பாரதியார் பாடுகின்றார்;

"விண்டுரைக்க அறிய அரியதாய்
விரிந்த வான வெளியென நின்றனை;
அண்ட கோடிகள் வானில் அமைத்தனை,
அவற்றில் எண்ணற்ற வேகம் சமைத்தனை;

Koviloor Digital Library



மண்டலத்தை அணுவணு ஆக்கினல்,
வருவது எத்தனை அத்தனை யோசனை
கொண்ட தூரம் அவற்றிடை வைத்தனை
கோலமே! நினைக் காளி என்றேத்துவேன்!"

(மகாசக்தி வாழ்த்து)

*இருபதாம் நூற்ருண்டுக் கவிஞர் பாரதி அறிவியல் கண் கொண்டு வானத்தைப் பார்க்கிருர். வான வெளியினைப் பார்க்கிருர். எல்லையில்லாத அந்த விண் வெளிக் கடலிலே குமிழிகள் போல் அண்டங்கள் தோன்றி விரைந்தோடுகின்றன என்கிருர். இவற்றுக்குக் கணக்கு ஏது? வியப்பூட்டும் இந்தக் காட்சி இறைமை என்ற சக்தியின் மாட்சிதான் என்று தெளிவாகக் கூறுகின்ருர் பாரதி :*

"தொக்கன அண்டங்கள் - வளர்
தொகைபல கோடிபல் கோடிகளாம்
இக்கணக்கு எவர் அறிவார் ? - புவி
எத்தனை உளது என்பது யாறிவார் ?

நக்க பிரானறிவான் - மற்று
நானறியேன் பிற நரர் அறியார் ;
தொக்க பேரண்டங்கள் - கொண்ட
தொகைக்கு எல்லை இல்லை என்று சொல்லுகின்ற
தக்கபல் சாத்திரங்கள் ; ஒலி
தருகின்ற வானமொர் கடல் போலாம்;
அக்கடல் அதனுக்கே - எங்கும்
அக்கரை இக்கரை ஒன்றிலையாம்.

இக்கடல் அதனகத்தே - அங்கங்கு
இடையிடைத் தோன்றும் புன்குமிழிகள் போல்
தொக்கன உலகங்கள் - திசைத்
தூவெளி யதனிடை விரைந்தோடும்;
மிக்கதொர் வியப்புடைத்தாம் - இந்த
வியன் பெரு வையத்தின் காட்சி, கண்டீர்;
மெய்க்கலை முனிவர்களே! - இதன்
மெய்ப்பொருள் பரசிவன் சக்தி, கண்டீர்!"

(கோமதி மகிமை)

**சிந்தனை நின்றுவிடுகிறது!**

*விண்வெளி எல்லையற்ற பரவெளி. நில்லாது சுழலும் எண்ணற்ற கோள்கள். கோள்களைக் கொண்ட அண்டங்கள். கோடிக்*

Koviloor Digital Library



கணக்கான அண்டத் தொகுதிகள். இவற்றிடையே எண்ணத்திற்கும் எட்டாத தொலைவு.

இதற்கு ஆதி எது, அந்தம் எது? முடி எது, அடி எது? எனவே இறைமையினை

"ஆதியும் அந்தமும் இல்லா
அரும்பெரும் சோதி"

(திருவெம்பாவை)

என்கிறார் மாணிக்கவாசகர்.

இதையெல்லாம் நாம் கண்களை மூடிக்கொண்டு சிறிது சிந்தித்தோமானால், நம் சிந்தனை செயலற்றுப்போகிறது.

புறப் பொருள்களான இவற்றின் காட்சியினையே நம்மால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லையே; இதற்கெல்லாம் ஆதாரமாக உள்ள இறைமையின் மாட்சியினை நாம் எவ்வாறு சிந்தித்து உணர முடியும்? எனவே இறைவனை,

"சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க"

(திருவாசகம்—திருவண்டப்பகுதி)

என்று பாடுகிறார் மாணிக்கவாசகர்.

சித்தமே செல்ல முடியவில்லை என்றால் அதைப்பற்றிச் சொல்ல முடியுமா? முடியாது. எனவே,

"சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க"

(திருவண்டப்பகுதி)

என்கிறார்.

எண்ணத்திற்கும் சொல்லுக்கும் அப்பாற்பட்ட கடவுளை,

"அற்புதன் காண்க, அநேகன் காண்க"

(திருவண்டப்பகுதி)

என்று பாடுகின்றார்.

Koviloor Digital Library



'மாய மூர்த்தி' என்று பாடிய நம்மாழ்வார் இயற்கையின் அற்புதங்களைக் கண்டு இறைவனை,

" அற்புதன், நாராயணன், அரிவாமனன்"

(திருவாய்மொழி—8 ப. 6 தி.)

என்று பாடுகின்றார்.

இயற்கையின் காட்சியிலே இறைமையின் மாட்சியைக் காணும் நாமும், ஆண்டவனைச் சொற்பதங் கடந்த அற்புத மூர்த்தியாகவே காணுகின்றோம்!

Koviloor Digital Library

# 8. சொல்லரிய மூர்த்தி

பிரமத்தினைச் சொற்களால் உரைத்தல் இயலாது.
(கடோபநிடதம்)

பாலைப் பருகுகின்றோம். அதன் சுவையினை 'இனிப்பு, என்கிறோம்.

தேனைச் சுவைக்கின்றோம். அதனையும் 'இனிப்பு' என்றே கூறுகிறோம்.

பழம். அதன் சுவையும் இனிப்புத்தான்.

பாலும் தேனும் பழமும் இனிப்பு என்றாலும், ஒவ்வொன்றும் வெவ்வேறு வகையான இனிப்புச் சுவையினைக் கொண்டுள்ளது. இந்த வேறுபாட்டைக் குறித்துக் கூறத்தக்க சொற்கள் இல்லை. எனவே, 'இனிப்பு' என்ற ஒரே சொல்லால்தான் பாலின் சுவையினையும், தேனின் சுவையினையும், பழத்தின் சுவையினையும் குறிப்பிடுகிறோம்.

பழம் என்று எடுத்துக் கொண்டால் எத்தனை வகைப் பழங்கள்! வாழைப்பழம் ஒரு வகை இனிப்பு; பலாப்பழம் வேறு வகை இனிப்பு; மாம்பழம் மற்றொரு வகை இனிப்பு!

மாம்பழத்தில்தான் எத்தனை ரகங்கள்! ஒவ்வொரு ரகமும் ஒவ்வொரு வகையான சுவையினை உடையது!

வேறுபட்ட இச் சுவைகள் அனைத்தையும் நாம் 'இனிப்பு' என்ற ஒரே சொல்லால்தான் குறிப்பிடுகின்றோம்.

ஏன்? வேறு சொல் இல்லை!

இது தமிழ் மொழியில் உள்ள குறைபாடா? இல்லை. எல்லா மொழிகளிலும் உள்ள நிலை இதுதான்!

Koviloor Digital Library



ஆங்கிலத்திலும் 'Sweet' என்ற ஒரே சொல்லைப் பயன் படுத்தியே வெவ்வேறு வகையான இனிப்புச் சுவைகளையும் குறிப்பிட வேண்டியிருக்கிறது. சம்ஸ்கிருத மொழியில் 'மதுரம்' என்ற சொல்லே இனிப்புச் சுவைகளைப் பொதுவாகக் குறிக் கின்றது.

மணம் என்றால் அதில் எத்தனையெத்தனை வகைகள்! மலரின் மணம் வேறு; மருக்கொழுந்தின் மணம் வேறு; மலர்களில் மல்லிகை, முல்லை, செவந்தி, சண்பகம் என்று எத்தனையோ வகை மலர்கள். அவற்றில் எத்தனையோ வகை மணங்கள்! எல்லா வகையான மணங்களையும் 'நறுமணம்' என்ற ஒரு சொல்லை வைத்துத்தான் குறிப்பிடவேண்டியிருக்கிறது.

இசை என்றால், யாழின் இசை வேறு; குழலின் இசைவேறு. குரல்களின் இசையில்தான் எத்தனை வகையான இனிமை! பலதிறப்பட்ட இசை இன்பங்களையும் 'இனிமை' என்ற ஒரே சொல்லால்தான் குறிப்பிடுகின்றோம்! வேறு சொற்கள் இல்லை!

அருணோதயத்தினை அழகு என்கிறோம். அந்திவானக் காட்சி யையும் அழகு என்கிறோம்! சித்திரமும் அழகு, சிற்பமும் அழகு! பால்மணம் மாறாத பச்சிளங் குழந்தையின் சிரிப்பும் அழகுதான்; பருவத்தால் மனித உடல் பெறும் தோற்றமும் அழகுதான்! பல வகையான எழில் தோற்றங்களையும் குறிப்பதற்கு நமக்குள்ள ஒரே சொல் 'அழகு' என்பதுதான்!

இதிலிருந்து தெரிவது என்ன?

**மொழியால் முடிவதில்லை**

புலன்கள் வழியாக நாம் பெறும் சாதாரண உணர்வுகள் பலவற்றையும் துல்லியமாகக் கூறும் ஆற்றல் மனித இனம் வளர்த் துள்ள எந்த மொழிக்கும் இல்லை என்பதுதான். அத்தகைய ஆற்றலை அது பெறுவதும் எளிதன்று.

இந் நிலையில் உள்ளத்து உணர்வாக உள்ள இறைமையினை எவ்வாறு மொழியின் வழியாக நாம் உரைத்தல் இயலும்? **புலன் உணர்வுகளையே பொருத்தமுறக் கூற இயலாத மொழியால் உள்ளத்து உணர்வுகளை எப்படிக் கூற முடியும்?** முடியாது!

உயிர்களுக்கெல்லாம் உயிராகி உலகெங்கும் பரவி அண்டங் களத்தனையையும் தன்னுள் அடக்கி நிற்கும் இறைமையினை, எப்படி என்று குறிப்பது? எந்தச் சொல்லால் குறிப்பிடுவது? எவ்வாறு அதனை வருணிப்பது?

Koviloor Digital Library



கடலிலும் இறைமை இருக்கிறது; கார் முகிலிலும் இறைமை இருக்கிறது. சந்திரனிலும் அது இருக்கிறது; சூரியனிலும் இருக்கிறது. நம் உயிரிலும் இருக்கிறது; உடம்பிலும் இருக்கிறது. இந்நிலையில், இறைமையினைக் 'கடல்' என்பதா, 'கார் முகில்' என்பதா? 'சந்திரனே' என்றுரைப்பதா, 'சூரியனே' என்றுரைப்பதா? 'உயிரே' என்றழைப்பதா, 'ஊனே' என்றழைப்பதா?

கடவுளை, 'உயிரே' என்று குறிப்பிட்டால் ஊனில் அது இல்லை என்று ஆகிவிடுமே! 'சந்திரனே' என்றால் பிற பொருள்களில் இல்லை என்றல்லவா பொருளாகிவிடும்! இதனால், உலகப் பொருள்கள் அத்தனையையும் அடுக்கிக் கடவுளுக்கு நாம் பெயரிட முடியுமா? இது இயலாத காரியம்.

எனவே, சொற்களைக் கொண்டு நாம் இறைவனை வருணித்தல் இயலாது என்ற உண்மையினை நமக்கு உணர்த்துகின்றனர் ஞானிகள்.

"இறைவனே! உன்னைச் சொற்களால் சொல்ல இயலாது" என்று அவர்கள் கடவுளைப் போற்றுகின்றனர்.

**"சொல்லினால் சொலப்படாது தோன்றுகின்ற சோதி நீ."**

(திருமழிசைப்பிரான் — திருச்சந்த விருத்தம்-11)

**"சொல்லும் பொருளும் இறந்த சுடரை"**

(திருவாசகம்—புணர்ச்சிப் பத்து-4)

**"உரைக்க வல்லேன் அல்லேன் உன் உலப்பில் கீர்த்தி வெள்ளத்தின்**
**கரைக்கண் என்று செல்வன் யான்?"**

(திருவாய்மொழி-4 ப. 3 தி.)

* * *

**ஊமையன் எழுப்பும் ஒலிகள்**

இறைவனைச் சொற்களால் வருணித்தல் இயலாது என்பது ஏதோ மிகைபடக் கூறுதல் அன்று. உண்மையிலேயே மனிதனது மொழி அவன் எண்ணங்களை அவ்வாறே காட்டும் திறத்தினைப் பெறவில்லை. இதயத்து எண்ணங்களை இயன்ற அளவு ஏற்றமுற எடுத்துக் காட்டும் சொற்கோலங்களைத்தான் கவிதைகள் என்று நாம் போற்றுகிறோம்.

கவிதைக் கலையிலே உலகப் புகழ் பெற்ற வங்கக் கவிஞர் ரவீந்திரநாத தாகூர் கூறுகின்றார்:

Koviloor Digital Library



"பெரும்பாலும் மனித இனத்தின் சொற்களை ஒரு மொழி என்று கூறுவதற்கில்லை. ஊமையன் காட்டும் ஒலிச் சைகை களாகவே அவை உள்ளன! அவை மனிதனின் எண்ணங்களைச் சுட்டிக் காட்டுகின்றனவே அன்றி அவ்வெண்ணங்களை அவ்வாறே வெளிப்படுத்துவதில்லை."

( Very often man's words are not a language at all, but merely a vocal gesture of the dumb. They may indicate, but do not express his thoughts.

—Rabindranath Tagore in (" Sadhana ")

ஆம்! ஊமையன் காட்டும் ஒலிச் சைகைகள்தாம் நாம் பயன் படுத்தும் சொற்கள். இச் சொற்களால் எவ்வாறு உள்ளுணர்வான இறைமையினைச் சொல்லுதல் இயலும்? அவ்வாறு சொல்ல முற் படுதல் துரும்பினைப் பற்றிக்கொண்டு கடலைக் கடக்கும் அசட்டுத் துணிவாகும் என்கிறார் தாயுமானவர்.

"சொல்லாலே சொலப்படுமோ சொல்லுந் தன்மை
துரும்பு பற்றிக் கடல்கடக்கும் துணிபே அன்றோ !"

(கல்லாலின்-1)

"பாரொடு விண்ணாய்ப் பரந்த" இறைமையினைச் சொற்களால் சொல்வது இயலாது; எனவே அதனைச்

"செப்புதற்கரிய செழுஞ்சுடர் மூர்த்தி"

(திருவாசகம்-பிடித்த பத்து-5)

என்றுதான் குறிப்பிட இயலும் என்கிறார் மாணிக்கவாசகர்.

"படியே இதுவென்று உரைக்கலாம்படி யல்லன் பரம்பரன்"

(திருவாய்மொழி 8 ப. 8 தி)

என்கிறார் நம்மாழ்வார்.

இறைமை இப்பூமியாக (மண்ணாக) இருக்கிறது என்றால் வேறெதிலும் இல்லை என்று நாம் கருதிவிடலாம். இறைமை விண்ணாக இருக்கிறது என்றால் விண்ணில் மட்டுமே அது உள்ளது என்று நாம் தவறாக எண்ணிவிடலாம். ஆதலால்,

"மண்ணாகி விண்ணாகி மலையுமாகி வயிரமுமாய்
மாணிக்கந் தானே யாகிக்

Koviloor Digital Library



கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியுமாகிக் கலையாகிக்
கலைஞானந் தானே யாகி.''

(தேவாரம்—பொது)

என்று பாடும் நாவுக்கரசர்,

''மண்ணல்லை விண்ணல்லை வலயமல்லை
மலையல்லை கடலல்லை வாயுவல்லை,
எண்ணல்லை எழுத்தல்லை எரியுமல்லை
இரவல்லை பகலல்லை யாவுமல்லை.''

(தேவாரம்-திருவொற்றியூர்)

என்றும் பாடுகின்றார்!

இறைமையின் சிறப்பினை நாம் எல்லோரும் ஓரளவு உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் இறைமையை விளக்கும் அபூர்வமான சொற்றொடர்களைத் தாயுமானவர் நமக்கு வழங்கி யுள்ளார்.

''பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே !''

(பரிபூரணானந்தம்)

''அண்ட பகிரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்தமான பரமே !''

(ஆனந்தமான பரம்)

''இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி
எங்குநிறை கின்ற பொருளே !''

(எங்கு நிறைகின்ற பொருள்)

இப்படி எத்தனையோ சொற்றொடர்கள் தாயுமானவரின் பாடல்களிலே உள்ளன !

ஆயினும், அவரே பாடுகின்றார்,

''சொல்லற் கரிய பரம்பொருளே
சுகவா ரிதியே சுடர்க் கொழுந்தே''

(சொல்லற்கரிய)

என்று !

இறைவனது திருவடிகளுக்குச் சொற்களால் பாடல்களைப் புனைந்து மாலைகளாகச் சார்த்துகின்றோம்; இருப்பினும் அந்

Koviloor Digital Library


திருவடிகள் உரைகளால் உணரப்படாதவை என்கிருர் நாவுக்கரசர் :

"உரைமாலை எல்லாமுடைய அடி
உரையால் உணரப்படாத அடி"

(தேவாரம்-திருவதிகை வீரட்டானம்)

**எழுத்தில் அடங்காதது இறைமை**

கணக்கு, பௌதிகம் முதலிய அறிவியல் நூல்களில் கருத்துக்களைக் காட்டுவதற்குக் குறிகளையே பயன்படுத்துகிறோம். சாதாரணக் கணக்கில், பெருக்குதல் என்றால் (×) குறி, வகுத்தலுக்கு (÷) குறி, கழித்தலுக்கு (−) குறி, இவ்வாறு பல வகைக் குறிகள் தேவைப்படுகின்றன. இன்னும் விரிவான அறிவியல் துறைகளில் நுட்பமான கருத்துக்களைக் காட்டுவதற்கு அடையாளக் குறிகளே பயனுள்ளவை; சொற்கள் பயனற்றுப் போகின்றன.

இவ்வாறு, சாதாரன அறிவியல் கருத்துக்களைக் கூறுவதற்கே சொற்கள் பயன்படாத நிலையில், உள்ளத்து உணர்வான இறைமையினைக் கூறுவதற்குச் சொற்கள் எவ்வாறு பயன்படும்?

உள்ளத்து உணர்வுகளைக் கூறும்பொழுது சொற்கள் எவ்வளவு குறைபாடுகளைக் கொண்டவை என்பதைக் காட்ட ஒன்றிரண்டு உதாரணங்கள் போதுமானவை.

தவழுங் குழந்தை தாயின் முகத்தைப் பார்த்துச் சிரிக்கின்றது. மழலைச் சிரிப்புக் காட்டும் குழந்தையின் உணர்வினை 'மகிழ்ச்சி' என்கிறோம். அக்குழந்தையினை அள்ளி எடுத்து அரவணைத்து உச்சி மோந்து உவகை பூக்கின்ருள் தாய். தாயின் உணர்வினையும் 'மகிழ்ச்சி' என்றுதான் குறிப்பிடுகின்றோம்.

குழந்தையின் மகிழ்ச்சிக்கும் தாயின் மகிழ்ச்சிக்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டும் வகையில் சொற்கள் இல்லை.

கோடைகாலம். மாலைநேரம். வீட்டு மாடியிலே நிற்கிறோம். மெல்லிய காற்று இதமாக வீசுகின்றது. இதிலே ஓர் இன்பத்தைப் பெறுகின்றோம். கவிதை ஒன்றை அனுபவித்துப் படிக்கின்றோம். இதுவும் ஓர் இன்பம். காற்று அளிக்கும் இன்பமும் கவிதை அளிக்கும் இன்பமும் ஒன்ருி இல்லை. ஆயினும் இந்த வேறுபாட்டைக் காட்டும் சொல்லினங்கள் இல்லை. இருவகையான

Koviloor Digital Library



உணர்வுகளையும் "இன்பம்" என்ற சொல்லால்தான் குறிக்க வேண்டியுள்ளது.

சாதாரணமான இவ்வுணர்வுகளையே சரிவரச் சொல்லுவதற்கு இயலாதபொழுது, "பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறைந்து", இதயத்து உணர்வாகவும் இலங்கும் இறைமையினை எவ்வகைச் சொற்களால் எவ்வாறு சொல்லுவது?

கவிஞர் தாகூர் கூறியுள்ளபடி மொழிகள் ஊமையன் காட்டும் ஒலிச் சைகைகளாகவே உள்ளன.

"உரைகளுக்கு அப்பாற்பட்டு நிற்கும் இறைமையினை உரைகளால் நாம் விளக்க முற்படுவது ஊமையரின் செயல்தான்; கரையற்ற ஒன்றுக்குக் கரைகாணும் செயலைப் போன்றது இது. அலைகள் இல்லாத கடல்போல் நம் சிந்தை தெளிந்தால், அந்தத் தெளிவிலே ஓர் ஒளியாகத் தோன்றுகிறது இறைமை", என்று பாடுகின்றார் திருமூலர்.

"உரையற்றது ஒன்றை உரைசெய்யும் ஊமர்காள்
கரையற்றது ஒன்றைக் கரைகாணல் ஆகுமோ?
திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்
புரையற்றி ருந்தான் புரிசடை யோனே."

(திருமந்திரம்—2955)

எனவே,

"சொல்லமாட்டேன் அடியேன் உன்துளங்கு
சோதித் திருப்பாதம்."

(திருவாய்மொழி—8 ப. - 5 தி.)

என்று பாடும் நம்மாழ்வார், இறைவன் சொல்லப்படாதவன் என்பதனை நமக்கு உணர்த்துகின்றார்!

"பிரமத்தினை நாவால் பேச இயலாது;
ஏனெனில் நாவைப் பேச வைப்பதே பிரமந்தான்".

இது கேனோபநிடத வாக்கு.

சொற்களால் இறைமையினைக் கூறுதல் இயலாது; ஏனெனில் சொற்களாக உள்ளதே இறைமைதான்.

எனவே,

"சொல்லானைப் பொருளானைச் சுருதியானை"

(தேவாரம் - திருநாரையூர்)

என்றும்,

Koviloor Digital Library



"நாவானை நாவினில் நல்லுரை யானனே"

(தேவாரம்—திருநாரையூர்)

என்றும் பாடுகின்றார் நாவுக்கரசர்.

ஒளியாகவே இருக்கும் ஒரு பொருளை இன்னொரு ஒளி கொண்டு எவ்வாறு காட்ட முடியும்? அதுபோல், சொல்லும் அதன் பொருளுமாய் நிற்கும் பிரமத்தினைச் சொற்களைக் கொண்டு கூறுதல் எவ்வாறு முடியும்?

ஞானக் கவிஞர் பாரதியார் "சொல்" என்ற தலைப்பை வைத்தே ஒரு பாடல் பாடியுள்ளார்.

"சொல் ஒன்று வேண்டும். தேவ சக்திகளை நம்முள்ளே நிலைபெறச் செய்யும் சொல் வேண்டும்" என்கிறார்.

"ஓம்" என்று உரைத்து விடில் போதுமோ? - அதில்
உண்மைப் பொருள்அறிய லாகுமோ?
தீமை அனைத்தும் இறந்தேகுமோ - என்றன்
சித்தம் தெளிவுநிலை கூடுமோ?

"உண்மை ஒளிர்க" என்று பாடவோ? - அதில்
உங்கள் அருள் பொருந்தக் கூடுமோ?
வண்மை உடையதொரு சொல்லினால் - உங்கள்
வாழ்வுபெற விரும்பி நிற்கிறோம்!

**சொல்லரிய மூர்த்தி**

எல்லையற்ற பரவெளி. பரவெளியில் பம்பரமாய்ச் சுழலும் பேரண்டங்கள். எண்ணிப் பார்ப்பதற்கும் இயலாத தொலைவி லிருந்து ஒளிரும் விண்மீன்கள். இவ்வுலகம். உலகிலுள்ள உயிர்கள். இக்காட்சியினைக் காணும் மனிதனது உள்ளத்திலே உதிக்கிறது ஓர் உணர்வு! அற்புதமான இக்காட்சிக்குப் பின்னால் ஆதாரமாக ஏதோ ஓர் ஆற்றல் இருக்கிறது என்ற உணர்வுதான் அது. உள்ளத்தால் ஓர்ந்து பெறப்படும் அந்த உணர்வு நுட்ப மான ஒளிக்கீற்றாக இதயத்தில் தோன்றி இலங்குகிறது. இந்த நுண்ணிய உணர்வினை உரைப்பது எப்படி? அதனைச் சொல்ல இயலாத நுண்ணுணர்வு என்கிறார் மாணிக்கவாசகர்:

தாற்றச் சுடரொளியாய், சொல்லாத நுண்ணுணர்வாய்"

(திருவாசகம் - சிவபுராணம்)

Koviloor Digital Library



எனவே,

"சொற்பதங் கடந்த தொல்லோன்"

(திருவண்டப்பகுதி)

என்று அவர் ஏத்துகின்றார்.

"நீ சொற்களையெல்லாம் கடந்து நிற்பவன். சொல்லுதற்கு அரியவன். எனவே, சொல்லுவதற்கு அரியது என்பதே உன் தன்மையாகும்", என்கிறார் நாவுக்கரசர்:

"சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுவுன் தன்மை"

(தேவாரம் –பொது)

ஆண்டாண்டுக் காலமாக ஞானிகளின் உள்ளம் புலன்களுக்கு எட்டாத பொருளைப் புகலுவதற்கு ஏற்ற சொற்களைத் தேடித் தேடி பார்த்துவிட்டு இயலாத நிலையில்தான்,

"தோய்விலன் புலனைந்துக்கும்
சொலப்படான் உணர்வின் மூர்த்தி"

(திருவாய்மொழி-3 ப. 5தி)

என்ற முடிவுக்கு வருகின்றது!

உணர்வின் மூர்த்தியாகக் கண்ட இறைவனை, சொல்லரிய மூர்த்தியாகவும் கண்டனர் மெய்யடியார்கள்!

Koviloor Digital Library

# 9. அறிவரிய மூர்த்தி

அறிவாக உள்ளது பிரமம். ஆனால், அது அறிவிற்கு அப்பாற்பட்டது. அறிவுக்குள் அறிவாய் நின்று அறிவினை இயக்குவதே பிரமந்தான். எனவே, அறிவினால் பிரமத்தினை அறிதல் இயலாது''

(பிரஹ தாரண்யக உபநிடதம்)

கூர்மையான நீண்ட வாள். உருக்கால் செய்யப்பட்டது. கடினமான பாறையினைக்கூட அது ஒரே வெட்டில் பிளந்து விடும்! அவ்வளவு கூர்மையுள்ளது அந்த வாள்.

அந்த வாளைக் கொண்டு அதனையே நாம் இரண்டாக வெட்ட முடியுமா?

ஒரு நாளும் முடியாது.

பிற பொருள்களை எல்லாம் வெட்டுவதற்குப் பயன்படும் அந்த வாள் அதனையே வெட்டுவதற்குப் பயன்படுவதில்லை.

நம் கண்களால் பிற பொருள்களைப் பார்க்கிறோம்; பல காட்சிகளைக் காணுகிறோம். ஆனால், அக்கண்கள் தங்களைத் தாங்களே காண முடிவதில்லை. கண்ணாடியில் தெரியும் பிரதிபிம்பத்தில்தான் கண்களை நாம் காணுகின்றோம்.

### அறிவுக்கு அறிவானது இறைமை

இதுபோல், நம் அறிவினைக் கொண்டு இறைமையினை அறிதல் இயலாது என்கின்றனர் மெய்யுணர்ந்தோர். அறிவுக்கு அறிவாய் நிற்கும் இறைவனை அறிவால் அறிவது இயலாது என்கின்றனர்:

''அறியுந் தரமோ நானுன்னை
அறிவுக்கு அறிவாய் நிற்கையினால்''

(தாயுமானவர்—தன்னையொருவர்)

ஆயினும், மனிதன் தனது அறிவினைக் கொண்டு இறைமையினை ஆராய்வதற்கு முற்படுகின்றான்!

Koviloor Digital Library



பள்ளிகளில் விஞ்ஞானப் பாடங்களைக் கற்கும் மாணவர்களுக்கு விஞ்ஞான உண்மைகளைப் போதிப்பதற்கெனப் பல சோதனை (experiments) செய்து காட்டுவார்கள். உஷ்ணத்தால் திடப்பொருள்கள் விரிவடைகின்றன. இதனை மாணவர்களின் மனத்திலே பதிய வைப்பதற்கென, இரும்பாலாகிய சிறு பந்து ஒன்றை ஏறத் தாழ அதே அளவுள்ள வளையத்தின் வழி செலுத்துவார்கள். அப்பந்தினை விளக்குச் சூட்டிலே வைத்துப் பிறகு அந்த வளையத்தின் மீது வைப்பார்கள். அது வளையத்தின் வழியே செல்லாது. சிறிது நேரம் கழித்துச் சூடு தணிந்தவுடன் பந்து வளையத்தின் வழி செல்லும். நீரகம் (hydrogen), உயிரகம் (oxygen) என்ற இரண்டு காற்றுக்களின் சேர்க்கையால்தான் நீர் உண்டாகின்றது. இதைக் காட்டுவதற்கென, நீரைக் கொதிக்க வைத்து ஆவியாக்கி, அந்த நீராவியிலிருந்து நீரகத்தையும் உயிரகத்தையும் பிரித்துக் காட்டுவார்கள். இவ்வாறு பல சோதனைகளைச் செய்து காட்டித்தான் விஞ்ஞான உண்மைகளைப் போதிக்கின்றனர். இதற்கெனப் பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள் (laboratories) இருக்கின்றன.

இதுபோல் இறைமை பற்றியும் சோதனைகளைச் செய்ய முற்படுகிறான் மனிதன். இறைமை இருக்கிறதா? இல்லையா? இருந்தால் அதன் தன்மை என்ன? இறைமையின் அளவு என்ன? அதன் ஆற்றல் என்ன? அதன் உருவம் என்ன? உள்ளமைப்பு என்ன? இவற்றையெல்லாம் சோதனை நடத்தி ஆராய்ந்து அறிய முற்படுகிறது மனித உள்ளம்.

விஞ்ஞானத்திலே நாம் ஆய்வுகளை நடத்தி அறிவதெல்லாம் பருப்பொருள்களைப் பற்றித்தான். அவை திடப்பொருள்களாகவோ, திரவப் பொருள்களாகவோ, வாயுப் பொருள்களாகவோ இருக்கலாம். ஆயினும் அவையனைத்தும் நம் புலன்களுக்குத் தென்படும் புறப்பொருள்கள். நுண்ணிய பொருள்களாக இருந்தால் பூதக் கண்ணாடிகளின் துணைகொண்டு அவற்றை நாம் பார்க்க முடிகிறது.

ஆனால், இறைமையோ நம் ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்டது. ஐம்புலன்களுக்கும் அகப்படாதது. உள்ளத்து உணர்வாக உள்ளது.

இத்தகைய இறைமை பற்றிச் சோதனை செய்வது எவ்வாறு இயலும்?

Koviloor Digital Library



**ஆய்வதற்கு அரியது**

ஐம்புலன்களுக்கும் அகப்படாத ஒன்றை எந்தக் கருவியினைக் கொண்டும் நாம் பார்க்கவோ, கேட்கவோ, முகரவோ, சுவைக்கவோ, உற்றுணரவோ முடியாது. எனவே, இறைமையினைச் சோதனை மூலம் ஆய்ந்து காணுதல் இயலாது.

"சோதித்தார் காணாமை நின்றாய் போற்றி"

(தேவாரம்—திருக்கயிலாயம்)

என்று பாடுகிறார் நாவுக்கரசர்.

"ஆய்வதற்கு அரியராகி அங்கங்கே ஆடுகின்றது"

(தேவாரம் —திருப்புகலூர்)

இறைமை என்கிறார்.

இதனையே பொய்கையாழ்வாரும் புகலுகின்றார்:

"..................

ஆராயப்பட்டு அறியார் கண்டீர், அரவணைமேல்
பேராயற்கு ஆட்பட்டார் பேர்"

(முதல் திருவந்தாதி—55)

குறிப்பிட்ட ஒரு பொருளை நாம் ஆராய்ந்து அறிய முடியும். ஆனால், நாம் ஆராய முற்படுவது குறித்த ஒரு பொருளாக இல்லாமல், உலகனைத்துமாக இருந்தால் அதனை நாம் எவ்வாறு ஆராய்வது? அறிவது?

"அனைத்துலகங்களையும் தன்னுள் அடக்கி வைத்துள்ளது இறைமை. தானும் அவ்வுலகங்களில் அமைந்து நிற்கிறது. இத்தகைய இறைமையை எவ்வாறு அறிவது? அறிகிலேன்", என்கிறார் நம்மாழ்வார்:

"அறிகிலேன் தன்னுள் அனைத்துலகும் நிற்க
நெறிமையால் தானும் அவற்றுள் நிற்கும்பிரான்"

(திருவாய்மொழி—9 ப. 6தி.)

இப்பூமண்டலத்தையே நாம் இன்னும் முழுதுமாக அறிந்து கொள்ளவில்லை. அணுவினை ஆய்ந்து அதனைப் பிளந்து அதன் ஆற்றலை அண்மையில்தான் விஞ்ஞானிகள் கண்டுள்ளனர் பரவெளியிலே படர்ந்து ஒளிரும் பல கோடி நட்சத்திரக் குவியல்களைப் பூராவாக நாம் இன்னும் அறியவில்லை. புதிய புதிய

Koviloor Digital Library



விண்மீன்களை வானியல் நிபுணர்கள் பரவெளியில் காணுகின்றனர். இன்னும் காண வேண்டியவை எத்தனை எத்தனையோ? விஞ்ஞான முன்னேற்றத்தால் நாம் காணும் புதிய புதிய உண்மைகள் நமக்கு உணர்த்துவது என்ன? நாம் இன்னும் காண வேண்டியது எவ்வளவோ இருக்கிறது என்பதைத்தான். இவ்வாறு, கண்ணுக்குப் புலனுகும் பருப்பொருள்களைப்பற்றியே இன்னும் நாம் அறியாமல் இருக்க, இவற்றையெல்லாம் தன்னுள்ளே அடக்கி நிற்கும் இறைமையினைப்பற்றி நாம் எப்படி அறிதல் இயலும்?

"ஆரே அறிவார் அனைத்துலகும் உண்டுமிழ்ந்த,
பேராழி யான்றன் பெருமையை...... '

(நான்முகன் திருவந்தாதி—73)

என்று பாடுகிருர் திருமழிசையாழ்வார்.

"அண்டம் அனைத்திலுமாய் அப்பாலுக்கு அப்பாலும்
கொண்டநின்னை யார் அறிந்து கொள்வார் பாராபரமே!"

(தாயுமானவர்—14)

"இறைமையின் பெருமையினை யார் அறிவார்? அதன் அகலமென்ன, நீளமென்ன என்று எவர் அறிவார்? பேரில்லாத பெருஞ் சுடரான இறைமையின் தோற்றமான வேர் எது என்பதை எவரும் அறியமாட்டார்கள்" என்று பாடுகின்ருர் திருமூலர்:

"யார் அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
யார் அறிவார் இந்த அகலமும் நீளமும்
பேர் அறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேர் அறியாமை விளம்பு கின்றேனே."

(திருமந்திரம்—95)

**நூலேணி**

மற்ற உயிரினங்களில் இருந்து மனிதனை உயர்த்துவது அவனிடம் சிறப்பாக உள்ள பகுத்தறியும் பண்புதான். எனவே, தன் அறிவுமீது மனிதனுக்கு அளவில்லாத நம்பிக்கை உண்டு. அறிவினைக் கொண்டு எதையுமே அறிய முயலும் மனிதன், தன் அறிவைப் பயன்படுத்தி இறைமையினையும் அறிந்து கொள்ள முற்படுகின்ருன். இறைமைபற்றி ஆராய்கின்ருன். இறைமையின் தன்மை என்ன, இயல்பு என்ன, ஏற்றம் என்ன என்றெல்லாம் ஆராய்ந்து பார்க்கிருன். தத்துவங்கள் பலவற்றை வகுக்கிருன். இவற்றைக் கூறும் எண்ணற்ற நூல்களை எழுதுகிருன். இந்நூல்

Koviloor Digital Library



களைக் கற்று அதனல் வளரும் அறிவால் இறைமையினை அறிந்து கொள்ளலாம் என்று எண்ணுகிருன்.

இதையெல்லாம் கண்டு எள்ளி நகையாடுகின்ருர் ஒரு ஞானி. நமக்கு ஒரு கதை சொல்லுகிருர்!

பஞ்சு மூட்டைகளை ஒருவன் சேர்த்து வைத்தான். நிறையச் சேர்த்து வைத்தான்.

"இவ்வளவு பஞ்சு எதற்கு?" என்று கேட்டார்கள் அருகில் உள்ளவர்கள்.

"இந்தப் பஞ்சை நூற்று அந்த நூலால் ஏணி செய்யப் போகிறேன்" என்ருன் அவன்.

"நூலால் ஏணியா? எதற்கு?" என்று கேட்டார்கள்.

"நூலேணி வழியாக ஏறி ஆகாய மண்டலத்திற்குப் போகப் போகிறேன்" என்ருன் அவன்!

நூலேணி வழியாக ஆகாயத்தை எட்டுவதற்கு முயற்சிப்பது எவ்வளவு மடமை! இதுபோன்ற மடமைதான் நூல்களைப் படித்துப் பெறக்கூடிய அறிவால் இறைமையினை அறிந்து கொள்ளலாம் என்று நினைப்பது, என்கிருர் தாயுமானவர்:

"நூலேணி விண்ணேற நூற்குப் பருத்தி வைப்பார்
போலே கருவி நன்னூற் போதம் பராபரமே."

(பராபரக்கண்ணி—186)

நூலறிவால் மட்டுமே எவரும் மெய்யுணர்வு பெறுதல் இயலாது என்பது சான்ருேர்கள் கண்ட உண்மை.

ஒருவன் தன் சிறு வயதிலேயே தன்னைப் பெற்ற தாயை இழந்துவிட்டான். வயது வந்தபின் அவனல் தன் தாயின் முகத்தைக்கூட நினைத்துப் பார்க்க முடியவில்லை. அனுதை விடுதியிலே வளர்ந்த அவனுக்குத் தாயன்பு எப்படி இருக்கும் என்பதே தெரியாது. இவ்வாறு வளர்ந்த அவன் தாயன்புபற்றிப் பல நூல்களைப் படிக்கின்ருன். தாய்ப்பாசத்தினைக் காட்டும் பல கதைகளைக் கேட்கிருன். பிள்ளைமீது தாய்க்கு உள்ள உண்மையான அன்பினைக் காட்டும் திரைப்படங்கள் பலவற்றைப் பார்க்கிருன். இவ்வளவும் அவன் செய்தாலும், தாயன்பினை நேரடியாக அனுபவிக்கும் பேறு பெருத அவனல் உண்மையான தாயன்பின்

Koviloor Digital Library



தன்மையினை உணர்தல் இயலுமா? இயலாது. தாயன்பினை நேரடியான அனுபவத்தால் உணராதவருக்கு அதுபற்றி எவ்வளவு படித்தாலும் தாயன்பின் தன்மை தெரிவதில்லை.

தேனை நேரடியாகச் சுவைத்துப் பார்க்காத ஒருவன் அதன் சுவை பற்றி எத்தனை கட்டுரைகளைப் படித்தாலும் பயனென்ன?

இது போன்றே, உள்ளத்து உணர்வாக, நுண்ணியதாக உள்ள இறைமையினை நூல்களைப் படித்து அறிய முடியாது என்கின்றனர் ஞானிகள்:

"நூலுணர்வு உணரா நுண்ணியோன் காண்க"

(திருவாசகம்-திருவண்டப் பகுதி)

"நுண்ணிய அறிவாலோ நூல்கள் பல கற்பதாலோ பிரமத்தைக் காணுதல் இயலாது," என்று கூறுகிறது முண்டக உபநிடதம்.

தன் அறிவின் மீது அதிகமான நம்பிக்கை வைத்துள்ள மனிதன் ஞான நூல்கள் பலவற்றை எழுதுகிறான்! அனுபவத்தால் எய்த வேண்டிய மெய்ஞ்ஞானத்திற்கு இலக்கணங்களை வகுத்து விடுகிறான்! ஞானத்தினைப் பல வகைகளாக வகுத்துக் காட்டு கிறான்; தொகுத்துக் காட்டுகிறான்!

**மணற் சோறு**

சின்னஞ்சிறு பிள்ளைகள் சிறுவீடு கட்டி, மரத்தாலான சிறு செப்புக்களை வைத்து விளையாடுவார்கள். பானை போன்ற ஒரு செப்பிலே சிறிதளவு மணலைப் போட்டு விளையாட்டு அடுப் பிலே ஏற்றி வைத்துப் பிறகு இறக்குவார்கள்! அந்த மணலைப் பொங்கல் சோறு என்று கற்பனை செய்து கொண்டு சிறுவர் சிறுமியர் விளையாடுவார்கள்! இந்த மணல் சோற்றைப் போன்றது ஞான நூல்கள் என்கிறார் தாயுமானவர்!

"சின்னஞ் சிறியார்கள் செய்த மணல் சோற்றை ஒக்கும்
மன்னும் கலைஞான மார்க்கம் பராபரமே."

(பராபரக்கண்ணி — 187)

இறைமை உள்ளது என்ற எண்ணம் எவருக்கும் எய்திடலாம்; ஆயினும், அது இன்னதென்று எவரும் அறிய முடியாது என்கிறார் மாணிக்கவாசகர்:

Koviloor Digital Library



"ஏனையாவரும் எய்திடலுற்று மற்று இன்னது என்று அறியாத தேனை........"

(திருவாசகம்—திருச்சதகம்— 38)

இன்னதென்று அறிய முடியாதபடி நுண்பொருளாக இருக்கிறது இறைமை:

"அறிவரிய நுண்பொருள்கள் ஆயினன் காண்"

(நாவுக்கரசர்—தேவாரம்—திருப்புத்தூர்)

நாம் ஒன்றை ஆராய்ந்து அறிந்து கொள்வதென்றால் அது நிகழ்காலத்தில் இருக்க வேண்டும். இறைமையோ இறந்த காலமாகவும் நிகழ்காலமாகவும் எதிர்காலமாகவும் உள்ளது. மூன்று காலமாகவும் உள்ள ஒன்றை அது இது என்று எப்படி அறிந்து கொள்ள முடியும் என்கிறார் நம்மாழ்வார்:

"இறந்ததும் நீயே எதிர்ந்ததும் நீயே நிகழ்வதோ நீ
இன்னேயானல்,
சிறந்த நின்தன்மை அது இது உது என்று அறிவொன்றும்
சங்கிப்பன் வினையே"

(திருவாய்மொழி—8 ப. 1தி.)

ஆராய்ந்து ஆராய்ந்து இறைவன் ஒருவன்தான் உண்மைப் பொருள் என்று கூறும் ஞானிகளும் இறைவனின் பெருமையினை அறியமாட்டார்களாம்:

" தேருங்கால் தேவன் ஒருவனே, என்று உரைப்பர்
ஆருமறியார் அவன் பெருமை........."

(திருமழிசை யாழ்வார்—நான்முகன் திருவந்தாதி—2)

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்"

என்று பாடுகிறார் சேக்கிழார்.

"அறிவுக்குள் அறிவாய் நின்று அறிவினை இயக்குவதே பிரமந்தான். எனவே, அறிவைக் கொண்டு பிரமத்தினை அறிதல் இயலாது."—என்கிறது பிருஹதாரண்யக உபநிடதம்.

மெய்ப்பொருளான இறைமையினை அறிய நாம் முயலுகின்றோம். இந்த இறைமைதான் அறிய முயலும் நம் உள்ளத்தில் இருக்கிறது. நம் அறிவாக இருப்பதும் இறைமைதான். நமக்கு

Koviloor Digital Library



அறிவிப்பதாகவும் அதுவேதான் இருக்கிறது. அறிவதும், அறிவிப்பதும், அறிவாக உள்ளதும், அறியப்படும் மெய்ப்பொருளும் அனைத்தும் இறைமையாகவே இருப்பதால் இறைவனை எவ்வாறு அறிதல் இயலும்? என்கிறார் காரைக்காலம்மையார்:

"அறிவானும் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப் பொருளுந் தானே விரிசுடர் பார் ஆகாசம்
அப்பொருளுந் தானே அவன்.

(அற்புதத் திருவந்தாதி)

**ஞானங் கடந்தது**

சாதாரணமானவர்களுக்குத்தான் இறைமையின் தன்மை பற்றி அறிய முடியாது; ஆனால், உண்மையான ஞானம் பெற்றவர்களால் அதனை அறிந்து கொள்ள முடியும் அல்லவா என்ற கேள்வி நம் மனத்தில் எழுகின்றது. ஞானம் என்பதே இறைமைபற்றி அறிந்து கொள்வதுதானே? எனவே, உண்மை ஞானம் பெற்றவர்கள் இறைமையினை நன்கு அறிந்தவர்கள் என்று நாம் எண்ணலாம்.

உண்மையான ஞானம் எது?

இறைமையினை எவருமே அறிந்து கொள்ள முடியாது என்பதை அறிந்து கொள்வதுதான் உண்மையான ஞானம் என்கிறது உபநிடதம்!

"அறிவிற்கு அப்பாற்பட்டது பிரமம் என்பதை அறிந்து கொண்டவன்தான் உண்மையில் பிரமத்தை அறிந்தவன். பிரமத்தைஅறிந்து கொண்டதாக எண்ணுபவன் உண்மையில் அறியாதவன். பிரமம் நம் அறிவைக் கடந்து நிற்பது என்பதை ஞானிகள் அறிவார்கள்."

(கேனோபநிடதம்)

"நன்று தீதென்று அறிவரிதாய்
நன்றாய் ஞானம் கடந்ததே"

(திருவாய்மொழி—8 ப. 8 தி.)

என்கிறார் நம்மாழ்வார்.

ஆம்! ஞானம் கடந்ததாக உள்ளதுதான் இறைமை!

Koviloor Digital Library



"இறைவனே! உன் தன்மையினை நினைத்ததும் என் உள்ளத்தில் கப்பியிருந்த அறியாமை என்ற இருள் அகன்றது. உள்ளத்திலே உதிக்கும் சூரியன் போல ஞானம் பிறந்தது. நீ அல்லாமல் வேறு எதுவுமே இல்லை என்பதுதான் அந்த ஞானம். அனைத்துமே நீயாக இருக்கும்பொழுது ஏதாவது ஒன்றைக் குறித்து இதுதான் நீ என்று கூற முடியுமா? எல்லாமாக இருக்கும் உன்னை யார் அறிந்துகொள்ள முடியும்?" என்று பாடுகின்றார் மாணிக்கவாசகர்:

இன்றெனக் கருளி இருள்கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற்று இன்மை;
சென்றுசென்று அணுவாய்த் தேய்ந்துதேய்ந்து ஒன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்று நீயல்லை அன்றி ஒன்றில்லை
யாருன்னை அறிய கிற்பாரே!

(திருவாசகம் — கோயில் திருப்பதிகம்)

"ஒன்று நீயல்லை, அன்றி ஒன்றில்லை" என்ற நிலையில் இறைமையினை எவ்வாறு அறிதல் இயலும்? எவராலும் அறிந்துகொள்ள இயலாதது என்பதுதான் இறைமையின் தன்மை. இதனை அறிந்து கொள்வதுதான் உண்மையான ஞானம்.

"ஒவ்வொரு பொருளிலும் கடவுளை நான் காணுகிறேன்; கேட்கிறேன்; இருப்பினும் இறைவனை இம்மியளவுகூட அறிந்து கொள்ள முடியவில்லை!" என்கிறார் அமெரிக்க நாட்டுக் கவிஞர் வால்ட் விட்மேன்.

"I hear and behold God in every object, yet understand God not in the least".

Walt Whitman in "Song of myself".

**அறிவரிய மூர்த்தி**

இவ்வாறு, இறைமையின் தன்மையினை அறிந்து கொள்ள முயலும் மனிதன், எவராலும் அறிந்து கொள்ள இயலாததுதான்

Koviloor Digital Library



இறைமையின் தன்மை என்ற உண்மையினை உணருகின்றான்! இது தான் உண்மை ஞானம் என்பதனையும் உணருகின்றான்!

"அறிவரிய பிரானை ஆழியங்கையனை"

(திருவாய்மொழி – 5 ப. 5 தி.)

என்று ஏத்துகின்றார் நம்மாழ்வார்.

"அறிவரிய பிரான்"

என்று சுருக்கமாகக் கூறிவிட்டார்.

இவ்வாறு, சொல்லரிய மூர்த்தியாகக் கண்ட இறைவனை அறிவரிய மூர்த்தியாகவும் அறிந்து கண்டனர் அடியார்கள்!

---

Koviloor Digital Library

# 10. நினைப்பரிய மூர்த்தி

"இதயமாக உள்ளது இறைமை; ஆனால் இறைமை இதயத்திற்கு அப்பாற்பட்டது; இதயத்தினை இயக்குவதும் இறைமைதான்; எனவே, இதயத்தால் இறைமையினை எண்ணுதல் இயலாது."

(பிரஹதாரண்யக உபநிடதம்)

இறைமை அறிவிற்குத்தான் அகப்படுவதில்லை; அதனை நேர்பட நினைக்கவாவது இயலுமா? என்பது அடுத்த கேள்வியாகும்.

*    *    *

**நினைப்பது என்றால் என்ன?**

நாம் அலுவல் காரணமாக வெளியூருக்குச் செல்லுகிறோம். வீட்டை விட்டுப் புறப்பட்டு ஒரு வாரத்திற்குமேல் ஆகிறது. மனைவி மக்களின் நினைவு நமக்கு வருகின்றது.

கடைசிக் குழந்தைக்கு இன்னும் ஒரு வயது முடியவில்லை. அது மடியில் தவழ்ந்ததும் மழலைச் சிரிப்பும் நம் நினைவைக் கிளறுகின்றன. அடுத்து, மூத்த பெண்ணுக்கு ஆறு வயது. அது சீருடை அணிந்து பள்ளிக்குச் செல்லும் காட்சி நம் மனக் கண்ணிலே தோன்றுகிறது. வீட்டை விட்டுப் புறப்படும்பொழுது நம் கையிலே பெட்டியைக் கொடுத்துவிட்டு விழிகளால் விடை கொடுத்து அனுப்பிய அன்பு மனைவியின் அந்த முகமும் நம் அகக் கண் முன் தோன்றி மறைகிறது.

நமக்கு உற்ற நண்பர் ஒருவர். அவர் எப்பொழுதும் 'கலகல' என்று இருப்பார். வேடிக்கையாகப் பேசுவார். அவரைப் பார்த்துச் சில ஆண்டுகள் ஆகிவிட்டன. அவரது நினைவு நமக்கு வருகின்றது. எப்படி? அவர் முகமும் அவர் பேசுவதும் நம் நினைவுத் திரையிலே நிழலாடுகின்றன.

இவ்வாறு, நம் உற்றார் உறவினர் இவர்களை நாம் நினைக்கும் பொழுது அவர்கள் தோற்றமும் அவர்களின் குணங்களுமே நம் நினைவிலே தோன்றுகின்றன.

Koviloor Digital Library



நண்பர்கள், உறவினர்கள், பெற்றோர், பிள்ளைகள் இவர்களோடு நாம் நெருங்கிப் பழகியிருக்கிறோம். எனவே, அவர்களை நினைக்கும்பொழுது அவர்களின் உருவங்களும், பண்புகளும் நம் நினைவுக்கு வருகின்றன. அவர்கள் உருவங்களையும் பண்புகளையும் நினைப்பதன் வாயிலாகவே அவர்களை நாம் நினைக்கின்றோம்.

நமது உறவினர் ஒருவர் அமெரிக்காவில் இருக்கிறார். அவர் அங்குச் சென்று ஆண்டுகள் பல ஆகிவிட்டன. அவரைப்பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், பார்த்தது இல்லை. இவ்வாறு பார்த்துப் பழகியிராத ஒருவரைப்பற்றி நம்மால் நினைக்க முடிகிறதா? அவரது உருவமோ பண்புகளோ நமக்குத் தெரியாது. நமது மனத் திரையில் அவரைப்பற்றி ஏதாவது ஒன்று தோன்றினால்தானே அவரை நாம் நினைக்கிறோம் என்று கூற முடியும்? அவரை நாம் பார்த்தது இல்லை; அவரது உருவம் நமக்குத் தெரியாது; அவரோடு நாம் பழகியதும் இல்லை; எனவே, அவர் பண்புகளும் நமக்குத் தெரியாது. இந் நிலையில், எதன்மூலமாக அவரை நாம் நினைப்பது?

அந்த உறவினரின் உருவப்படத்தை நாம் பார்த்திருக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். இப்பொழுது, அவரைப்பற்றி நினைக்கும்பொழுது அவர் உருவப்படமாவது நம் மனத்திலே தோன்றும். அவர் எழுதிய ஒரு புத்தகத்தை நாம் படித்திருக்கிறோம் என்றால், அவரை நினைக்கும்பொழுது அப்புத்தகத்திலுள்ள கருத்துக்கள் நம் உள்ளத்திரையிலே ஓடலாம். ஆனால், அவரை நேரில் பார்க்காமல், அவரது உருவப் படத்தையும் பார்க்காமல், அவரைப்பற்றி எதுவுமே தெரியாத நிலையில், அவரை நாம் எவ்வாறு நினைப்பது? நினைப்பது இயலாது.

திரைப்பட அரங்கிலே வெண்திரை நம் முன் தொங்குகிறது. ஆனால், படம் எதுவும் அதன்மேல் ஓடவில்லை என்றால் நாம் எதைப் பார்ப்பது? இதுபோல், நம் மனத்திரையிலே நினைவுப்படங்கள் ஓடினால்தான் நாம் ஒன்றை நினைக்கிறோம் என்று சொல்ல முடியும். நாம் பார்த்து, பழகி, அறிந்து, தெரிந்து கொண்டவர்களைப்பற்றித் தான் நினைவுப் படங்கள் மனத்திரையிலே நிழலாட முடியும். நாம் பார்த்துப் பழகாதவர்களைப்பற்றியோ நமக்குத் தெரியாதவர்களைப்பற்றியோ எவ்விதமான நினைப்பும் நமக்கு வருவதில்லை. அவர்களைப்பற்றி நினைத்துப் பார்க்கவும் முடிவதில்லை.

**இறைமையை எவ்வாறு நினைப்பது!**

இறைமை நம் பொறிகளுக்குப் புலனாகாதது. அதனைக் கண்ணால் பார்க்கவோ, காதால் கேட்கவோ, மூக்கால் மோந்து

Koviloor Digital Library



பார்க்கவோ, நாவால் சுவைக்கவோ, உடலால் உணரவோ இயலாது. இத்தகைய இறைமையினை நாம் எவ்வாறு நினைப்பது?

எனவே, நினைப்பதற்கரியவன் இறைவன் என்கின்றனர் அடியார்கள்!

"இன்ன தன்மை இல்லாதவன், இன்ன தன்மை உடையவன் என்று இறைவனை நினைக்க இயலாது" என்கிறார் ஞானி நம்மாழ்வார்:

"இலன் அது உடையவன் இது என நினைவரியவன்"

(திருவாய்மொழி – 1 ப. 1 தி)

"இறைவனே உன்னை இன்னார் என்று சொல்லுவதற்கில்லை, உனது மாயத்தை உணர்ந்தவர்கள் உயிருக்குத் துணை என்று உன்னைக் கொள்ளுகின்றனர். ஆனாலும், உன் கோலம் என்ன? பேரும் ஊரும் என்ன? பிறப்பு எது? என்றெல்லாம் தெரிந்து உன்னை நினைக்க வல்லார்கள் யார்?" என்கிறார் திருமழிசைப்பிரான்:

"இன்னையென்று சொல்லலாவதில்லை யாதும் இட்டிடைப்
பின்னை கேள்வன் என்பர் உன் பிணக்குணர்ந்த பெற்றியோர்
பின்னையாய கோலமோடு பேரும் ஊரும் ஆதியும்
நின்னையார் நினைக்க வல்லர் நீர்மையால் நினைக்கிலே?"

(திருச்சந்த விருத்தம் – 13)

"இறைவனது பெருமை தனித்தது, எனவே அதைச் சரிநேராகப் பாடி இறைவனை நம்மால் நினைத்தல் இயலாது. எனவே "நினைப்பதற்கு அரிய தனிப் பெரியோன்" என்றும், 'சிந்தனைக்கரிய சிவம்', என்றும் பாடுகின்றார் மாணிக்கவாசகர்:

"நேர்பாடல் பாடி நினைப்பரிய தனிப் பெரியோன்"

(திருவாசகம்-திருத்தெள்ளேணம்-13)

"சிந்தனைக்கரிய சிவமே போற்றி"

(திருவாசகம்-போற்றித் திருவகவல்)

**உணர்வதற்கும் அரியது இறைமை**

இறைமை உள்ளது என்பதை நாம் உள்ளத்தால் உணருகின்றோம். ஆயினும், அதன் முழுத் தன்மையினையும் நாம் உணர முடிவதில்லை. ஒன்று உள்ளது என்பதை உணருவது வேறு. அதன் தன்மைகளனைத்தையும் உணருவது வேறு. இறைமை உள்ளது

Koviloor Digital Library



என்பதை நம் உள்ளம் உணருகின்றது. ஆதலால்தான் அதனை "உணர்வின் மூர்த்தி" என்றனர். உள்ளது என்பதை உணர்ந்தாலும் அதன் உண்மைத் தன்மையினை உணரும் ஆற்றல் நம் உள்ளத்திற்கு இல்லை.

"இறைமை உள்ளது என்பதனை உணர்ந்தேன். ஆயினும் அதன் நேர்மையை, தன்மையை, அது இது என்று உணர எவராலும் முடியாது. எவ்வளவு உணர்ந்து உணர்ந்து முயன்றாலும் மேலே காண முடிவதில்லை" என்கிறார் ஞானி நம்மாழ்வார்:

"நின்ற ஒன்றை உணர்ந்தேனுக்கு அதனுள்
நேர்மை அதுவிது என்று
ஒன்றும் ஒருவர்க்கு உணரலாகாது
உணர்ந்து மேலும் காண்பரிது"

(திருவாய்மொழி—8 ப. 8 தி.)

"இறைமை ஆழமானது; அகன்றது; உயர்ந்தது; ஆனால், உருவமில்லாதது. இந்நிலையினை உணர்ந்து உணர்ந்து காண முயன்றாலும் உணர்வதற்கு அரியது! என்றும் விளக்குகிறார் நம்மாழ்வார்:

"உணர்ந்து உணர்ந்து இழிந்து அகன்று
உயர்ந்து உருவியந்த இந்நிலைமை
உணர்ந்து உணர்ந்து உணரிலும்
இறைநிலை உணர்வரிது உயிர்காள்"

(திருவாய்மொழி—1 ப. 3 தி.)

உள்ளத்து உணர்ச்சியால் இறைவனைக் கொள்ள முடியாது என்றும், அவன் உணர்வதற்கு அரிதான ஒருவன் என்றும் பாடுகின்றார் மாணிக்கவாசகர்:

"உள்ளத்து உணர்ச்சியிற் கொள்ளவும் படான்"

(திருவாசகம்—திருவண்டப்பகுதி)

"உருமூன்றுமாகி உணர்வரிதாம் ஒருவனுமே".

(திருவாசகம்—திருப்பூவல்லி—6)

"உணர்வரிதாம் ஒருவனுமே" என்பதில் "ஒருவன்" என்ற சொல் இறைமையின் தனித்தன்மையினைக் குறித்து நிற்கிறது.

**ஒப்பு உவமை இல்லாதது இறைமை**

மாணிக்கம் என்பவரை நாம் பார்த்தது இல்லை. மாணிக்கம் எப்படிப்பட்டவர் என்று நாம் பிறரிடம் கேட்கிறோம்.

Koviloor Digital Library.


அவர் இன்னாரைப் போன்ற உருவமுடையவர். இன்னாரைப் போன்ற திறமை பெற்றவர் என்று கூறப்படுகிறது. நமக்குத் தெரிந்த ஒருவரைக் காட்டி இவருக்கு ஒப்பானவர் மாணிக்கம் என்று நமக்கு விளக்குகின்றனர். நாமும் மாணிக்கத்தைப்பற்றி ஓரளவு தெரிந்துகொள்ளுகிறோம்.

இந்த முறையில் இறைமையினை விளக்குதல் இயலுமா? இயலாது. ஏன்?

இறைமைக்கு ஒப்பாக எதைக் கூறுவது? எவரைக் காட்டுவது?

மலையைப் போல பெரியவன் இறைவன் என்றால் பொருந்துமா? கடலைப்போல் ஆழ்ந்தவன் என்றோ, விண்ணைப் போல் விரிந்தவன் என்றோ கூறினால் சரியாகுமா? எத்தனையோ மலைகளையும் கடல்களையும் கொண்ட இப்பூமி பரவெளியிலே ஒரு சிறு பந்தாக அல்லவா உள்ளது. நம் கண்களுக்கு ஆகாயமாகப் புலனாவது எல்லையில்லாப் பரவெளியில் எள்ளத்தனை பகுதிதானே. இவற்றையெல்லாம் கடந்தல்லவா இறைமை உள்ளது.

எனவே, எதைத்தான் இறைமைக்கு ஒப்பாகக் கூறுவது? எதையுமே கூறுவதற்கில்லை. ஆதலால், இறைவனை,

"ஒப்பொருவர் இல்லாத ஒருவன்தன்னை"

(நாவுக்கரசர் —தேவாரம் திருவாரூர் அரநெறி)

"ஒத்தார் மிக்காரை இலையாய மாயா"

(நம்மாழ்வார் —திருவாய்மொழி)

"தனக்குவமை இல்லாதான்"

(திருக்குறள்)

"தனக்கொன்று உவமையற நிறைந்த
தனியே தன்னந் தனிமுதலே"

(தாயுமானவர்—'தன்னையொருவர்')

என்று ஞானிகள் போற்றுகின்றனர்.

தன்னை ஒத்த எவரும் இல்லாத தனியனாக இறைவன் உள்ளான்; எனவே, அவன் நினைப்பதற்கு அரியவனாக இருக்கிறான் என்று விளக்குகிறார் மாணிக்கவாசகர்:

Koviloor Digital Library



"நினையப் பிறருக்கரிய நெருப்பை
நீரைக் காலை நிலனை விசும்பைத்
தனையொப் பாரை இல்லாத் தனியை"

(புணர்ச்சிப்பத்து—7)

"தனையொப்பாரை இல்லாத் தனியை"

என்று பாடும் மாணிக்கவாசகர்,

"ஒப்பிலா மணியே"

(பிடித்தபத்து—3)

என்றும்,

"ஒப்புனக்கில்லா ஒருவனே"

(பிடித்தபத்து—5)

என்றும்,

"ஒருவன் என்னும் ஒருவன் காண்க"

(திருவண்டப் பகுதி)

என்றும் போற்றி, இறைவனுக்கு ஒப்பாக எதையுமே சொல்லுவதற்கில்லை என்பதனைத் தெளிவுபடுத்துகின்றார். ஒப்பு இல்லாத ஒருவனாக இருப்பதால் இறைவன் நினைப்பதற்கு அரியவன் என்கிறார்.

"உன்னற்கு அரியான் ஒருவன்"

(திருவெம்பாவை—7)

இறைமையின் தன்மையினை எண்ணிப்பார்க்கலாம் என்று நாம் சிறிது நேரம் கண்களை மூடிக்கொள்ளலாம். என்ன தெரிகின்றது? உலகப் பொருள்களெல்லாம் மனக்கண்களிலே தோன்றுகின்றன. சூரியனும் சந்திரனும் தோன்றுகின்றன. பரவெளி தெரிகின்றது. பரவெளியிலே ஒளிரும் விண்மீன்கள் தெரிகின்றன. அதற்கப்பாலும் நீண்டுகொண்டே போகின்றது பரவெளி. நம்மைச் சூழ்ந்து நின்று அகன்று ஆழ்ந்து உயர்ந்து முடிவில்லாத பெருவெளி. பெருவெளி என்று சொல்லுவதை விட்டு அதைப் பெரும்பாழ் என்று கூறுகிறார் ஞானி நம்மாழ்வார்:

"சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவில் பெரும்
பாழேயோ"

திருவாய்மொழி —10 ப. 10 தி·)

Koviloor Digital Library



முடிவில்லாத பெரும்பாழை எவ்வாறு எண்ணிப் பார்ப்பது?

பரவெளியின் பரப்பினை நாம் எண்ணிப் பார்ப்பது இயலுமா? அதன் எல்லைதான் என்ன? அது எங்குத் தொடங்கி எங்கு முடிகின்றது? அது முடிவில்லாத பெரும்பாழ் என்றால், முடிவில்லாமல் அது போய்க்கொண்டே இருக்குமா? எல்லையின்றிப் போய்க்கொண்டே இருக்கும் பாழ்வெளியினை எப்படித்தான் எண்ணிப் பார்ப்பது?

"இறைவனை நினைப்பதாகச் சிந்தை செல்லும். வாக்கும் அவ்வாறே முயற்சி செய்யும். ஆனால், எல்லையை எட்ட முடியாது. தினையளவுகூட எட்ட இயலாது. நினைக்க முடிந்தால் அல்லவா அதைப்பற்றிச் சொல்லவும் கேட்கவும் முடியும்? அனைத்துலகுமாக உள்ள இறைமை ஐம்புலன்களுக்குத் தெரிவதில்லை. இறைவனது பாதம் எங்குதான் உள்ளது? அதை எப்படி எய்துவது?" என்று கேட்கிறார் மாணிக்கவாசகர்:

நினைப்பதாகச் சிந்தை செல்லும்
எல்லை ஏய வாக்கினால்
தினைத்தனையும் ஆவது இல்லை
சொல்லல் ஆவ கேட்பவே,
அனைத்துலகும் ஆய நின்னை
ஐம்புலன்கள் காண்கிலா
எனைத்து எனைத்தது எப்புறத்தது
எந்தை பாதம் எய்தவே.

(திருவாசகம் —திருச்சதகம் —76)

"இறைவனே! ஏதோ உன் திருவடியை எண்ணலாம். ஆனால், உன் தன்மையினை என்ன என்று சொல்லி நான் எண்ண முடியும்?" என்று இறைஞ்சுகிறார் நாவுக்கரசர்.

"எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனே
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்"

(தேவாரம் —திருப்புகலூர்)

"யாவையும் எவரும் தாமாக நிற்கும் இறைமையினை எவ்வாறு எண்ணுவது என்பதனை அறிய மாட்டேன்" என்கிறார் நம்மாழ்வார்.

Koviloor Digital Library



"..............................ஞாலமுண்டு உமிழ்ந்த மாலை
எண்ணுமாறு அறிய மாட்டேன் யாவையும் யாவரும்தானே."

(திருவாய்மொழி—3 ப. 4தி.)

**உள்ளத்திற்கு உள்ளமாய் உள்ளது இறைமை**

மனத்தினது சக்தி மகத்தானது. பூமியில் ஆயிரம் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள இடங்களையும் ஆட்களையும் அரை நொடியில் நினைக்கும் சக்தி அதற்கு உண்டு. எத்தனையோ ஒளியாண்டுகள் தூரத்தில் மின்னும் நட்சத்திரங்களையுங்கூட இமைப்பொழுதில் நினைத்துப் பார்க்கும் ஆற்றல் இதயத்திற்கு உண்டு. ஆயினும், இறைமையினை எண்ணிப் பார்ப்பது ஏன் அதற்கு ஏலுவதில்லை?

காரணத்தைக் கூறுகின்றது இக் கட்டுரைத் தலைப்பிலே காணப்படும் உபநிடத வாக்கு. இதயமாக இருப்பதே இறைமை தான்; இதயத்தால் எவ்வாறு இதயத்தினையே நினைப்பது இயலும்?

"இறைவனே! நீ உள்ளமாகவே உள்ளத்தில் நிற்கின்றாய்" என்கிறார் திருநாவுக்கரசர்:

"உள்ளமாய் உள்ளத்தே நின்றாய் போற்றி"

(தேவாரம்—திருவாரூர்)

"சிந்தையாய் நின்ற சிவனே போற்றி"

(தேவாரம்—திருவதிகை வீரட்டானம்)

உள்ளமாகவுள்ள இறைமையினை உள்ளத்தால் எவ்வாறு உள்ளுதல் இயலும்?

நிழற்படம் எடுக்கும் கருவியினைக் "காமிரா" (Camera) என்கிறோம். காமிராவைக் கொண்டு பிற பொருள்களைப் படம் எடுக்கலாம். ஒரு காமிராவினைப் பயன்படுத்தி அந்தக் காமிராவையே படம் எடுத்தல் இயலுமா? இயலாது.

இதுபோல் உள்ளமாகவே உள்ள இறைமையினை உள்ளத்தால் உள்ளுதல் இயலாது என்கின்றனர் ஞானிகள்.

எனவே,

"சித்தமறியாதபடி சித்தத்தில் நின்றிலகு
திவ்ய தேசோமயம்"

என்கிறார் தாயுமானவர்.

Koviloor Digital Library


இறைமையின் தன்மையினையும் பெருமையினையும் எப்படி நாம் அளவிட்டு நினைத்தல் இயலும்? 8000 மைல் குறுக்களவு கொண்ட நம் பூமிப்பந்தினைப் பம்பரமாகச் சுழலச் செய்கின்றதே அந்த ஆற்றலை அளவிடுவதா? பூமியைவிடப் பல இலட்சம் மடங்கு பெரிதான சூரியனை அக்கினிக் கோளமாக எரியச் செய்கின்றதே அந்த ஆற்றலை அளப்பதா? எத்தனை எத்தனையோ ஒளியாண்டு தூரங்களுக்கு நட்சத்திர மண்டலங்களைப் பரவெளியில் பரப்பியுள்ளதே அதனை வியப்பதா? அணுவைவிட நுண்ணியதாகவும் அண்டங்களுக்கெல்லாம் அப்பாலாகவும் உள்ளதே இறைமை! அதனை அண்டத்திற்கு அண்டம் என்பதா, அணுவிற்கு அணு என்பதா?

உணர்வார் யார் உன் பெருமை? ஊழிதோறூழி
உணர்வார் யார் உன் உருவந்தன்னை?—உணர்வார் யார்?
விண்ணகத்தாய்! மண்ணகத்தாய்! வேங்கடத்தாய், நால்வேதப்
பண்ணகத்தாய்! நீ கிடந்த பால்.

(பொய்கையாழ்வார்—இயற்பா—முதல் திருவந்தாதி, 68)

"இறைவனே! நீ விண்ணெல்லாம் நிறைந்து மண்ணெல்லாம் நிறைந்து ஒளியாக விளங்குகிறாய். உனது எல்லையினை எண்ணிப் பார்க்கவும் இயலாது. எனவே, நீ எண்ணத்திற்கும் எட்டாத எழிலையுடையவன்" என்று கூறுகின்றார் மாணிக்கவாசகர் :

"எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே......"

(திருவாசகம்—சிவபுராணம்)

**நினைப்பரிய மூர்த்தி**

எண்ணத்திற்கு எட்டாத இறைவனை,

"நினைப்பரிய தனிப்பெரியோன்"

(திருத்தெள்ளேணம்—13)

என்று அவர் போற்றுகின்றார்.

"வானுடையான் பெரியான் மனத்தாலும் நினைப்பரியான்"

(தேவாரம்—திருநனிபள்ளி)

என்று பாடுகின்றார் சுந்தரர்.

"இறைவனே! உனக்கு உருவம் ஒன்றும் இல்லை. அருவமாக நிற்கின்றாய். உன் மாயத்தினை நினைத்து நினைத்துப் பார்க்கிறேன்.

Koviloor Digital Library


உன்னை எவ்வாறு நினைப்பதென்று தெரியவில்லை" என்று பாடும் நம்மாழ்வார் இறைவனின் நினைப்பரிய தன்மையினை நமக்கு எடுத்துப் புகட்டுகின்றார் :

"ஒன்றலா உருவாய் அருவாயநின் மாயங்கள்
நின்றுநின்று நினைக்கின்றேன் உன்னை
எங்ஙனம் நினைக்கிற்பன்?......"

(திருவாய்மொழி—5 ப. 10 தி.)

இறைமை அரிய பொருள். அரியவற்றுள் எல்லாம் அரிய தான பொருள்!

"அரியதி லரிய அரியோன் காண்க"

(திருவாசகம்—திருவண்டப் பகுதி)

எனவே, அது சொல்லரியதாய், அறிவரியதாய், நினைப்பதற்கும் அரியதாய் உள்ளது!

Koviloor Digital Library

# 11. அருவுருவ மூர்த்தி

"பிரமத்திற்குக் கண்களோ காதுகளோ கிடையாது; கைகளோ கால்களோ கிடையாது. அது எங்கும் நிறைந் தது. ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்டது."

(முண்டக உபநிடதம்)

வைகறை வேளை. பொழுது புலரும் நேரம். வங்கக் கடற் கரையில் நிற்கிறோம்.

இருண்டிருந்த கிழக்கு வானத்தில் சிறிது சிறிதாகப் பொன் னொளி படருகிறது. பிறகு அது செந்நிறமாக மாறுகின்றது! சிதறிக் கிடந்த கருமேகத் திரள்கள் செம்பஞ்சுத் திரள்களாக ஒளிரு கின்றன!

சிறிது நேரத்திற்கெல்லாம், "தகதக"வென்று மின்னிச்சுழலும் பொற்கோளம் கடலில் இருந்து விரைவாக எழுகின்றது! நீலக் கடற் பரப்புப் பொன்னிறம் பெறுகிறது!

சிவப்பேறிய நீலக்கடல்; அக்கடலில் இருந்து மேலெழும்பும் பொன்னிறமான இளஞ்சூரியன்; செக்கர் வானம்!

அருணோதயத்தின் இந்த அற்புதக் காட்சியினை என்னென்பது!

இயற்கையின் எழில் தோற்றங்களில் எல்லாம் இணையற்ற காட்சி இது!

இந்த அற்புதக் காட்சியினைப் பார்க்கும் நம் உள்ளம் ஒடுங்கு கிறது! ஈடில்லாத இந்த இயற்கையின் எழிலோடு நம் இதயம் இணைந்துவிடுகின்றது!

இயற்கையின் உயிரோட்டம் நம் இதயத்தை ஈர்த்து எங்கோ இட்டுச் செல்லுகின்றது!

Koviloor Digital Library



**இயற்கைக் காட்சியும் இறைமையின் மாட்சியும்**

இயற்கை வரையும் இந்த எழில் மிக்க ஓவியத்தைக் கண்டு கண்டு களித்தனர் நம் முன்னோர்கள்! இயற்கையின் இக்காட்சியிலே இறைமையின் மாட்சியினை உணர்ந்தனர். இயற்கையின் இத்தோற்றத்தில் இறைமையின் ஏற்றத்தினைக் கண்டனர்!

அவர்கள் கண்களுக்கு இந்த அகண்ட வையகம் அகல் விளக்கின் தகளியாகத் தோன்றுகிறது! கடல் நீர் அத்தகளியில் ததும்பி நிற்கும் நெய்யாக மாறுகிறது! கதிரவன் அகல் விளக்கின் சுடராக ஒளிர்கின்றது! இத்தகைய சுடராழியானாக இறைவனைக் காணுகின்றார் பொய்கையாழ்வார் :

"வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக — செய்ய
சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொன்மாலை,
இடராழி நீக்குகவே என்று."

(பொய்கையாழ்வார்—இயற்பா —முதல் திருவந்தாதி-1.)

சங்க காலப் புலவர் நக்கீரரும்,

"உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற் கண்டாஅங்கு"

(திருமுருகாற்றுப்படை)

என்று கடலில் இருந்து எழும் கதிரவனை இறைமைக்கு உவமையாகக் காணுகின்றார்!

இவ்வாறு இறைமையினை உணர்த்தும் இயற்கைக் காட்சிகளைத்தான் இறைமையின் உருவமாக நமக்குக் காட்டுகின்றனர் அடியார்கள்.

இயற்கைக் காட்சிகளையும் இயற்கைப் பொருள்களையும் தவிர இறைமையின் உருவம் என்று எதைச் சொல்லுவது?

"எல்லாம் சிவனென்ன நின்றாய் போற்றி"

(தேவாரம்—திரு அதிகை வீரட்டானம்)

என்கிறார் நாவுக்கரசர்.

அண்ட சராசரங்களும் அதன் உருவங்கள்தான்! பரவெளியும், பல்கோடி நட்சத்திரங்களும், இவ்வுலகும், எல்லா உயிர்களும் இறைமையின் தோற்றங்கள்தாம்! இவற்றில் எதை இறைமையின் உருவம் என்று கூறுவது?

Koviloor Digital Library



"சூரியன், சந்திரன், பூமி, ஆகாயம், நீர், காற்று, எண் திசைகள் இவையெல்லாம் உன் உருவங்கள்தான்!" என்று பாடுகின்றார் நாவுக்கரசர் :

"இரவியும் மதியும் விண்ணும் இருநிலம் புனலும் காற்றும்
உரகமார் பவனம் எட்டும் திசையொளி உருவமானாய்"

(தேவாரம்—திருவண்ணாமலை)

"கருமா முகில் உருவா! கனலுருவா! புனலுருவா!
பெருமால் வரை யுருவா! பிற வுருவா! நினதுருவா!"

(பெரிய திருமொழி—7ப 9தி)

என்று பாடும் திருமங்கையாழ்வார் இறைவன் முகிலுருவாகவும், நீர் உருவாகவும், நெருப்புருவாகவும், மலை உருவாகவும், பிற உருவங்களாகவும் உள்ளான் என்பதை விளக்குகிறார்.

"பலவுருவும் தன்னுருவே ஆய பெருமானை"

(தேவாரம்—திருக்கானாட்டு முள்ளூர்)

என்கிறார் சுந்தரர்.

**அருவமானது இறைமை**

மண்ணிலும் விண்ணிலும் உள்ள எல்லாப் பொருள்களும் இறைவனின் உருவங்கள் என்றால், இறைவனுக்கென்று தனி உருவம் இல்லை என்றுதானே ஆகிவிடுகிறது?

"இறைமைக்குக் கண்களோ காதுகளோ கிடையாது. கைகளோ கால்களோ கிடையாது. அது எங்கும் நிறைந்தது. ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்டது" என்று கூறுகின்றது முண்டக உபநிடதம்.

கண்களும் காதுகளும் இன்றி, கைகளும் கால்களும் இன்றி, நம் ஐம்புலன்களுக்கும் எட்டாது நிற்கும் பொருள் என்றால் அது உருவம் ஏதும் இல்லாததாகத்தானே இருத்தல் வேண்டும்? உருவம் இல்லாத ஒன்றை நாம் அருவம் என்கிறோம். எனவே, இறைமை அருவமாக உள்ளது என்கின்றனர் ஞானிகள்.

"அளவுடைய ஐம்புலன்கள் அறியா வகையால் அருவாகிநிற்கும்
வளர் ஒளி ஈசனை"

(திருவாய்மொழி—3ப—10தி)

என்று கூறுகின்றார் நம்மாழ்வார்.

Koviloor Digital Library



அருவாகி நிற்கும் இறைவனை,

"வளர் ஒளி ஈசன்"

என்று போற்றுகிறார். ஒளிக்கு நிலையான உருவம் இல்லை. எப்பொருளைப்பற்றி நிற்கிறதோ அப்பொருளின் உருவமாகவே ஒளி உள்ளது. எனவே, இறைமையினை "ஒளி" என்றும், "சோதி" என்றும் ஞானிகள் பாடுகின்றனர்.

"பரஞ்சோதி! கோவிந்தா பண்புரைக்க மாட்டேனே!"

(திருவாய்மொழி—3ப. 1தி.)

"தேச விளக்கெலாம் ஆனாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ!"

(நாவுக்கரசர்—தேவாரம் திருவையாறு)

"மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே"

(திருவாசகம் சிவபுராணம்)

விறகில் தீ போல் எங்கும் எல்லாப் பொருள்களிலும் உறைந்து அருவமாக நிற்கும் இறைமைக்கு இதுதான் நிறம் என்று கூறமுடியுமா! இதுதான் உருவம் என்று எழுதிக் காட்ட முடியுமா! முடியாது என்கிறார் நாவுக்கரசர்:

"இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்று எழுதிக் காட்டொணாதே"

(நாவுக்கரசர்—தேவாரம் — வினாவிடைத் திருத்தாண்டகம்)

**உப்பும் நீரும்**

சாந்தோக்கிய உபநிடதத்தில் சுவேதகேது என்ற சிறுவனுக்கு அவன் தந்தை உத்தாலகர் மெய்ஞ்ஞானம் புகட்டுகின்றார்:

ஒரு பாத்திரத்திலே நீர் கொண்டு வரச் சொன்னார் தந்தை. அவ்வாறே மகன் கொண்டு வந்தான்.

"சிறிதளவு உப்புக் கொண்டுவா" என்றார். அதையும் கொண்டு வந்தான். அந்த உப்பைத் தண்ணீரில் போடச் சொன்னார்.

Koviloor Digital Library



அடுத்த நாள் காலையில் மகனைக் கூப்பிட்டு, "தண்ணீரில் போட்ட உப்பு எங்கே?" என்று கேட்டார்.

"நீரிலே உப்பு மறைந்துவிட்டது" என்றான் மகன்.

"நீரைச் சுவைத்துப் பார்" என்று கட்டளையிட்டார். சிறிது நீரைச் சுவைத்து விட்டு,

"நீர் உப்பாக இருக்கிறது. நீரிலே உப்புக் கரைந்துள்ளது" என்றான் சுவேதகேது.

"மகனே, உப்பு உன் கண்களுக்குத் தெரியாமல் மறைந்து நீரிலே கரைந்து இருக்கிறதல்லவா? அவ்வாறுதான், இறைமை உன் உள்ளத்தினுள்ளும் நாம் காணும் அனைத்தினுள்ளும் மறைந்து உறைகின்றது" என்று போதிக்கின்றார் உத்தாலகர்.

> "அப்பும் உப்பும் போன்ற ஐக்கியபரானந்தர் தமக்கு
> ஒப்புவமை சொல்லவும் வாயுண்டோ பராபரமே!"

(தாயுமானவர்)

(அப்பு - நீர்)

எவ்வளவு எளிய முறையில் அரிய உண்மைகளைப் புகட்டுகின்றனர் ஞானிகள்!

எல்லாவற்றிலும் கரந்து உறையும் இறைமையினைத் தனியாக நாம் எவ்வாறு காண முடியும்? எனவே, இறைவனது திருமேனி காண்பதற்கு இயலாதது என்கிறார் நாவுக்கரசர் •

> "நோக்கரிய திருமேனி உடையாய் நீயே"

(திருதேவாரம் — திருவையாறு)

**அருவமும் உருவமும்**

பொதுவாக, உருவம் இல்லாத ஒன்றை மனிதனது உள்ளம் நினைப்பதற்கு இயலுவதில்லை. எனவே, அதனை எந்த உருவம் நினைவூட்டுகிறதோ அந்த உருவமாகவே அப்பொருள்களை நாம் காணுகின்றோம்.

இனிமையான இசையினைப் பொழியும் புல்லாங்குழலினை "இனிய குழல்" என்றும், யாழ்க் கருவியை "இனிய யாழ்" என்றும் கூறுகிறோம். "யாழ் இனிது குழல் இனிது" என்கிறது

Koviloor Digital Library



திருக்குறள். உண்மையில் இனிமையாக உள்ளது யாழும் குழலும் அல்ல. அவற்றிலிருந்து எழும் இசைதான் இனியது.

இசைக்கு உருவம் இல்லை. எனவே, உருவமுள்ள குழலையும் யாழினையும் இசையில் உருவமாகக் கொண்டு 'யாழ் இனிது குழல் இனிது'' என்கிறோம்.

இனிப்புச்சுவை கண்ணுக்குத் தெரிவதில்லை. கண்ணுக்குத் தெரியாத சுவையினைக் குறிப்பதற்கு கண்ணுக்குப் புலனாகும் தேனும் தீங்கரும்புச் சாறும் பயன்படுகின்றன. கிண்ணத்தி லுள்ள தேனைக் கண்டால் நம் நாவிலே சுவைநீர் ஊறுகின்றது. கரும்புச் சாற்றைக் கண்டாலும் அப்படியே. இனிப்புச் சுவையினை நினைவூட்டுவதாக இரண்டும் உள்ளன. எனவே, இனிப்புச் சுவையினை நினைவூட்டும் தேனையும் செங்கரும்புச் சாற்றையும் இனிப்புச் சுவையின் உருவங்களாகக் கொள்ளுகிறோம். ஆதலால், இனிமையான இசை நம் காதுகளில் ''தேனூகப் பாய்ந்தது' என்கிறோம். இனிய பேச்சினைக் ''கன்னல் மொழி'' என்கிறோம்.

இதுபோன்றே, இறைமையினை நினைவூட்டும் சூரியனையும் சந்திரனையும், மலைகளையும் மாநதிகளையும், விண்ணையும் விண்மீன் களையும் இறைமையின் உருவங்களாகக் கொள்ளுகிறோம்.

இசையின் சின்னமாக யாழையோ குழலையோ கொள்ளுவ தால் இசைக்கு உருவம் உண்டென்று நாம் கருதுவதில்லை. இனிப்புச் சுவையின் சின்னமாக தேனையோ தீங்கரும்பினையோ கொள்ளுவதால் இனிப்புச் சுவைக்கு உருவம் இருப்பதாக நாம் எண்ணி விடுவதில்லை. அதுபோன்றே, இறைமையின் சின்னங் களாக இயற்கைப் பொருள்களை நாம் காணுவதால் இறைமைக்கு உருவம் உள்ளது என்று நாம் கொள்ளுவதில்லை.

இறைமை கட்புலனுக்கு மட்டுமன்றி ஐம்புலன்களுக்குமே அப்பாற்பட்டது என்பதால்தான் அதனை ''மாயப்பெருமான்'' என்று அடியார்கள் பாடுகின்றனர்.

''மாலே! மாயப் பெருமானே! மா மாயனே!''

(திருவாய்மொழி 1 ப. 6 தி.)

இருப்பினும், உருவமில்லாத இசைக்கு யாழும் குழலும் சின்னங்களாவதுபோல், உருவம் இல்லாத இனிப்புச் சுவைக்கு தேனும் தீங்கரும்பும் உருவங்களாவதுபோல், உருவம் ஒன்றும்

Koviloor Digital Library



இல்லாத இறைமைக்கு, அதனை நினைவூட்டும் இயற்கைப் பொருள்கள் சின்னங்களாகின்றன.

### உள்ளத்திற்கேற்ற உருவ வழிபாடு

மேலும், மனிதன் தன் மனப்பக்குவத்திற்கு ஏற்றவாறு, இறைமையின் தன்மைகளைக் காட்டும் சின்னங்கள் பலவற்றைப் படைக்கிறான். அச்சுறுத்தும் உருவங்களாகவும் அன்பு காட்டும் வடிவங்களாகவும், பாலனாகவும் குழந்தையாகவும் பல்வேறு உருவங்களில் இறைமையினைக் காணுவதில் மனிதனின் மனம் நிறைவு பெறுகிறது! அந்தந்த உருவங்களுக்கேற்ற பெயர்களை இட்டு அழைப்பதையும் விரும்புகிறது!

"அவரவர்களின் அறிவு நிலைக்கேற்ப உருவங்களை மனத்திலே கொண்டு சுவரின் சித்திரங்களாகவோ சிற்ப உருவங்களாகவோ வைத்துத் தொழுகின்றனர். எல்லாவற்றிலும் இருப்பது இறைமைதான்" என்கிறார் பொய்கையாழ்வார்:

"அவரவர் தாந்தாம் அறிந்தவாறு ஏத்தி,
இவரிவர் எம்பெருமான் என்று — சுவர்மிசைச்
சார்த்தியும் வைத்தும் தொழுவர், உலகளந்த
மூர்த்தி உருவே முதல்."

(இயற்பா—முதல் திருவந்தாதி—14)

"அவரவர்களின் மனத்துக்கு உகந்தது எவ்வுருவமோ அவ்வுருவமாகவும், அவரவர்கள் விரும்பும் பெயர் எதுவோ அந்தப் பெயருடனும், அவரவர்களின் சிந்தனை எவ்வண்ணமோ அவ்வண்ணத்தில் இறைமை உள்ளது" என்றும் தெளிவாக அவர் கூறுகின்றார்.

தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம்தானே
தமர் உகந்தது எப்பேர் மற்றுஅப்பேர் —தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித்து இமையா திருப்பரே,
அவ்வண்ணம் ஆழியானும்.

(பொய்கை ஆழ்வார் — இயற்பா—முதல் திருவந்தாதி—44)

"எவர் எந்த உருவத்தில் நினைத்தாலும் அந்த உருவத்தில் உள்ளத்திலே தோன்றுகிறது இறைமை," என்கிறார் நாவுக்கரசர்:

"ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்"

(தேவாரம்—திருப்பூவனம்)

Koviloor Digital Library



எனவே, இறைவனுக்கு உருவம் இல்லை என்றும் சொல்ல முடியாது, உள்ளது என்றும் சொல்ல முடியாது என்கிறார் நம்மாழ்வார்:

"இல்லதும் உள்ளதும்
அல்லது அவனுரு"

(திருவாய்மொழி — 1ப 2 தி.)

**உருவினன் அருவினன்**

மின் விசைக்கு (electricity) எந்த உருவமும் இல்லை. அது ஒரு சக்தியே (energy) ஆகும். அந்தச் சக்தி விளக்கை எரிய வைக்கிறது, விசிறியை சுழல வைக்கிறது. அடுப்பிலே சூடேற்று கிறது, சீதளப் பெட்டியில் குளிரேற்றுகிறது. இயந்திரங்களை இயக்குகிறது, இன்னும் பல வகையில் அது பயன்படுகிறது.

உருவம் எதுவும் இல்லாதது இந்த சக்தி என்றாலும், மின் விளக்கினைக் காட்டி இது மின்விசை என்றால் அது தவறில்லை. சுழலும் விசிறியைக் காட்டி அது மின்விசை என்றால் அதுவும் தவறில்லைதான். மின் அடுப்பின் சூடும் மின்விசைதான், சீதளப் பெட்டியின் குளிரும் மின்விசைதான்.

ஒரு மனிதனைக் காட்டி, "இவன் ராமன்" என்கிறோம். அவனது உயிர் நம் கண்ணுக்குப் புலப்படுவது இல்லை. அது அருவ மாகவே இருக்கிறது. ஆயினும், இராமனது உருவமான உடல் தான் அருவமான உயிருக்கும் சின்னமாக இருக்கிறது. எனவே, உடலிலே மறைந்து நிற்கும் உயிர், இராமனது உடல் என்ற உருவமாகவும் உள்ளது, அந்த உடலை இயக்கும் அருவமாகவும் உள்ளது.

இதுபோன்றே, அண்டங்களனைத்திற்கும் உயிராகவுள்ள இறைமை அருவமாகவும் உள்ளது, உருவமாகவும் உள்ளது என் கிறார் நம்மாழ்வார் :

ஆர்ந்த ஞானச்சுடராகி
அகலம் கீழ்மேல் அளவிறந்து
நேர்ந்த உருவாய் அருவாகும்
இவற்றின் உயிராம் நெடுமாலே"

(திருவாய்மொழி-1 ப. 6 )

எனவே, இறைமை அருவமாக மட்டுமன்றி உருவமாகவும் இருக்கிறது என்கின்றனர் சான்றோர்கள் :

Koviloor Digital Library



"நிலனிடை விசும்பிடை உருவினன் அருவினன்"

(திருவாய்மொழி—1 ப. - 1)

"நிருபியாய் ரூபியுமாய் நின்ருன் கண்டாய்"

(நாவுக்கரசர் — தேவாரம்-திருமறைக்காடு)

"அருவமும் உருவமும் ஆனுய் போற்றி."

(திருவாசகம் — போற்றித் திருவகவல்)

## ஆணும் பெண்ணும்

அருவமாக உள்ள இறைமையினை நாம் எந்த உருவத்தில் நினைக்கின்ருேமோ அந்த உருவத்தில் அது தோன்றும் என் கின்றனர் பெரியார்கள். அப்படியெனில், அந்த உருவத்தை ஆண் என்பதா பெண் என்பதா?

"அடியார்கள் விருப்பம்போல் இறைமை ஆணுகவோ பெண் ணுகவோ தோன்றும்." என்கின்றனர்.

"ஆணுகிப் பெண்ணுய வடிவு தோன்றும்
அடியவர்கட்கு ஆரமுதம் ஆகித் தோன்றும்"

(நாவுக்கரசர் — தேவாரம்- திருப்பூவணம்)

பெண்ணுகவும் ஆணுகவும் இரண்டுமற்ற அலியாகவும் இறைமை வடிவு கொள்ளலாம் என்றும் கூறுகின்றனர் :

"பெண் ஆண் அலி யெனும் பெற்றியன் காண்க"

(திருவாசகம்— திருவண்டப்பகுதி)

இறைமை பெண்ணுகவும் இருக்கின்றது, ஆணுகவும் இருக் கின்றது, பேடாகவும் இருக்கின்றது என்ருல் என்ன பொருள்? அது எதுவாகவும் இல்லை என்பதுதானே. அதையும் தெளிவு படுத்துகிருர் நாவுக்கரசர்

"பெண்ணல்லை ஆணல்லை பேடுமல்லை"

(தேவாரம் — திருவொற்றியூர்)

"நாம் எந்த உருவத்தில் பேண் நினைக்கின்ருேமோ அந்த உருவம் ஆகின்றது இறைமை. இருப்பினும் அது உருவம் இல்லா

Koviloor Digital Library



தது. எனவே, இறைவன் ஆணுகவும் இல்லை, பெண்ணுகவும் இல்லை, அலியாகவும் இல்லை," என்கிருர் நம்மாழ்வார்:

"ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்
பேணுங்கால் பேணும் உருவாகும், அல்லனுமாம்"

(திருவாய்மொழி 2 ப. 5தி.)

இறைமை ஆணும் இல்லை, பெண்ணும் இல்லை, அலியும் இல்லை என்று விளக்குவதற்குப் பதிலாக, அது ஆணும் பெண்ணும் கலந்த உருவம்என்று கூறுகின்றனர். உடம்பிலே வலது பாதி ஆண், இடது பாதி பெண் என்ற அர்த்தநாரீஸ்வர உருவத்தைக் காட்டுகின்றனர்:

"ஒரு கடலையில் இரண்டு பருப்புக்கள் இருப்பதுபோல், புருஷனுக உள்ள ஆதிப்பொருள் ஆணுகவும் பெண்ணுகவும் பிரிந்தது. ஆயினும் இரண்டையும் பிரிக்காமல் சேர்த்தே உபாசித்தல் வேண்டும்."

இது பிருகதாரண்யக உபநிடத வாக்கு.

"பாதியோர் பெண்ணை வைத்தாய்
படரும் சடைக் கங்கை வைத்தாய்"

(சுந்தரர்-தேவாரம்—திருக்கோளிலி)

"பாதியில் உமையாள் தன்னைப்
பாகமாய் வைத்த பண்பன்"

(நாவுக்கரசர்-தேவாரம்—திருத்துருத்தி.)

உருவமில்லாத இறைமைக்கு மனிதன் உருவங்களைக் கொடுத்தான்! அதை ஆணுக்கினன்! பெண்ணுக்கினன்! உமையொருபாகன் என்று ஆக்கினன்! இத்தனை உருவங்களையும் குறிப்பதற்குப் பெயர்கள் வேண்டாமா? தனது விருப்பம்போல் உருவங்களுக்கேற்ற பெயர்களைச் சூட்டினன்.

உருவமும் பெயரும் இல்லாத ஒன்றுக்கு ஆயிரம் நாமங்களைச் சூட்டிவிட்டோம் என்று வியக்கின்ருர் மாணிக்கவாசகர்:

"ஒருநாமம் ஓர்உருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ"

(திருவாசகம்—திருத்தெள்ளேணம் 1)

Koviloor Digital Library



ஒரு நாமமும் இல்லாத இறைமைக்கு நாம் ஆயிரம் நாமங்களை இடுகின்றோம். உருவம் இல்லாத இறைமையினை ஆயிரம் உருவங்களில் காணுகின்றோம். எனவே ஆயிரம் தலைகளும், அத்தனை தோள்களும், பெயர்களும் கொண்டது இறைமை என்று பாடுகின்றார் நம்மாழ்வார்:

"....................
தோள்களாயிரத்தாய்! முடிகளாயிரத்தாய்!
துணைமலர்க் கண்களாயிரத்தாய்!
தாள்களாயிரத்தாய்! பேர்களாயிரத்தாய்!
தமியனேன் பெரியவப்பனே!"

(திருவாய்மொழி —8 ப. 1தி.)

இறைவனுக்கு இடப்படும் பெயர்கள் ஆயிரக் கணக்கில் உள்ளன. ஏற்றப்படும் உருவங்களும் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. இந்நிலையில் இறைமைக்கு பேரும் உருவமும் உண்டா இல்லையா என்று கேட்டால் அது சிக்கலான கேள்வியாகும். இதற்குப் பதில் எப்படிக் கூறுவது? இறைமைக்குப் பெயரும் உருவமும் உண்டு என்றும் சொல்வதற்கில்லை. இல்லை என்றும் சொல்வதற்கில்லை! இது சிக்கலானது! என்று கூறுகின்றார் நம்மாழ்வார்:

"பேரும் ஓராயிரம் பிற பலவுடைய எம்பெருமான்
பேரும் ஓருருவமும் உளதில்லை இலதில்லை பிணக்கே."

(திருவாய்மொழி—1 ப. 3 தி.)

## அருவுருவ மூர்த்தி

இறைமைக்கு உருவமும் பெயரும் இல்லை; ஆயினும், இருக்கின்றன என்ற இந்தச் சிக்கலான நிலையை எப்படி நமக்குக் காட்டுவது?

சீரிய முறையில் நம் முன்னோர்கள் சிந்தித்தனர்.

அருவத்தைக் காட்டும் ஓர் உருவம் வேண்டும் என்று சிந்தித்தனர்.

உருவம் என்றால் கண் காது மூக்கு கால்கள் கைகள் போன்ற அவயவங்கள் உண்டு. இவை போன்ற அவயவங்கள் ஏதும் இல்

Koviloor Digital Library



லாத பிண்டமான ஒரு வடிவத்தை ஆக்கினல் அதை உருவம் என்று சொல்ல முடியாது. அருவம் என்றும் கூற முடியாது. அவயவங்கள் இல்லாத பிண்டமாக இருப்பதால் அது உருவம் இல்லை, எனவே, அது அருவம்; இருந்தும் கண்ணுக்குத் தெரிவதால் அது அருவம் இல்லை, எனவே அது உருவம். இவ்வாறு அருவத்தைக் குறிக்கும் உருவத்தை, அருவுருவத்தை, இலிங்க வடிவில் தெளிந்து கண்டனர் ஞானிகள்.

இந்த அருவுருவத்திற்குப் பெயர் எதுவும் இல்லை, அது அருவுருவத்தைக் குறிக்கும் அடையாளமே (symbol) ஆகும் என்பதை உணர்த்தும் வகையில் அதனை இலிங்கம் (அடையாளம்) என்ற சொல்லைக் கொண்டே குறித்தனர்.

இலிங்கம் என்ற சொல்லுக்கு அடையாளம் என்பது பொருள்.

இவ்வாறு, இலிங்க வடிவம் இறைமை அருவமாகவும் உருவமாகவும் உள்ளது என்பதைக் காட்டுகிறது. இலிங்கம் (அடையாளம்) என்ற சொல் இறைமைக்கு எப்பெயரும் பொருந்தாது என்பதைக் குறிக்கின்றது. எனவே, அருவுருவமான இறைமையின் அடையாளமாக (svmbol) இலங்குகிறது இலிங்கம். இதனைச் "சிவலிங்கம்", அதாவது இறைவனைக் குறிக்கும் இலச்சினை என்கின்றனர்.

இந்த உண்மையினை உணர்த்தும் வகையில்,

"உருவும் அருவும் உருவோ டருவும்
மருவு பரசிவன்....."

(திருமந்திரம்-1763)

என்று பாடுகின்றார் திருமூலர்.

"அவயவங்கள் இல்லாத முண்டமே உனது மேனி," என்று இறைஞ்சுகின்றார் நாவுக்கரசர் :

"முண்டத்தில் பொலிந்து இலங்கு மேனியானே!
முதலாகி நடுவாகி முடிவானுனே!"

(தேவாரம்—திருஅதிகை வீரட்டானம்)

இறைமையின் அருவுருவ நிலையைக் குறிக்கும் அற்புதமான சின்னம் இலிங்க வடிவம்!

Koviloor Digital Library



அருவாகவும் உருவாகவும் அருவுருவாகவும் நிலவும் இறைமையின் இந்த மாயத்தினை,

**ஒன்றலா உருவாய் அருவாய நின் மாயங்கள்!"**

**(திருவாய்மொழி—5 ப. தி. 10)**

என்று நம்மாழ்வார் வியக்கின்றார்.

இவ்வாறாக, இறைமையினை அருவ மூர்த்தியாகவும் உருவ மூர்த்தியாகவும் அருவுருவ மூர்த்தியாகவும் கண்டனர் மெய்ஞ் ஞானிகள்!

Koviloor Digital Library

# 12. ஆதிமூர்த்தி

"என்னிடம் இருந்தே எல்லாம் தோன்றுகின்றன; என்னுள் அடங்கியே எல்லாம் உள்ளன; என்னிடமே எல்லாம் திரும்புகின்றன. நானே என்றும் உள்ள பிரமம்."

(கைவல்ய உபநிடதம்)

விதை முந்தியதா மரம் முந்தியதா?

கோழி முந்தியதா முட்டை முந்தியதா?

விடை கூற முடியாத வினுக்கள் இவை!

விதை மரத்துக்கு முந்தியது அல்ல. மரமும் விதைக்கு முந்தியது அல்ல. கோழியும் முட்டைக்கு முந்தியதல்ல. முட்டையும் கோழிக்கு முத்தியதல்ல.

விதைக்கும் மரத்துக்கும், கோழிக்கும் முட்டைக்கும், அண்டங்கள் அத்தனைக்கும் முந்தியது ஒன்று உண்டு. அதுதான் இறைமை.

எல்லாவற்றிற்கும் முந்தியதாக "முதல் தனி வித்தாக" உள்ளது இறைமைதான் என்கின்றனர் ஞானிகள்.

"முதல் தனி வித்தேயோ! முழு மூவுலகாதிக்கெல்லாம்"

(திருவாய்மொழி—10ப. 10தி)

"எல்லாப் பொருள்களுக்கும் மூலச்சத்தாக உள்ளடங்கி உள்ளது ஒரே ஒரு பொருள்தான் என்ற நம்பிக்கை, சிந்தனை தோன்றிய நாள் முதலாக நிலவி வருவதாகும். இயற்கையில் உள்ள இந்த ஒருமைப் பண்பு என்பது ஆதாரமற்ற கொள்கையோ வெறும் விருப்பால் எழும் இலட்சியமோ அல்ல. இது தீர்க்கமாகவும் தெளிவாகவும் மெய்ப்பிக்கத்தக்க விஞ்ஞான உண்மை

Koviloor Digital Library


என்பதனை நாம் கண்டது வரலாற்றிலேயே நம் தலைமுறையில் தான்."

இவ்வாறு கூறுகிறார் Karl. K. Darrow என்ற புகழ் பெற்ற விஞ்ஞானி.

> "The belife that all things are made of a single substance is as old as thought itself; but ours is the generation which, first of all in history, is able to receive the unity of nature, not as a baseless dogma or a hopeless aspiration, but a principle of science based on proof as sharp and clear as anything which is known."

—Karl. K. Darrow.

[The Renaissance of Physics. (New York.) 1936—p. 301.]

**மெய்ப்பொருள்.**

புல்லும் பொன்னும், பஞ்சும் பாறையும், நீரும் நெருப்பும் எல்லாப் பொருள்களும் அடிப்படையான ஒரே ஒரு பொருளால் ஆகியவை என்பது இன்றைய விஞ்ஞானிகள் கண்டறிந்த உண்மையாகும். உலகத்திலுள்ள எந்தப் பொருளை ஆய்ந்து கண்டாலும் அவற்றில் எல்லாம் அடிப்படைப் பொருளாக உள்ளது ஒரே ஒரு பொருள் தான். இவ்வாறு, இயற்கைப் பொருள்கள் அனைத்திலும் உள்ள ஒருமையினை விஞ்ஞானம் காட்டுகிறது.

எல்லாவற்றிலும் உள்ளடங்கியுள்ள இதனைத்தான் "சத்" என்றும், "உண்மை" என்றும், 'மெய்ப்பொருள்" என்றும் குறிக்கின்றனர்.

"எப்பொருள் எத்தன்மையுடன் தோன்றினாலும், அதன் தோற்றத்திலே மயங்கி விடாமல், அப்பொருளில் அடங்கியுள்ள மெய்ப்பொருளைக் காண்பதே மெய்யறிவாகும்" என்கிறார் திருவள்ளுவர்.

> "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு."

(குறள் – 355.)

இந்த இடத்தில், "மெய்ப்பொருள்" என்று கூறப்படுவது கண்ணுக்குத் தெரியும் ஏதோ புறப்பொருள் என்பதல்ல. நாம்

Koviloor Digital Library



கண்களாற் காணும் பொருள்கள் அனைத்திற்கும் அடிப்படையான உண்மைப் பொருளைத்தான் "மெய்ப்பொருள்" என்கின்றனர் ஞானிகள்.

இயற்கைப் பொருள்கள் எல்லாவற்றுக்கும் மூலப் பொருளாக ஓர் உண்மைப்பொருள் இருக்கிறது என்றால், அதுதானே எல்லாவற்றிற்கும் முன்னால் தோன்றியிருக்க வேண்டும்? அதில் இருந்து தானே மற்றப் பொருள்கள் எல்லாம் உண்டாகி இருக்க வேண்டும்? வேறு எந்தப் பொருளும் தோன்றாத நிலையில் அந்த மூலப்பொருளான ஒன்று மட்டுமே நிலவிய காலம் இருந்திருக்க வேண்டுமே?

"மூலமான" அது எதுவாக இருக்கும்? அது இறைமையாகத் தானே இருத்தல் வேண்டும்?

இவ்வாறெல்லாம் எண்ணி எண்ணிப் பார்க்கும் அடியார்கள் மனம்,

"மூலனும் மூர்த்தியாம் முன்னேதானும்
மூவாதமேனி முக்கண்ணினனும்"

(நாவுக்கரசர் — தேவாரம் திருக்கருகாவூர்)

என்று இறைவனைத் துதிக்கிறது.

"சோதியாகி எல்லா வுலகும் தொழும்
ஆதிமூர்த்தி என்றால் அளவாகுமோ?"

(திருவாய்மொழி — 3ப. 3தி.)

என்ற கேள்வியை எழுப்புகிறது.

இறைவனை "ஆதிமூர்த்தி" என்று அழைக்கத் துணிகிறது.

* * *

முதல் தனிவித்து

நாம் வாழும் இப்பூவுலகம் இன்னும் தோன்றவில்லை. இப்பூவுலகம் என்ன, எந்த உலகமுமே தோன்றவில்லை. பரவெளியிலே ஒளிரும் சூரியன் சந்திரன் எண்ணற்ற நட்சத்திரங்கள்

Koviloor Digital Library



*இவை எதுவும் இல்லை. உயிர்கள் ஏதும் இல்லை. ஒன்றுமே இல்லாத வெறும் சூன்யம்;*

*எதுவுமே இல்லாத இத்தகைய சூன்ய நிலையை நம்மால் கற்பனை செய்துகூடப் பார்த்தல் இயலாது; யாதும் இல்லாத பெரும் பாழ்வெளியான இந்நிலையினை நமது கற்பனைக் கண்களுக்குக் காட்டுகின்றார் நம்மாழ்வார்!*

*இத்தகைய பெரும் பாழ்க்காலத்தில், பொருள்களையெல்லாம் பிறப்பிக்கும் தனி வித்தான இறைமை மட்டும் இருக்கிறதாம்; அந்தத் தனி வித்தில் இருந்து பிறந்தவைதாம் உலகங்களும் உயிர்களும் பிற அண்டங்களும் என்கிறார்:*

**"......................**
**யாவகை உலகமும் யாவரும் இல்லா,**
**மேல்வரும் பெரும்பாழ்க் காலத்து, அரும்பொருட்கு**
**எல்லாம் அரும்பெறல் தனிவித்து......—...——**
**— ......................"**

**(நம்மாழ்வார் — திருவாசிரியம்)**

**"சிலந்தியிலிருந்து நூல் வருவதுபோல், தீயிலிருந்து பொறிகள் வருவனபோல், மூலமான ஒன்றிலிருந்து உலகங்களும் பிற பொருள்களும் பிறந்தன. அந்த மூலமான ஒன்றினைத்தான் உண்மைக்கெல்லாம் உண்மை என்கிறோம்"**

*இவ்வாறு கூறுகிறது பிரிகதாரண்யக உபநிடதம்.*

**"தனி முதலாக உள்ள பிரமம் தன்னிலிருந்து தன்னையே வெளிக் கொணர்ந்து எல்லாப் பொருள்களையும் படைக்கிறது. எல்லாவற்றிலும் தானேயாகி எங்கும் நிறைந்து நிற்கும் இப்பரம் பொருளைத்தான் 'உண்மை' என்கின்றனர் உயர்ந்தோர்"**

**(தைத்திரிய உபநிடதம்)**

*இவ்வாறு, ஆதிமூலமான இறைமையில் இருந்துதான் பிரபஞ்சங்கள் அனைத்தும் பிறந்தன. தன்னைத்தானே வெளிப்படுத்தி, இறைமை எல்லாமாகி நிற்கின்றது.*

*இது நம் முன்னோர்கள் ஆய்ந்து கண்ட உண்மை.*

Koviloor Digital Library


இவ்வுலகத்தில் உள்ள பொருள்களனைத்தும் தோன்றுவதையும் மறைவதையும், உயிர்களனைத்தும் பிறப்பதையும் இறப்பதையும் நாம் பார்க்கிறோம்.

ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றுகிறது. ஒன்று மற்றொன்றில் இருந்து பிறக்கிறது. எனில் இறைமை எதில் இருந்து தோன்றியது? இந்த வினா நம் மனத்தில் எழலாம்.

இறைமை என்பது இன்னொரு வித்தில் இருந்து தோன்றியது அல்ல. •இறைமைதான் "முதல் வித்து", "முதல் தனி வித்து" என்கின்றனர் ஞானிகள்.

"முதல் தனி வித்தேயோ! முழு மூவுலகாதிக்கெல்லாம்!"

(திருவாய்மொழி—10 ப. 10 தி.)

"முன்னைஞான முதல்தனி வித்தினை"

(நாவுக்கரசர்-தேவாரம்—தனித்திருக் குறுந்தொகை)

"முத்தனை முதற் சோதியை முக்கணப்பனை முதல் வித்தினை"

(திருவாசகம் சென்னிப்பத்து)

**பிறவாதே தோன்றிய பெம்மான்**

உலகனைத்துக்கும் வித்தாக உள்ளது இறைமை என்றால், உலகனைத்துக்கும் முன்னால் அல்லவா இறைமை தோன்றியிருக்க வேண்டும்?

எனவே,

"முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி"

(தேவாரம்—திருவாலவாய்)

என்கிறார் நாவுக்கரசர்.

உடனே, அவருக்கு ஓர்ஐயம் எழுகின்றது. "எல்லார்க்கும் முன்னே முளைத்தவன்" இறைவன் என்பது சரிதான். ஆனால் "முளைத்தானே" என்று கூறினால், முதலில் இல்லாமல் இருந்து பிறகு முளைத்தவன் என்றல்லவா பொருளாகிவிடும்? முன் இல்லாத ஒன்று புதிதாகத் தோன்றும் பொழுதுதானே முளைத்தது என்கிறோம்? ஆதலால், "முளைத்தானே" என்று

Koviloor Digital Library



இறைமையினைக் குறிப்பிட்டால், இல்லாத நிலையில் இருந்து பின்னால் தோன்றியது இறைமை என்று நாம் எண்ணி விடலாம் அல்லவா?

எனவே, என்றும் உள்ளது இறைமை என்பதை விளக்கும் வகையில்,

"பிறவாதே தோன்றிய பெம்மான் தன்னை"

(தேவாரம்—திருப்புன்கூர்.)

என்று பாடுகின்றார் நாவுக்கரசர்.

"பிறவாதே தோன்றிய பெம்மான்!" எத்தகைய சொற்றொடர்! எளிமையான சொற்றொடர்தான். பொருளும் எளிதாகப் புரிகின்றது. ஆனால், அந்தப் பொருளைச் சிந்தித்தால்?

பிறவாமல் ஒன்று எவ்வாறு தோன்ற முடியும்? பிறத்தல் என்றாலே தோன்றுதல்தானே? பிறவாது தோன்றுதல் எவ்வாறு?

பிறத்தல் என்றாலும், தோன்றுதல் என்றாலும் முன்னால் இல்லாமல் இருந்து பின்னால் வந்திருக்க வேண்டும் என்றுதான் ஆகின்றது. இறைமை இல்லாத நிலை என்று எதுவும் இருத்தல் இயலாது. எனவே, பிறத்தல் என்பது இறைமைக்கு இருப்பதற்கில்லை. ஆதலால்தான், "பிறக்காது தோன்றியுள்ள இறைமை", என்கிறார் நாவுக்கரசர்.

மற்றவைகளையெல்லாம் பிறப்பித்து, ஆனால், தான் மட்டும் பிறவாத பெருமையுடையவன் இறைவன் என்கிறார்:

"பிறப்பானை, பிறவாத பெருமையானை......"

(தேவாரம்—மாற்பேறு)

"பிறவாத பெருமையுடையது பிரமம்"

(பிருகதாரண்யக உபநிடதம்)

பிறப்பு என்று இருந்தால்தானே இறப்பு உண்டு? பிறப்பு இல்லாத இறைமைக்கு இறப்பும் இல்லை.

"பிறப்போடு இறப்பென்றும் இல்லாதான் காண்"

(நாவுக்கரசர்—தேவாரம்-திருவாரூர்)

தோற்றமும் மறைவும், பிறப்பும் இறப்பும் இல்லாத நிலையினை,

Koviloor Digital Library



"முடிவிலா முதலே"

(திருவாசகம்—திருகோவில் மூத்த திருப்பதிகம்-1)

என்கிருர் மாணிக்கவாசகர்.

முதல் என்ருல் முடிவு இருக்க வேண்டும். பிறப்பு என்ருல் இறப்பு இருத்தல் வேண்டும். இறைமைக்கு முதலும் இல்லை முடிவும் இல்லை, பிறப்பும் இல்லை இறப்பும் இல்லை. எனவே,

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை"

(திருவாசகம்—திருவெம்பாவை-1)

என்று இறைமையினைப் போற்றுகின்றனர்.

இறைவனை "ஆதி" என்று கூறினலும் போதுமானதாகத் தோன்றவில்லை கவியரசர் கம்பருக்கு! "ஆதி" என்ற பொருளுக்கு அப்பால் ஏதேனும் இருந்தால் அதுவும் நீதான் என்கிருர்.

"ஆதி எனும் பொருளுக்கு அப்பால் உண்டாகிலும் நீ!"

(ஆரண்ய காண்டம்—கவந்தன் படலம்)

இந்த உலகத்தில் நாம் காணும் எல்லாப் பொருள்களும் தோன்றுகின்றன, மறைகின்றன; எல்லா உயிர்களும் பிறக்கின்றன இறக்கின்றன. தோற்றமும் மறைவும், பிறப்பும் இறப்பும், இல்லாத ஒன்றை நம்மால் எண்ணிப் பார்க்கக் கூட இயலுவதில்லை. ஆதியும் அந்தமும் இல்லாமல் ஒன்று என்றும் நிரந்தரமாக, நித்தியமாக இருக்கிறது என்ருல், அதனை எப்படிக் கூறுவது?

ஆதியும் அந்தமும் இல்லாத இறைமைத் தன்மையினை நம் கருத்திலே நிறுத்திக் காண இயலுவதில்லை. அதனைக் கருதுவந்து முடிந்தால் அல்லவா அதை விளக்கிச் சொல்ல முடியும். எனவே,

"சொல்லுதற்கரிய ஆதியே நடுவே அந்தமே"

(திருவாசகம்—கோவில் திருப்பதிகம்-9)

என்கிருர் மாணிக்கவாசகர்.

ஒன்றை ஆரம்பமாகவும் நடுவாகவும் முடிவாகவும் உள்ளது என்ருல், எப்பொழுதாவது அது தோன்றியிருக்க வேண்டும்,

Koviloor Digital Library



எப்பொழுதாவது அது மறையவும் வேண்டும் என்றுதானே பொருள் கொள்ள முடியும்? இறைமைக்கு தோற்றம் ஏது, மறைவு ஏது?

"இறைவன் ஆதியாகவும் நடுவாகவும் அந்தமாகவும் உள்ளான், ஆயினும் அவனுக்கு ஆதி அந்தம் நடு என்றும் எதுவும் இல்லை," என்று தெளிவுபடுத்துகிறார் மாணிக்கவாசகர் :

"ஆதியனே யந்த நடுவாகி அல்லானே"

(திருவாசகம்—சிவபுராணம்)

"ஆதி, நடு, அந்தம் இவை ஏதும் இல்லாதது பிரமம்". என்று கைவல்ய உபநிடதம் கூறுகிறது.

இவ்வாறு, ஆதியும் அந்தமும் இல்லாத ஒன்றை சிந்தித்துப் பார்ப்பதற்கோ சொல்லுவதற்கோ இயலுவதில்லை.

'தோற்றம்' என்றால் ஒன்றில் இருந்து மற்றொன்று தோன்றுதல் என்பதாகும். தோன்றுதலே இல்லாத இறைமை இன்னொன்றில் இருந்து தோன்றுவது என்பதில்லை. தானாகவே உள்ள தனித் தோன்றலாக இறைவனை காண்கின்றனர் ஞானிகள். தோற்றம் தனக்கில்லாத இறைமை மற்றவைகளுக்கெல்லாம் தோற்றம் அளிக்கிறது.

"தானே தனித்தோன்றல் தன்னளப்பொன்றில்லாதான்
தானே பிறர்கட்கும் தற்றோன்றல் ........"

(நம்வாழ்வார் இயற்பாற் பெரிய வந்தாதி)

"மூலமே இல்லா முதல்வனே"

(ஆரண்ய காண்டம்—கவந்தன்படலம்

என்று பாடுகிறார் கம்பர்.

**பூரணன்**

விதையிலிருந்து செடி முளைத்து மரமாகிறது என்றால் விதை அழிந்து விடுகிறதல்லவா? விதை அழிந்து தானே முளையாகவும் பிறகு செடியாகவும் மாறுகின்றது? இதுபோல், இறைமையிலிருந்து எல்லாம் தோன்றின, தோன்றுகின்றன என்றால் இறைமை அழிந்து விடுகிறதா? அல்லது இறைமை தனது முழுமைத் தன்மையினை இழந்து விடுகிறதா? இவ்வினாக்கள் நம் மனத்தில் எழுகின்றன.

Koviloor Digital Library



இறைமை என்பது பூரணமான, முழுமையான பொருள். இந்தப் பூரணப் பொருளில் இருந்துதான் எல்லாம் தோன்றுகின்றன. இருப்பினும், இறைமையின் பூரணத்தன்மை குறைந்து விடுவதில்லை. அது பூரணப் பொருளாகவே என்றும் இருக்கிறது, என்கின்றனர் ஞானிகள்.

"பிரமம் பூரணமானது. பிரமத்திலிருந்து பிறக்கும் பிரபஞ்சமும் பூரணமானது. பிரமத்திலிருந்து பிரபஞ்சம் பிறப்பதால் பிரமத்தின் பூரணத்தன்மை குறைந்து விடுவதில்லை. பிரமமாகிய பூரணம் பலவற்றைத் தோற்றுவித்தாலும் அது குறையாமல் பூரணமாகவே விளங்குகிறது." என்று ஈஸாவாஸ்ய உபநிடதம் கூறுகிறது.

"பூரணன் திருப்பூவனூர் மேவிய காரணன்"

(நாவுக்கரசர் — தேவாரம் — திருப்பூவனூர்)

ஒரு குடத்திலுள்ள நீரைச் சிறிது எடுத்தால், குடத்து நீர் குறைந்து விடுகிறது. இதுபோல் பிரமம் குறைந்து விடுவதில்லை, பிரபஞ்சங்களைத் தோற்றுவிப்பதால். உலகனைத்தையும் உண்டாக்கியுங்கூடக் குறைவில்லா நிறைவாகவே இறைமை இலங்குகிறது.

"குறைவிலா நிறைவே, கோதிலா அமுதே

(திருவாசகம்— கோவில் திருப்பதிகம்)

கணக்கியலில் (Mathematics) எல்லையற்ற எண்களை, அதாவது கோடி கோடி, கோடி கோடி, கோடி கோடி என்று முடிவேயில்லாத எண்களை (infinity) "எண்ணற்றது" என்பார்கள். எண்ணற்றதிலிருந்து எண்ணற்றதை எடுத்து விட்டாலும், எண்ணற்றது எண்ணற்றதாகவே இருக்கிறது என்பது கணக்கியல் கூறும் உண்மையாகும். இதுபோல், எண்ணற்ற, எல்லையற்ற, அளவற்ற இறைமையிலிருந்து எண்ணற்றவை பிறந்தாலும் இறைமை குறைவிலா நிறைவாகவே, பூரணமாகவே உள்ளது.

"முன்னோன் காண்க; முழுதோன் காண்க"

(திருவாசகம் — திருவண்டப்பகுதி)

இந்த உண்மையினை எளிமையான உதாரணத்தால் நமக்கு உணர்த்துகிறார் ஞானி திருமழிசைப்பிரான்:

Koviloor Digital Library



"கடல். அக்கடலில் இருந்து அலைகள் பொங்கி எழுகின்றன. எழுகின்ற அலைகள் அக்கடலிலேயே அடங்கிவிடுகின்றன. இவ்வாறே, இறைமையில் இருந்து பிறக்கும் சேதன அசேதனப் பொருள்கள் யாவும் இறைமையிலேயே அடங்கிவிடுகின்றன!"

"தன்னுள்ளே திரைத்தெழும் தரங்கவெண் தரங்கடல்
தன்னுள்ளே திரைத்தெழுந்து அடங்குகின்ற தன்மைபோல்,
தன்னுளே பிறந்துஇறந்து நிற்பவும் திரிபவும்,
தன்னுளே அடங்குகின்ற நீர்மை நின்கண் நின்றதே"

(திருச்சந்தவிருத்தம் 10)

கடலில் இருந்து அலைகள் தோன்றுகின்றன. கடலின் மீதே அவை அசைகின்றன. முடிவில் கடலிலேயே அவ்வலைகள் கலந்துமறைந்து விடுகின்றன. அதுபோன்றே, உலகங்களனைத்தும் இறைமையால் ஆக்கப் பெறுகின்றன, காக்கப் பெறுகின்றன, பிறகு அழிக்கப்படுகின்றன.

"ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்"

(திருவாசகம்—சிவபுராணம்)

அனைத்துலகங்களையும் ஆக்கும் இறைமை உலகங்களுக்கெல்லாம் பிறப்பிடமாய் உள்ளது.

**தந்தையும் தாயும்**

நமக்கெல்லாம் பிறப்பிடம் நம் தாய் தந்தையர். எனவே, எல்லாவற்றுக்கும் பிறப்பிடமான இறைமையினை தந்தையாகவும் தாயாகவும் காணுகின்றனர்.

"தந்தையாய்த் தாயுமாகித் தரணியாய்"

(நாவுக்கரசர்—தேவாரம் திருப்பயற்றூர்)

"இறைவன் எனக்கு மட்டுமா தந்தை? யாவருக்கும் தாயாகவும் தந்தையாகவும் இறைமை உள்ளது. ஆனால், இறைமைக்குத் தாயுமில்லை, தந்தையும் இல்லை", என்று பாடுகின்றார் மாணிக்க வாசகர்:

"எந்தையாய் எம்பிரான் மற்றும் யாவருக்கும்
தந்தைதாய் தம்பிரான் தனக்கு அஃதிலான்"

(திருவாசகம்—திருச்சதகம்47-)

Koviloor Digital Library



"எனக்குத் தந்தையாக உள்ள இறைமை, என் தந்தைக்கும் தந்தை, தந்தையின் தந்தைக்கும் தந்தை." என்று தெளிவாகப் பாடுகின்றார் நம்மாழ்வார்:

"எந்தை தந்தை தந்தை தந்தை தந்தைக்கும்
முந்தை......................"

(திருவாய்மொழி 3 ப. 3தி)

இறைமை இந்த நிகழ்காலத்தில் மட்டுமா நமக்குத் தாய் தந்தையாக உள்ளது? இறந்த காலத்திலும், இனி எதிர்காலத்திலும் நமக்குத் தாய் தந்தையர் இறைமைதான் என்கிறார் நம்மாழ்வார் :

"போகின்ற காலங்கள் போய காலங்கள் போகு
காலங்கள் தாய்தந்தை உயிர்
ஆகின்றாய்! உன்னை நான் அடைந்தேன், விடுவேனோ?"

(திருவாய்மொழி—2 ப. 6 தி.)

எந்த மொழியினை எடுத்துக் கொண்டாலும், அம்மொழியிலுள்ள எழுத்துக்களுக்கெல்லாம் அடிப்படையாக உள்ளது 'அ' என்ற எழுத்தே (அகரமே) ஆகும். அதுபோல், இறைமை இந்த உலகுக்கு அடிப்படையாக இருக்கிறது என்கிறார் திருவள்ளுவர் :

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு."

(குறள்-1)

## ஆதி மூர்த்தி

இயற்கைப் பொருள்களின் தோற்றத்தையும் ஆற்றலையுங் கண்டு, அவை இன்னவென்று புரியாத நிலையில் மனிதன் அஞ்சி நின்ற காலம் உண்டு. அதே மனிதன் இயற்கையினை இறைமையாகக் கண்டு அதனோடு உறவாடும் உயர்ந்த நிலையினை எய்தி விடுகிறான்! உண்மையினை உணர்ந்த இந்நிலையில் இறைமையினை தன் தாயாகவும் தந்தையாகவும் காணுகின்றான்!

தனக்கு மட்டுமன்றி எல்லாவற்றுக்கும் மூலமான இறைமையினை "ஆதிமூர்த்தி," என்று போற்றுகின்றனர் அடியார்கள்.

Koviloor Digital Library



"சோதியாகி எல்லாவுலகும் தொழும்
ஆதிமூர்த்தி என்றால் அளவாகுமோ"

(திருவாய்மொழி-3 ப. 3 தி)

"ஐயநீ அருளிச் செய்யாய் ஆதியே, ஆதிமூர்த்தி"

(நாவுக்கரசர்—தேவாரம்கோவில்)

இவ்வாறு, "அற்புத மூர்த்தி"யாகக் கண்ட இறைமையினை "ஆதிமூர்த்தி"யாகவும் காணுகின்றனர் ஞானிகள்.

Koviloor Digital Library

KOVILUR ADHEENAM
KOVILUR B. O.
(Via) MANAGIRI
RAMANATHAPURAM DIST.
PIN: 623 307

# 13. காரண மூர்த்தி

"இயற்கையின் இயக்கம் ஒவ்வொன்றுக்கும் மனித னின் செயல் ஒவ்வொன்றுக்கும் அடிப்படையாக உள் ளது பிரமத்தின் சக்தியே ஆகும்."

(கேனோபநிடதம்)

வானொலிப் பெட்டியின் விசையினைத் திருப்புகிறோம். இன் னிசை கேட்கிறது.

இப்பொழுது இந்த இன்னிசை கேட்பதற்குக் காரணம் என்ன?

நாம் வானொலிப் பெட்டியின் விசையைத் திருப்பியதுதான் காரணம் என்று எண்ணுகிறோம். நாம் விசையினைத் திருப்பா விடில் இசை கேட்காது. எனவே, விசையினைத் திருப்பிய செயல் தான் இன்னிசை கேட்பதற்கான காரணம் என்று நாம் கூறு கிறோம்.

ஆனால், உண்மையில் விசையினைத் திருப்பிய செயல் ஒன்று மட்டுந்தான் இசை எழுவதற்குக் காரணமா?

மின்சாரம் இல்லை என்று வைத்துக்கொள்வோம். வானொலிப் பெட்டி இயங்குவதில்லை; இன்னிசை கேட்பதில்லை. வானொலிப் பெட்டியில் பழுது ஏற்பட்டுள்ளது என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுதும் இன்னிசை எழுவதில்லை. வானொலி நிலையத்தில் கலைஞர்கள் இசையெழுப்பவில்லை என்றாலும் பெட்டியிலிருந்து இசை எழுவதில்லை. வானொலி நிலைய இயந்திரங்களில் ஏதாவது பழுது ஏற்பட்டிருந்தாலும் நம்மால் இங்கு இசையைக் கேட்க முடிவதில்லை.

### எது காரணம்?

இப்பொழுது, வானொலிப் பெட்டியில் இருந்து இசை கேட்ப தற்கு காரணம் இதுதான் என்று எதைக் கூறுவது?

அதற்குக் காரணம் நாம் வானொலிப் பெட்டியின் விசையினை திருப்பிய செயலா? அப்பெட்டி பழுது ஏதும் இன்றி நல்ல

Koviloor Digital Library


நிலையில் இருந்ததாலா? பெட்டியை இயக்கும் மின்சாரமா? வானொலி நிலையத்தில் கலைஞர்கள் இசையெழுப்பிய செயலா? வானொலி நிலையத்து இயந்திரங்கள் நல்ல நிலையில் இயங்கிய தாலா?

இவற்றில் எதைக் காரணம் என்பது? எல்லாமே காரணங்கள் தாம்! ஏதேனும் ஒன்று நிகழவில்லை என்றாலும் வானொலிப் பெட்டியில் இருந்து இசை எழுவதில்லை.

இதுபோல், ஒவ்வொரு காரியத்திற்கும் அதற்கான காரணங்கள் எத்தனையோ உள்ளன. ஆனால், நாம், ஏதோ ஒன்றை மட்டும் அதற்குக் காரணமாக எண்ணி விடுகின்றோம்!

வானொலி நிலையத்திலுள்ள இயந்திரங்கள் சரிவர இயங்க வேண்டுமெனில் அதற்கு எத்தனையோ சாதகமான சூழ்நிலைகள் தேவைப்படுகின்றன. மின்சாரம் தடையின்றி வரவேண்டுமெனில் அந்த உற்பத்தி நிலையத்திலுள்ள இயந்திரங்கள் ஒழுங்காக இயங்க வேண்டுமே! அதற்குத் தேவையான சூழ்நிலைகள் எத்தனையோ உள்ளன!

இவ்வாறு, எந்த ஒரு காரியத்தை எடுத்துக் கொண்டாலும் அதற்கான காரணங்களை நாம் சிந்தித்தால் அவை பெருகிக் கொண்டே போகின்றன. ஒன்றை மட்டும் காட்டி இதுதான் இந்த காரியத்திற்கான காரணம் என்று நாம் சொல்வதற்கில்லை.

விதையிலிருந்து முளை எழுகின்றது. எனவே, முளைக்குக் காரணம் வித்து என்கிறோம்.

ஆனால், இது ஓரளவுதான் உண்மை.

விதை அதுவாகவே முளையாகி விடுகின்றதா? இல்லை. அதற்கு ஏற்ற மண் வேண்டும். மண் மட்டும் போதுமா? ஈரமும் வேண்டும். மண்ணும் ஈரமும் இருந்தாலும் சூரியனின் ஒளியும் அதன் இளஞ்சூடும் வேண்டும். இவ்வாறு, மண்ணும் நீரும், ஒளியும் சூடும் சேர்ந்த சூழ்நிலையில்தான் வித்து முளையாகி நன்றாக இலை விடுகின்றது.

இப்பொழுது, முளைக்குக் காரணமாக விதையைக் கூறுவதா! மண்ணைக் கூறுவதா? நீரைக் கூறுவதா? ஒளியைக் கூறுவதா? இளஞ்சூட்டினைக் கூறுவதா? எதனைச் சொல்வது?

* * *

Koviloor Digital Library



**காரணங்கள் எத்தனை எத்தனையோ!**

ருஷ்ய ஞானி டால்ஸ்டாய் உலகப் புகழ்பெற்ற "போரும் அமைதியும்" (War and Peace) என்ற மாபெரும் நெடுங்கதையினை எழுதியவர். அக்கதையில் கீழ்க்கண்டவாறு வினவை எழுப்பி விடையும் கூறுகின்றார்:

"கனிந்த ஆப்பிள் பழம் மரத்திலிருந்து விழுகின்றதே, அது ஏன் விழவேண்டும்?

அப்பழம் மரத்துக் கிளையிலிருந்து விழுந்ததற்குக் காரணம் பூமியின் ஈர்க்கும் சக்தி எனலாம். அப்பழத்தின் காம்பு உலர்ந்து விட்டதால் எனலாம். வெயிலில் பழம் காய்ந்து விட்டதால் என்று கூறலாம். பழம் பருத்துக் கனமாகி விட்டதே காரணம் என்று சொல்லலாம். அப்பழத்தினைக் காற்று அசைத்ததால் என்றும் கூறலாம். இதெல்லாம்விட, மரத்தின் கீழே நின்று கொண்டு அப்பழத்தைத் தின்னுவதற்கு விரும்பிய சிறுவனின் ஆசைதான் என்றும் கூறலாம்.

இவற்றில் தனியாக எதுவும் காரணம் இல்லை. இயற்கையின் இயக்கத்தில் இவையெல்லாம் பொருந்தி நிகழ்கின்றன.

கனிந்த பழத்தின் காம்பு உலர்ந்து விட்டதால்தான் பழம் கீழே விழுந்தது என்று தாவர இயல் அறிஞர் கூறுவதும் தவறில்லை. "நான் தின்ன விரும்பினேன், அதனால்தான் பழம் விழுந்தது," என்று மரத்தடியில் நிற்கும் சிறுவன் கூறுவதும் தவறு இல்லை!'

("War and peace" - Book IX - Chap. I )

இவ்வாறு, எந்த ஒரு நிகழ்வுக்கும் காரணங்களாக உள்ளவை எத்தனை எத்தனையோ இருக்கின்றன.

இந்த உண்மையினை நாம் உணராததால்தான் தனிமனித முயற்சியாலேயே பல காரியங்கள் நிகழ்கின்றன என்று கருதுகிறோம். இக்கருத்து எவ்வளவு தவறானது என்பதை டால்ஸ்டாய் தமது நெடுங்கதையில் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஏறத்தாழ ஐரோப்பாக் கண்டம் முழுவதையும் தனது படைபலத்தால் வென்று வெற்றிவாகை சூடியவன் பிரஞ்சு நாட்டு மாவீரன்

Koviloor Digital Library



நெப்போலியன். அவன் பெயரைக் கேட்பதற்கே அஞ்சினர்கள் அன்றைய ஐரோப்பிய இராணுவத் தளபதிகள். முடிமன்னர் களோ அவன் படைகளைக் கண்டு நடுங்கினர்கள். இத்தகைய வீரப்புகழ் பெற்று விளங்கிய நெப்போலியன் ருஷ்யநாட்டின் மீது படையெடுத்தான். முதற் கட்டத்தில் அவன் வெற்றி பெற்றான். இறுதியில் அவன் படை தோற்கடிக்கப்பட்டது. நெப்போலியன் நடத்திய இந்த ருஷ்யப் படையெடுப்பினைப் பின்னணியாக வைத்தே "போரும் அமைதியும்" என்ற கதையினை டால்ஸ்டாய் எழுதியுள்ளார்.

நேப்போலியன் பெற்ற இராணுவ வெற்றிகளுக்கு அவன் வீரமும் திறமையும் மட்டுமே காரணங்களா? என்ற வினவினை எழுப்புகின்றார் டால்ஸ்டாய் :

"பிரஞ்சுத் தளபதிகள் நெப்போலியனுடன் ஒத்துழைக் காவிட்டால் அவனுக்கு வெற்றி ஏது? இலட்சக்கணக்கான பிரஞ்சு நாட்டுப் போர்வீரர்கள் தீரவிமாகப் போரிடா விட்டால் என்ன ஆவது? போர் வீரர்கள் குறி தவறுமல் சுட்டிருக்க வேண்டும். போர்த் தளவாடங்கள் எல்லாம் சரி வர எடுத்துச் செல்லப்பட்டிருக்க வேண்டும். அதற்கேற்ற சாலைகளும் வானிலையும் இருந்திருக்க வேண்டும். இப்படியாக எத்தனை எத்தனையோ எண்ணற்ற சூழ்நிலைகள் எழுந்ததால் தான் நெப்போலியன் முதலில் வெற்றி பெற முடிந்தது."

ருஷ்ய நாட்டின் மீது மாபெரும் படையெடுப்புச் செய்த நெப்போலியன் ஆகட்டும், அப்படையெடுப்பை இறுதியில் தோற் கடித்த ருஷ்யச் சக்கரவர்த்தி அலெக்சாண்டர் ஆகட்டும், இவ்விரு வரின் செயல்களால் மட்டுமா போர்க்களங்களில் வெற்றியும் தோல்வியும் நிகழ்ந்தன?

இக்கேள்விக்கும் விடை கூறுகின்றார் ஞானி டால்ஸ்டாய் :

"கனிந்த ஆப்பிள் பழத்தின் காம்பு உலர்ந்ததால்தான் பழம் கீழே விழுந்தது என்று தாவர இயல் அறிஞர் கூறுவ தும் தவறில்லை. 'நான் தின்ன வேண்டுமென விரும்பினேன், அதனால்தான் பழம் விழுந்தது', என்று மரத்தடியில் நிற்கும் சிறுவன் கூறுவதும் தவறில்லை. இதே போன்றதுதான் நெப்போலியன் தனது தனித்திறனல் வெற்றி பெற்றான் என்று கூறுவதும், ருஷ்ய மன்னன் அலெக்சாண்டர், தனது வீரத் தால் நெப்போலியனின் படையெடுப்பை முறியடித்தான் என்று சொல்லுவதும்.

Koviloor Digital Library



உலக வரலாற்றின் மகத்தான நிகழ்வுகளுக்குக் காரணங்களாகச் சில மனிதர்கள் கருதப்படுகின்றனர். எனவே, அம்மனிதர்களின் பெயர்கள் மகத்தான நிகழ்வுகள்மீது ஒட்டப்படுகின்றன அல்லது ஒட்டிக் கொள்ளுகின்றன. ஒரு பெட்டிக்குள் இன்ன பொருள் இருக்கிறது என்று காட்டும் வகையில் பெட்டியின்மீது ஒட்டப்படும் சீட்டிற்கும் பெட்டிக்குள் இருக்கும் பொருளுக்கும் சம்பந்தம் எந்த அளவோ, அந்த அளவு சம்பந்தமே வரலாற்றின் மகத்தான நிகழ்வுகளுக்கும் அந்நிகழ்வுகளுக்குக் காரணங்களெனக் கருதப்படும் மனிதர்களுக்கும். உலகத்தில் எழும் மாபெரும் இயக்கங்கள் எல்லாம் ஏதோ முன்னமைக்கப்பட்ட முறைப்படியே நிகழ்கின்றன. அந்நிகழ்வுகளுடன் சிலரின் பெயர்கள் சேர்ந்து கொள்ளுகின்றன. இதுதான் உண்மை.

வரலாற்று நாயகர்களாகத் தோன்றுபவர்கள் அவர்கள் விருப்பப்படிச் செயல்படுவதாகக் காணப்பட்டாலும், உண்மையில் அவர்கள் தன்னிச்சையாகச் செயல்படுவதில்லை. வரலாற்றின் முழு நோக்குடன் கண்டால், ஊழின் பெருவலியால் உந்தப்பட்டு ஊழின் கருவிகளாகவே அவர்கள் இயங்குகின்றனர் என்பது தெளிவாகும்."

"அரசனின் உள்ளம் ஆண்டவன் கையில் உள்ளது" எனவே, வரலாற்றின் அடிமையாகவே அரசன் இயங்குகிறான்."

**('The King's heart is in the hands of the Lord. A king is history' s slave.)**

**"War and Peace" - Book IX-Chap. I**

இவ்வாறு, நம் வாழ்வில் நாம் அறிந்து கொள்ள வேண்டிய இந்த அரிய உண்மையினை "போரும் அமைதியும்" என்ற ஒப்பற்ற நெடுங்கதையின் வாயிலாக ஞானி டால்ஸ்டாய் நமக்குப் போதிக்கின்றார்.

வரலாற்றுப் புகழ்பெற்ற நெப்போலியனின் பிரஞ்சுப் படைகளும் ருஷ்யப் படைகளும் சண்டையிட்ட போர்க்களத்தின் பின்னணியில் இந்த உண்மையினை நமக்கு உணர்த்துகிறார் டால்ஸ்டாய்.

Koviloor Digital Library



இதுபோன்றே, பாரத நாட்டின் மகத்தானதொரு போர்க் களத்தின் சூழ்நிலையில்தான், நன்மையும் தீமையும் ஒன்றை யொன்று எதிர்த்து நிற்கும் குருக்ஷேத்திர யுத்த களத்தின் பின்னணியில்தான், "பகவத் கீதை" என்ற பரமஞானம் போதிக் கப்படுகிறது!

தவிர்க்க முடியாத போர்க்களத்திலே புகுந்தபின் கடைசி நேரத்தில் கலங்கி நின்ற வீரன் பார்த்தன், (அர்ச்சுனன்) தன் ஐம்புலன்களையும் ஆன்மாவையும் இயக்கும் சாரதியான "பார்த்த சாரதி"யின் வாயிலாக மெய்ஞ்ஞானம் பெறுகிறான்:

"என் முன்னால் அணி வகுத்து நிற்கும் என் உற்றார் களையும் உறவினர்களையுமா நான் கொல்ல வேண்டும்!" என்று அர்ச்சுனன் தயங்கி நிற்கிறான். அவன் மனம் மயங்குகிறது.

"வில்வீரன் விஜயனே! நீ போர்க்களத்தில் இறங்கி விட்டாய். தீய சக்திகள் உன்னோடு உறவுடையன என்றாலும் அவற்றை வெல்லுவதும் கொல்லுவதும் உன் கடமை," என்று உணர்த்துகிறது பரம்பொருள்.

"இவர்களையெல்லாம் வென்று அழித்த பின் நான் அடையப்போகும் இன்பத்தால் என்ன பயன்" என்று கூறி காண்டீபத்தினைக் கையிலிருந்து நழுவ விடுகிறான் வீரன்!

மாபெரும் போர்க்களம். அதன் மத்தியிலே வில்லேந்தி நிற்கும் வீரன். ஆற்றல் நிறைந்த வீரனாக இருந்தாலும் அவன் உள்ளத்தில் உறுதியில்லை. தான்தானே எதிரில் நிற்கும் படையினரை அழிக்க வேண்டியிருக்கிறது என்ற அகந்தை எண்ணத்தால் எழும் மயக்கம் அவன் மனத்தைக் குழப்பு கிறது. அவன் கையிலிருக்கும் காண்டீபம் நழுவுகிறது. அவனும் கடமையிலிருந்து நழுவப்பார்க்கிறான். இந்த நிலையில் அவ்வீரனுக்கு உண்மை உணர்த்தப்படுகிறது!

"அர்ச்சுனா! நீ ஏதோ உன் வீரச் செயலால் எதிரிகளைக் கொல்லப்போவதாக எண்ணுகின்றாய். இந்த எண்ணம் உனது அறியாமையில் எழுவதாகும். அகந்தையில் தோன்று வதாகும். இதோ பார். யாரையெல்லாம், எந்தப் படை களையெல்லாம் நீ வென்று அழிக்கப்போவதாக நினைக் கின்றாயோ அவர்களனைவரும் மாய்ந்து மறைந்துகொண்டிருப்

Koviloor Digital Library



பதைப் பார்! உனது வில் உன் கையிலே எவ்வாறு உனக்குற்ற கருவியாக இருக்கிறதோ, அவ்வாறே இயற்கையின் இயக்கத்திலே நீ ஓர் அற்பமான கருவிதான் என்பதை உணர்ந்து கொள்.

தீய சக்திகளான கௌரவர்களும் அவர்களின் படைகளும் மாண்டு மடிவதற்கு நீதான் காரணம் என்று எண்ணி இறுமாந்து விடாதே. இதோ மண்ணும் விண்ணும் நிறைந்து நிற்கும் எனது விசுவரூபத்தைப் பார். ஆறுகள் ஓடிக் கடலிலே கலப்பதுபோல் அனைவரும் எண்ணிலே கலந்து மறைவதைப் பார். ஊழின் வழிச் செல்லும் காலச்சக்கரத்திலே சிக்குண்டு சிதைந்து அவர்கள் மடிந்து மறைவதைப்பார். கால வெள்ளத்திலே அவர்கள் கரைந்து மறைவதற்குக் காரணமாக இருப்பது நான்தான். அற்பமான நீ அல்ல. இந்த உண்மையினை உணர்ந்துகொள்."

இவ்வாறு ஒப்பில்லாத உயர் ஞானத்தினை பார்த்தனுக்குக் காட்சியாகக் காட்டுகிறது பரம்பொருள்.

"அவனன்றி ஓரணுவும் அசையாது"

என்பது பழமொழி மட்டுமன்று, பரமஞானமுமாகும்.

**பூரண காரணன்**

எந்தச் செயலை எடுத்துக்கொண்டாலும் அதற்குக் காரணமாக இருப்பது இயற்கையின் இயக்கங்கள்தாம் என்பதனை நம் முன்னோர்கள் ஆய்ந்து கண்டனர்.

இயற்கையிலே இயைந்துள்ள இறைமையே எல்லா விளைவுகளுக்கும் காரணம் என்பதை அவர்கள் உணர்ந்தனர்.

புறப்பொருள்களையும் அவற்றின் தன்மைகளையும் நுணுகி ஆய்வது விஞ்ஞானம்.

மேலே தூக்கி எறியப்படும் பொருள் ஏன் கீழே விழுகின்றது என்றால், பூமியின் ஈர்ப்புச் சக்தியால் (gravitation) இழுக்கப்பட்டு கீழே விழுகின்றது என்று விஞ்ஞானம் கண்டுபிடித்துக் கூறுகிறது. ஆனால், பூமியின் ஈர்ப்புச் சக்திக்குக் காரணம் என்னவென்று விஞ்ஞானம் கூறுவதற்கில்லை.

இயற்கையிலுள்ள புறப்பொருள்கள், இயக்கங்கள் இவற்றின் தன்மைகளைத்தான் விஞ்ஞானம் ஆய்கின்றது. இவ்வாறு இயற்

Koviloor Digital Library



கையின் இயக்கங்களைக் காட்டுகிறது விஞ்ஞானம். இயற்கையில் இயைந்துள்ள இறைமையினையே அவ்வியக்கங்களுக்குக் காரணமாகக் காணுகின்றது மெய்ஞ்ஞானம்.

எனவே, எல்லாவற்றுக்கும் பூரணமான காரணமாக இருக்கும் இறைமையினை,

"போக்கு வரவற்ற பூரண காரணன்"

(திருமந்திரம் 3088)

என்கிறார் திருமூலர்.

அனைத்துக்கும் மூலமாகவும் ஆதி காரணமாகவும் உள்ள இறைவனை,

"போற்றி போற்றி புராண காரண"

(திருவாசகம்—போற்றித்திருவகவல்)

என்று போற்றுகிறார் மாணிக்கவாசகர்.

ஒரு செயலில் இருந்துதான் அதன் பயன் விளைகின்றது. செயல்தான் அச்செயலின் பயனாகப் பரிணமிக்கின்றது. ஆதலால் செயல் வேறு அதன் பலன் வேறு என்று நாம் பிரித்துக் கூறுவதற்கில்லை.

விதைதான் முளையாகிறது? எனவே வித்து வேறு முளை வேறு என்பதல்ல. வித்தாக உள்ள இறைமைதான் முளையாகவும் உள்ளது.

"வித்தே அவ்வித்தின் முளையே"

(தாயுமானவர்)

வித்தும் அவ்வித்திலிருந்து விளைவதும் ஒன்றுதான். வித்து இறைமை என்றால் அதிலிருந்து விளைவதும் இறைமைதான்.

"வித்தினை விளைவாய விகிர்தனை"

(திநாவுக்கரசர்—திருக் கோளிலி)

**செயலும் பயனும்**

வித்தும் அதன் விளைவும் ஒன்றாகவே இருப்பதுபோல், ஒரு செயலுக்குக் காரணமாக உள்ள இறைமை அச்செயலில் இருந்து எழும் பலனாகவும் உள்ளது. ஒரு கருமத்திற்குக் காரணம் இறைமை என்றால் அக்கருமத்தின் பலனுக்கும் காரணம் இறைமைதான்,

Koviloor Digital Library



கருமத்திற்கான காரணம், அக்கருமம், அக்கருமத்தின் பலன் மூன்ருகவும் உள்ளது இறைமைதான் என்பதைத் தெளிவாகக் கூறுகின்ருர் நம்மாழ்வார்.

"கருமமும் கருமபலனுமாகிய காரணன் தன்னை"

(திருவாய்மொழி 6ப. 4 தி.)

மனிதன் தன் விருப்பப்படிதானே இயங்குகிருன்? தன் இச்சைப்படிதானே செயல்களைச் செய்கிருன்? அப்படியிருக்க மனிதனின் செயல்கள் எல்லாவற்றுக்கும் காரணமாக உள்ளது இறைமைதான் என்று கூறுவது சரியாகுமா? என்ற கேள்வி நம் மனத்திலே எழுகின்றது.

இந்த வினவிற்கு ஜெர்மானிய நாட்டுத் தத்துவ ஞானி ஷோப்பனர் (Schopenhauer) விடையளிக்கின்ருர்.

"மனிதன் எதை விரும்புகிருனே அதைத்தான் செய்கிருன்; ஆனல், எதை விரும்ப வேண்டும் என்பதனை அவனல் தீர்மானிக்க முடிவதில்லை"

(A man can surely do what he wills to do, but he cannot determine what he wills.)

Schopenhauer.

இயற்கையின் இயக்கங்களுக்கு இறைமைதான் காரணம் என்ருல், இயற்கையோடு இயைந்துள்ள மனிதனின் சிந்தனைக்கும் செயலுக்கும் இறைமைதானே காரணமாக இருக்க முடியும்?

"நான் செய்யும் செய்கைகள் மட்டுமல்ல, சிந்திக்கும் சிந்தனைகளும் இறைமையால்தான்; இந்த உண்மை தெரியாமல் மயங்குகிறேன்," என்று பாடுகின்ருர் தாயுமானவர் :

"செய்யும் செய்கையும் சிந்திக்கும் சிந்தையும்
ஐயநின்னது என்று எண்ணும் அறிவின்றி
வெய்ய காம வெகுளி மயக்கமாம்
பொய்யிலே சுழன்றே னென்ன புன்மையே!"

நமது சிந்தனைக்கும் செயல்களுக்கும் காரணமாக உள்ளது இறைமைதான். ஏதோ நாம் நமது விருப்பப்படி செயல்படு

Koviloor Digital Library



கின்றோம் என்று எண்ணுவது அறியாமை. இந்த உண்மையினை ஓர்ந்துணர்ந்த அடியார்கள், "எனது மனம் சொல் செயல் எல்லாம் நீதான்" என்று இறைவனை வழுத்துகின்றனர் :

"வணங்குமாறு அறியேன், மனமும் வாசகமும் செய்கையும்
யானும் நீதானே"

(திருவாய்மொழி-8 ப 1. தி.)

"இறைவனே! நீ ஆட்டுவித்தால் மக்கள் அதன்படி நடக்கின்றனர்: நீ அடக்கி வைத்தால் அவர்கள் அடங்கி நிற்கின்றனர்," என்று பாடுகின்றார் நாவுக்கரசர் :

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே!"

(தேவாரம்—தனித்திருத்தாண்டகம்)

"என் செயலாவது யாதொன்றும் இல்லை இனித்தெய்வமே
உன் செயலே என்று உணரப் பெற்றேன்"

(பட்டினத்தடிகள்)

"மெய்ஞ்ஞானக் கண்கொண்டு பார்த்தால் நமக்குச் சுதந்திரம் எதுவுமே இருப்பதில்லை. புறநிலைக் கட்டாயங்களுக்கும் அகநிலை அவசியங்களுக்கும் உட்பட்டே நாம் செயல்படுகிறோம்", என்று கூறுகிறார் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் (Albert Einstein).

I do not believe we can have any freedom at all in the philosophical sense, for we act not only under external compulsion but also by inner necessity.

Albert Einstein, in "I believe" -London-Unwin Books.

எனவேதான், உலகுக்கெல்லாம் வித்தாக உள்ள இறைமை புற நிகழ்ச்சிகளுக்கு மட்டுமன்றி நம் செயல்களுக்கும் சிந்தனைக்கும் காரணமாக உள்ளது என்ற உண்மையினை நம் முன்னோர்கள் எடுத்தோதுகின்றனர்!

எல்லாவற்றுக்குமே காரணமாக உள்ளது இறைமையென்றால் இறைமைக்குக் காரணமாக எதுவும் இருக்க முடியாதல்லவா? எனவே இறைமைக்கு காரணமாக ஏதும் இல்லை என்கிறது உபநிடதம்:

Koviloor Digital Library


"பிரமத்திற்குக் காரணம் காரியம் என்று எதுவும் இல்லை"

(பிரிகதாரண்யக உபநிடதம்)

"காரண காரியங்கள் இல்லாக் கோலம்"

(கல்லாலின்)

என்று இறைவனைக் காட்டுகிறூர் தாயுமானவர்.

**காரணமூர்த்தி**

அனைத்தினுக்கும் காரணமாகவும் தனக்குக் காரணமாக ஏதும் இல்லாததாகவும் இலங்கும் இவறைமையினை "காரணன்" என்று பெயரிட்டுப் போற்றுகின்றனர் ஞானிகள் :

"பூரணன் திருப்பூவனூர் மேவிய
காரணன் எனை யாளுடைக் காளையே"

(நாவுக்கரசர்–தேவாரம்–திருப்பூவனூர்)

"நாரணன் எம்மான்
பாரணங் காளன்
வாரணம் தொலைத்த
காரணன் தானே.

(திருவாய்மொழி — 10 ப. 5 தி)

இவ்வாறு, அகிலாண்டங்களுக்கும் ஆதிமூர்த்தியாகக் கண்ட இறைமையினை, அனைத்துச் செயல்களுக்கும் சிந்தனைக்கும் காரண மூர்த்தியாகவும் கண்டனர் மெய்ஞ்ஞானிகள்.

Koviloor Digital Library

# 14. ஆன்ம மூர்த்தி

"நம் அகத்தில் உறையும் ஆன்மாவும் புறத்தில் இலங்கும் பிரமமும் ஒன்று என்பதை உணர்வதே உயர்ந்த ஞானமாகும்."

(ஈசோபநிடதம்)

நமக்கு அறிமுகமாகாத ஒருவர் அயலூரிலிருந்து நம்மைக் காண வருகின்றார். எளிமையான தோற்றத்துடன் காணப்படும் அவரைச் சாதாரணமாக வரவேற்று,

"நீங்கள் யார்? என்ன வேண்டும்?", என்று சிறிது அலட்சிய மாகவே கேட்கிறோம்.

அவர் ஒரு கடிதத்தை நம்மிடம் கொடுக்கிறார். நமது நெருங்கிய நண்பர் ஒருவர் நமக்கு எழுதியது அக்கடிதம். அதைப் பிரித்துப் பார்க்கிறோம். கடிதத்தைக் கொண்டு வருபவர் தலைசிறந்த பேராசிரியரான இன்னார் என்றும், தமக்கு உறவினர் என்றும் நமது நண்பர் எழுதியிருக்கிறார்.

கடிதத்தைப் படித்த உடன் நம் இருக்கையிலிருந்து எழுந்து கடிதம் கொண்டு வந்தவரைக் கைகுலுக்கி வரவேற்கிறோம்.

"உங்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களை நேரில் காணும் வாய்ப்புக் கிடைத்ததற்கு மகிழ்ச்சி", என்று கூறி நமது மகிழ்வினைத் தெரிவிக்கிறோம். மரியாதையோடு உபசரித்து நம் விருந்தினராகத் தங்கி இருக்கும்படி அவரை வேண்டுகிறோம்.

"யாரோ, எவரோ?" என்ற நிலையில் நாம் அவரை அலட்சிய மாக வரவேற்றதற்கும், அவர் ஒரு பேராசிரியர், நமது நெருங்கிய நண்பரின் உறவினர் என்று தெரிந்தபின் அவரை நாம் மரியாதை யோடு உபசரிப்பதற்கும் எவ்வளவு வேறுபாடு!

காரணம், முதலில் அவர் நமக்கு அறிமுகமாகாத அந்நியராக இருந்தார். பிறகு அவர் இன்னார், இவ்வளவு மதிப்புடையவர்

Koviloor Digital Library



என்பதைத் தெரிந்து கொண்டோம். அவரைப்பற்றித் தெரிந்து கொண்டபின், மகிழ்வு கூறி, மரியாதை காட்டி, மதிப்புமிக்க விருந்தாளியாக அவரை ஏற்று உபசரிக்கிறோம்.

இவ்வாறு, ஒருவரை மற்றொருவர் இன்னார் என்று தெரிந்து கொள்ளுவதற்கு அறிமுகம் தேவைப்படுகிறது.

அறிமுகம் இல்லாத பேராசிரியரை நமக்கு அறிமுகம் செய்தவர் நமது நண்பர். தமது கடிதத்தின் மூலமாக அவர் அறிமுகம் செய்தார்.

### ஆன்ம அறிமுகம்!

இது போன்ற ஓர் அறிமுகத்தை ஞானிகள் செய்கின்றனர்! நமக்கு ஒருவரை அவர்கள் அறிமுகப்படுத்துகின்றனர்!

"யாரை நமக்கு அறிமுகப்படுத்துகின்றனர்" என்று கேட்கிறீர்களா?

வேறு யாரையும் இல்லை. நம்மையே நமக்கு அறிமுகப்படுத்துகின்றனர்!

"நம்மையே நமக்கு அறிமுகப்படுத்துவதா?" என்று நாம் வியப்படைகிறோம்.

ஆம்! வியப்புத்தான்!

நாம் யார் என்று நமக்குத் தெரியாத நிலையில், நம்மைப்பற்றி நமக்கு அறிமுகப்படுத்துவது அவசியமாகின்றது!

"என்ன! என்னைப்பற்றி எனக்குத் தெரியாதா? நான் யார் என்று எனக்கு நன்றாகத் தெரியுமே. என்னுடைய சொந்த ஊர் இது, என் பெற்றோர்கள் இன்னார், நான் இன்ன பதவியில் இருக்கிறேன், நான் இவ்வளவு படித்திருக்கிறேன், எனது வருமானம் இவ்வளவு, இதைவிட வேறென்ன என்னைப்பற்றி எனக்குத் தெரிய வேண்டும்!"—இவ்வாறு நாம் எண்ணுகிறோம்.

நமது பெயரையும் பெற்றோரையும் வைத்து நம்மை இன்னார் என்று அறிமுகப்படுத்தவில்லை ஞானிகள்.

மனிதர்கள் என்ற நிலையில் நாம் யார்? நம்முடைய மாட்சி என்ன? என்பதை அவர்கள் காட்டுகின்றனர்.

Koviloor Digital Library



"உனது உடம்பு, அதனை இயக்கும் உயிர், இவ்விரண்டும் கொண்டதுதான் நீ என்று எண்ணுகிறாய். கண்ணுக்குத் தெரியாத, உனது உயிருக்கும் உயிரான ஒன்று உன்னுள்ளே உள்ளது. உலகிலுள்ள எல்லாப் பொருள்களிலும் உயிர்களிலும் உறையும் இறைமைதான் அது. பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைகின்ற பரிபூரணப் பொருளான இறைமை உனது உயிரின் உயிராக, உள்ளத்தின் ஒளியாக இலங்குகின்றது. ஆதலால், இறைமையினையே இதயக் கமலத்தில் கொண்டுள்ள இணையற்ற பெருமையுடையவன் நீ!"

இவ்வாறு, நமக்கு நம்மையே அறிமுகப்படுத்துகின்றனர் மெய்ஞ்ஞானிகள்!

நமது இதயத்தில் இலங்கும் இறைமையினை 'ஆன்மா' என்று அழைக்கின்றனர்.

"நமது மூச்சின் மூச்சாக, பேச்சின் பேச்சாக, கண்ணின் கண்ணாக, உள்ளத்தின் உள்ளமாக இருப்பது ஆன்மா.

பிரமமே இந்த ஆன்மாவாக இருக்கிறது."

(கேனோபநிடதம்)

"ஒன்றாக இருந்த பிரமம் பலவாகப் பெருகியது. அண்டங்களாகவும் அனைத்துயிர்களாகவும் மலர்ந்தது. எனவே, அனைத்திலும் அமர்ந்து உறைவது பிரமமேயாகும். அதுவே நம் உள்ளத்திலும் ஒளிர்கின்றது. அதனை நம் ஆன்மா என்கிறோம்".

(சாந்தோக்கிய உபநிடதம் )

அதுவே நீ !

இவ்வாறு, உத்தாலகர் என்ற முனிவர் தம் மகன் சுவேதகேதுவுக்கு மெய்ஞ்ஞானம் புகட்டி, மேலும் கூறுகின்றார்:

"மகனே! அந்த ஆன்மாதான் நீ; உலகமெலாம் (தனி) நிறைந்த உண்மையான பிரமந்தான் உன் ஆன்மா."

ஆதலால், அதுவே நீ.

நித்தியமான சத்தியமாகவுள்ள பிரமந்தான் உன் ஆன்மா.

ஆதலால், அதுவே நீ.

கண்ணுக்குத் தெரியாத கருவாக எல்லாப் பொருள்களிலும் எல்லா உயிர்களிலும் இணைந்து நிற்கும் பிரமமே உன் உள்ளத்தில் உறைகின்ற ஆன்மா.

Koviloor Digital Library



ஆதலால், அதுவே நீ."

"எங்குமாய் எல்லாமாய் நிற்கும் இறைமைதான் உன் இதயத்திலும் ஆன்மாவாக உள்ளது. ஆதலால் அந்த இறைமையாக நீ இருக்கின்றாய்; அதுவே நீ ஆகின்றாய்" என்று கூறி நம்மையே நமக்கு அறிமுகப்படுத்தும் வகையில், "அதுவே நீ", "அதுவே நீ" என்று அழுத்தமாகக் கூறுகின்றனர் ஞானிகள்.

"அதுவே நீயாக உள்ளாய்" (தத்—த்வ—மஸி) என்ற ஞானச் சொற்களை 'மகாவாக்கியம்' என்று போற்றுகின்றனர் சான்றோர்.

"நீயது வானா யென நின்ற பேருரை"

(திருமந்திரம் — 2577)

என்று பாடுகின்றார் திருமூலர்.

பிறப்பு இறப்பில்லாத, எங்கும் நிறைந்து எல்லாமாகி நிற்கும் பிரமத்தினைத் தன் ஆன்மாவாகக் கொண்டுள்ள மனிதன், தன்னுள் உறையும் ஆன்மாவைப்பற்றி அறிவதில்லை.

உள்ளத்தில் ஒளிரும் ஆன்ம ஒளியினை அஞ்ஞானம் என்ற திரை மூடி மறைத்துவிடுகின்றது.

"தன் காலடியில் புதைந்து கிடக்கும் புதையலைக் கண்டு கொள்ளாமல் அதன்மீது நடந்து கொண்டிருப்பவனைப் போல், நம்முள் இருக்கும் பிரமத்தினை நாம் உணராமல் இருக்கிறோம்."

இவ்வாறு நம் அறியாமையைக் கூறுகிறது சாந்தோக்கிய உபநிடதம்.

புதையல் தன் காலடியில் மறைந்து கிடப்பதைத் தெரிந்து கொள்ளாமல், அதன்மீது நடந்துகொண்டிருப்பவன் உண்மையில் ஏழைதானே!

"என்னை இன்னார் என்று அறியாத ஏழையாகவே நான் இருக்கிறேன்" என்கிறார் தாயுமானவர்.

"என்னைத்தான் இன்ன வண்ணமென்று அறிகிலா ஏழை"

(எனக்கெனச்செயல்)

"நான் என்னை யாரென்று அறிந்து கொள்ளாமல், 'நான்' என்றும், 'எனது' என்றும் தனித்து இருப்பதாக எண்ணிக் கொண்டிருந்தேன். இறைவனே! நானே நீ! என் உடைமையும் நீ!" என்று பாடுகின்றார் நம்மாழ்வார்:

Koviloor Digital Library



"யானே என்னை அறிகியலாதே
யானே என்தனதே என்றிருந்தேன்!
யானேநீ என்னுடைமையும் நீயே
வானே யேத்தும் எம்மானவரேறே!"

(திருவாய்மொழி—2 ப. 9 தி.)

"என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலேன்"

(திருமந்திரம் — 2366)

என்கிறார் திருமூலர்.

## ஆன்மாவுக்கு அழிவில்லை

அழிவில்லாத பிரமமே நமது ஆன்மாவாக இருக்கிறது என்றால், நம் ஆன்மாவுக்கும் அழிவில்லையா? என்ற கேள்வி நம் மனத்திலே எழுகின்றது.

"ஆன்மா உடலை விட்டு நீங்கும்பொழுது மரணம் நேர்கிறது. அதனால் உடல்தான் அழிகின்றது. ஆன்மா அழிவதில்லை.

பிணியும் மூப்பும் மரணமும் உடலுக்குத்தான்; ஆன்மாவுக்கு அல்ல", என்று உறுதியாகக் கூறுகின்றன ஞான நூல்கள்.

"நம் உள்ளத்தை மறைத்து நிற்கும் அறியாமை என்ற படலத்தை நீக்கிவிட்டு, உள்ளத்தில் உள்ள ஆன்ம ஒளியின் உண்மையினை உணர்ந்தால், இவ்வுலகம் உள்ளளவும் நானும் இருப்பேன். இது சரிதானே! உலகளந்த இறைவனே, நீயே சொல்" என்று பாடி ஆன்மாவின் அழியாத் தன்மையினை நமக்கு உணர்த்துகிறார் நம்மாழ்வார்:

"உள்ளிலும் உள்ளந்தடிக்கும் வினைப் படலம்
விள்ள விழித்துன்னை மெய்யுற்றால் - உள்ள
உலகளவு யானும் உளனாவன் என்கொல்
உலகளந்த மூர்த்தி! உரை"

(இயற்பா-பெரிய திருவந்தாதி, 76)

## ஆன்ம ஞானம்

இவ்வாறு, அண்ட சராசரங்களையும் படைத்து ஆட்டும் அழிவில்லாத பரம்பொருள்தான் நமது உள்ளத்தில் ஒளிரும் ஆன்மாவாக இருக்கிறது; அந்த ஆன்மா என்றும் அழிவில்லாதது என்ற

Koviloor Digital Library



உண்மையினை நமக்கு உணர்த்தி நம்மையே நமக்கு அறிமுகம் செய்கின்றனர் ஞானிகள்!

இந்த அறிமுகம் பெற்றபின் நம் மனத்திலே எத்தகைய மாற்றம் ஏற்படுகிறது!

"நான் இன்னுருடைய மகன், இன்ன தொழில் பார்க்கிறேன், இன்ன வருமானம் உடையேன், இன்னின்ன குறைகள் எனக்கு இருக்கின்றன" என்றெல்லாம் எண்ணி நம்மை நாமே குறைத்து மதிப்பிட்டு, உள்ளத்தால் கூனிக் குறுகி உள்ள நம்மை நிமிர்ந்து நிற்கச் செய்கிறது இந்த அறிமுகம்.

நிமிர்ந்து மட்டுமா நிற்கச் செய்கிறது?

அண்டங்களையெல்லாம் ஆக்கிச் சுழற்றும் எல்லையற்ற பரம் பொருள் நம் இதயத்தில் ஆன்மாவாக உள்ளது என்ற உண்மையை உணர்ந்தவுடன் நம் மனத்திலே எத்தகைய பூரிப்பு எழுகின்றது!

"என்ன மாதவம் செய்தனை நெஞ்சமே
..............................................
மன்னு சோதிநம் பால்வந்து வைகவே!"

(தேவாரம் – திருச்சேறை)

என்று இறும்பூது எய்துகின்றார் நாவுக்கரசர்.

"அண்டங்கள் யாவையும் ஆக்கினேன் நான்,
அவை பிழையாமே சுழற்றுவோன் நான்"

(பாரதியார்)

என்று எக்களிப்பாக இசை முழக்குகிறது ஞானிகளின் மனம்!

இந்த மெய்ஞ்ஞானம் நமக்கு எத்தகைய இன்பத்தை அளிக்கிறது!

சூரியனும், சந்திரனும், சுடர்விடும் நட்சத்திரங்களும், அண்ட சராசரங்கள் அனைத்தும் உறவோடு நம்முடன் ஒன்றுவது போன்ற மெய்யுணர்வு மனத்தில் தோன்றி நமது உடல் சிலிர்க்கின்றது! உள்ளம் சிலிர்க்கின்றது! உயிரும் சிலிர்க்கின்றது!

"இறைமையும் ஆன்மாவும் வேறல்ல" என்பதை உணர்த்தி அவற்றை வேறுபடுத்தி இரண்டாக எண்ணுமல் இருக்கச் செய்யும் "அதுவே நீ" என்ற சொற்றொடரால் விளைந்த சுகத்தைத் தாயுமானவர் கூறுகின்றார்:

Koviloor Digital Library



"என்னையுந் தன்னையும் வேறு-உள்ளத்து
எண்ணாத வண்ணம் இரண்டற நிற்கச்
சொன்னதுமோ வொரு சொல்லே - அந்தச்
சொல்லால் விளைந்த சுகத்தை யென்சொல்வேன்!"

(ஆனந்தக்களிப்பு)

"என்னுடைய உடம்பை முன்னால் இழிவாகக் கருதியிருந்தேன். உடம்பினுள் உண்மைப் பொருளான இறைமை கோவில் கொண்டுள்ளதை அறிந்தபின், உடம்பினைப் போற்றுதற்குரிய பொருளாக மதிக்கிறேன்'' என்கிறார் திருமூலர்:

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே."

(திருமந்திரம்—725)

* * *

**உபநிடதக் கதை**

"ஆன்மா'' என்றால் எது என்பதை விளக்கும் வகையில் சாந்தோக்கிய உபநிடதக் கதை ஒன்று உள்ளது.

ஆன்ம ஞானம் பெற்றவர்கள் எல்லா இன்பங்களையும் எய்துவார்கள் என்பதைக் கேள்விப்பட்ட தேவர்களும் அசுரர்களும் ஆன்மஞானம் பெறுவதற்குத் திட்டமிட்டனர்.

தேவர்களின் அரசன் இந்திரன். அசுரர்களின் தலைவன் விரோசனன். இவ்விருவரும் புகழ்பெற்ற குருவான பிரஜாபதியிடம் சென்றனர். குருவுக்கு 32 ஆண்டுகாலம் பணி செய்தார்கள். முடிவில், "நீங்கள் எதை நாடி என்னிடம் வந்தீர்கள்?" என்று கேட்டார் குரு.

"ஆன்மாவைப்பற்றித் தெரிந்து கொள்ளவே நாங்கள் வந்தோம்'' என்றனர் இருவரும்.

"நிழலாகக் கண்களுக்குத் தெரிகின்றதே அதுவே ஆன்மா'' என்று குரு போதித்தார்.

"நீரிலும் நிலைக் கண்ணாடியிலும் பிரதிபலித்துத் தெரிகின்றதே, அதுதான் ஆன்மாவா?'' என்று கேட்டனர்.

Koviloor Digital Library



"நீரிலே தெரியும் உங்கள் நிழலைப் பாருங்கள். சந்தேகங்கள் இருந்தால் மீண்டும் வாருங்கள்" என்று சொல்லி அனுப்பினர் குரு.

இந்திரனும் விரோசனனும் நீரிலே தெரிந்த அவரவர் பிரதி பிம்பத்தை உற்றுப் பார்த்துவிட்டு,

"குருவே, ஆன்மாவைக் கண்டு கொண்டோம். நன்றி," என்று கூறி விடை பெற்றுச் சென்றனர்.

"ஐயோ! இவர்களுக்குச் சிந்தனை இல்லையே!" என்று பிரஜா பதி மனம் வருந்தினர்.

உடம்பின் பிரதிபிம்பத்தினை ஆன்மா என்று நினைத்த விரோசனன் அசுரர்களிடம் சென்று தான் கண்ட ஆன்மாவைப் பற்றிக் கூறி, உடம்பைப் போற்றுவதுதான் ஆன்மாவை வழிபடுவ தாகும் என்ற தவருன கொள்கையினைப் பரப்பினன்.

தேவர்களிடம் திரும்பிப் போய்க்கொண்டிருந்த இந்திரனுக்கு வழியிலேயே சந்தேகம் வந்துவிட்டது. "உடம்பின் நிழல்தான் ஆன்மா என்ருல், உடம்பு முடமாகவோ குருடாகவோ இருந்தால் ஆன்மாவும் முடமாகவும் குருடாகவும் அல்லவா காணப்படும்! உடம்பு அழிந்தால் ஆன்மாவும் அழிந்துவிடுமே! எனவே, உடம் பின் பிரதிபிம்பம் ஆன்மாவாக இருக்க முடியாது"—இவ்வாறு சிந்தித்துக்கொண்டு இந்திரன் மீண்டும் பிரஜாபதியிடம் வந்தான். மேலும் 32 ஆண்டுகள் அவருக்குத் தொண்டு செய்தான்.

"கனவிலே செயற்படுகின்றதே அதுதான் இன்பமும் துன்ப மும் இல்லாத ஆன்மா" என்று போதித்தார் குரு.

திருப்தியுடன் இந்திரன் புறப்பட்டுச் சென்ருன். வழியில் மீண்டும் ஐயம் எழுந்தது.

"கனவிலே செயற்படும்பொழுது அது இன்பம் துன்பம் இரண்டையும் அனுபவிக்கின்றதே. ஆன்மாவிற்கு ஏது இன்ப துன்பங்கள்?" என்று சிந்தித்தான்.

மறுபடியும் பிரஜாபதியிடம் வந்தான். அடுத்து 32 ஆண்டுகள் குருவிற்குப் பணி செய்தான்.

"கனவு எதுவும் இல்லாமல் அயர்ந்து தூங்கும்பொழுது தன்னை மறந்த அமைதியோடு இருக்கின்றதே அதுதான் ஆன்மா" என்று போதனை செய்தார் பிரஜாபதி.

Koviloor Digital Library


இதைக் கேட்டு மன நிறைவோடு சென்ற இந்திரன், மறுபடியும் திரும்பி வந்தான்.

"அயர்ந்து தூங்கும்பொழுது அது சுய உணர்வே இல்லாது அழிந்துபோனது போன்ற நிலையில் அல்லவா இருக்கிறது. இது எப்படி ஆன்மாவாக இருக்க முடியும்?" இந்த ஐயப்பாட்டைக் குருவிடம் கூறினன் இந்திரன்.

"இன்னும் ஐந்து ஆண்டுகள் என்னுடன் இருந்து பணி செய்" என்று கட்டளையிட்ட பிரஜாபதி, இறுதியில் ஆன்மா எது என்பதனை இந்திரனுக்கு விளக்கினர்:

"இந்த உடல் மரணத்தால் அழியக்கூடியது. இந்த உடலுக்குள் இருப்பது அழியாத ஆன்மா. உடலுணர்வோடு கலந்து இருக்கும்பொழுது ஆன்மாவிற்குத் துன்பமும் இன்பமும் உண்டு. ஆனல், உடலுணர்வோடு ஒன்றி நிற்பது அற்றுப்போன நிலையில் ஆன்மாவிற்கு இன்பமும் துன்பமும் அற்றுப் போகின்றன.

எல்லையில்லாததாய் எங்கும் நிறைந்ததாய் நிற்பது எதுவோ அதுவே உன் ஆன்மா.

புலன்களுக்கும் புலனுணர்வுகளுக்கும் மனத்திற்கும் அப்பாற் பட்டு நிற்பது அந்த ஆன்மா.

இந்த உண்மையினை உணர்ந்து அதனைத் தியானிப்பவர்கள் எல்லா நலன்களும் பெறுகின்றனர்."

இவ்வாறு, அழிவில்லாத ஆன்மாவின் தன்மை சாந்தோக்கிய உபநிடதத்தில் கூறப்படுகிறது.

**இன்றைய சிந்தனையாளரும் இதை உணருகின்றனர்**

தம் பூதவுடலையும் புலன்களையும் விட்டுத் தனியாக ஒன்று தம்முள் இருப்பதை இன்றைய சிந்தனையாளர்களும் உணருகின்றனர்.

உதாரணமாக, உலகப் புகழ்பெற்ற எழுத்தாளரும், விஞ்ஞானியும், தத்துவமேதையுமான H. G. வெல்ஸ் (H. G. Wells) என்ற ஆங்கில நாட்டுப் பேரறிஞர் "நான் யார்?" என்ற வினவினை எழுப்பி ஆன்மாபற்றிய தமது அனுபவத்தைக் கூறுகின்றார்:

H. G. வெல்ஸ் என்று அழைக்கப்படும் நபர் வேறு, அந்த நபருக்குள் இருக்கும் ஆன்மா வேறு என்ற அடிப்படையில்,

Koviloor Digital Library



H. G. வெல்ஸைப்பற்றி அவரது ஆன்மாவே கூறுவதாக அவர் எழுதுகிறார்.

"H. G. வெல்ஸை 'நான்' எவ்வாறு உணருகிறேன் என்பதைக் கூற விரும்புகிறேன்.

"என்னையே நான் ஆழ்ந்து நோக்கும்போது ஓர் உணர்வு மிகமிகத் தெளிவாகத் தெரிகின்றது. உண்டு உறங்கி, உலகில் நடமாடிக்கொண்டு திரியும் H. G. வெல்ஸ் என்ற நபரிலிருந்து நான் தனித்து நிற்கிறேன் என்பதே அந்த உணர்வு. ஒரு மிதப்புக் கட்டைக்கும் அதனுடன் இணைக்கப்பட்ட படகுக்கும் உள்ள தொடர்பு போன்றதுதான் எனக்கும் H. G. வெல்ஸுக்கும் உள்ள உறவு.

"H. G. வெல்ஸின் குரலைக் கொண்டே நான் பேச வேண்டியிருக்கிறது; அவன் கண்களைக் கொண்டே நான் காணுகிறேன்; அவனது மூளையைக் கொண்டுதான் நானும் சிந்திக்கிறேன். நான் உலகைக் காண்பதற்கு அவனே சாளரமாக இருக்கிறான். அவனது உடலுக்கு விளையும் ஊறுகள் எனக்கும் வேதனையைக் கொடுக்கின்றன. அவன் இல்லாமல் நான் தனித்துச் சிந்திக்கவோ செயல் ஆற்றவோ இயலாது. ஆயினும், நான் அவனிலிருந்து தனித்து நிற்கிறேன் என்பதை உணருகிறேன்.

"H. G. வெல்ஸிடம் எனக்கு அதிக அக்கறை உண்டு. அவன் மந்தனாகி விடாமல் சோம்பேறியாகப் போகாமல் பார்த்துக் கொள்கிறேன். இதற்காக அவனைத் தட்டிக் கொடுப்பேன். அவனை நல்லவனாக, திறமைசாலியாகப் பார்ப்பதை நான் விரும்புகிறேன்.

"சில வேளைகளில் அவனை விட்டுப் பிரிந்துபோக மாட்டேனோ என்றும் நான் ஏங்குவதுண்டு. அவன் கொண்டுள்ள சில வேட்கைகளும் வெறியுணர்வுகளும் பயங்கரமானவை. நான் உலகத்தோடு அவன் மூலமாகவே உறவுகொள்ள வேண்டி உள்ளது. எங்கள் இளமைப் பருவத்தில் நாங்கள் ஒன்றியே இருந்தோம். வயதாகி முதிர்வடைந்த நிலையில் எங்களைப் பிரிக்கும் இடைவெளி அகன்றுகொண்டே போகிறது. நான் இப்பொழுது பற்றற்ற உணர்வோடு அவனை விட்டுப் பிரிந்தே நிற்கிறேன்.

" 'நான்' 'நான்' என்று உங்களுடன் பேசுகிறேனே, என்னை 'ஆன்மா' என்று அழைக்கின்றனர்.

Koviloor Digital Library



.................. H. G. வெல்ஸின் பூதவுடலும் புலன்களும் அழிந்துவிடுகின்றன. ஆனால், அந்த உடலுக்குள் அடைபட்டிருப்பதாக எண்ணுகிறதே அந்த அறிவொளிக்கு இறப்பு என்பது இல்லை என்றே எண்ணுகிறேன்."

(H. G. Wells in "I believe" —Unwin Books. First Published - 1940)

இவ்வாறு, ஒரு மேலைநாட்டறிஞர் ஆழ்ந்த சிந்தனையுடன் தம்மையே உள்நோக்கிக் காணும்பொழுது, தம் உடலுக்கும் புலன்களுக்கும் அப்பால் ஒன்று இருப்பதையும் அந்த ஒன்று உடற்புலன்களிலிருந்து தனித்து நிற்பதையும் உணருகின்றார்.

இதுதானே நமது அனுபவமும்!

எனது கை, எனது கால், என் கண்கள் என்று நாம் பேசும்பொழுது நம் உடம்பை விட்டு நாம் தனித்து நின்றுதானே பேசுகிறோம். 'எனது மனம்', 'எனது உயிர்' என்றுதானே கூறுகிறோம்.

'என் வீடு' என்று சொல்லும்பொழுது நாம் வேறு, நம் வீடு வேறு என்பது தெளிவு. அதுபோல், "என் உடம்பு, என் உள்ளம், என் உயிர்," என்று நாம் கூறும்பொழுது உடம்பிலிருந்தும் உள்ளத்திலிருந்தும் உயிரிலிருந்தும் தனித்து ஒரு பொருள் இருக்கிறது என்பது தெளிவாகின்றது.

இப் பொருளையே நம் அகத்தில் உறையும் ஆன்மா என்றும், அந்த ஆன்மாவும் எங்கும் நிறைந்து எல்லாமாகி நிற்கும் பிரமமும் ஒன்றுதான் என்றும் ஞானிகள் கூறுகின்றனர்.

* * *

**உன்னை அறிந்துகொள்**

"மனித குலம் ஆய்ந்து காண வேண்டியது மனிதனைப் பற்றித் தான்" என்று ஆங்கில நாட்டுக் கவிஞர் போப் கூறுகின்றார்.

The proper study of mankind is Man—
Pope—Essay on Man

"உன்னை நீ அறிந்து கொள்"

என்றுதான் நம் மெய்ஞ்ஞான நூல்கள் கூறுகின்றன.

Koviloor Digital Library



கிரேக்க நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அப்போலோ (Apollo) என்ற தெய்வத்திற்கு எடுக்கப்பட்ட கோவிலில் பொறிக்கப்பெற்றுள்ள நெறியுரை,

"உன்னை அறிந்துகொள்"

என்பதுதான்.

தன்னை அறிந்துகொண்டதால் தலை சிறந்து விளங்கிய அமெரிக்க நாட்டு அறிஞர் எமர்ஸன் (Emerson) என்பார் தன்னைத் தான் அறிந்துகொண்டதைக் கூறுகின்றார்:

> "மனிதனின் ஆன்மா ஓர் உடலுறுப்பு அல்ல; ஆனால், உடலுறுப்புக்களை எல்லாம் அதுவே இயக்குகிறது.... அது ஒரு திறமை அல்ல, திகழும் ஒளி; அது அறிவோ இச்சையோ அல்ல; அறிவுக்கும் இச்சைக்கும் அதுவே ஆதாரமாக உள்ளது....
>
> மனிதனுக்கு உள்ளே ஒளிரும் ஞானத்தின் மௌனத்தை, அண்டத்தின் அழகை, அனைத்தையும் அளாவி நிற்கும் அழிவில்லாத ஒன்றை ஆன்மா என்கிறோம்".
>
> (Emerson in his essay "The over-soul.")

தன்னையறிந்த தகைமையாளர்கள் அனைத்தினையும் அளாவி நிற்கும் அழிவில்லாத ஒன்றைத் தன்னுள்ளே காண்கின்றனர்.

உயிருக்கும் உயிராக உள்ள அதனைவிட அருமையானது எதுவுமே இல்லை என்பதைக் கண்டனர்.

"அனைத்தையும் விட ஆன்மாவே அருமையுடையது, இனிமையுடையது."

என்கிறது பிரஹதாரண்யக உபநிடதம்.

இந்த அருமையினையும் இனிமையினையும் கண்டுணர்ந்த ஞானி நாவுக்கரசர் கூறுகிறார்:

"என்னைவிட இனியவர்கள் வேறு எவரும் எனக்கு இருக்க முடியாது. ஆனாலும், என்னைக்காட்டிலும் இனியவன் எனக்கு

Koviloor Digital Library



ஒருவன் உண்டு. அவன்தான் என்னுள்ளே புகுந்து உயிருக்குயிராய் நிற்கும் ஈசன்".

"என்னில் யாரும் எமக்கு இனியாரில்லை
என்னிலும் இனியான் ஒருவன் உளன்
என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே."

(தேவாரம் - திருஇன்னம்பர்)

**நானே நீ**

உலகனைத்திலும் உட்பொருளாக நிற்கும் பரம்பொருளே நம் உள்ளத்திலும் உட்பொருளாக நிலவுகிறது; உயிருக்கு உயிராக ஒளிர்கிறது என்பதை உணர்ந்து, நமது மாட்சியை நாம் புரிந்து கொள்ளுவதுதான் நம்மை நாமே அறிந்து கொள்ளுவதாகும்.

அண்டங்களுக்கெல்லாம் அப்பாலாகி, அனைத்துயிர்களுக்கும் உயிராக இலங்கும் இறைமையோடு நம் ஆன்மா இசைந்துள்ளது என்ற ஞானம் பிறந்தவுடன் நம் உள்ளத்திலே பொங்கும் பெருமிதத்தினை என்னென்பது!

"இறைவனே! நானே நீயானாய்! என்னை யாரென்று புரியும்படி செய்து என்னையே எனக்கு அளித்தாய்!" என்று பாடுகின்றனர் அடியார்கள்:

"நங்கள் கோனே! யானே நீயாகி என்னை யளித்தானே"

(திருவாய்மொழி — 10 ப. 7 தி.)

"என்னை ஒரு பொருட்டாகக் கொண்டு உன்னையே என்னுள் வைத்தாய்! இறைவனே!" என்கின்றனர் ஆன்மஞானம் பெற்ற ஆன்றோர்கள்:

"இன்று என்னைப் பொருளாக்கித் தன்னை என்னுள் வைத்தான்"

(திருவாய்மொழி — 10 ப. 8 தி)

"இறைவனே! நீ என்னுடைய உடலையே உனக்கு இடமாகக் கொண்டுள்ளாய். நானே நீ என்ற இந்நிலையில் நான் உன்னிடம் எதனைக் கேட்கப் போகிறேன்?" என்று பாடுகிறார் மாணிக்க வாசகர்:

Koviloor Digital Library



"இறைவனே நீ என்னுடலிடங் கொண்டாய்
இனியுன்னை என்னிரக்கேனே!"

(திருவாசகம்—கோவில் திருப்பதிகம்-5)

உடம்பிலும் உயிரிலும் உள்ளத்திலும் ஒன்ருய்க் கலந்து நிற்கும் இறைவனை,

"ஊனுருடல் புகுந்தான் உயிர்கலந்தான் உளம் பிரியான்"

(திருவாசகம்—உயிருண்ணிப்பத்து - 2)

என்று வருணிக்கின்ருர்.

இவ்வாறு, அண்ட சராசரங்களிலும் இணைந்து நிற்கும் இறைமைதான் தன் உடம்பிலும் உயிரிலும் உள்ளத்திலும் உறைந்து ஒளிர்கின்றது என்ற ஆன்ம ஞானம் பெறுகின்ருன் மனிதன்.

"நம் உடல் ஒரு ரதம். ஐம்புலன்களும் அதில் பூட்டப்பட்ட குதிரைகள். அறிவு சாரதி. மனது கடிவாளம்.

இந்த ரதத்தில் அமர்ந்திருப்பதுதான் ஆன்மா.

இந்த ஆன்மாவுக்குப் பிறப்பும் இல்லை. இறப்பும் இல்லை. இது அழிக்க முடியாதது. என்றும் உள்ளது.

உலகப் பொருள்கள், உயிர்கள் அனைத்திலும் உள்ளொளியாக நிற்பது இந்த ஆன்மாவே ஆகும்.

இது அணுவுக்கும் அணுவானது; அண்டத்திற்கும் அண்டமானது.

நூலறிவாலும் நுண்ணிய தர்க்கங்களாலும் இதை உணர்தல் இயலாது.

உருகி நினைப்பவர் உள்ளத்தில் ஒளியாய் இது உள்ளது.

ஐம்புலன்களும் அடங்கி, மனத்திலே அமைதி நிலவி, அறிவு ஒருமுகப்பட்டு இருக்கும்பொழுது ஆன்ம ஒளி தெளிவாகப் புலப்படுகிறது.

இவ்வாறு கூறுகிறது கடோபநிடதம்.

Koviloor Digital Library



**தன்னைத் தான் அறிய வேண்டும் என்ற தாபம்**

தன்னைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்ற தாபத்தால் மனிதன் ஓர்ந்து ஓர்ந்து உணர்ந்துகொண்ட உண்மைதான் இந்த ஆன்ம ஞானம்.

தன்னைத் தான் அறிய முயலும் மனிதனது இயல்பான தாபத்தைப்பற்றித் தாமஸ் மான் (Thomas Mann) என்ற ஜெர்மானிய அறிஞர் கூறுகின்றார்:

"மனிதன் ஒரு புரியாத புதிராகவே உள்ளான். எங்கிருந்து எப்பொழுது அவன் வந்தான்?

இயற்கையிலிருந்து, விலங்கின இயல்புகளோடு பிறந்தவன் தான் மனிதன்; விலங்கின வகையிலேயே அவன் நடத்தையும் இருக்கிறது. ஆயினும் அவனில்தான் இயற்கை தன்னுணர்வு பெறுகிறது. தன்னைப்பற்றிச் சிந்திக்கும் இயற்கை தன்னையே வியக்கின்றது; தன்னைப்பற்றி வினா எழுப்புகிறது; தன்னைத் தானே மதிப்பிடுகின்றது.

விலங்கின நிலைகளில் தன்னுணர்வு பெறாத இயற்கை, மனித நிலையில்தான் தன்னுணர்வு பெற்று ஏற்றம் பெறுகின்றது. இந் நிலையில் ஆன்மீக நோக்குடன் தன்னைத் தானே காணுகின்றது! தனது ஆன்மீக மலர்ச்சிக்காகவே இயற்கை மனிதனைப் படைத்தது போலும்!"

(The human being is a great mystery. Whence does he come? He springs from nature, animal nature and behaves unmistakably after his kind. But, in him nature becomes conscious of herself. ........... In him he lays herself open to the spiritual; she questions, admires, and judges herself in him. ........... For, it was to the end of her spiritualisation that she brought man forth.

Thomas Mann in "I believe".—
Unwin Books.)

இந்த ஜெர்மானிய அறிஞர் கூறுவது உண்மைதானே!

இயற்கையினையே நாம் இறைமை என்கிறோம். இறைமையில் எழுந்த மனிதன் தன்னைத் தானே அறிய முயலுகிறான். தன்னுள்

Koviloor Digital Library


அருவமாக இலங்கும் இறைமையினை உணருகின்றான். தன் அகத்துள் இலங்கும் இறைமையான ஆன்மாவும் பரத்துள் இலங்கும் இறைமையும் ஒன்றுதான் என்ற ஞானம் பெறுகிறான்.

**சிவனும் ஜீவனும்**

தனது ஜீவனுக்குள் இருக்கும் ஆன்மாவை "ஜீவாத்மா" என்றான்; பரத்துள் இருக்கும் ஆன்மாவினைப் "பரமாத்மா" என்றான். இரண்டும் வேறல்ல என்ற உண்மையினையும் அவன் உணர்ந்தான்.

"சீவ னெனச் சிவ னென்ன வேறில்லை
சீவனார் சிவனாரை அறிகிலர்
சீவனார் சிவனாரை அறிந்தபின்
சீவனார் சிவனாயிட் டிருப்பரே"

(திருமந்திரம்—2017)

"அனைத்திலும் அமைந்து விளங்கும் பிரமந்தான் நம் ஆன்மாவாக ஒளிவீசி நிற்கின்றது. பிரமத்தினைப்பற்றிய இந்த ஞானத்தைப் பெற்றவர்கள் பிரமமாகவே ஆகி விடுகின்றனர்" என்கிறது முண்டக உபநிடதம்.

"பிரமத்தை உணர்ந்தவர்கள் பிரமமாகவே ஆகிவிடுகின்றனர்"

என்ற உண்மையினையே,

"சீவனார் சிவனாரை அறிந்த பின்
சீவனார் சிவனாயிட் டிருப்பரே"

என்கிறார் திருமூலர்.

"நான் உன்னையன்றி இல்லை, இறைவனே! நீயும் என்னையன்றி இல்லை!" என்று கூறுகின்றார் திருமழிசையாழ்வார்:

"நானுன்னை யன்றி யிலேன்
கண்டாய், நாரணனே!
நீயென்னை யன்றி இலை."

(இயற்பா — நான்முகன் திருவந்தாதி-7)

**ஆன்ம ஞான அனுபவம்**

இத்தகைய ஆன்மஞானத்தினை, தன் ஆன்மாவும் இறைமையும் ஒன்றுதான் என்ற உணர்வினைப் பெற்றவுடன் நம் உள்ளம் எவ்வளவு உயர்ந்துவிடுகிறது!

Koviloor Digital Library



"இறைவனே! பூமி, ஆகாயம் எல்லாம் உன்னுள் அடங்கி யிருக்கின்றன. ஆனால், நீ என்னுள் இருக்கிறாய். எனவே, நம்மில் யார் பெரியவர்?" என்று கேள்வி கேட்கிறது ஆன்ம ஞானம் பெற்ற மனம்,

புவியும் இருவிசும்பும் நின்னகத்த, நீயென்
செவியின் வழிபுகுந்து என்னுள்ளாய் - அவிவின்றி
யான்பெரியன் நீபெரியை என்பதனை யாரறிவார்,
ஊன் பருகு நேமியாய் உள்ளு.

(நம்மாழ்வார்: இயற்பா—பெரிய திருவந்தாதி, 75)

"நீ உன்னை எனக்குக் கொடுத்து நீ என்னை எடுத்துக் கொண்டாய். நம்மில் யார் சாமர்த்தியசாலி!" என்று கேட்கிறார் மாணிக்கவாசகர் :

"தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்?"

(திருவாசகம்—கோவில் திருப்பதிகம்-9)

"எற்பரன் என்னையாக்கிக் கொண்டு எனக்கே தன்னைத்தந்த
கற்பகம்............"

(திருவாய்மொழி—2 ப. 7 தி.)

என்கிறார் நம்மாழ்வார்.

இவ்வாறு, எண்ணுதற்கும் எட்டாத இறைமையோடு தோழமை கொண்டாடுகிறது ஆன்ம ஞானம் பெற்ற அடியார்கள் உள்ளம்!

அழிவில்லாத பிரமமே தனது ஆன்மாவாக உள்ளது என்ற ஆன்ம ஞானம் பெற்றவர்களுக்கு மரணம் ஏது?

"இறப்பு நீங்கி இன்பம் வந்தெய்திடும்
..............................................
மறப்ப தின்றி மனத்தினுள் வைக்கவே"

(தேவாரம்—திருச்சேறை)

என்கிறார் நாவுக்கரசர்.

"பொய்மையில் இருந்து என்னை உண்மைக்கு அழைத்துச் செல்:
இருளில் இருந்து ஒளிக்கு அழைத்துச் செல்:
மரணத்தில் இருந்து மரணமிலா நிலைக்கு அழைத்துச் செல்."

என்ற பிரார்த்தனையோடு தொடங்குகிறது.

(பிருகதாரண்யக உபநிடதம்)

Koviloor Digital Library



*ஆன்மஞானந்தான் இவ்வாறு நம்மை பொய்ம்மையில் இருந்து உண்மைக்கும், இருளில் இருந்து ஒளிக்கும், மரணத்தி லிருந்து மரணமிலா நிலேக்கும் உயர்த்துகிறது என்கின்றனர் ஞானிகள்.*

*ஆன்மஞானம் பெற்ற மனிதன் அண்ட சராசரங்களிலும் தன் ஆன்மாவைக் காணுகின்ருன்; தன் ஆன்மாவில் அண்ட சராசரங்க ளனைத்தையும் காண்கின்ருன்!*

*இந்த ஆன்ம அனுபவம் மனிதனை மாமனிதன் ஆக்கி விடுகிறது! ஏன், அவனைப் பிரமத்தின் பிம்பமாகவே மாற்றி விடுகிறது!*

“எல்லாவற்றையும் ஆன்மாவிலும், தன் ஆன்மாவை எல்லா வற்றிலும் காண்பவன் எதையும் வெறுப்பதில்லே.

எல்லாமே ஆன்ம சொரூபம் என்ற ஒருமைப்பாட்டினை அவன் உணருகின்ருன். இதை உணர்ந்தவனுக்கு மயக்கம் இல்லே, மனத்துயரம் இல்லே, அச்சம் இல்லே, அவலம் இல்லே.,

(ஈசோபநிடதம்.)

“உள்ள தெலாம் ஓர் உயிரென்று தேர்ந்தபின்
உள்ளங்கு லேவதுண்டோ?-மனமே!
வெள்ள மெனப் பொழி தண்ணருள் ஆழ்ந்தபின்
வேதனே யுண்டோடா?”

ஆன்ம வொளிக் கடல் மூழ்கித் திளேப்பவர்க்கு
அச்சம் உண்டோடா?-மனமே!
தேன் மடையிங்கு திறந்தது கண்டு
தேக்கித் திரிவ மடா!

(தெளிவு)

*என்று ஆனந்தக் களிப்புடன் பாடுகின்ருர் ஆன்மவொளி கண்ட பாரதியார்.*

**ஆன்ம மூர்த்தி**

*“பிரமம் வேறு, தான் வேறு என்று பிரித்து எண்ணி பிரமத்தை வழிபடுபவன் பிரம்ம ஞானம் பெருதவனேயாவான்”*

“நானே பிரமம் (அஹம்பிரஹ்மாஸ்மி) என்று உணர்பவனே உண்மை ஞானம் பெற்றவன்”

*என்கிறது பிருகதாரண்யக உபநிடதம்.*

Koviloor Digital Library



"எனது ஆவிக்கு உள்ளே அமைந்துள்ள இறைமையினை உணர்ந்து காண்கிறேன்", என்கிறார் ஞானி நம்மாழ்வார்:

"நோக்கி நோக்கி உன்னைக் காண்பான்
யான் எனது ஆவியுள்ளே"

(திருவாய்மொழி—4 ப. 7 தி)

"உள்ளம் ஒன்றிய நிலையில், என் உள்ளத்திலேயே இறைமை ஒளியினைக் காணுகிறது என் உள்ளம்!"

என்று பாடுகின்றார் மெய்யடியார் நாவுக்கரசர்:

"கள்ளத்தைக் கழிய மனம் ஒன்றிநின்று
உள்ளத்தில் ஒளியைக் கண்டது உள்ளமே"

(தேவாரம்—பொது—உள்ளத்திருக்குறுந் தொகை)

இவ்வாறு, இறைவனைத் தன் உள்ளத்தின் ஒளியாக, உயிரின் உயிராக, "ஆன்ம மூர்த்தி" யாகக்கண்டு, மனிதன் தனது அழிவில்லா நிலையினை உணருகிறான்! ஆனந்தக் கடலில் மூழ்குகிறான்!

Koviloor Digital Library

# 15. ஆனந்த மூர்த்தி

"எல்லையற்ற இறைமையே இன்பத்தின் ஊற்றாகும்."

(சாந்தோக்கிய உபநிடதம்)

வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளிடம் ஒரு சிறுவன் வந்தான்.

வந்தவன் அவரை வணங்கி,

"கடவுள் எப்படி இருப்பார்?"
என்று கேட்டான்.

சிறுவன் புரிந்து கொள்ளும்படியாகக் கடவுளைப்பற்றி விளக்க வேண்டும் என்று விரும்பிய இராமலிங்க அடிகள்,

"தம்பி! உனக்குப் பிடித்தமான உணவு எது?"
என்று கேட்டார்.

சிறிதும் தயக்கமில்லாமல்,

"எனக்கு மிகவும் விருப்பமானது சர்க்கரைப் பொங்கல்" என்று கூறினான் சிறுவன்.

"அப்படியா?" என்று கேட்ட அடிகள் கடவுளைப் பற்றி அவனுக்குக் கூறத் தொடங்கினார்.

"வாழை, பலா, மா இம்மூன்று பழங்களையும் ஒன்றாகக் குழைத்து, அதில் சர்க்கரையும் கற்கண்டுப் பொடியும் கலந்து, தேனையும் அதில் ஊற்றி, பசும்பால் தேங்காய்ப்பால் இரண்டையும் அதனோடு சேர்த்து, சிறுபருப்பை அதில் விரவி, நெய்விட்டு வேக வைத்து இளஞ்சூட்டில் அடுப்பிலிருந்து இறக்கி, அதை உண்டால் எப்படி இருக்கும், தம்பி?"
என்று கேட்டார் வள்ளலார்.

Koviloor Digital Library



"நீங்கள் அதைச் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே என் வாயில் சுவைநீர் ஊறிவிட்டது. இவ்வளவையும் சேர்த்து யார் எனக்குத் தரப் போகிறுர்கள்? நீங்கள் சொன்னபடி தயாரித்த அமுதமான பொங்கல் கிடைத்தால் அதைச் சாப்பிட்டுக் கொண்டே இருப்பேன்.

தேன், பால், நெய், முக்கனிகள், கற்கண்டு, பருப்பு இவை யெல்லாம் சேர்ந்த சர்க்கரைப் பொங்கல் எவ்வளவு சுவையாக இருக்கும்!"

என்று கூறிக்கொண்டே அந்தப் பொங்கல் அமுதின் நினைவிலேயே ஆழ்ந்து விடடான் சிறுவன்.

"இந்தப் பொங்கலமுதின் சுவையைக் காட்டிலும் இனிப்பாக இருக்கும் தம்பி, நாம் தொழுது நிற்கும் கடவுள்!" என்ருர் அடிகள்.

"இவ்வளவு இனிப்பாகவா, இவ்வளவு சுவையாகவா கடவுள் இருக்கிருர்!" என்று ஆச்சரியத்தில் மூழ்கி விட்டான் சிறுவன்.

சிறுவனுக்கு ஏற்பட்ட ஆச்சரியம் இருக்கட்டும். நமக்கே இது வியப்பாகத்தானே இருக்கிறது!

"தேனும் பாலும் கனியுமாகவா கடவுள் இனிக்கின்ருர்!' என்றுதான் நாமும் வியப்பிலே ஆழ்ந்து போகிருேம்!

"ஆம். இறைவனைப்பற்றி எண்ணினுல், அந்த எண்ணம் இத்தகைய அமுதின் சுவையைவிட இனிப்பானது, இனிமை யானது", என்கிருர் வள்ளலார்.

"தனித்தனி முக்கனி பிழிந்து வடித்தொன்ருய்க் கூட்டிச்
சர்க்கரையும் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்த நறுந்தேன் பெய்து பசும்பாலும் தெங்கின்
தனிப்பாலும் சேர்த்து ஒரு தீம்பருப்படியும் விரவி
இனித்த நறு நெய்யளைந்தே இளஞ்சூட்டில் இறக்கி
எடுத்த சுவைக் கட்டியினும் இனித்திடும் தெள்ளமுதே
அனித்தமறத் திருப்பொதுவில் விளங்கு நடத்தரசே
அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கல்
அணிந்தருளே!"

(திருவருட்பா—அருள்விளக்கமாலே-3)

Koviloor Digital Library



**தேன், பால், தெவிட்டாத அமுது**

இத்தகைய தெள்ளமுதின் சுவை போன்றது இறைமை என்பதை இராமலிங்க அடிகள் மட்டும் கூறவில்லை. ஞானிகள் அனைவருமே இவ்வாறுதான் கூறுகின்றனர்.

"தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகித் தித்தித்து என்
ஊனில் உயிரில் உணர்வில் நின்ற ஒன்றை உணர்ந்தேனே."

(திருவாய்மொழி 8ப. 8 தி.)

என்று பாடுகின்றார் நம்மாழ்வார்.

"தேனும் இன்னமுதும் ஆனார் திருச்செம்பொன் பள்ளியாரே."

(தேவாரம் திருச்செம்பொன் பள்ளி)

என்று தொழுகின்றார் நாவுக்கரசர்.

"தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்"

(திருவாசகம்-திவருவேசறவு)

என்று ஏத்துகின்றார் மாணிக்கவாசகர்.

"கன்னலுடன் முக்கனியும் கற்கண்டும் சீனியுமாய்
மன்னும் இன்ப ஆரமுதை வாய்மடுப்பது எந்நாளோ?"

(எந்நாட்கண்ணி)

என்று ஏக்கமுடன் இறைஞ்சுகிறார் தாயுமானவர்.

இவ்வாறு, இறைவனை இதயத்தில் நிறுத்தி வழிபடும் அடியார்கள் அனைவருமே, இறைமையினைத் தேனென்றும், பாலென்றும், தெவிட்டாத அமுதென்றும் பாடுகின்றனர்.

இவர்கள் இவ்வாறு கூறுவது பொய்யுரையாகவோ புகழுரையாகவோ இருப்பதற்கில்லை.

நினைப்பரிய, அறிவரிய, சொல்லரிய மூர்த்தியான இறைமையை எவ்வாறு அனுபவித்து அதில் பெற்ற சுவையினை அடியார்கள் இவ்வாறு கூறுகின்றனர்!

**இறைமையை அனுபவிப்பது எப்படி?**

இறைமைக்கு எத்தனையோ பெயர்களை இட்டுள்ளார்கள் அந்தப் பெயர்களில் ஒன்றை எழுதிக்கொண்டோ, சொல்லிக்

Koviloor Digital Library


கொண்டோ இருந்தால் போதுமா? அது இறைமையினை அனுபவிப்பதாகிவிடுமா?

இறைமையோ உள்ளத்து உணர்வாகவே உள்ளது. அந்த உணர்வில் இத்தகைய இன்பம் எப்பொழுது உதிக்கின்றது?

இதற்கும் ஞானிகள் விடை கூறியுள்ளனர்.

'அன்னை' என்ற சொல்லை நாம் கேட்கிறோம். உடனே உள்ளத்தை நெகிழ்விக்கும் ஓர் அன்புணர்வு நம் மனத்திலே எழுகின்றது. எதனால்? அந்த அன்புணர்வுக்குக் காரணம் 'அன்னை' என்ற மூன்றெழுத்துச் சொல்லா? இல்லை. நம்மைப் பெற்றெடுத்து சீராட்டிப் பாராட்டி பாசத்துடன் வளர்த்த பண்பினை நம் மனம் நினைக்கின்றது, 'அன்னை' என்ற சொல்லைக் கேட்டவுடன். இவ்வாறு, 'அன்னை' என்ற சொல்லுடன் அன்னையின் பண்புகளும் நம் நினைவில் வருவதால்தான், அன்னை என்றதும் நம் அகத்தில் அன்புணர்வு எழுகின்றது.

நமது நண்பர் முருகன் என்று ஒருவர் இருக்கிறார். அவர் இளமைப் பருவத்திலிருந்து நம்முடன் ஒன்றாகப் படித்தவர். நம் மீது மாறாத அன்புடையவர். நமக்கு உற்றுழி உதவியவர். அவரைப் பார்த்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. அவரை நினைக்கும் பொழுது நம் மனத்திலே ஒரு நெகிழ்வு ஏற்படுகிறது. ஏன்? அவர் நம் மீது கொண்ட நட்புணர்வை நாம் நினைக்கிறோம். அவர் நமக்குச் செய்த உதவிகளையும் நம்மிடம் கொண்ட உள்ளன்பினையும் நினைக்கிறோம். நம் மனம் நெகிழ்ந்து விடுகின்றது.

எனவே, 'அன்னை' என்ற சொல்லில் ஏதுமில்லை. 'முருகன்' என்ற பெயரில் எதுவுமில்லை. ஆனால், அவை நம் உள்ளத்தில் எழுப்பும் நினைவுகள்தாம் அன்புணர்வையும் நட்புணர்வையும் தோற்றுவிக்கின்றன.

இதுபோன்றே, இறைமை என்ற சொல்லில் ஏதுமில்லை. 'இறைவன்' என்றோ 'ஈசன்' என்றோ 'தெய்வம்' என்றோ 'தேவன்' என்றோ கூறிவிடுவதால் மட்டும் பயனில்லை.

'இறைமை' என்பதை எண்ணும்போது, அதுபற்றி நாம் என்னென்ன அறிந்து கொண்டோமோ அவையனைத்தும் நம் உள்ளத்தில் எழவேண்டும். இறைமையற்றி நினைப்பது என்றால், அதன் பண்புகள் பற்றி நாம் நினைப்பதேயாகும். இறைமையின் தன்மையினை உள்ளத்தில் உணர்வதே இறைமை உணர்வாகிறது, இறைமையினை அனுபவிப்பதாகிறது.

Koviloor Digital Library



இறைமையின் தலைசிறந்த தன்மை என்ன?

இறைமைதான் எல்லாமாகி நிற்கின்றது, இறைமையன்றி வேறெதுவும் இல்லை என்பதுதானே அத்தன்மை?

ஆதலால்தான்,

"நின்ற நின்தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிது மற்றின்மை"

(திருவாசகம் — கோவில் திருப்பதிகம்-7)

என்கிறார் மாணிக்கவாசகர்.

"நீயன்றி வேறெதுவும் இல்லையென்றால் நானும் நீதானே" என்ற உண்மை உதிக்கின்றது நம் உள்ளத்தில்.

இந்த உண்மையின் உதயமே நம் இதயத்தை இறைமையோடு ஒன்றச் செய்கிறது.

"நம் அகத்தில் ஒளிரும் ஆன்ம ஒளியினைப். பரத்தில் நிலவும் பிரமத்தின் ஒளியோடு ஒன்றாக்க வேண்டும்" - என்கிறது ஸ்வேதாஸ்வதர உபநிடதம்.

இவ்வாறு ஒன்றாக்குவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

அவை இரண்டும் ஒன்று என நாம் உணர்ந்தாலே போதும். அந்த உணர்விலேயே அவை ஒன்றாகி விடுகின்றன!

இந்த உணர்வு பெறுவதற்கென நாம் காட்டுக்குச் செல்ல வேண்டியதில்லை; கடுந்தவம் புரிய வேண்டியது இல்லை. காவித் துணியும் அணிய வேண்டாம், கற்றைச் சடையும் வளர்க்க வேண்டாம்.

"காவித் துணி வேண்டா
கற்றைச் சடை வேண்டா.
பாவித்தல் போதும்
பரமநிலை எய்துதற்கே."

(பரசிவவெள்ளம்

என்கிறார் ஞானக்கவி பாரதியார்.

எவ்வாறு பாவித்தல் வேண்டும்?

Koviloor Digital Library



"எண்ணமிட்டாலே போதும்"

உள்ளும் புறமுமாய் உள்ள பொருள்களில் எல்லாம் உறைகின்ற வெள்ளத்தைத்தான் இறைமை என்கிறோம்:

"உள்ளும் புறமுமாய்
உள்ளதெலாந் தானுகும்
வெள்ளமொன்று உண்டாம் அதனைத்
தெய்வம் என்பார் வேதியரே"

எங்கும் நிறைந்து நிற்கும் ஈசன் என்ற இந்த வெள்ளம் என் உள்ளத்திலும் பொங்கி நிற்கிறது என்று எண்ணினல் போதும்:

"எங்கும் நிறைந்திருந்த
ஈச வெள்ளம் என்னகத்தே
பொங்குகின்றது என்றெண்ணிப்
போற்றி நின்ருல் போதுமடா."

"யாதுமாம் ஈச வெள்ளம்
என்னுள் நிரம்பியதென்று
ஓதுவதே போதும் அதை
உள்ளுவதே போதுமடா."

இவ்வாறு உள்ளம் ஒன்றி எண்ணமிட்டாலே போதும், இன்பமான அமுத வெள்ளம் நம் உள்ளத்தில் ததும்பும், என்கிருர் பாரதியார்:

எண்ணமிட்டாலே போதும்
எண்ணுவதே இவ்வின்பத்
தண்ணமுதை உள்ளே
ததும்பப் புரியுமடா!

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரைவிடச் சிறந்த ஞானக் கவிஞரை நாம் காண்பது அரிது. அவர் கூறுவதை நாம் ஞான வாக்காக எடுத்துக் கொள்ளலாம். அவர் போதிக்கின்ருர்:

"சாத்திரங்கள் வேண்டா
சதுமறைகள் ஏதுமில்லை;
தோத்திரங்கள் இல்லை உளந்
தொட்டு நின்ருல் போதுமடா"

Koviloor Digital Library



"எங்கும் நிறைந்து எல்லாமாகி நிற்கும் பரம்பொருள் என் உள்ளத்திலும் உறைகின்றது என்று உணர்ந்து நினைத்தால் போதும், நம் உள்ளத்தில் உவகை பொங்குகிறது!" என்கிறார்.

*பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறைகின்ற பரிபூரணமான இறைமை என் இதயத்திலும் இசைந்துள்ளது என்று எண்ணினால் போதும் இன்ப ஊற்றுப் பெருகுகின்றது நம் இதயத்தில்!*

*இவ்வாறு, இறைமையினை எண்ணும்போதெல்லாம் இதயத்தில் இன்பம் ஊறுகிறதென்பதை எடுத்தெடுத்துக் கூறுகின்றனர் ஞானிகள்:*

"கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று"

(திருவாசகம்-சிவபுராணம்)

"ஆராவமுதாய் அடியேன் ஆவி அகமே தித்திப்பாய்"

(திருவாய்மொழி-5 ப. 8 தி.)

"எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதே! இமையோரதிபதியே"

(திருவாய்மொழி –6ப.10தி)

"கருதுவார் இதயக் கமலத்து ஊறும் தேனவன்காண்"

(நாவுக்கரசர்—தேவாரம் – திருச்சிவபுரம்)

*இறையுணர்வு இதயத்தில் எழுப்பும் இன்பத்தைப் பற்றி எல்லா அடியார்களுமே இவ்வாறு வியந்து வியந்து பாடியுள்ளனர்.*

*இறைமையின் இயல்புகளை உள்ளத்தில் உள்ளும்பொழுதெல்லாம் இன்பவுணர்வு எழுகின்றது. எப்பொழுதெல்லாம் நினைக்கிறோமோ அப்பொழுதெல்லாம் இன்பம் தோன்றுகிறது என்கிறார் நம்மாழ்வார்:*

"உருவுகரந்து உள்ளுந்தோறும் தித்திப்பான்"

(திருவாய்மொழி–8 ப. 6 தி.)

*சிறிது நினைத்தாலும் போதும், மனத்திலே அமுதமாக இனிக்கின்றது இறைமை என்கிறார் மாணிக்கவாசகர்:*

"சட்டோ நினைக்க மனத்தமுதாம் சங்கரனை."

(திருவாசகம்—திருக்கோத்தும்பி—7)

Koviloor Digital Library



"தேனை நாடும் வண்டே! நீ மலர்களைத் தேடிப் பறக்கின்றாய். பூக்களில் உள்ள தேன் தினையளவுதான். ஆனால், இறைவன் என்ற மலரில் இருந்து ஆனந்தத்தேன் அருவிபோல் சொரிகின்றது! அந்த இன்பத்தை அனுபவிக்கும் உடம்பிலுள்ள எலும்புகள் கூட நெகிழ்ந்து விடுகின்றன! இறைவனைப் பற்றி நினைத்தாலும் போதும், அந்த நினைவூட்டும் பொருள்களைக் கண்டாலும் போதும். அவை பற்றிப் பேசினாலும் போதும், இத்தகைய ஈடில்லாத இன்பம் பெருகுகின்றது. ஆதலால் வண்டே! நீ இறைவன் என்ற மலரிடம் சென்று ரீங்காரம் செய்வாயாக!"

இவ்வாறு, மலர் நாடும் வண்டுகளுக்குக் கூறி நமக்கு ஞானம் போதிக்கின்றார் மாணிக்கவாசகர்:

"தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்து எலும்பு உள்நெக ஆனந்தத்தேன் சொரியும்
குனிப்புடையானுக்கே சென்றூ தாய் கோத்தும்பீ
(திருவாசகம்–திருக்கோத்தும்பி 3)

"இறைவனே! உன்னை நினைக்கும்பொழுதெல்லாம் சொல்லும் பொழுதெல்லாம் நெஞ்சம் உருகிவிடுகின்றது! புகழைப் பாடினால் உயிர் சிலிர்க்கின்றது" என்கிறார் நம்மாழ்வார்.

"நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சு இடிந்துகும்,
வினைகொள் சீர்பாடிலும் வேமெனது ஆருயிர்"
(திருவாய்மொழி–9 ப. 6 தி.)

"செவி இன்பம், சுவை இன்பம், காட்சி இன்பம், இவற்றுக்கெல்லாம் ஆதாரமாக உள்ளது ஆன்மா.

ஆனால் ஆன்மாவோ இன்பமே வடிவானது. அதுவே பேரின்பம். அந்த இன்பம் சொல்ல முடியாதது, சொற்களில் அடங்காதது."—இவ்வாறு உபநிடதங்கள் கூறுகின்றன.

நாம் இசையினைக் கேட்டு இன்புறுவது செவிகளின் வழியாக. எனவே அதைச் செவியின்பம் என்கிறோம். உணவைச் சுவைத்து இன்புறுவதைச் சுவையின்பம் என்கிறோம். கண்ணுக்கினிய காட்சிகள் காட்சியின்பம். ஆனால், இறைமையினை நினைக்கும் பொழுது நாம் பெறும் இன்பம் புலன்கள் வழியாகப் பெறுவதன்று. ஆதலால் அதைச் செவியின்பம், சுவையின்பம் என்று கூறுவதற்கில்லை.

Koviloor Digital Library



எனவே, இறைமை இன்பத்தை,

"குணங்கள் தாமில்லா இன்பமே"

(திருவாசகம்—கோயில் திருப்பதிகம்-4)

என்கிறார் மாணிக்கவாசகர்.

ஆதலால்தான் இந்த இன்பத்தினை வருணித்தல் இயலாதது, சொல்லில் அடங்காதது என்கின்றனர்.

### இன்றே இப்பொழுதே நாமும் அதை அனுபவிக்கலாம்

இவ்வளவு பெரியவர்களும் ஞான நூல்களும் இறைமை யுணர்வு இன்பமானது, அளவு கடந்த ஆனந்தத்தைக் கொடுப்பது என்று உறுதியாகச் சொல்லுவது உண்மையாகத் தானே இருக்க வேண்டும்.

மேலும், இது உண்மைதான் என்பதை நாம் நம் அனுபவத்தின் வாயிலாகக் கண்டு கொள்ளலாம். ஞானக்கவி பாரதியார் கூறியுள்ளபடி இந்த ஆனந்த அனுபவத்தைப் பெறுவதற்கென்று காட்டிற்குச் செல்லவோ கடுந்தவம் புரியவோ வேண்டியதில்லை நாம் செய்ய வேண்டியதெல்லாம் மிகவும் எளிதான காரியம்!

"யாண்டு மிந்த இன்ப வெள்ளம்
என்று நின்னுள் வீழ்வதற்கே
வேணடும் உபாயம்
மிகவும் எளிதாகுமடா!"

என்றல்லவா பாரதியார் கூறுகின்றார்.

அந்த உபாயத்தை மேலே கண்டோம்.

யாதுமாம் ஈசவெள்ளம்
என்னுள் நிரம்பியதென்று
ஓதுவதே போதும் அதை
உள்ளுவதே போதுமடா!

நாமும் இந்த எளிய உபாயத்தைச் செய்து பார்க்கலாமே!

### இறைமை இன்பம் எய்த எளிதான உபாயம்

ஐந்து நிமிடங்கள் ஓய்வு கிடைத்தால் போதும். தனியாக ஓரிடத்தில் உட்கார்ந்து கொள்வோம்.

"யாதுமாம் ஈசவெள்ளம்" என்பதைப் பற்றி எண்ணிப் பார்ப்போம்.

Koviloor Digital Library



"நாம் வாழும் இந்தப் பூமி. இதில் எவ்வளவு பெரிய உயர்ந்த மலைகள்! எவ்வளவு பரந்து விரிந்த ஆழமான கடல்கள்! ஆறுகள்தான் எத்தனை! எத்தனை வகையான உயிரினங்கள்! எத்தனை கோடி மக்கள்! இவையனைத்திலும் உள்ளது இறைமை! இறைமைதான் இவையனைத்துமாக உள்ளது.

"இவ்வளவு பெரிய பூமிக் கோளம் பரவெளியிலே சிறிய பந்து போல அல்லவா சுழன்று கொண்டிருக்கிறது. பந்து அளவுகூட இல்லையே! பரவெளியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இந்தப் பூமி உருண்டை ஓர் அணுவைப் போன்றதுதானே! அணுவுக்கும் அணுவாகத்தானே இருக்கிறது!

"சூரியன், சந்திரன், இன்னும் பரவெளியில் ஒளிரும் எத்தனை எத்தனையோ கோடி நட்சத்திரங்கள்! அவற்றிடையுள்ள வெளி தான் எத்தனை எத்தனை கோடி மைல்கள் தூரம்! இவற்றையெல் லாம் தங்கள் கதியிலே சுழன்று நிற்குமாறு செய்கின்றதே ஓர் ஆற்றல், அதற்கு அளவேது!

பரவெளியின் முடிவு எது? அதன் தொடக்கம் எது? எல்லை யில்லாத இப்பரவெளியில் படர்ந்து ஒளிரும் மகா சக்தியான ஈசவெள்ளம்! யாதுமாய், எங்குமாய், எல்லையற்றதாய் இலங்கும் ஈசவெள்ளம்!

யாதுமாக எங்குமாக இலங்கும் இந்த இறைமை, என் உள்ளத் திலும் இருக்கிறதல்லவா? ஆம். இருந்துதான் ஆகவேண்டும். எல்லாமாக நிற்கும் இறைமையிலிருந்து நான் மட்டும் தனித்தா இருக்க முடியும்? எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்துள்ள இறைமை என்னுள்ளும் இலங்குகிறது.

**"யாதுமாம் ஈச வெள்ளம் என்னுள்ளும் நிரம்பியிருக்கிறது."**

"அண்டங்களை எல்லாம் படைத்து ஆட்டும் அந்த இணையற்ற சக்தியோடு நானும் இணைந்துள்ளேன். எல்லையில்லாத, என்று முள்ள பரம்பொருளின் பகுதியாகவே நானும் இருக்கிறேன்! எண்ணத்திற்கும் எட்டாத இறைமையோடு என் இதயம் இசைந்துள்ளது!

"இறைமையே! நீயும் நானும் வேறல்ல!

நீயும் நானும் ஒன்றுதான்!

Koviloor Digital Library



"ஒன்ருகவே உள்ளபொழுது, நீ நான் என்று இரண்டாக எண்ணுதற்கு இடமேது!

"நீயென்றும் நானென்றும் இரண்டாக எண்ணுவதற்கு இல்லை.

"எல்லாம் வல்ல இறைமையோடு இசைந்துள்ளேன்.

"எங்கும் நிறைந்த ஈசனேடு இணைந்துள்ளேன்."

இவ்வாறு ஒருசில விநாடிகள் உள்ளம் ஒன்றி நினைத்தால் போதும்.

நமக்கு ஏற்படும் இன்ப உணர்வினை என்னென்பது?

உடல் சிலிர்க்கின்றது! உள்ளம் பொங்குகின்றது! இதயத்தில் இன்பவுணர்வு ஊற்றெடுத்துப் பெருகுகின்றது! மகிழ்ச்சிக் கண்ணீர் மல்குகிறது!

இந்த ஆனந்த அனுபவம் நமக்கு ஏற்படுகிறதா என்பதை நாம் ஒவ்வொருவரும் இன்றே காணலாம், இப்பொழுதே பார்க்கலாம்!

இவ்வாறு, உணர்ந்து பழகப்பழக, நாளடைவில் "இறைமை" என்று எண்ணிவிட்டாலே போதும். எண்ணிய மறுகணமே உள்ளத்தில் உவகை பொங்குவதை, இதயத்தில் இன்பவுணர்வு பெருகுவதை நாம் உணரலாம். ஆதலால்தான்,

"சட்டோ நினைக்க மனத்தமுதாம் சங்கரன்"

என்கிருர் மாணிக்கவாசகர்.

"கணமதேனு நின் காரணந்தன்னையே கருத்தில்
உணரு மாதவர்க்கு ஆனந்தம் உதவினை........"

(எனக்கெனச் செயல்)

என்று பாடுகின்ருர் தாயுமானவர்.

நாம் விரும்பிய போதெல்லாம் இந்த உணர்வினை உள்ளத்திலே இசைத்தால் உள்ளத்தில் அமுத ஊற்றுப் பெருகுகிறது!

வெள்ளமடா தம்பி
விரும்பிய போதெய்தி நினது

Koviloor Digital Library



உள்ளமிசைத் தால்அமுத
ஊற்ருய்ப் பொழியுமடா!

(பாரதியார்)

இறைவுணர்வால் எய்தும் இன்பத்தைப் பெறும் வழியினை இதைவிட எளிமையாகவும், தெளிவாகவும், உறுதியாகவும், உண்மையாகவும் எப்படிக் கூறமுடியும்?

நம் முன்னோர்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக ஓர்ந்து ஓர்ந்து உணர்ந்து உணர்ந்து கண்ட ஒப்பற்ற உண்மையினை, இணையற்ற ஞானத்தினை, இவ்வாறு நமக்கு எளிமையாகப் போதிக்கின்றனர்!

தேனென்றும், பாலென்றும், தெவிட்டாத அமுதென்றும் இறைவனைப் பாடி இறைமை இன்பத்தை நமக்குப் புகட்டுகின்றனர் அடியார்கள்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் தந்தை இணையடி நிழலே"

(தேவாரம்—பொது—தனித்திருக்குறுந்தொகை)

என்று இறைமை இன்பத்தைக் காட்டுகிருர் நாவுக்கரசர்.

**ஈடில்லாத இன்பம்**

'இசை' என்ருல் இனிமை, இன்பம் என்ற பொருள் உண்டு. இசைதலில் எழுவதுதான் இன்பம்.

ஒலிகள் இசையும்போது செவிக்கு இனிமையான கீதம் பிறக்கிறது. வண்ணங்கள் இசையும்போது கண்ணுக்கு இனிமையான ஓவியம் மலர்கிறது. நமது அகத்தில் உறையும் இதய ஒளி புறத்தில் நிறையும் பர ஒளி இரண்டும் ஒன்றி இசையும்பொழுது எல்லையில்லா இன்பம் பெருகுகிறது.

இவ்வாறு ஒன்றி ஒன்ருகும் நிலையில் உதிக்கும் இன்பத்திற்கு ஈடுமில்லை, இணையுல்லை! ஐம்புலன்களின் இன்பங்கள் அனைத்தும் அற்பமாகி விடுகின்றன இந்த இறைமை இன்பத்திற்கு முன்னல். இதை உணர்த்தும் வகையில், ஓர் இன்பக் காட்சியினைக் காட்டுகிருர் இராமலிங்க அடிகள்:

Koviloor Digital Library



கண்ணுக்கினிய குளிர் நிலவு காய்கின்றது! முகர்வதற்கினிய மணம் சோலையிலிருந்து பரவி வருகிறது! உடலுக்கு இனிய தென்றல் ஊருகின்றது! செவிக்கினிய இன்னிசை கேட்கிறது! இவற்றை எல்லாம் அனுபவித்துக்கொண்டு பளிங்கு நிலா முற்றத்தில் நாம் அமர்ந்திருக்கிறோம். வாய்க்கு இனிமையான அமுதத்தினை ஊட்டுகின்றனர், அழகே உருவான பெண்கள்!

இவ்வாறு ஐம்புலன்கள் வழிவரும் இன்பங்களனைத்தையும் ஒன்றாக ஒரே நேரத்தில் அனுபவிக்கிறோம்!

இதைவிட நிறைவான இன்பம் வேறென்ன இருக்க முடியும்?

இத்தகைய இன்பங்கூட பிற்பட்டு ஓடி விடுகின்றது இறைமையுணர்வால் எழும் ஈடில்லாத இன்பத்தின் முன்னால் என்கிறார் இராமலிங்க அடிகள்:

தண்ணமுத மதிதளிர்ந்த கிரணம் வீசத்
தடம்பொழிற் பூமணம் வீசத் தென்றல்வீச
எண்ணமுதப் பளிங்கிகுலா முற்றத்தே இன்
இசைவீசத் தண்பனிநீர் எடுத்து வீசப்
பெண்ணமுதம் அனையவர் விண்ணமுதம் ஊட்டப்
பெறுகின்ற சுகமனைத்தும் பிற்பட்டோடக்
கண்ணமுதத்து உடம்புயிர் மற்றனைத்தும் இன்பங்
கலந்து கொளத்தரும் கருணைக் கடவுள் தேவே!

(திருவருட்பா–மகாதேவமாலை 38)

**சிற்றின்பமும் பேரின்பமும்**

இறைமை உணர்வால் எழும் இன்பத்தோடு ஒப்பிடும் பொழுது புலனுணர்வான இன்பங்களனைத்தும், புன்மையாகி விடுகின்றன என்பது மிகைபடக் கூறுவதல்ல.

சிறிது சிந்தித்தோமானால் இதன் உண்மை நன்கு விளங்கும்

இறைமை உணர்வால் நாம் பெறும் இன்பத்திற்கும் பிறவகை இன்பங்களுக்கும் அடிப்படையான வேறுபாடு உண்டு.

மெய் வாய் கண் மூக்கு செவி என்ற ஐம்புலன்களின் வழியாகவே பலவகை இன்பங்களையும் நாம் அனுபவிக்கின்றோம். காட்சிப்பொருள்களைக் கண்டு, உணவுப் பொருள்களைச் சுவைத்து, இன்னிசைக் கருவிகளைக் கேட்டு, மணந்தரும் பொருள்களை முகர்ந்து புலன்கள் இன்பம் பெறுகின்றன.

Koviloor Digital Library


நம் ஐம்புலன்களும் உடலுடன் ஒட்டியவை. எனவே, உடலோடு அவையும் அழியக் கூடியவை. அவ்வாறே, காட்சிப் பொருள்கள், உணவுப் பொருள்கள் போன்ற புறப்பொருள்களும் அழியக் கூடியவை. வாசமலர்கள் வாடிப்போகின்றன, இசைக் கருவிகள் இற்று விடுகின்றன, தேனும் பாலும் திரிந்து போகின்றன.

இவ்வாறு, அழியக் கூடிய ஐம்புலன்கள் அழியக் கூடிய பருப்பொருள்களில் இருந்து பெறும் இன்பமே புலனுணர்வு இன்பமாக உள்ளது.

நம் ஐம்புலன்களுக்கும் ஆதாரமாக உள்ளது ஆன்மா. அது போல், பருப்பொருள்கள் அனைத்திற்கும் அவற்றின் இயல்பை அளித்து ஆதாரமாக இருப்பது இறைமை. மலரின் மணமாக, தேனின் சுவையாக, வீணையின் இசையாக இலங்குவது இறைமையே ஆகும். ஐம்புலன்களுக்கும் ஆதாரமான ஆன்மா, பருப்பொருள்களுக்கெல்லாம் ஆதாரமாக உள்ள இறைமையினை நினைத்து இன்பம் பெறுகிறது.

இறைமை அழிவில்லாதது; அதுபோல் ஆன்மாவும் என்றுமுள்ளது.

இவ்வாறு, அழிவில்லாத ஆன்மா அழிவில்லாத இறைமையோடு இசைந்து பெறும் இன்பமேஇறையுணர்வு இன்பமாகிறது.

ஐம்புலன்களின் சக்தி ஓர் அளவிற்கு உட்பட்டதுதான். நமது கண்பார்வை குறிப்பிட்ட தூரத்திற்குத்தான் தெரிகின்றது. நம் காதுகளும் ஓரளவு வரையுள்ள ஒலிகளைத்தான் கேட்கிறது. மூக்கின் முகரும் சக்திக்கும் அளவுண்டு. இவ்வாறு, புலன்களின் ஆற்றல் ஓர் அளவுக்கு உட்பட்டதேயாகும்.

பருப்பொருள்களின் பண்புகளும் அளவுக்கு உட்பட்டே நிற்கின்றன. மலரின் மணமோ, உணவின் சுவையோ அளவற்றதாக இருப்பதில்லை.

இவ்வாறு, ஐம்புலன்களின் ஆற்றலும் அளவுடையது, பருப்பொருள்களின் குணங்களும் அளவுடையன. எனவே, புலனுணர்வு இன்பம் என்பது அளவுடைய ஐம்புலன்கள் அளவுடைய பருப்பொருள்களில் இருந்து பெறுவதாகும்.

இறைமையின் சக்திக்கு அளவே இல்லை; இறைமையின் பிரதிபிம்பமாகவே விளங்கும் ஆன்மாவின் ஆற்றலுக்கும் அளவு இல்லை.

Koviloor Digital Library


ஆதலால், இறையுணர்வு இன்பம் என்பது அளவில்லாத ஆன்மா அளவிலடங்காத இறைமையிலிருந்து எய்தும் அளவில்லாத இன்ப மாகும்.

"எனவே, புலனுணர்வு இன்பத்தைப் பொறுத்தவரையில், அந்த இன்பத்தினைத் தரும் பருப்பொருள்களும் இன் பத்தை அனுபவிக்கும் புலன்களும் அளவுடையன, அழியக் கூடியன. ஆனல், இறையுணர்வு இன்பத்தில், அந்த இன் பத்தினைத் தரும் இறைமை அதனைப் பெறும் ஆன்மா இரண்டுமே அளவில்லாதவை, அழிவில்லாதவை."

அளவுடைய அழியக்கூடிய பொருள்களின் இசைவால் எழுவது புலனுணர்வு இன்பம். அளவற்ற அழிவற்ற பொருள் களின் இசைவால் எழுவது இறையுணர்வு இன்பம். இவை இரண் டிற்கும் மிகுந்த வேறுபாடு இருக்கத்தானே வேண்டும்?

"புலனுணர்வு இன்பம் அளவுடையதாக அழிவுடைய தாக இருக்கிறது; இறையுணர்வு இன்பம் அளவற்றதாக அழிவற்றதாக உள்ளது.

எனவே, ஒன்றைச் சிற்றின்பம் என்கிறோம், மற்றொன் றைப் பேரின்பம் என்கிறோம்."

**"கண்டு கேட்டு உற்று மோந்து உண்டு உழலும் ஐங்கருவி**
**கண்ட இன்பம் தெரிவரிய அளவிலாச் சிற்றின்பம்"**

**(திருவாய்மொழி—4ப. 9தி.)**

என்கிறார் நம்மாழ்வார்.

புலனின்பப் பொருளான தேனும் திகட்டி விடுகிறது. அழகுக் காட்சியும் அலுத்துப் போய் விடுகிறது. இனிய இசையும் சலித்துப்போய் விடுகிறது. ஆனல், இறையுணர்வு இன்பமோ அளவில்லாதது அழிவில்லாதது, திகட்டாதது தீராதது.

புலனுணர்வு இன்பத்திற்கும் இறையுணர்வு இன்பத்திற்கும் இன்னுமோர் அடிப்படையான வேறுபாடு உள்ளது.

மலரை முகர்ந்து மணத்தினை அனுபவிக்கிறோம். ஆனல், மலரை முகரும் புலனும் மணந்தரும் மலரும் தனித்தனியாகவே இருக்கின்றன. இன்னிசையைக் கேட்டு அனுபவிக்கிறோம். அப்பொழுதும், இசைக்கருவி, செவிப்புலன் இரண்டும் தனித்தே நிற்கின்றன.

Koviloor Digital Library



ஆனால், இறை ஒளியும் இதய ஒளியும் — பரமாத்மாவும் ஜீவாத்மாவும் —ஒன்றும் பொழுது, அவை ஒன்றுவதோடு நின்று விடுவதில்லை, ஒன்றாகவே ஆகிவிடுகின்றன.

ஆதலால்தான், "இறைமை என் உயிரையே உண்டு விடுகிறது" என்று பாடுகின்றனர் அடியார்கள்.

"ஈர்மை செய்து என்னுயிராய் என்னுயிர் உண்டான்"

(திருவாய்மொழி-9ப. 6தி.)

"இன்பே அருளி எனையுருக்கி
உயிருண்கின்ற எம்மானே"

(திருவாசகம்—எண்ணப்பதிகம்-3)

இறைமையோடு இதயம் இசையும் பொழுது இறைமை இதயத்தை உண்டு விடுகின்றதாம்! எனவே, ஒன்றிய இரண்டும் ஒன்றாக ஆகிவிடுகின்றன!

புலனுணர்வு இன்பத்தில் புலனும் புறப்பொருளும் ஒன்றுவதோடு நின்று விடுகின்றன; இறையுணர்வு இன்பத்தில் இறை ஒளியும் இதய ஒளியும் ஒன்றுவதோடு நில்லாமல் ஒன்றாகியும் விடுகின்றன!

"அகஒளியும் பரஒளியும் ஒன்றாக வேண்டும்", என்கிறது ஸ்வேதாஸ்வதர உபநிடதம்.

ஒளிகள் இரண்டு ஒன்றும் நிலையில் ஒன்றாகத்தானே ஆகிவிட வேண்டும்!

இவ்வாறு ஒன்றும் நிலையினைப் "புல்லிப்புணர்தல்" என்கிறார் மாணிக்கவாசகர்:

"நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் னமுதை யமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வது என்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே"

(திருவாசகம்—புணர்ச்சிப்பத்து-4)

Koviloor Digital Library


இவ்வாறு இறை ஒளியும் இதய ஒளியும் புல்லிப் புணரும் நிலையில் உதிக்கும் அற்புதமான இன்பத்தினை,

"வாக்கிறந்த அமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன்..........."

(திருவாசகம்—திருவண்டப் பகுதி)

என்றும்,

"அற்புதமான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன்..."

(திருவாசகம் —திருவண்டப்பகுதி)

என்றும் வருணிக்கின்றார் மாணிக்கவாசகர்.

இவ்வாறான, இறையுணர்வு இன்பத்தினை,

"அளவிலா மாளா இன்ப மாகடலே",

"அந்தமிலா ஆனந்தமே",

"ஆனந்த மாகடலே",

(திருவாசகம்)

"ஆராவமுதே"

(திருவாய்மொழி)

என்று கூறி அந்த இன்பத்தின் இணையற்ற, அளவற்ற, அழிவற்ற தன்மையினை நமக்கு உணர்த்துகின்றனர் ஞானிகள்!

"புத்திக் கமலத்து உருகிப்பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுரளும் பரமானந்த சாகரம்"

(கந்தரலங்காரம்)

என்கிறார் அருணகிரிநாதர்.

இந்தப் பரமானந்த சாகரத்தில் நாம் அனைவரும் மூழ்கித் திளைக்க வேண்டும் என்ற ஆர்வத்தால், இதைப்பற்றி இடையறாது கூறுகின்றனர் ஆழ்வார்களும் நாயன்மார்களும் பிற அடியார்களும்.

Koviloor Digital Library



ஆனந்த மூர்த்தி

எண்ணும் பொழுதெல்லாம் இதயத்தில் அமுதாக இனிக்கும் இறைமையினை ஆனந்தமே வடிவான மூர்த்தி, "ஆனந்த மூர்த்தி" என்று ஏத்துகின்றார் மாணிக்கவாசகர்:

"மூவராலும் அறியொணா முதலாய
ஆனந்த மூர்த்தியான்"

(திருவாசகம்—சென்னிப்பத்து-1)

இவ்வாறு, "ஆன்ம மூர்த்தியாக" நாம் கண்ட இறைமையினை "ஆனந்த மூர்த்தியாக"வும் நமக்குக் காட்டி, இறையுணர்வு இன்பத்தின் ஏற்றத்தை விளக்கி, அதனை அடையும் எளிதான முறையையும் நமக்குப் புகட்டுகின்றனர் மெய்ஞ்ஞானிகள்.

Koviloor Digital Library

# 16. பிறப்பறுக்கும் மூர்த்தி

பிரமமும் தன் ஆன்மாவும் வேறல்ல என்ற உண்மை யுணர்ந்த ஞானிகள் பிறப்பு இறப்பு என்ற சுழலில் இருந்து விடுதலை பெறுகின்றனர்.

(கைவல்ய உபநிடதம்)

கடல் நீர் சூரிய வெப்பத்தால் ஆவியாக மாறுகின்றது. ஆவியான மேகங்கள் குளிர்ந்து, மழை நீராகப் பெய்கின்றது. எனவே, வெப்பத்தால் ஆவியாக மாறும் நீர் அழிந்து விடுவதில்லை. ஒரு கல்லை உடைத்தால் இரண்டு மூன்று துண்டுகள் ஆகின்றன. மேலும் உடைத்தால் இன்னும் பொடியாகின்றது, மணலாக மாறுகின்றது. ஆனால், அது முழுதுமாக அழிந்து விடுவதில்லை. இவ்வாறு, எந்தப் பருப்பொருளை எடுத்துக் கொண்டாலும் அது அழிவதில்லை.

இரசாயன மாறுதலால், திடப்பொருள்கள் திரவப் பொருள்களாக மாறலாம், திரவப் பொருள்கள் ஆவிப் பொருள்களாக மாறலாம். எனினும், எப்பொருளும் அழிந்து போய்விடுவதில்லை

இந்த விஞ்ஞான உண்மையினை "பொருள்களின் அழியாத் தன்மை" (Indestructibility of matter) என்று பள்ளிகளில் போதிப்பார்கள்.

விதை மறைந்து செடியாக முளைக்கிறது. அப்பொழுது விதை அழிந்ததாகக் காணப்பட்டாலும், உண்மையில் அது அழிந்து போகவில்லை. விதையின் சத்து செடியாக உள்ளது. எத்தனையோ விதைகளை உண்டாக்கும் செடியாகவே அந்த விதை மாறுகின்றது.

இவ்வாறு எந்தப் பருப்பொருளும் அழிந்து போகாத நிலையையே காணுகின்றோம்.

இதுபோன்றே, உயிர் பிரிந்த உடல்கள்கூட எரிக்கப்பட்டாலும் புதைக்கப்பட்டாலும் அவை வெவ்வேறு பொருள்களாக மாறுகின்றனவே தவிர அவை இல்லாமல் போய்விடுவதில்லை.

Koviloor Digital Library



**அழியாத உயிர்**

உயிரற்ற வெறும் பருப்பொருளான உடலே அழிவதில்லை என்றால், அந்த உடம்பிலிருந்து வெளியேறிய நுண்பொருளான உயிர் எவ்வாறு அழியும்? உயிரும் அழிவதில்லை என்றுதானே நாம் கொள்ள வேண்டும்?

உடலை விட்டுச் சென்ற உயிர் அழிவதில்லை என்றால், அது என்னவாகிறது? அழியாத அந்த உயிரின் நிலைதான் என்ன?

இதுபற்றி மனிதன் சிந்தித்தான். நீண்ட காலமாகச் சிந்தித்தான். உயிருக்கு அழிவில்லை என்பதை அவன் கண்டாலும், உடலைப் பிரிந்த உயிர் என்ன ஆகின்றது என்பது மட்டும் அவனுக்குப் புரியாத புதிராகவே இருந்தது.

இதுபற்றி மனிதன் ஊகிக்கத்தானே முடியும்?

இந்த ஊகத்தின் பயனாக உதித்தன பல சமயக் கொள்கைகள்.

ஊழிக்கால முடிவிலே இறுதி நாள் என்று உண்டு. அந்த நாளில் மாண்டோரெல்லாம் மீண்டும் எழுப்பப்படுவர் என்றனர் ஒரு சமயத்தினர். மண்ணுலக வாழ்க்கையில் நடந்ததற்கேற்ப விண்ணுலக விருந்தாளியாக உயிர்கள் அமரத்துவம் பெறு கின்றன என்று கூறினர் இன்னொரு சமயத்தினர். உயிர்கள் மீண்டும் பிறக்கின்றன; எத்தனையெத்தனையோ பிறவிகளை எடுத்துக்கொண்டே இருக்கின்றன என்று கொண்டனர் வேறொரு சமயத்தினர்.

கண்ணுக்குத் தெரியாத எதனையும் கருத்திலே கொள்ளாத சிலர் இதையெல்லாம் ஏற்கவில்லை. அழியாத உயிராவது! ஆன்மாவாவது! பழுதடைந்த இயந்திரம் "பட்" டென்று நிற்பது போல் மூப்படைந்த உடல் முடிவடைந்து விடுகிறது. இயக்கும் சக்தியை இழந்த உடல் இற்றுப் போகிறது, எல்லாம் அற்றுப் போகிறது, இவ்வளவுதான் என்றனர் இவர்கள்.

ஓர்ந்து உணரும் உள்ளத்தைப் பெற்ற மனிதன் தன் உடலும் உயிரும் ஒன்றுதான் என்று எண்ண மறுத்தான். சிதைந்து போகும் உடல் வேறு, அவ்வுடலில் நிலவும் உயிர் வேறு என்பதை உறுதியாக உணர்ந்தான். உடலை ஒரு சாதனமாகக் கொண்டு உயிர் இயங்குகிறது என்பதனைத் தெளிந்து கண்டான்.

Koviloor Digital Library



பருப்பொருள்களுக்கே அழிவில்லை என்றால், நுண்பொருளான உயிர் எவ்வாறு அழியும்? பருப்பொருளான உடலே அழிவதில்லையெனில் அந்த உடலை இயக்கும் ஆற்றலாக உள்ள உயிருக்கு அழிவேது? உயிருக்கு என்றுமே அழிவில்லை என்ற உண்மை சிந்திக்கும் உள்ளத்தில் சிறப்பாகப் பதிந்தது.

தனது உயிருக்கும் உலகிலுள்ள மற்ற உயிரினங்களுக்கும் உள்ள தொடர்பினைப் பற்றியும் மனிதன் சிந்தித்தான்.

**பிறவி ஏணி**

ஓரறிவுடைய தாவரங்கள், ஈரறிவுடைய நத்தை போன்ற உயிரினங்கள், மூவறிவுடைய எறும்பு, நாலறிவுடைய வண்டு, ஐந்தறிவுடைய பறவைகள், விலங்குகள் இவற்றோடு ஆறறிவு பெற்ற தன்னை ஒப்பு நோக்கினான். பிற வுயிர்களுடன் தன் உயிரும் தொடர்புடையதாகவே மனிதனுக்குத் தென்பட்டது.

உலகத்து உயிர்களனைத்திலும் ஊடுருவி நிற்கும் இறைமை அவ்வுயிர்கள் அனைத்திற்கும் இணைப்பாக இருப்பதை மனிதன் உணர்ந்தான். வாடிய பயிரைக் காணும்பொழுது வாடும் மனித மனம், பூக்கும் மலரைக் கண்டு பூரிக்கும் மனித மனம் தன் உயிருக்கும் தாவரத்தின் உயிருக்கும் உள்ள உறவை உணர்ந்தது. ஓர் அறிவுடைய தாவரத்தின் உயிர்தான் காலகாலமாக வளர்ச்சியுற்று ஆறறிவுடைய மனித உயிராகப் பரிணமிக்கிறது என்று மனிதன் உய்த்துணர்ந்தான்.

புற்பூண்டுகளாகவும், மரங்களாகவும், புழுவாகவும், பறவையாகவும், மனிதனாகவும், பிறகு, மனிதனுக்கும் மேம்பட்ட தேவனாகவும் உயிர் வளர்ச்சியுறுகிறது என்பதனை மெய்ஞ்ஞானிகள் கண்டனர்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்"

(திருவாசகம் - சிவபுராணம்)

என்று உயிரின் பரிணாம வளர்ச்சியினை உணர்த்துகின்றார் மாணிக்க வாசகர்.

Koviloor Digital Library



நம் நாட்டு ஞானிகள் கண்ட இந்த உண்மையினை அன்மையில் வாழ்ந்த ருஷ்ய நாட்டு ஞானி டால்ஸ்டாயும் காணுகின்றார்!

"எண்ணற்ற உயிர்த்திரள்களிலே இறைமை என்ற இணையற்ற ஆற்றல் ஒன்று புலப்படுகிறது. அடிநிலை உயிர்களுக்கும் மேல்நிலை உயிர்களுக்கும் இடையிலுள்ள இணைப்புச் சங்கிலியில் நானும் ஒரு கண்ணியாக இருப்பதை உணருகிறேன். தாவரத்தினை மனித நிலைக்கு இட்டுச் செல்லும் ஏணி போன்ற வளர்ச்சியை நான் நன்கு காணுகின்றேன். இந்த வளர்ச்சி என்னோடு அற்றுப் போகிறது, அது மேலும் மேலும் வளர்வதில்லை என்று நான் எப்படிக் கருத முடியும்? நான் மறைந்து போவதில்லை; உலகில் எதுவுமே மறைந்து விடுவதில்லை. நான் எப்பொழுதும் இருந்தேன், என்றும் இருப்பேன் என்பதை உணருகின்றேன்!"

இவ்வாறு, "போரும் அமைதியும்" என்ற நாவலில் பியரீ (Pierre) என்ற பாத்திரத்தின் வாயிலாகக் கூறுகின்றார் டால்ஸ்டாய்.

( "Don't I feel that in this immense innumerable mass of beings in which the Deity — the supreme power if you prefer the term — is manifest, I form one link, one step between the inferior and higher beings? If I see, clearly see, the ladder that leads from plant to man, why should I suppose it breaks of at me, and does not go farther and farther? I feel I can not vanish, since nothing vanishes in this world, that I shall always exist and always have existed."

Talstoy in "War and Peace"—
Book V. Chap XII. )

அமெரிக்க நாட்டுக் கவிஞர் வால்ட் விட்மன் (Walt Whitman) என்பவர் பாடுன்றார்:

"இறந்துபோன ஆண்கள் பெண்கள் எங்குள்ளார்
எனக் காட்ட விழைகிறேன்;

மறைந்தவர் எங்கோ நலமாக உயிருடன் தான்
உள்ளனர்;

Koviloor Digital Library



இறுதி மரணம் இல்லை என்பதை இளந்தளிர்கள்
காட்டுகின்றன!

எனக்கும் மரணம் இல்லை என்பதை நான் அறிவேன்!"

( "I wish I could translate the hints about the
dead young men and woman,

* * *

They are alive and well somewhere,
The smallest sprout shows there is really
no death,

... ... ...

I know I am deathless..."

—(Walt Whitman in "Song of Myself".

Fawcett Publications, Inc. New York.)

ஆழ்ந்து உணரும் ஞானிகள் எந்நாட்டவராயினும் எக்காலத்தவராயினும் அடிப்படையான உண்மைகளைக் காணுகின்றனர்!

மனிதனின் உயிருக்கு முடிவு என்று ஏதும் இல்லை, அது என்றும் உள்ளது என்ற உண்மையினை உணரும் மனிதன் மேலும் சிந்திக்கிறான்.

**வினையும் விளைவும்**

உலகில் வாழும் மனிதன் எத்தனையோ செயல்களைப் புரிகிறான். நற்செயல்களையும் புரிகிறான், தீச்செயல்களையும் புரிகிறான். இச் செயல்களால் எத்தனையோ விளைவுகள் நேருகின்றன. இவ் விளைவுகள், விளைவுகளுக்கான செயல்களைச் செய்தவர்களைப் பாதிக்க வேண்டுமல்லவா?

மனிதன் செய்யும் எந்த வினையை எடுத்துக் கொண்டாலும், அந்த வினையிலிருந்து எழும் விளைவு இருக்கிறது. விளைவு இல்லாத வினை எதுவுமே இல்லை, இருக்கவும் முடியாது.

எவ்வாறு, பருப் பொருள்கள் எவையும் அழிந்து போவதில்லையோ (Indestructibility of matter) அவ்வாறே நாம் செய்

Koviloor Digital Library



யும் வினைகள் எவையும் பயனற்றுப் போவதில்லை (Immutability of laws). இது இயற்கை நியதி.

எனவே, தீய வினைகளைச் செய்பவன் அத்தீமையால் பாதிக்கப்பட வேண்டும். நல்ல வினைகளைச் செய்பவன் அந்த நன்மையால் பயனடைய வேண்டும்.

ஆனால், உலக வாழ்வில் இது தவறாது நடக்கிறதா என்றால் நடப்பதில்லை. நல்லோர்கள் நலிகின்றனர்! தீயோர்கள் வளமாக வாழ்கின்றனர்!

இது மட்டுமா?

"இறைவனை நினையாதவர்கள் மகிழ்வோடு இருக்கின்றனர். இறைவனை எண்ணி ஏங்கி நிற்பவர்களுக்கு எத்தனையோ துயரங்கள் வருகின்றன! இது என்ன உலகத்து இயற்கை!" என்று ஆச்சரியப் படுகின்றார் நம்மாழ்வார்:

"நண்ணாதார் முறுவலிப்ப
நல்லுற்றார் கரைந்தேங்க
எண்ணாராத்துயர் விளைக்கும்
இவை என்ன உலகியற்கை!"

(திருவாய்மொழி—4ப. 9 தி.)

**வினைப்பயன்**

நல்வினைகளைச் செய்தவன் நன்மையின் பயனைப் பெறாமலே இறந்து விடுகின்றானே! தீவினைகளை இழைத்தவன் அதற்கான தண்டனையை அடையாமலே மறைந்து போகின்றானே!

அப்படியானால், "வினைக்கேற்ற விளைவு உண்டு", என்ற இயற்கை நியதி பொய்த்து விடுகின்றதா? அது எப்படிப் பொய்யாகும்?

மனித உயிருக்குத்தான் அழிவு என்பது இல்லையே? எனவே உடலைக் கருவியாகக் கொண்டு ஓர் உயிர் புரிந்த வினைகளுக்கேற்ற பயன், வினைப்பயன், இந்த உடலை நீத்த பின்னும் அந்த உயிரோடு ஒட்டிக்கொண்டுதான் இருக்க வேண்டும். அந்த வினைப்பயனை அவ்வுயிர் அனுபவித்தே ஆக வேண்டும். உடலைக் கருவியாகக் கொண்டு செய்த வினையின் பயனை மீண்டும் உடல் பெற்றுத்தானே அந்தஉயிர் அனுபவிக்க இயலும்! ஆதலால், மீண்டும் அந்த உயிர்

Koviloor Digital Library



பிறவி எடுத்து வினைப்பயனை அனுபவிக்க வேண்டும். இதைத் தவிர வேறு வழியில்லை. இவ்வாறு இல்லாது போனால், "ஒவ்வொரு வினைக்கும் விளைவுண்டு" என்ற இயற்கை நியதி பொய்த்து விடுமே!

இவ்வாறெல்லாம் காலகாலமாக மனித மனம் சிந்தித்தது.

உடலெடுக்கும் ஒவ்வோர் உயிரும் அது இழைக்கும் வினைகளின் பயனை அனுபவிக்கிறது. ஒரு பிறவியில் அந்தப் பயனை அனுபவிக்கவில்லையெனில் அடுத்த பிறவி எடுத்து அதனை அனுபவிக்கிறது. எனவே, "வினையும் பயனும் உயிர்களுக்குப் பிறவிகளை அளித்துக் கொண்டே இருக்கின்றன. வினைப்பயனால் உயிர்கள் பிறவிகளை எடுத்துக்கொண்டே இருக்கின்றன."

எத்தனையோ காலம் இடையறாது சிந்திக்கும் மனித உள்ளத்திலே இந்த உண்மை புலப்பட்டது.

உடலெடுக்கும் மனித உயிர் தன் வினைப் பயனால் பல பிறவிகளை எடுக்கின்றன, எடுத்துக்கொண்டே இருக்கின்றன என்ற உண்மையினை உறுதியாக உணர்ந்தான் மனிதன்.

வினைப்பயனால் பிறவி விளைவதால்தான் பாரினில் மக்கள் இடையே பல்வகை வேறுபாடுகள் போலும்!

மக்களின் தன்மைகளில்தான் எத்தனை விதங்கள்! ஓவியம் வரைகிறான் ஒருவன், காவியம் புனைகிறான் மற்றொருவன்! கல்வியை நாடுகிறான் ஒருவன், அதைக்கண்டு ஓடுகிறான் மற்றொருவன்! பிறர் இன்பத்தில் இன்பம் காணுவோர் சிலர், பிறர் துன்பத்தில் இன்பம் பெறுவோர் பலர்!

அணுவைப் பிளந்து அதன் ஆற்றலைக் காணுகின்றான் விஞ்ஞானி என்றால், கல்லைச் செதுக்கி அதைக் கலைப் பொருளாக்குகிறான் கலைஞானி!

இவ்வாறு பல்வேறு பண்புகள் பல்வேறு மனிதர்களிடம் காணப்படுகின்றன.

காரணம் என்ன?

ஒரு மனிதனிடம் இந்தப் பிறவியில் காணப்படும் பண்பு இதற்கு முற்பிறவிகளில் அவன் செய்த வினைகளின் விளைவாகத் தானே இருத்தல் வேண்டும்!

Koviloor Digital Library



எனவே, வினைப்பயனால் பிறவிகளை எடுக்கும் மனிதன் அப்பயனுக்கேற்றபடி பண்பினையும் பெறுகின்றான்.

இதில் இருந்து தெரிவது என்ன?

**பிறப்பு இறப்பு என்ற சுழல்**

மனிதன் பிறக்கிறான்; பிறந்து வாழும்பொழுது பல வினைகளைச் செய்கிறான்; பிறகு இறக்கிறான். இந்த பிறப்பில் செய்த வினைகளின் பயனாய் அவன் மீண்டும் பிறவி எடுக்கிறான்; மீண்டும் வினைகளைப் புரிகிறான்; இறக்கிறான். பழையபடி, வினைப்பயனால் பிறக்கிறான்! இவ்வாறு முடிவே இல்லாமல் பிறப்பும் இறப்பும் மனித உயிர்களுக்கு மாறிமாறி வந்துகொண்டே இருக்கிறன்றன.

இந்த உண்மையினை உணரும் சிந்தனையாளர்களின் கருத்திலே கவலை தோன்றுகிறது.

"ஏதோ பிறக்கின்றோம். பிறந்து வாழும்பொழுதுதான் எத்தனை எத்தனை துன்பங்கள்! மற்றத் துன்பங்களை விட்டு விடுவோம். உடலைப்பற்றிய கவலை இன்றியாவது வாழ முடிகிறதா? நம் உடலைப் பிணி வந்து தாக்குகிறது. மூப்பு வந்து விடுகிறது; பிறகு இறப்பு; ஆதலால் பிறப்பினை நான் இழி வாகக் கருதுகிறேன்" என்கிறார் நாவுக்கரசர்:

"பிறத்தலும் பிறந்தால் பிணிபட வாய்ந்தசைந்து உடலம் புகுந்து நின்று
இறக்குமாறு உளதே இழித்தேன் பிறப்பினை நான்"

(தேவாரம்—திருவாரூர்)

"மனிதனுக்கு நூறு வயது என்று நூல்கள் கூறுகின்றன' அதில் பாதிக்காலம், உறக்கத்தில் போய்விடுகிறது. விவரம் தெரியாத இளமைப் பருவத்தில் பதினைந்தாண்டுகள் கழிகின்றன. மீதமுள்ள காலத்தில் பிணி, பசி, மூப்பு, பிறவகைத் துன்பங்கள் எல்லாம் வந்து சேருகின்றன. ஆதலால், பிறவி எனக்கு வேண் டாம்" என்கிறார் தொண்டரடிப் பொடியாழ்வார்:

"வேத நூல் பிராயம் நூறு
மனிசர் தாம் புகுவரேலும்,
பாதியும் உறங்கிப் போகும்
நின்றதில் பதினையாண்டு,

Koviloor Digital Library



பேதை பாலகன தாகும்
பிணி பசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன்
அரங்கமா நகருளானே!''

(திருமாலை —3)

**வினைதீர் மருந்து**

வேண்டாத இந்தப் பிறப்புக்குக் காரணமாக இருப்பது வினைப்பயன்தானே? அந்த வினைப்பயன் நம்மைத் தொடராதவாறு செய்து விட்டால் பிறவி இருக்காதல்லவா? இருக்காதுதான். ஆனால் வினையின் பயனைத் தவிர்ப்பது எப்படி?

ஒவ்வொரு வினைக்கும் பயன் உண்டு என்பது இயற்கை நியதி. இதனை எவராலும் மாற்ற முடியாது. எந்த முயற்சியாலும் இதனை மாற்றிவிட இயலாது.

இயற்கை நியதியினை மாற்ற வேண்டும் எனில், அந்த நியதிக்கு ஆதாரமான இறைமையிடம்தான் செல்ல வேண்டும். எவராலும் மாற்ற முடியாத இயற்கை நியதியை இறைமை என்ற இணையற்ற ஆற்றல்தான் மாற்ற முடியும். எனவே, வினைப்பயன் என்ற இயற்கை நியதியைத் தம்மிடமிருந்து போக்க வேண்டும் என்று இறைவனிடம் முறையிடுகின்றனர் ஞானிகள். வினைகளைத் தீர்க்கும் மருந்தாக இறைவனைக் காணுகின்றனர்:

"செடியார் வினைகள்தீர் மருந்தே! திருவேங்கடத்தெம் பெருமானே''

(திருவாய்மொழி-6 ப. 10 தி.)

"வினையேன் வினைதீர் மருந்தானாய்! விண்ணோர் தலைவா கேசவா!''

(திருவாய்மொழி-1 ப. 5 தி.)

என்றுபாடி, வினைப்பயன் என்ற நோய் தீர்க்கும் மருந்து இறைமை தான் என்பதை நமக்குப் போதிக்கின்றார் நம்மாழ்வார்.

"மன்னுளார் வினைதீர்க்கும் மருந்தினை''

(தேவாரம் — திருக் கோளிளி)

என்று பாடுகின்றார் நாவுக்கரசர்.

Koviloor Digital Library



உடலுக்கு நோய் வந்தால் மருந்தினை அருந்துகிறோம். உயிருக்கு நோயாக உள்ளது முன்வினைப் பயன். இந்த உயிர் நோயைப் போக்குவதற்கு மருந்து ஏது? இறைவன்தான் அந்த மருந்து என்று உறுதியாகக் கூறுகின்றனர் உண்மை அடியார்கள்.

உலோகத்தை உருக்கினால் அதில் உள்ள அழுக்குகள் போய் விடுகின்றன. அது போல் நம் உள்ளம் உருகினால் உயிரைப் பிடித்திருக்கும் நல்வினை, தீவினை என்ற இரு வினைகளும் அழிந்து விடுகின்றன. முன்பு செய்த வினைகளின் பயன்கள் முழுதுமாக அழிந்து போகின்றன. "எனவே, இறைவனை நினைந்து உருக வேண்டும். இதனால் துன்பத்தினைக் களையலாம், தூய்மை பெறலாம், வினைகள் அழிகின்றன, முன் செய்த வினைப்பயன் முழுதுமாய் மறைகின்றன" என்கிறார் மாணிக்கவாசகர்:

"என்புள் ளுருக்கி இருவினையை ஈடழித்து
துன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து
முன்புள்ள வற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பில் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.'

(திருவாசகம்—குலாப்பத்து)

இவ்வாறு, முன்புள்ள வினைப்பயன் முழுதுமாக அழிய வேண்டும் என்று நாம் வேண்டுவது, அந்த வினைப்பயனால் மீண்டும் நாம் பிறவாதிருக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

ஏன் பிறப்பினைப் பற்றி நாம் அஞ்ச வேண்டும்? பிறந்து இறந்து, மீண்டும் பிறந்து இறந்துகொண்டே இருப்போமே. இதனால் என்ன கெட்டு விடுகிறது? இவ்வாறு நாம் எண்ணலாம்.

பிறப்பும் இறப்பும் இல்லாத இறைமைதான் தம் ஆன்மாவில் உள்ளது என்ற மெய்யுணர்வு பெற்ற ஞானிகள், உலகில் பிறந்து இறந்து உழல்வதை விரும்புவதில்லை.

இறப்பது வாதனை, பிறப்பது வேதனை என்கிறார் தாயுமானவர்.

"வஞ்ச நமன் வாதனைக்கும்
வன்பிறவி வேதனைக்கும்
அஞ்சி உனை யடைந்தேன்
ஐயா பராபரமே."

Koviloor Digital Library


உண்மையில், அனைத்துமாகி நிற்கும் பிரமம்தான் தன்னுள்ளும் இருக்கிறது என்ற மெய்ஞ்ஞானம் பெற்ற உயிருக்கு இறப்பும் பிறப்பும் இருப்பதில்லை.

> "எங்கும் நிறைந்துள்ள இறைமைதான் தன் இதயத்திலும் இலங்குகிறது என்ற உண்மையினை உணர்ந்த ஞானிகள் பிறப்பு இறப்பு என்ற சக்கரத்தில் இருந்து விடுதலை பெறுகின்றனர்."

என்று கூறுகிறது கைவல்ய உபநிடதம்.

> "மற்றுப்பற்று எனக்கின்றிநின் திருப்பாதமே மனம் பாவித்தேன்,
> பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாததன்மை வந்தெய்தினேன்"

(சுந்தரர் — தேவாரம் — திருப்பாண்டிக் கொடுமுடி)

வேறு பற்றுக்கள் இல்லாமல் இறைவன் திருவடிகளையே எண்ணிக் கொண்டிருந்தால் பிறவாத தன்மை எய்தி விடுகிறோம் என்கிறார் சுந்தரர்.

ஆறறிவு படைத்த மனிதப் பிறவியை நாம் எடுத்ததன் பயனே உண்மை ஞானத்தை உணர்வதுதான். பிறப்பும் இறப்பும் இல்லாத பரம்பொருளே நம் உயிருக்கு உயிரான ஆன்மாவாக இருக்கிறது என்ற உண்மையினை உணர்வதுதான் அந்த உண்மை ஞானமாகும். ஒப்பற்ற இந்த ஞானத்தினைப் பெற்ற நம் உயிர் பிறவிப்பயனை அடைந்து விடுகிறது. பிறவிப்பயனை எய்திய நம் உயிருக்கு மீண்டும் பிறப்பு எதற்கு? எனவே, பிறவாத பெரும் பேற்றினை உண்மை ஞானம் பெற்ற நம் உயிர் எய்தி விடுகின்றது.

**பிறவிப் பிணிக்கு மருந்து**

இறைவனை மறவாது மனத்துள் வைத்து ஞானம் எய்தியவர்களுக்குப் பிறவித்துயர் அற்று விடுகிறது என்கிறார் நம்மாழ்வார்:

> "பிறவித் துயரற ஞானத்துள் நின்று
> துறவிச் சுடர் விளக்கம் தலைப்பெய்வார்
> அறவனை ஆழிப்படை அந்தணனை
> மறவியை யின்றி மனத்து வைப்பாரே."

(திருவாய்மொழி — 1ப. 7தி.)

மெய்ப்பொருளை உணர்ந்தவர்கள் மீண்டும் பிறவாத நெறியினை எய்துகின்றனர், என்கிறார் திருவள்ளுவர்:

Koviloor Digital Library



"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாராநெறி.

(குறள்—356)

பிறவித் துயரம் என்ற நோயை அகற்றுவது இறைமை ஞானம். ஆதலால் பிறவிப் பிணிக்கு மருந்தாக இறைவனை ஏத்துகின்றனர் அடியார்கள்:

"பிறவிப் பிணிக்கு மருந்தே"

(திருவாசகம்—புணர்ச்சிப் பத்து—9)

என்றும்,

"எனைப் பிறப்பறுக்கும் எம்மருந்தே"

(திருவாசகம்—கோவில் திருப்பதிகம்-4)

என்றும் இறைவனைப் பாடுகின்றார் மாணிக்கவாசகர்.

"பிறப்பை ஒழிக்கும் மருந்து - யார்க்கும்
பேசப்படாத பெரிய மருந்து
இறப்பைத் தவிர்க்கு மருந்து - என்னுள்
என்றும் மதுரித்து இனிக்கும் மருந்து"

என்று துதிக்கின்றார் இராமலிங்க அடிகள்.

ஞானிகள் இறைவனிடம் வேண்டுவது ஒன்றே ஒன்றுதான். மாறிமாறி வரும் பிறப்பு இறப்பு என்ற சுழலில் இருந்து விடுதலை பெறவேண்டும் என்பதுதான் அந்த வேண்டுகோள்.

துன்பத்திற்கு மூலமாக உள்ள நல்வினை, தீவினை என்ற இரு வினைப் பயன்களும் நம்மைச் சேராதிருக்க வேண்டும். இதன் பலனாக நாம் பிறவி என்ற கடலைக் கடந்து கரையேறி விடுகின்றோம். இவ்வாறு இரு வினைகளும் நம்மைச் சேராமல், பிறவிக்கடலை நாம் கடக்க வேண்டுமெனில் இறைவனை வழுத்துவது ஒன்றே வழி என்பதனைத் திருவள்ளுவர் தெளிவாகக் கூறுகிறார்:

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

(குறள்—5)

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதார்.

(குறள்—10)

Koviloor Digital Library



திருக்குறள் கூறும் இந்நெறியினைத் திருவாசகமும் கூறுகிறது:

"முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்..."

(திருவெண்பா—4)

**பிறப்பறுக்கும் மூர்த்தி**

பிறப்பும் இறப்பும் அற்ற இறைமை தன் ஆன்மாவிலும் இருப்பதை உணர்ந்து ஆன்ம ஞானம் பெற்ற மனிதன் தனக்கும் பிறப்பு இறப்பு இரண்டும் இருத்தல் தகாது என்ற ஞான வேட்கை பெறுகிறான்.

எல்லையில்லாத பிறவிக்கடலைத் தாண்டிக் கரைசேர வேண்டுமெனில் இறைமையே அதற்குத் துணை என்பதையும் அவன் கண்டான்.

தன் உயிருக்கு உயிரான ஆன்மாவாக இருப்பது இறைமை தான் என்ற உண்மை ஞானம் பிறவிப் பிணிக்கு மருந்தாகி விடுகின்றது. இந்த ஆன்ம ஞானம் பெற்றவர்கள் பிறவிக்கடலைக் கடந்து விடுகின்றனர்.

எனவே, அந்த ஞானிகள்,

"பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்"

(திருவாசகம்—சிவபுராணம்)

என்றும்,

"புணைவன் பிறவிக்கடல் நீந்துவார்க்கே"

(திருவாய்மொழி—2ப.8தி.)

என்றும்,

"பிறவா நெறி தந்த பேரருளாளன்"

(திருமந்திரம்—1803)

என்றும் இறைவனைப் போற்றுகின்றனர்.

இவ்வாறு, இறைமையினை, "ஆன்ம மூர்த்தி" என உணர்ந்து, "பிறப்பறுக்கும் மூர்த்தி"யாகவும் போற்றுகின்றனர் ஞானிகள்.

---

Koviloor Digital Library

# 17. பக்தி வலைப்படுவோன்

''பிரமம் என்னை விடாமல், நானும் பிரமத்தை விடாமல் உள்ள இடையறுத உறவு என்றும் நிலைபெறுவதாக என்று பிரார்த்திக்கின்றேன்".

(சாந்தோக்கிய உபநிடதம்)

*மாலை நேரத்தில் மந்தையிலிருந்து திரும்பி வரும் பசு வீட்டிற்குள் நுழையும் பொழுதே தனது கன்றை நினைத்துக் கதறுகிறது "அம்மா ............" என்று.*

*தாய்ப்பசு திரும்பி வரச் சிறிது நேரமாகிவிட்டால் கன்றும் தாயைத்தேடி "அம்மா............"என்று அழைத்து அலறுகின்றது.*

*"அம்மா......" என்று அழைக்கும் தாய்ப்பசுவின் குரலையோ கன்றின் குரலையோ கேட்கும்பொழுது அந்த ஒலி நம் உள்ளத்தை உலுக்குகிறது; இதயத்தில் ஓர் ஏக்க உணர்வை எழுப்புகிறது!*

*தன் அன்புக் கன்றை ஆர்வத்துடன் நாடும் தாய்ப் பசுவின் தாப உணர்வு, தாயை நினைத்துத் தவித்து நிற்கும் கன்றுக்குட்டியின் ஏக்க உணர்வு......இதனை அந்த "அம்மா......" என்ற குரலிலே நாம் கேட்கின்றோம்!*

*இளங்கன்றுக்கும் தாய்ப் பசுவுக்கும் இடையேயுள்ள இயல்பான ஈர்ப்பு, அந்த ஈர்ப்பின் வேகம், தாபம், ஏக்கம் இவையனைத்தும் ஒலிக்கின்றன "அம்மா......" என்ற அந்த அன்பு ஒலத்திலே!*

**பசுவும் கன்றும்**

*இத்தகைய இயல்பான ஈர்ப்பு இறைமைக்கும் நமக்கும் இடையே உள்ளது என்பதை உணர்த்துகின்றனர் ஞானிகள்:*

Koviloor Digital Library



"ஆன் கன்று தேடி அழைக்கு மதுபோல்
நான் கன்றாய் நாடி அழைத்தேனென் நாதனை"

(திருமந்திரம்-2627)

என்கிறார் திருமூலர்.

"கறவா மடநாகுதன் கன்று உள்ளினாற்போல்
மறவாது அடியேன் உன்னையே அழைக்கின்றேன்"

(பெரிய திருமொழி-7)

என்று இறைவனை அழைக்கின்றார் திருமங்கையாழ்வார்.

"குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா உன் குரை
கழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்து உருக வேண்டுவனே"

(திருவாசகம்-திருப்புலம்பல்-3.)

என்று உருகுகின்றார் மாணிக்கவாசகர்.

"இறைமை ஞானத்தினைத் தெளிவாக உணர்ந்தவர்களின் உள்ளம், தாயைநாடும் கன்றுபோல் இயல்பாகவே இறைமையினை நாடுகிறது" என்கிறார் பொய்கையாழ்வார்:

"தெளிதாக உள்ளத்தைச் செந்நிறீஇ, ஞானத்
தெளிதாக நன்குணர்வார் சிந்தை—எளிதாகத்
தாய்நாடு கன்றேபோல் தண்டுழாயானடிக்கே
போய்நாடிக் கொள்ளும் புரிந்து."

(இயற்பா-முதல் திருவந்தாதி–30)

"தாய்நாடும் கன்றேபோல் போய்நாடிக் கொள்ளும்" என்றும் "கற்றாவின் மனம் போலக் கசிந்துருகி" என்றும் பாடும் அடியார்கள் இறைமைக்கும் நமக்கும் உள்ள இணைப்பினை பசுவுக்கும் கன்றுக்கும் உள்ள பாசப்பிணைப்பாகக் காட்டுகின்றனர் என்றால், அது அவர்கள் அனுபவித்து உணர்ந்த உண்மையாகத் தானே இருக்க வேண்டும்.

**இன்பக் கண்ணீர்**

நம் அன்புக்குரிய நண்பர். அவரைப் பார்த்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. மீண்டும் அவரைச் சந்திக்கும்பொழுது எத்தகைய உணர்ச்சி நமக்கு ஏற்படுகிறது!

Koviloor Digital Library



ஆர்வத்தோடு அவரைக் கட்டித் தழுவுகிறோம். அன்பு மேலீட்டால் நம் கண்கள் கசிகின்றன. உள்ளமும் உடலும் சிலிர்த்த நிலையில், கண்களிலே ஆனந்தக் கண்ணீர் ததும்ப அவரை அரவணைத்துக் கொள்ளுகிறோம்.

நண்பர்களிடையுள்ள அன்புணர்வு இவ்வாறு வெளிப்படு கிறது.

பெற்ற தாயைக் கட்டித் தழுவும் குழந்தை; அக்குழந்தையை ஆர்வத்துடன் அரவணைத்து நிற்கும் தாய். இருவர் கண்களிலும் நீர் கசிகின்றது அன்பின் அடையாளமாக.

ஆம்! அன்பின் அடையாளம் அன்புடையவரின் கண்களிலே கசிகின்ற நீர்தானே!

**அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கண்ணீர் பூசல் தரும்.**

**(குறள்-71)**

மக்களிடையே ஒருவருக்கொருவர் ஏற்படும் அன்பே இத்தகையது என்றால், இறைமையினை இயல்பாகவே நாடி இணையும் நம் இதயம் எத்தகைய அனுபவத்தைப் பெறவேண்டும்!

ஒப்பற்ற இந்த அனுபவத்தால் உளம் கனிந்து உடல் சிலிர்த்துப் பாடுகின்றனர் மெய்யடியார்கள்:

"இறைவனை ஆராத மனக் களிப்போடு நினைத்து அழுத ஆனந்தக் கண்ணீர் பெருகியோட உருகி நிற்கிறேன்," என்கிறார் குலசேகரப் பெருமான் :

**"ஆராத மனக்களிப்போடு அழுத கண்ணீர்**
**மழைசோர நினைந்து உருகி ஏத்தி**
**........"**

**(பெருமாள் திருமொழி-1-9)**

"இறைமையை நினைத்து நெக்கு நெக்கு உருகி ஏங்கி நிற்கும் என் எலும்புகள் கூட இளகி விடுகின்றன. அன்புணர்வு ஆறுகப் பெருகுகின்றது. உரை தடுமாறுகின்றது. உரோமம் சிலிர்க்கின்றது. கண்களிலே நீர் அரும்புகிறது. இவ்வாறு, தாயான இறைமையினை நினைத்துத் தழைத்து நிற்கிறேன்" என்று உள்ள முருகப் பாடுகிறார் மாணிக்கவாசகர்:

Koviloor Digital Library



"என்பு நைந்துருகி நெக்குநெக் கேங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாதவென்று அரற்றி
உரை தடுமாறி உரோமம் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்துளி அரும்பச்
சாயா அன்பினை நாடொறும் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி"

(திருவாசகம் – போற்றித்திருவகவல்)

"இறைமையை நினைக்கும் பொழுதெல்லாம், அதுபற்றிச் சொல்லும் பொழுதெல்லாம் என் நெஞ்சு இடிந்து போகிறது; என் உயிர் சிலிர்க்கின்றது," என்று தம் அனுபவத்தைக் கூறுகின்றார் நம்மாழ்வார்:

"நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சு இடிந்துகும்
வினைகொள் சீர்பாடிலும் வேமெனது ஆருயிர்"

(திருவாய்மொழி -9 ப. 6 தி.)

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன்"

(நாவுக்கரசர் தேவாரம் பொது தனித் திருக்குறுந்தொகை)

"நெக்கு நெக்கு உருகிக் கசியும் உழுவலன்பு உடையவர்கள் உள்ளத்திலே பெருகும் பரமானந்த வெள்ளம்," என்று இறைமையைப் போற்றுகிறார் குமரகுருபரர்:

"உருகி யுருகி நெக்கு நெக்குள்
உடைந்து கசிந்திட்டு அசும்பூறும்
உழுவலன்பின் பழவடியார்
உள்ளத் தடத்தில் ஊற்றெடுத்துப்
பெருகு பரமானந்த வெள்ளப்
பெருக்கே......"

(மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்–45 )

இறைமை பற்றிய ஞானம் பெற்றவர்கள் இறைமையினை நினைத்து அன்பினால் உருகி அகங்குழைகின்றனர் என்பதை ஆயிரம் ஆயிரம் பாடல்களிலே அழுத்தமாகக் கூறியுள்ளனர் அடியார்கள்.

Koviloor Digital Library



"அன்போடு உருகி அகங்குழைவார்க்கு அன்றி
என்போல் மணியினை எய்த வொண்ணுதே"

(திருமந்திரம்—27)

உள்ளத்தை உருக்கும் அன்பில்தான் இறைவனைக் காண முடியும்.

"என்பில் எள்கி நெஞ்சுருகி உள்கனிந்து எழுந்ததோர்
அன்பிலன்றி ஆழியானை யாவர் காணவல்லரே?"

(திருச்சந்த விருத்தம்—76)

என்கிறுர் திருமழிசைப்பிரான்.

இவ்வாறு, இறைமையின் மீது அன்பு செலுத்தும் அடியார்கள், நம் வாழ்வில் அன்புக்குரியவர்கள் யாரோ அவர்களாகவே இறைமையினைப் பாவிக்கின்றனர்!

நாம் நம் குழந்தையைக் கொஞ்சும்பொழுது "தங்கமே", "முத்தே", "மாணிக்கமே" என்கிறேம். ஏனென்றுல், தங்கத்தையும் முத்தையும் நாம் மதிக்கின்றேம். அடியார்கள் அன்பு ஒன்றையே மதிக்கின்றனர். எனவே, அன்பாகவும், அன்புக் குற்றவர்களாகவுமே இறைவனைக் காணுகின்றவர் மெய்யடியார்கள்.

"அன்பாவாய் ஆரமுதம் ஆவாய், அடியேனுக்கு
இன்பாவாய் எல்லாமும் நீயாவாய்......"

(இயற்பா—நான்முகன் திருவந்தாதி-59)

என்று பாடும் அடியார்கள் தங்களைப் பெற்றெடுத்த தாயாக, பிறப்பித்த தந்தையாக, மாமனுக, மாமியாக, தோழனுக, காதலனுக, காதலியாக, கைக்குழந்தையாகப் பாவித்து இறைவனை ஏத்துக்கின்றனர்!

"பெற்றதாய் நீயே பிறப்பித்த தந்தை நீ
மற்றையா ராவாரும் நீ........"

(இயற்பா - பெரிய திருவந்தாதி-5)

என்று துதிக்கின்றுர் நம்மாழ்வார்.

Koviloor Digital Library



"பால் நினைந்து ஊட்டும் தாயினும்
சாலப் பரிவுடை யோன்"

(திருவாசகம்—பிடித்தபத்து-9)

என்று பாடுகின்றார் மாணிக்கவாசகர்.

"அப்பன் நீ, அம்மை நீ, ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ ......"

(தேவாரம்—பொது—தனித்திருத்தாண்டகம்)

என்று ஏத்துக்கின்றார் நாவுக்கரசர்.

"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய்......"

(தேவாரம்—திருவாரூர்)

என்று இறைமையோடு தோழமை கொண்டாடுகின்றார் சுந்தரர்.

தன் ஆருயிர்க் காதலனைகவும் நினைத்து ஏங்கி உருகுகின்றது அடியார்களின் உள்ளம்! இறைமையினை நாடி நிற்கும் ஏக்கம் விரகதாபமாக வேகம் பெறுகிறது!

"காதலித்து நிற்கும் பெண்ணின் வருத்தம் அறியாத பெருமான் இறைவன். அவன் அரையில் அணிந்திருக்கும் பொன்னுடையினைக் கொண்டு வந்து எனக்கு வீசுங்கள், என் விரகதாபம் தணியட்டும்" என்கிறார் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாள்:

"பெண்ணின் வருத்தம் அறியாத
பெருமான் அரையில் பீதக
வண்ண ஆடைகொண்டு, என்னை
வாட்டம் தணிய வீசீரே"

(நாச்சியார் திருமொழி—13-1)

குழைந்து நிற்கும் உள்ளம் குழந்தையாகக் காணுகின்றது இறைமையினை!

சின்னஞ்சிறு குழந்தை. தாய்ப்பால் அருந்துகிறது. தாயின் மார்பகம் ஒன்றை தன் தளிர்க்கையால் நெருடிக்கொண்டே, மற்றொரு மார்பகத்திலே வாய்வைத்துக் குடிக்கிறது. அப்படிக்

Koviloor Digital Library



குடித்துக் கொண்டிருக்கும்பொழுதே தாயின் முகத்தைப் பார்த்து எழிலாக இளநகை புரிகிறது!

ஈடில்லாத இந்த இன்ப அனுபவத்தை தாய்மார்கள் அறிவார்கள். இந்த அற்புதமான அனுபவத்தை அள்ளிக் கொடுக்கும் குழந்தையாக இறைமையைக் காணுகின்றார் குலசேகரப் பெருமான்:

"குழகனே! என்றன் கோமளப் பிள்ளாய்!
கோவிந்தா! என் குடங்கையில் மன்னி,
ஒழுகு பேரெழில் இளஞ்சிறு தளிர்போல்
ஒரு கையால் ஒரு முலைமுகம் நெருடா,
மழலை மென்னகை இடையிடை அருளா
வாயிலே முலையிருக்க என் முகத்தே,
எழில்கொள் நின்திருக் கண்ணினை நோக்கத்
தன்னையும் இழந்தேன் இழந்தேனே!"

(பெருமாள் திருமொழி7-7)

**பக்தி**

இவ்வாறு, இறைமையினை நாடும் நம் இதயத்தின் தாபத்தினைத்தான் "பக்தி" என்று அழைக்கின்றனர்.

ஆறுகள் எல்லாம் கடலை நோக்கி ஓடுவதுபோல் ஆருயிர்கள் எல்லாம் பேருயிரான இறைமையினை நாடும் இயல்பான வேகத்தினைப் "பக்தி" என்கிறோம்.

உண்மையினை நாடும் நம் உள்ளம் உருகிப்பெருகும் உயர் நிலையில் பக்தி மலர்கின்றது. பக்தி மலர்களில் தெய்வீக மணம் கமழுகின்றது!

"உள்ளம் உருகிப் பெருகும்பொழுது பக்திக் கடலாகிறது. அக் கடலிலே உதிக்கும் பரஞ்சோதியாக உள்ளது இறைமை," என்கிறார் மாணிக்கவாசகர்:

"பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி"

(திருவாசகம்—திருத்தெள்ளேணம்-12)

பக்தி உணர்வால் ஏத்திநின்று பணிபவர்கள் நெஞ்சத்தில் உள்ளது இறைமை என்று பாடுகிறார் நாவுக்கரசர்;

Koviloor Digital Library



"பத்தியால் ஏத்திநின்று பணிபவர் நெஞ்சத்துள்ளார்"
(தேவாரம்-திருவதிகை வீரட்டானம்)

"முக்தி என்றொரு நிலையே முழுதினையும் உணர்ந்து உருகும் பக்தி நிலைதான்" என்கிறார் பரமஞானக்கவி பாரதியார்:

"முக்தி என்றொரு நிலை சமைத்தாய் - அங்கு
முழுதினையும் உணரும் உணர்வமைத்தாய்
புக்திஎன்றொரு நிலை வகுத்தாய் - எங்கள்
பரமா! பரமா! பரமா!"

**எத்தகைய முன்னேற்றம்!**

உலகத்தில் மனிதன் தோன்றி முப்பத்தேழு இலட்சம் ஆண்டுகள் ஆகின்றன என்று அண்மையிலே கண்டு பிடித்திருக்கின்றனர்!

('Science To-day' – March'76)

முப்பத்தேழு இலட்ச வருஷங்களுக்கு முந்திய ஆதிகால மனிதன் ஆடுகளும் மாடுகளும் இயற்கையினை எவ்வாறு பார்க்கின்றனவோ அவ்வாறுதான் பார்த்திருப்பான். அந்த விலங்கினங்கள் அன்று பார்த்தது போலவே இன்றும் இயற்கையினைப் பார்க்கின்றன. அதில் மாறுதல் ஏதும் இல்லை. ஆனால், மனிதனின் பார்வையிலேதான் எத்தகைய மாறுதல்!

உலகத்தில் உதித்த மனிதன் தன்னைச் சூழ்ந்துள்ள இயற்கையைப் பார்த்தான். எல்லையற்ற பரவெளியையும், எண்ணற்ற ஒளிப்பொருள்களையும் கண்டு கண்டு வியந்தான், அஞ்சினான். நாளடைவில் இயற்கையோடு இணைந்து ஒரு சக்தி உள்ளது என்பதை ஓர்ந்து உணர்ந்தான். அச் சக்திதான் எல்லாமாகி நிலவுகிறது என்பதைக் கண்டான். அச் சக்தியை இறைமை என்று அழைத்தான். அதுவேதான் தன்னுள்ளும் இருக்கிறது என்ற உண்மை ஒளி அவன் உள்ளத்திலே உதித்தது. "எங்கும் நிறைந்திருந்த ஈச வெள்ளம் என்னகத்தே பொங்குகின்றது என்றெண்ணிப் போற்றி நின்றாள்". உடல் சிலிர்க்க, உள்ளம் உருக இறைமையினை நாடும் அவன் இதயத்திலே இன்பவுணர்வு பெருகியது. இறைவனை நாடும் இந்த இயல்பான ஈர்ப்பினைப் "பக்தி" என்று கொண்டான். எத்தகைய ஆன்மீக மலர்ச்சி!

பக்திக் கண்கொண்டு பரம்பொருளைக் காணுகையில், பரம்பொருள் அவனைப் பெற்ற தாயாக, பிறப்பித்த தந்தையாக,

Koviloor Digital Library



உற்ற தோழனை, உயிர்க் காதலனைத் தோன்றுகிறது! பச்சிளங் குழவியாகப் பாலிக்கின்றது!

அச்சவுணர்வுடன் இயற்கையினைக் கண்டு அன்று வியந்து நின்ற மனிதன், இன்று அன்புணர்வுடன் இறைமைக்குப் பல்லாண்டு பாடும் பண்பினை எய்தி விட்டான்!

''பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
பல்கோடி நூறுயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு.

(பெரியாழ்வார் திருப்பல்லாண்டு)

என்று பாடும் அடியார்கள் பக்தி உணர்வால் எத்தகைய உயர் வினை எய்தி விட்டார்கள்!

இருண்ட குகையில் வாழ்ந்து இயற்கையினைக் கண்டு மருண்டு நின்ற மனிதன் எங்கே! இயற்கையிலே இறைமையினைக் கண்டு அதற்குப் பல்லாண்டு பாடும் பக்தன் எங்கே!

எத்தகைய மாற்றம்! எவ்வளவு முன்னேற்றம்!

இயற்கையைக் கண்டு விழித்து நிற்கும் எத்தனையோ வகை விலங்கினங்கள் அன்று இருந்தபடியேதான் இன்றும் இருக் கின்றன. ஆனல், பகுத்துணரும் பண்பு பெற்ற மனிதனின் இதயத்திலே இயற்கைத் தோற்றத்தால் எழுந்த அச்சம் அன்பாக மாறியது! பயம் பக்தியாகப் மலர்ந்தது!

இயற்கையில் இறைமையினை ஓர்ந்து கண்ட மனிதன், இறைமையோடு இணைந்து விடுகிறுன்! ஈடில்லா இன்ப நிலை எய்தி விடுகிறுன்!

இது மனித குலம் வரலாற்று வளர்ச்சியிலே அடைந்த முன் னேற்றம் மட்டும் அன்று. நாம் ஒவ்வொருவருமே பிறந்து வளரும் நிலையில் பெறும் முன்னேற்றமும் இதுதான்.

குழந்தைப் பருவத்தில் நாமும் குகைவாழ் மனிதன் நிலையில் தான் இருக்கிறேம். இயற்கையைக் கண்டு அஞ்சுகிறேம். மெல்ல மெல்ல இறைமையுணர்வு பெறுகிறேம். பக்தி நெறியில் நிற்கிறேம். பல்லாண்டு பாடத் துணிகிறேம்.

Koviloor Digital Library


இதற்குத் துணை நிற்பது அடியார்கள் நமக்கு அளித்துச் சென்ற ஞானத்தமிழ். பக்திநெறி பரவும் இந்த ஞானத்தமிழ்தான் நம் இதயத்திலே ஞானச்சுடரை ஏற்றுகின்றது!

"அன்பு என்ற தகளியும் ஆர்வம் என்ற நெய்யும் இன்புருகு சிந்தை என்ற திரியும் கூடிவிட்டால் இறைமையாகிய ஞானச்சுடர் எளிதாகத் துளங்குகிறது. இந்த ஞானச்சுடரை ஏற்றுவதற்குத் துணை நிற்பது ஞானத் தமிழ்" என்று நாம் எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் பாடுகின்றார் பூதத்தாழ்வார்:

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி
ஞானச்சுடர் விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்"

(இயற்பா இரண்டாம் திருவந்தாதி-1)

"அன்பெனும் பிடியில் அகப்படும் மலையே"

என்று பாடுகிறது இராமலிங்க அடிகள் பாடிய ஞானத்தமிழ்.

"பக்தர்களின் பக்தியிலே அகப்படுவது என்றல்லாமல் இறைமையினை வேறு எவ்வாறு சொல்ல முடியும்" என்கிறது திருமூலரின் ஞானத்தமிழ்:

"பத்தர்தம் பத்தியிற் பாற்படல் அல்லது
முத்தினை யார் சொல்ல முந்துகின்றாரே."

(திருமந்திரம் 2626

"பக்தர்களுக்கு எளியவன், பிறருக்கு அரியவன் இறைமை", என்கிறது நம்மாழ்வார் நவிலும் ஞானத்தமிழ்:

"பத்துடை அடியவர்க்கு எளியன் பிறர்களுக்கரிய
வித்தகன்......"

(திருவாய்மொழி--1 ப. 3. தி)

சொல்லில் அடங்காத இறைவன், எண்ணுவதற்கும் எட்டாத இறைவன், பக்தி என்ற வலையிலே அகப்பட்டுக் கொள்ளுகிறான்" என்கிறது மாணிக்கவாசகரின் ஞானத் தமிழ்:

Koviloor Digital Library



"சொற்பதம் கடந்த தொல்லோன் காண்க
சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க
பக்தி வலையிற் படுவோன் காண்க"

(திருவாசகம் திருவண்டப்பகுதி)

சொல்லுதற்கரிய, எண்ணுதற்கும் எட்டாத இறைமை, பக்தி என்ற வலையிலே அகப்பட்டு விடுகிறது என்ற ஞானத்தைப் புகட்டுகின்றனர் மெய்ஞ்ஞானிகள்.

பக்தி நெறியே பாரதப் பண்பாட்டின் ஆதார நெறியாக அமைந்து விளங்குகிறது!

Koviloor Digital Library

# 18. ஆத்திகமும் நாத்திகமும்

"முழு நம்பிக்கையுடன் எந்தத் தெய்வத்தை யார் வணங்கினாலும் அது என்னை வணங்குவதேயாகும்......."

(பகவத் கீதை—9-23)

ஐம்பொறிகளுக்கும் புலனாகாமல் உள்ளத்து உணர்வாக உள்ள இறைமைக்கு உவமானமாக மலரின் மணத்தைக் கூறுகின்றனர் ஞானிகள்.

பூவின் மணம் எவ்வாறு எங்கும் பரவுகின்றதோ அவ்வாறே இறைமை எங்கும் நிறைந்து மேவுகிறது என்கிறார் மாணிக்க வாசகர்:

"பூவி னாற்றம் போன்று உயர்ந்தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை."

(திருவாசகம்—திருவண்டப் பகுதி)

"கள்ளுருகு மலர் மணம் போல் கலந்து
எங்கும் நிறைந்தோய்........"

(திருவருட்பா)

என்று பாடுகின்றார் இராமலிங்க அடிகள்.

**மலரும் மணமும்**

இறையுணர்வு என்ற மணத்தை மக்களுக்குப் புலப்படுத்தும் நறுமலர்களாகவே நல்ல மதங்கள் அனைத்தும் விளங்குகின்றன. உலகப் பகுதிகள் ஒவ்வொன்றின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மதங்கள் என்ற மலர்களின் வண்ணங்கள் அமைந்துள்ளன. அம்மலர்கள் வண்ணங்களில் வேறுபட்டிருந்தாலும் மணத்தில் வேறுபடுவதில்லை.

பல்வேறு நிறங்களைக் கொண்ட அம்மலர்களில் இருந்து கமழுவது இறையுணர்வு என்ற ஒரே மணந்தான். இந்த இறைமை

Koviloor Digital Library



மணம் மதங்கள் என்ற மலர்கள் அனைத்துக்கும் பொதுவானது. இறைமை மணத்தின் மாட்சியே மதங்களாகிய மலர்களின் மாட்சியாக உள்ளது.

பொதுவாக, ஒரு பொருளின் நிறந்தானே நம் கண்களைக் கவருகின்றது? எனவே, சமயங்கள் என்ற மலர்களின் பல்வேறு வண்ணங்களே மக்களின் மனத்தைக் கவர்ந்தன! மணத்தைவிட நிறங்களில் கவர்ச்சி அதிகம். ஆதலால், மக்களில் பெரும்பாலோர் மலர்களின் மணத்தை நுகராமல் அவற்றின் நிறங்களில் மயங்கி விட்டனர்!

எனவே, மணத்தைவிட நிறமே முதன்மையானது என்று கருதும் நிலை எழுகின்றது. நிறங்களால் ஈர்க்கப்பட்ட மக்கள் தங்களுக்கு உகந்த நிறம் எதுவோ அந்த நிறப்பூவே உயர்ந்தது என்று கூறத் தலைப்பட்டனர்! மணத்தைப் பொறுத்து ஒரே நிலையில் உள்ள மலர்களை நிறத்தின் அடிப்படையில் வேறுபடுத்தி, ஒன்றை மேலென்றும் மற்றொன்றைக் கீழென்றும் பேசத் தொடங்கினர்!

"சிவப்பு நிறப்பூவே சிறந்தது," என்றனர் சிலர். "மஞ்சள் நிற மலரே மதிப்புடையது," என்றனர் சிலர். "வெள்ளை நிற மலர்தான் விரும்பத் தக்கது," என்றனர் வேறு சிலர்!

இவ்வாறு, மலர்களின் வெளித் தோற்றமான நிறங்களிலே மயங்கி நின்ற மக்கள் அம்மலர்களின் மணத்தை மறந்தனர், உண்மைக் குணத்தை மறந்தனர்! நாளடைவில், கண்ணைக் கவரும் நிறங்கள் கருத்தைக் கவரும் மணத்தை மறைத்து விட்டன!

பொதுக் குணமான மணத்தினை மக்கள் மறந்ததால், நிறங்களின் வேறுபாடுகள் மலர்களிடையே மாறுபாடுகளை வளர்த்தன. மலர்களிடையுள்ள ஒற்றுமையினை உணர்த்தும் மணம் மறக்கப்பட்டதால் நிறங்களின் அடிப்படையில் வேற்றுமை பெருகியது!

மணத்தை மறந்த மக்கள் மலர்களையும் மெல்ல மெல்ல மறந்தனர்! மணமும் மலர்களும் மறைந்த பின்னர் வெறும் நிறங்களே மிஞ்சி நின்றன!

மலர்களில் இருந்து மணத்தை நுகர வேண்டிய மக்கள் அம்மலர்களின் நிறங்களில்இருந்து மணத்தினை நுகரத் தலைப்பட்டனர்! நிறங்களில் ஏது மணம்? எனினும், நிறங்களின் கவர்ச்சியில்

Koviloor Digital Library



மயங்கி, நிறங்கள்தான் மணம் என்று கருதி நிறங்களைப் போற்றத் தொடங்கினர்கள்!

"சிகப்பு நிறமே சிறந்தது," என்றும், "மஞ்சள் நிறந்தான் மதிப்புடையது," என்றும், "வெண்மை நிறத்திற்கு வேறெதுவும் ஈடில்லை," என்றும் வாதப்பிரதிவாதங்கள் எழுந்தன! போட்டி வலுத்தது! போட்டி போராட்டமாக உருவெடுத்தது!

இத்தகைய போட்டியும் போராட்டமும் எவ்வளவு கேலிக் கூத்தானவை! இதே போன்றதுதான் பல்வேறு சமயங்களுக்குள் நிகழும் போட்டியும் போராட்டமும்!

**சமயமும் சடங்குகளும்:**

இறையுணர்வினை அடிப்படையாகக் கொண்டுதான் பல்வேறு மதங்கள் உலகில் தோன்றின. மதங்கள் தோன்றிய உலகப் பகுதி களின் சூழ்நிலைகளுக் கேற்ப மதச்சடங்குகள் வகுக்கப்பட்டன. நாளடைவில் அச் சடங்குகளே சமயங்களின் சாரம் என்று மக்கள் கருதத் தலைப்பட்டனர். சடங்குகளின் வேறுபாட்டால் சமயங்கள் மாறுபட்டன. மாறுபட்ட சமயத்தினரிடையே போட்டியும் பூசலும் தோன்றின!

சமயங்கள் அனைத்தின் சாரம் இறையுணர்வுதான். இறை யுணர்வினை மட்டும் கருத்திற் கொண்டால் சமயங்களிடையே வேறுபாடில்லை, மாறுபாடில்லை. சாரமில்லாத சடங்குகளை எடுத்துக் கொண்டு சமயங்களிடையே வேற்றுமைகள் வளர்க்கப் பட்டன. இன்றும் வளர்க்கப்படுகின்றன!

**நாத்திகம்**

சமயம் என்பது சடங்குகளில்தான் அடங்கியிருக்கிறது, சடங்குகள் இன்றிச் சமயம் இல்லை என்று சமயவாதிகள் அடித்துக் கூறுவதைப் பிடித்துக் கொண்டு சமயங்களனைத் தையுமே சாடினர் சிலர். பொருளற்ற சடங்குகளின் புன்மை யினைக் காட்டி மதங்களனைத்தையும் அவர்கள் மறுத்தனர்! இவ் வாறு நாத்திகம் வளர்ந்தது!

சடங்குகளே சமயம் என்கின்றனர் சமயவாதிகளான ஆத்தி கர்கள்! சடங்குகளின் சழக்குகளைக் கூறி சமயங்களையே மறுக் கின்றனர் நாத்திகர்கள்!

Koviloor Digital Library



இறையுணர்வு என்ற உண்மையினை மறந்தனர் ஆத்திகர்கள். எனவே, அந்த உண்மையினை மறுத்தனர் நாத்திகர்கள்.

சமயச் சடங்குகளில் உள்ள பொருளற்ற வழக்கங்களையும் அருளற்ற செயல்களையும் எடுத்துக் கூறும் எழுத்துக்களே இன்றைய நாத்திகத்தின் இலக்கியங்களாக இருக்கின்றன. சமயச் சழக்குகளும் சாத்திர அழுக்குகளுமே நாத்திகம் என்ற மரம் வளருவதற்கு உரமாகப் பயன்படுகின்றன. பொய்மைச் சாத்திரங்களும் புன்மைச் சடங்குகளுந்தான் நாத்திகம் பேசுவோர்க்கு நல்ல வாதங்கள் ஆகின்றன.

சமயவாதிகள் எல்லோரும் தங்கள் மதங்களில்தான் இறைமை விளக்கம் இருக்கிறது என்று அரற்றி அலைகின்றனர் என்று கூறி அவர்களைக் கண்டிக்கின்றார் மாணிக்கவாசகர்:

"சமய வாதிகள் தத்தம் மதங்களில்
அமைவதாக அரற்றி மலைந்தனர்"

(திருவாசகம் – போற்றித் திருவகவல்)

எனவே,

"ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்."

(திருவாசகம் –போற்றித் திருவகவல்)

என்கிறார்.

"இறைமைக்கு இலக்கணம் கூறுவது அது இல்லை என்று மறுப்பதேயாகும்!" என்கிறார் ஸ்பினோசா என்ற மேலை நாட்டு ஞானி!

"To define God is to deny Him"—Spinoza.

இறையுணர்வு புகட்ட வந்த சமய சாத்திரங்களின் நிலைகண்டு உண்மையான அடியார்கள் உளம் நொந்து போனார்கள்.

சொல்வதற்கும், அறிவதற்கும், ஏன், நினைத்துப் பார்க்கவும் கூட இயலாதது இறைமை எனக் கண்டோம். ஆதலால்தான்,

Koviloor Digital Library



"நுணுக்கரிய நுண்ணுணர்வு"
"தெரிவரிதாகிய தெளிவு"
"உன்னர்க் கரியது"

(திருவாசகம்)

என்றெல்லாம் இறைமை போற்றப்படுகிறது.

ஆனல், சமயச் சாத்திரங்கள் செய்வதென்ன?

எண்ணுதற்கும் எட்டாத இறைமைக்கு இலக்கணங்களை வகுக்கின்றன. சொல்லுவதற்கு இயலாத பொருளைப்பற்றிச் சொல்லிக் கொண்டே போகின்றன.

இத்தகைய சமயச் சாத்திரங்களால் இறையுணர்வினை நமக்கு எவ்வாறு புகட்ட முடியும்?

எனவே, சமய சாத்திரங்களில் இறைமை அடங்குவதில்லை என்ற உண்மையினை உறுதிபடக் கூறி நம்மை எச்சரிக்கின்றனர் மெய்யடியார்கள்.

அறுவகைச் சமயங்கள் நீண்டநாட்களாக நிலவுகின்றன.

"இந்த ஆறு சமயங்களாலும் அளந்து காண்பதற்கு அரியவன் இறைவன்" என்று பாடுகின்ருர் ஞானி நம்மாழ்வார்:

"விளம்பும் ஆறு சமயமும் அவையாகியும் மற்றும்தன்பால்
அளந்து காண்டற்கு அரியனுகிய ஆதிப்பிரான்..."

(திருவாய்மொழி – 4 ப. 10 தி.)

"ஆறு வகையான சமயவாதிகளும் தம் உள்ளத்தில் உறையும் கடவுளைக் காணவில்லை" என்கிருர் திருமூலர்:

"ஆயத்துள் நின்ற அறு சமயத்தோரும்
காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலர்!"

(திருமந்திரம் 1530)

உண்மை ஞானம் பெற்ற உயர்ந்த ஞானிகள் இறைமை பற்றி அறுதியாகக் கூறுவது இயலாது என்பதை உணர்ந்து அதனை நமக்கும் உணர்த்துகின்றனர்.

"இறைமையை 'அது' என்று குறிக்க முற்பட்டால் 'எது' என்ற ஐயம் எழும். எது என்று அதைச் சொல்வது? ஆதலால்

Koviloor Digital Library



'அது' என்று கூட இறைமையினைக் குறித்து சொல்லுவதைஅறவே விட்டுவிட்டேன்,'' என்று பாடுகின்றார் தாயுமானவர்:

"அது என்றால் எதுஎன ஒன்றடுக்குஞ் சங்கை
ஆதலினால் அதுவெனலும் அறவே விட்டேன்"

(செங்கை—சந்தேகம்)

''கடவுளின் தன்மையினை எவ்வாறு சொல்ல முடியும்? சிறிதளவு சொல்லுவதற்கென நாவை அசைத்தலும் அரிது என்று பாடுகின்றார் இராமலிங்க அடிகள்:

"இசைத்தல் எங்ஙனமோ ஐயகோ சிறிதும்
இசைத்திடுவேம் என நாவை
அசைத்திடற்கு அரிது என்று உணர்ந்துளோர் வழுத்தும்
அருட்பெருஞ்சோதி, என்னரசே!"

(திருஅருட்பா - அஷ்டகம்)

"கடவுள்'' என்ற சொல்லை எளிதாகச் சொல்லி விடுபவர்களையும் எளிதாக எழுதி விடுபவர்களையும் காணும்பொழுது வியப்பும் திகைப்பும் உண்டாகின்றன. சமயப் பொருள்கள் பற்றிப் பேசும்பொழுது அடக்கமும் பணிவும் நாணமும் வேண்டும். அடித்துப் பேசுதல் அடுக்காததொன்றாகும்.......''

இவ்வாறு தாமஸ்மான் (Thomas Mann) என்ற ஜெர்மானிய அறிஞர், நோபல் பரிசு பெற்றவர், கூறுகிறார்.

(Thomas Mann in "I believe" Unwin Books.)

**கானல் நீர்**

சமயச் சடங்குகளால் நாம் மெய்ஞ்ஞானம் பெறுதல் இயலாது என்பதை விளக்கும் வகையில் ஒரு காட்சியினை நம் மனக்கண்முன் காட்டுகின்றார் மாணிக்கவாசகர்.

தாகத்தால் வாடும் நீண்ட கண்களுடைய மான் கூட்டம் கானல் நீரை உண்மையான நீர் என்று கருதிக் குடிக்க முயலுகின்றன. தாகம் எப்படி நீங்கும்? தாகம் தீராத நிலையில் நீண்ட வாய்களை அசைபோட்டுக் கொண்டு நிற்கின்றன!

இதுபோல், ஞானத்தாகத்தால் வாடும் நம் உயிர்கள் அறு சமயம் என்ற கானல் நீரைப் பருக முயன்று ஞானத்தாகம் தீராது ஏமாந்து நிற்கின்றன என்கிறார் மாணிக்கவாசகர்:

Koviloor Digital Library


"இருமுச் சமயத்து ஒரு பேய்த்தேரினை
நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணம்
தவப் பெருவாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாபம் நீங்காது அசைந்தன"

(திருவாசகம் — திருவண்டப்பகுதி)

(பேய்தேர்—கானல் நீர்)

**உள்ளத்தை உருக்கும் காட்சி**

தாகத்தால் வாடும் மான்கணங்கள். கானல் நீர். ஆர்வத்தோடு அதைப் பருகும் முயற்சி. தாகந்தீராத் தவிப்பு!

தண்ணீருக்கும் கானல் நீருக்கும் எவ்வளவு வேறுபாடுள்ளதோ அவ்வளவு வேறுபாடுள்ளது மெய்யுணர்வுக்கும் சமய சாத்திரக் கொள்கைகளுக்கும்!

கானல் நீர் போன்ற போலி ஞானக் கொள்கைகளைக் கூறும் சமயவாதிகள் தாங்கள் கொண்ட கொள்கைகளே உண்மையானவை என்று உறுதிப்படப் பேசுகின்றனர்! இதைக் கண்டு வியப்படைகின்றார் தாயுமானவர்!

"கடல் மணலையாவது எண்ணிப் பார்த்து விடலாம். கடவுளின் அளவை இதுவென்று கருதிப் பார்க்கவாவது இயலுமா? தனிப் பொருளான இறைமையின் தன்மை பற்றிக் கூறுவதற்கு உங்களுக்கு வாய் இருக்கிறதா? என்று சாத்திரங்களை நோக்கிக் கேட்கின்றார் அந்த ஞானி!

"சுருதியே! சிவாகமங்களே! உங்களாற் சொல்லும்
ஒரு தனிப் பொருள்அளவை ஈதென்ன வாயுண்டோ?
பொருதிரைக் கடலுள் மணல் எண்ணினும் புகலக்
கருத எட்டிடா நிறைபொருள் அளவை யார் காண்பார்?

(ஆசையெனும்)

சமய சாத்திரங்களிலே மயங்கி நின்று நாம் உண்மையான இறையுணர்வினைப் பெறாமல் போய்விடக் கூடாது என்ற ஆர்வத்தால்தான் மெய்ஞ்ஞானிகள் சாத்திரச் சடங்குகளை இவ்வாறு சாடுகின்றனர்.

ஆனால் மதவாதிகள் கூறுவதென்ன?

Koviloor Digital Library


தங்கள் மதத்தில்தான் உண்மை உள்ளது. பிற மதங்களனைத்தும் பொய்யானவை என்று உறுதிபடக் கூறுகின்றனர், சமயப் பற்று சமய வெறியாகிறது. தாம் சார்ந்துள்ள மதத்தினைப் போற்றுவது போக மற்ற மதங்களைத் தூற்றுவதே தொழிலாகி விடுகின்றது.

இத்தகைய மதவெறியால்தானே எத்தனையோ போர்கள் உலகில் நடந்தன?

**சமயவாதமும் மெய்யுணர்வும்**

உள்ளத்தில் உறைவது இறைமை: அதனை உள்கித் திளைப்பதே முறைமை—

என்று மெய்யுணர்ந்தோர் கூறுகின்றனர்.

சாத்திரங்கள் கூறுவதே இறைமை:
சடங்குகள் போற்றுவது கடமை—

என்று சமயவாதிகள் சாதிக்கின்றனர்.

இறைமையின் இயல்பினை உள்கி உள்கித் திளைக்கும் உள்ளம் உருகுகின்றது; இதுதான் இறைமை என்று எண்ணி இறுமாப்புக் கொள்ளும் இதயம் இறுகுகின்றது!

உருகும் உள்ளத்தில் உதிப்பது அன்பு: இறுகும் இதயத்தில் எழுவது அகந்தை.

அன்பு விளைவிப்பது ஒற்றுமையை: அகந்தை விளைவிப்பது வேற்றுமையை.

ஒற்றுமையால் உறுவது இன்பம்: வேற்றுமையால் விளைவது துன்பம்.

இன்றைய உலகத்துத் துன்பங்கள் பலவும் இந்த வேற்றுமையுணர்வால் விளைபவைதாமே!

“பேய் பிடித்த பைத்தியக்காரன் விளையாடும் விளையாட்டுப் போன்றது மத நெறிகள் என்பதைத் தெரிந்து கொள்ளாமல், மக்கள் கொண்ட வேற்றுமையுணர்வால் எத்தனை மதப் போர்கள் உலகிலே நடந்து விட்டன! எத்தனை பேர்கள் அப் போர்களில் மாண்டு போயினர்!”

Koviloor Digital Library



என்று உள்ளம் உருகிப் பாடுகின்றார் இராமலிங்க அடிகள்:

பேருற்ற உலகிலொரு சமயமத நெறியெலாம்
பேய்பிடிப்புற்ற பிச்சுப்
பிள்ளை விளையாட்டென உணர்ந்திடாது உயிர்கள்
பல பேதமுற்று அங்குமிங்கும்
போருற்று இறந்து வீண் போயினர்......"

(திருவருட்பா நட.ராசபதிமாலை)

உண்மையான ஞான நூல்களுக்கு மாறாகக் கள்ள மதங்கள் பரப்பும் சாத்திரக் கதைகளை கண்டிக்கின்றார் பாரதியார்:

"மெள்ளப் பலதெய்வம் கூட்டி வளர்த்து
வெறுங்கதைகள் சேர்த்துப் - பல
கள்ள மதங்கள் பரப்புதற் கோர்மறை
காட்டவும் வல்லீரோ?"

நம்மாழ்வார் வைணவ சமயத்தினர் போற்றும் ஞானி. மாணிக்கவாசகர் சைவ சமயத்தைச் சேர்ந்த அடியார். இவர்களே சமய சாத்திரங்களைச் சாடுகின்றார்கள் என்றால் காரணம் என்ன?

வேற்றுமைகளை வளர்க்கும் சமய சாத்திரங்கள் என்ற கடலுக்குள் விழுந்து நாம் தடுமாறி விடக்கூடாது என்பதற்காகத் தான்.

"உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்
சவலைக் கட லுளனாய்க் கிடந்து தடுமாறும்"

(திருவாசகம்-திருத்தெள்ளேணம்-17)

என்று பாடுகின்றார் மாணிக்கவாசகர்.

**சைவமும் வைணவமும்**

இந்து சமயத்தின் இருபெரும் பிரிவுகள் சைவமும் வைணவமும்.

சிவபெருமானை முதல் மூர்த்தியாகக் கொள்வது சைவம். திருமாலை முதல் மூர்த்தி என்று போற்றுவது வைணவம்.

இருப்பினும் இரண்டும் ஒன்றுதான் என்ற உண்மையினை உணர்த்தும் வகையில் பாடியுள்ளனர் இரு சமய ஞானிகளும்!

Koviloor Digital Library



"கங்கைநீர் தங்கும் சடையுடைய சிவனும் திருமாலும் வேறல்ல" என்று பாடுகின்ருர் நம்மாழ்வார்:

"வெள்ளநீர்ச் சடையானும் நின்னிடை வேறலாமை
விளங்க நின்றதும்"

(திருவாய்மொழி—5ப. 10தி )

சிவனில் திருமாலும், திருமாலில் சிவனும் உண்டு. இரண்டும் வேறல்ல என்று தெளிவாக உணர்த்துகின்ருர் பொய்கை யாழ்வார்;

பொன்திகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும்,
நின்றுலகம் தாய நெடுமாலும், – என்றும்
இருவரங்கத்தால் திரிவரேலும், ஒருவன்
ஒருவன் அங்கத்து என்றும் உளன்.

(இயற்பா – முதல் திருவந்தாதி-98)

"உமையொரு பாகன்" சிவன் என்ருல், சக்தியாக உள்ளது திருமால் என்கிருர் சிவஞானி நாவுக்கரசர்:

"அரியலால் தேவி இல்லை ஐயன் ஐயாறனுர்க்கே."

(தேவாரம்—திருவையாறு)

"சீரேறு திருமாலோர் பாகத்தான்காண்."

(தேவாரம்—திருவாரூர்)

இதனையே கூறுகின்ருர் வைணவஞானி திருமங்கையாழ்வார்

"பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து
பிரமனைத் தன்னுந் தியிலே தோற்றுவித்து"

(பெரியதிருமொழி-3-4)

வடமொழி தமிழ்மொழி என்ற போட்டிக்கும் இறையுணர்வில் இடமில்லை என்பதை உணர்த்தும்வகையில், வடமொழியாகவும் தமிழாகவும் இறைவன் இருப்பதாகப் பாடியுள்ளனர்.

"ஆரியம் தமிழோடு இசையானவன்"

(தேவாரம்—திருக்கடம்பந்துறை)

என்று பாடுகின்ருர் நாவுக்கரசர்.

Koviloor Digital Library


"செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி"

(திருநெடுந்தாண்டகம்-4)

"செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்"

(பெரிய திருமொழி-7-8)

என்று இறைவனைப் போற்றுகின்றார் திருமங்கையாழ்வார்.

இவ்வாறு, வேறுபாடுகளை விலக்குகின்றனர் மெய்யடியார்கள்.

**ஒற்றுமை சேர்ப்பது உண்மைச் சமயம்**

இறையுணர்வு என்பது மக்களை இணையச் செய்வது, உயிர்களனைத்தையும் ஒன்று சேர்ப்பது.

அந்த இறைமையின் பெயராலேயே மக்களிடை மாறாத பிளவுகள் தோன்றுவதைக் கண்டு மனமுடைந்து போகின்றனர் ஞானிகள்.

"இறைமை என்ற உண்மையினை எத்தனையோ பெயர்களைக் கொண்டு குறிக்கலாம் என்று மறைகள் கூறுகின்றன. ஆனால், மக்கள் அந்தப் பெயர்களில் ஒன்றை எடுத்துக் கொண்டு அது தான் உண்மை என்று வாதாடுகின்றனரே! இவ்வாறு நடக்கும் என்று நான்மறைகள்கூட எதிர்பார்க்கவில்லை!" என்று பாடுகின்றார் பாரதியார்:

"நாமம் பல்கோடியொர் உண்மைக்கு உளவென்று
நான்மறை கூறிடுமே - ஆங்கோர்
நாமத்தை நீர் உண்மையென்று கொள்வீரென்றந்
நான்மறை கண்டிலதே"

(அறிவே தெய்வம்)

இறைமைக்கு என்று குறிப்பிட்ட உருவமோ குறிப்பிட்ட பெயரோ எதுவும் இல்லை. எனவே, இறையுணர்வு பெறுபவர்கள் எந்த உருவத்தை எண்ணினால் என்ன? எந்தப் பெயரைச் சொன்னால் என்ன?

"இறைமையை எண்ணுபவர்கள் எந்த உருவத்தை விரும்புகின்றார்களோ அந்த உருவமாகவே இறைமை உள்ளது; எந்தப் பெயரைக் கொண்டு இறைமையினைக் குறிக்கின்றார்களோ அந்தப் பெயரையே இறைமை கொண்டுள்ளது; எந்த வண்ணத்தில் அதை

Koviloor Digital Library



விரும்பிச் சிந்திக்கின்ருர்களோ அந்த வண்ணமாகவே இறைமை இருக்கிறது,'' என்று பாடுகிருர் பொய்கை யாழ்வார்:

"தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம்தானே,
தமர் உகந்தது எப்பேர் மற்றுஅப்பேர், - தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித்து இமையா திருப்பரே,
அவ்வண்ணம் ஆழியா னும்.''

(இயற்பா-முதல் திருவந்தாதி-44)

நாவுக்கரசரும் இதையே கூறுகின்ருர்:

"ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்"

(தேவாரம்—திருப்பூவணம்

இத்தகைய உயர்ந்த சமரச ஞானத்தினைப் புகட்டுகின்றனர் பொய்யடிமையில்லாப் புலவர்கள்.

**உளன், இலன்**

இதையெல்லாம்விட நாத்திகத்திற்கும் இடமளிக்கின்றனர் ஞானிகள்! அவர்கள் நாத்திகத்தை ஏற்றுக்கொள்ள வில்லை; ஆனல் நாத்திகக் கொள்கையினை ஆத்திகக் கொள்கையில் அடக்கி விடுகின்றனர்!

"இறைமை என்று ஒன்றும் இல்லை'', என்பதுதானே நாத்திகம்? "இல்லை என்ற தன்மையையும் கொண்டதுதான் இறைமை'' என்று இறைமையின் ஏற்றத்தை விளக்குகின்றனர் மெய்யடியார்கள்!

"கண்டார் கண்ட காட்சியு நீ
காணர் காணக் கள்வனு நீ''

(சொல்லற்கரிய)

என்று இறைமையினைக் கூறுகின்ருர் தாயுமானவர்.

உணர்வாக உள்ள இறைமையினை எவரும் மெய்ப்பித்துக் காட்ட இயலாது. அது அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் அப்பாற் பட்டது என்று கண்டோம். எனவே, உணர்ந்தோர்க்கு இறைவன் உள்ளான், உணராதோர்க்கு இறைவன் இல்லான்.

"இல்லானை, எவ்விடத்தும் உள்ளான் தன்னை''

(தேவாரம்-திருப்புன்கூர்)

என்கிருர் நாவுக்கரசர்.

Koviloor Digital Library



"இல்லனுமல்லன் உளனல்லன் எம்மிறை"

(திருமந்திரம்-3015)

என்று பாடுகின்றார் திருமூலர்.

"உளன், இலன் என்ற இரு குணங்கள் இறைமைக்கு உண்டு. இவ்விரு குணங்களோடு எங்கும் ஒழிவின்றி பறந்துள்ளான் இறைவன்!" என்று உயர்ந்த ஞானத்தினைக் கூறுகின்றார் நம்மாழ்வார்:

"உளன் என இலன் என இவை குணமுடைமையில்
உளன் இரு தகைமையொடு ஒழிவிலன் பறந்தே"

(திருவாய்மொழி--1ப. 1 தி.)

இறைமை என ஏதும் இல்லை என்று கூறும் நாத்திகத்தையும் புரிந்து கொண்டு, இறைவனை "உள்ளான், இல்லான்" என்றும், "உளன், இலன்" என்ற இரு குணங்களும் உடையவன் என்றும் அடியார்கள் விளக்கும் அற்புத ஞானத்தினை என்னென்பது!

**ஒன்றே குலம் ஒருவனே தேவன்**

இந்தியத் தென்னாட்டில் "சிவன்" என்று போற்றப்பெறும் இறைவன்தான் எந்நாட்டவர்க்கும் இறைவன் என்று கூறி, உலகனைத்துக்கும் "ஒருவனே தேவன்" என்ற உண்மையினை உணர்த்துகிறார் மாணிக்கவாசகர்:

"தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

(திருவாசகம்—போற்றித் திருவகவல்)

உருகும் உள்ளத்தில் உதிக்கும் உணர்வாக இறைமை இலங்குகிறது. உருகும் உள்ளம் உலகளாவி நிற்பதால், உலக மக்கள் அனைவரையும் அது ஒன்றாகவே காண்கிறது. எனவே, அனைத்து மக்களின் குலமும் ஒன்று, அம்மக்கள் மனத்திடை மன்னும் தெய்வமும் ஒன்று என்ற ஒப்பற்ற உண்மையினை உணர்ந்து ஓதுகின்றனர் ஞானிகள்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்!'

(திருமந்திரம்—2104)

என்பது திருமூலர் வாக்கு.

Koviloor Digital Library

# 19. விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

(குறள்)

சின்னஞ்சிறு குழந்தை தன் தளிர்க் கைகளால் அன்னையை அணைத்துக்கொண்டு அன்பு முகம் காட்டுகிறது. அந்த மதலையின் சிரிப்பிலே மயங்கி நிற்கிறுள் தாய். "இவள் நம்மைப் பெற்றெடுத்த தாயார். எனவே, நாம் இவள்மீது அன்பு காட்ட வேண்டும்" என்ற அறிவினல் அன்பு காட்ட வில்லை அந்த ஆறுமாதக் குழந்தை.

நமக்கு உற்ற நண்பர்மீது நாம் காட்டும் நட்பு அறிவின் அடிப்படையில் எழுவதன்று.

இனிய இசையினைக் கேட்டு நம் இதயம் இளகுகிறது. இதுவும் நம் அறிவின் காரணமாக இல்லை.

தாய்ப்பாசமும், பிறர்மீது நாம் காட்டும் அன்பும், இனிய இசையினை நாம் அனுபவிப்பதும் உணர்வின் அடிப்படையில் அமைகின்றன. உணர்வில் எழும் இவையெல்லாம் உண்மையல்ல என்று கூற முடியாது.

ஐந்தும் மூன்றும் எட்டு என்பதையும், நீரகம் (hydrogen) உயிரகம் (oxygen) இவ்விரண்டின் சேர்க்கையே நீர் என்பதையும் நம் அறிவால் நாம் தெரிந்து கொள்ளுகிறோம்.

இவ்வாறு, சிலவற்றை நாம் உணர்ந்து கொள்ளுகிறோம், சிலவற்றை அறிந்து கொள்ளுகிறோம்.

### அறிவும் உணர்வும்

அறிவு, உணர்வு என்ற இரண்டும் மனிதனின் தனித்தனியான பண்புகள்.

Koviloor Digital Library



மலரின் மணத்தைக் கண்ணுலோ காதாலோ நுகர முடியாது, மூக்கால்தான் முகர வேண்டும். சித்திரத்தின் அழகினை மூக்கால் முகர இயலாது, கண்ணுல்தான் காண வேண்டும்.

இதுபோன்றே, நாம் உணர்ந்து கொள்ள வேண்டியவற்றை நம் அறிவுகொண்டு அறிந்து கொள்ள முடியாது. நாம் அறிந்து கொள்ள வேண்டியவற்றை நாம் உணர்ந்து கொள்ளுதல் இயலாது.

கண்களும் காதுகளும் எவ்வாறு உடற்கருவிகளாக இருக்கின்றனவோ, அவ்வாறே அறிவும் நமக்கு உற்ற கருவியாக இருக்கிறது. வெகுதூரத்தில் உள்ள பொருள்களை நம் கண்களால் காண இயலாது; தூரத்தில் எழும் ஒலிகள் நம் காதுகளுக்குக் கேட்பதில்லை. இவ்வாறு, ஐம்புலன்களின் சக்தி அளவோடு இருப்பது போன்றே அறிவின் ஆற்றலும் ஓர் அளவிற்கு உட்பட்டதுதான்.

ஆனுல், அறிவில் மட்டுமே நம்பிக்கை கொண்டவர்கள் தங்கள் அறிவின் ஆற்றலால் எதையும் அறிந்து கொள்ளலாம் என்று எண்ணுகின்றனர். தம் அறிவுக்கு எட்டாதது என்று எதுவுமே இருப்பதற்கில்லை எனக் கருதுகின்றனர். அறிவுக்கு அப்பாற்பட்டது என்று ஏதும் இல்லை என்பது அவர்களது உறுதிப்பாடு.

அறிவின் துணை கொண்டு ஆராய்ச்சி செய்து எத்தனையோ புதிய பொருள்களை மனிதன் கண்டு பிடித்துக் கொண்டே இருக்கிருன். இதிலிருந்து, இன்னும் மனிதன் அறிவால் காண வேண்டியது எவ்வளவோ இருக்கிறது என்பது தெளிவாகிறது. ஆதலால், அறிவைக் கொண்டு எல்லாவற்றையும் தெரிந்து விட்டதாகவோ, தெரிந்துகொள்ள முடியும் என்பதாகவோ கருதுவதற்கில்லை.

எனவே, "அறிவு அறிவு" என்று அரற்றிக் கொண்டு இருக்க வேண்டாம். அறிவின் அறியாமையை நாம் அறிவதில்லை. அறிவின் அறியாமையைக் கடந்து உண்மையறிவை நாம் பெற்றுவிட்டால், அறிவால் அறிய முடியாத இறைமை என்ற அழகினை நாம் காணுகின்ருேம்," என்கிருர் திருமூலர்.

"அறிவு அறிவு என்றங்கு அரற்றும் உலகம்
அறிவறியாமை யாரும் அறியார்

Koviloor Digital Library



அறிவறியாமை கடந்து அறிவானுல்
அறிவறியாமை அழகிய வாறே.''

(திருமந்திரம் – 2637

அறிவால் அறிய முடியாதது உண்டு என்பதை உணர்வது தான் "அறிவறியாமை கடந்த அறிவு'' என்கிருர் ஞானி.

"அறிவிற்கு அப்பாற்பட்டது பிரமம் என்பதை அறிந்துகொண்டவன்தான் உண்மையில் பிரமத்தை அறிந்தவன்'' என்கிறது கேனுேப நிடதம்.

இதுபற்றி விரிவாக "உணர்வின் மூர்த்தி'', "அறிவரிய மூர்த்தி'' என்ற தலைப்புக்களில் கண்டோம்.

உள்ளத்து உணர்வாக உள்ள இறைமையினை அறிவுகொண்டு அளக்க முற்படுவது இயலாது என்பது தெளிவு.

ஆதலால்தான்,

"அறிவரிய நுண்பொருள்கள் ஆயினுன்காண்"

(தேவாரம்— திருபுத்தூர்)

"யாவரும் அறிதற்கு அரியான் தன்னை"

(தேவாரம்-திருக்கடுவாய்க் கரைப்புத்தூர்)

என்று பாடுகின்ருர் நாவுக்கரசர்.

எனவே, அறிவினை அடிப்படையாகக் கொண்ட அறிவியல் (science) வேறு, உணர்வினை ஆதாரமாகக் கொண்ட ஆன்மவியல் (religion) வேறு. விஞ்ஞானமும், மெய்ஞானமும் வேறு வேருனவை.

**விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்**

ஐம்பொறிகளுக்கும் புலனுகும் ஒலி, ஒளி, பிற பருப் பொருள்கள் இவைபற்றியே விஞ்ஞானம் ஆராய்ச்சி செய்கின்றது ஐம்பொறிகளுக்கும் புலப்படாத இறைமை பற்றியது மெய்ஞ் ஞானம்.

பொறிகளுக்குப் புலனுகும் பொருள்கள் பற்றிய விஞ் ஞானமும், பொறிகளுக்குப் புலனுகாப் பொருள் பற்றிய மெய் ஞானமும் வேறு வேருகத்தானே இருக்க முடியும்?

Koviloor Digital Library


எனவே, மெய்ஞ்ஞானத்தினை விஞ்ஞானக்கண்கொண்டுஆராய முற்படுவதோ, மெய்ஞ்ஞானத்திற்கு விஞ்ஞான அடிப்படையில் விளக்கம் கூற முற்படுவதோ தகாத முயற்சியாகிறது.

ஆதலால், உணர்வாகவுள்ள இறைமையினை இன்னதுதான் என்று அறிவுகொண்டு ஆராய முயலுதல் வீணையாகும்.

"இன்னதென்று கூற முடியாத மாயமான சக்தி ஒன்று எல்லா வற்றிலும் பரவி நிற்கிறது. அதனை நான் காண முடியாவிட்டாலும் நான் அதை உணருகின்றேன். புலன்களுக்குத் தெரியும் பொருள் களில் இருந்து அது முற்றிலும் வேறுபட்டது. அறிவாராய்ச்சிக்கு அப்பாற்பட்டது. கண்ணுக்குத் தெரியாத அந்த ஆற்றல் நம்மை உணரச் செய்கிறது; ஆனாலும் அதனை நம்மால் மெய்ப்பிக்க இயலாது."

இவ்வாறு இறைமைப்பற்றிக் கூறுகிறார் காந்தியடிகள்.

("There is an indefinable mysterious power that pervades everything. I feel it, though I do not see it. It is this unseen power that makes itself felt and yet defies proof, because it is so unlike all that I perceive through my senses. It transcends reason."

Gandhi in "Young India" dated 11-10-1928)

அறிவியல் கண்டுள்ள முடிவுகளைப் பிறர் அறியும்படி மெய்ப் பித்துக் காட்ட முடியும். சோதனைகள் நடத்தி மற்றவர்களுக்குத் தெரியும்படி அறிவியல் உண்மைகளைக் காட்டலாம். ஆனால், உள்ளத்து உணர்வாக உள்ள இறைமையினை மெய்ப்பித்துக் காட்டுதல் இயலாது. அது ஆராய்ச்சிக்கும் சோதனைகளுக்கும் அப்பாற்பட்டது.

இதனால்தான்,

"சோதித்தார் காணாமை நின்றாய் போற்றி"

(நாவுக்கரசர்–தேவாரம்-திருக்கையிலாயம்)

என்றும்,

"ஆராயப்பட்டறியார் கண்டீர், அரவணைமேல்
பேராயற் காட்பாட்டார் பேர்"

(பொய்கையாழ்வார்-இயற்பா முதல் திருவந்தாதி-55)

என்றும் இறைவனை ஏத்துகின்றனர் அடியார்கள்.

Koviloor Digital Library



இவ்வாறு, விஞ்ஞானமும் மெய்ஞானமும் வேறு வேருக இருக்கின்றன. இருப்பினும் அவை ஒன்றுக்கொன்று முரண் பட்டவை அல்ல.

தமிழ் நாட்டில் "இரட்டைப் புலவர்கள்" என்று இருவர் வாழ்ந்தனர். அவர்களில் ஒருவர் குருடர், மற்றொருவர் நொண்டி. குருட்டுப் புலவர் நொண்டிப் புலவரைத் தன் தோள் மேல் தூக்கிக் கொள்வார். தோள்மேல் அமர்ந்திருக்கும் நொண்டிப் புலவர், "இப்படிப் போகவேண்டும், அப்படிச் செல்ல வேண்டும்" என்று வழி கூறுவார்; குருட்டுப் புலவர் அதன்படி நடந்து செல்லுவார்.

இவ்வாறு இருவரும் தமிழ்நாட்டில் பல இடங்களுக்கும் சென்றனர், பாடல்கள் இயற்றினர் என்று ஒரு வரலாறு உண்டு.

எவ்வாறு நடக்க முடியாத நொண்டிக்குக் குருடனும், பார்க்க முடியாத குருடனுக்கு நொண்டியும் உதவியாக இருந்து, இருவரும் பயணம் செய்ய முடிந்ததோ, அவ்வாறே அறிவியலும் ஆன்மவியலும் ஒன்றுக்கொன்று உதவி நிற்கின்றன என்கிருர் 'ஐன்ஸ்டின்' என்ற உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி.

("Science without religion is lame, religion without science is blind."—

Einstein —Bhavan's Journal 30th March 1975)

**'எப்படி' என்பது விஞ்ஞானம், 'ஏன்' என்பது மெய்ஞ்ஞானம்**

நீரகம்(hydrogen) உயிரகம் (oxyzen) சேர்ந்தால் நீர் உண்டாகிறது என்பதை விஞ்ஞானம் கண்டுபிடிக்கிறது. எனவே, "நீர் உண்டாவது எப்படி?" என்ற வினவிற்கு, "நீரகமும் உயிரகமும் சேர்ந்து நீராகிறது" என்று விடையளிக்கின்றது விஞ்ஞானம். ஆனல் நீரகமும் உயிரகமும் சேர்ந்து ஏன் நீராக வேண்டும்? என்று கேட்டால் அதற்கு விஞ்ஞானத்தால் பதில் கூற இயலாது.

மழை எப்படிப் பெய்கிறது என்பதை விளக்கும் விஞ்ஞானம் அது ஏன் பெய்கிறது என்பதை விளக்குவதில்லை.

எனவே, எதைப் பற்றியும் எப்படி என்ற வினவிற்கு விடை காணும் அறிவியல், ஏன் என்ற வினவிற்கு விடை காணுவதில்லை.

Koviloor Digital Library



பூமிக்குள்ள ஈர்ப்பு சக்தியால்தான் முதிர்ந்த தேங்காய் தென்னை மரத்திலிருந்து கீழே விழுகின்றது என விஞ்ஞானம் விளக்குகிறது. ஆனால், இந்த ஈர்ப்புச் சக்தி பூமிக்கு எவ்வாறு வந்தது என்ற வினாவிற்கு விஞ்ஞானத்தால் விளக்கம் அளிக்க இயலாது.

தேங்காய் கீழே விழுவதற்குக் காரணம் பூமியின் ஈர்ப்பு; ஆனால், அந்த ஈர்ப்புக்குக் காரணம்?

ஆதவனுக்கு ஒளி எப்படி வந்தது? சந்திரனில் குளிர்ச்சி எவ்வாறு வந்தது? தீயிலே வெம்மை சேர்ந்தது எப்படி? விஞ் ஞானம் விளக்க முடியாத இவ்வினாக்களுக்கு மெய்ஞ்ஞானம் விடை கூறுகிறது.

என்ன விடை?

சூரியனுக்கு ஒளி வந்த விதமும், சந்திரனுக்குத் தண்மை ஏற் பட்ட வகையும், தீயின் வெப்பமும் விளக்க முடியாதவை; நம் அறிவிற்கு அப்பாற்பட்டவை. எனவே, இறைமையே இதற்குக் காரணம் என்று கூறுகிறது மெய்ஞ்ஞானம்.

"அருக்கனில் சோதி அமைத்தோன் திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன்; திண்திறல்
தீயின் வெம்மை செய்தோன்......
..............................................
அனைத்தனைத்து அவ்வயினடைத்தோன் —..."

(திருவாசகம்—திருவண்டப்பகுதி)

என்று இறைமை போற்றப்படுகிறது.

ஒன்று நம் அறிவுக்கு அப்பாற்பட்டது என்பதைக் கண்டு அதுதான் இறைமையின் இயக்கம் என்று உணர்த்தும் முறை ஆன்மவியலைச் சார்ந்தது.

அறிவியலின் ஆற்றல் தடைப்பட்ட நிலையில் ஆன்மவியல் தொடங்குகிறது. அறிவு கொண்டு காண முடியாததை உணர்வு கொண்டு அது காணுகிறது.

எனவே, சூரியனின் சோதியை, சந்திரனின் தண்மையை, தீயின் வெம்மையை இறைமை என்று உணர்கின்றது ஆன்ம வியல்.

Koviloor Digital Library


ஒவ்வொரு பொருளுக்கும் இன்னென்ன இயல்புகள் உண்டு என்ற அடிப்படையில்தான் விஞ்ஞானம் செயல்படுகிறது. இந்த இயல்புகளுக்கான காரணத்தை, விஞ்ஞானத்தால் காண முடியாத இந்த மூல காரணத்தை, இறைமையாகக் காணுகின்றது மெய்ஞ்ஞானம். அதனால்தான்,

"காரணக் கலைஞானக் கடவுளே"

(நாவுக்கரசர்—தேவாரம்—திருநள்ளாறு)

என்றும்,

"அண்ட கோடிகளையுந் தன்னுள் வைத்து
அணுவினுக் கணுவான காரணத்தை"

(குணங்குடி மஸ்தான் சாகிபு)

என்றும், எல்லாவற்றுக்கும் காரணமாக இறைமையைப் போற்றுகின்றனர்.

இயற்கைப் பொருள்களைப்பற்றி ஆய்கின்றது அறிவியல் என்றால், இயற்கைப் பொருள்களிலே இணைந்து நிற்கும் இறைமை பற்றியதாகிறது ஆன்மவியல்.

எப்பொருள் எத்தன்மையுடன் கூடி இருந்தாலும் அப் பொருளின் உண்மைத் தன்மையினை, மெய்ப்பொருளைக் காணுவது தான் உண்மையான அறிவு என்கிறார் திருவள்ளுவர்:

எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

ஒரு காலத்தில், இயற்கை வேறு, அதனை ஆய்ந்து காணும் மனிதன் வேறு என்ற அடிப்படையில் விஞ்ஞானிகள் செயல் பட்டனர். ஆனால் இன்று, இயற்கையின் பகுதியாகவே மனிதன் இருக்கிறான் என்ற உண்மையினை விஞ்ஞானிகள் அறிந்து கொண்டனர்.

"மனிதன் இயற்கையைத் தன்னிலிருந்து வேறுபட்டதாகக் காணுவதில்லை. இதுவே விஞ்ஞானத்தின் அடிப்படை உண்மை," என்கிறார் Sir James Jeans என்ற புகழ் பெற்ற விஞ்ஞானி.

"Sir James Jeans tells us that the essence of science is that "man no longer sees nature as something distinct from himself."

—"Discovery of India" –by Nehru.)

Koviloor Digital Library



இயற்கையும் தானும் இசைந்துள்ளதை இன்றைய விஞ்ஞானி காணுவதையே, இறைமையும் தானும் இணைந்துள்ளதாக மெய்ஞ் ஞானியும் காணுகின்றான்!

எனவே, விஞ்ஞானத்திற்கும் மெய்ஞ்ஞானத்திற்கும் அடிப் படையில் மாறுபாடு இருப்பதற்கில்லை.

"ஆன்மீகம் அருகியுள்ள நம் காலத்தில், சீரிய விஞ்ஞானிகள் மட்டுமே ஆழ்ந்த மெய்ஞ்ஞானிகளாக உள்ளனர்," என்று கூறு கிறார் இந்த நூற்றாண்டின் தலை சிறந்த விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டின்.

("In this materialistic age of ours, the serious scientific workers are the only profoundly religious people."

—Albert Einstein)

**முழுதாகக் காணுதல்**

இவ்வாறிருக்க அறிவியலும் ஆன்மவியலும் தொடர்பற்றி ருப்பதாக் காணப்படுவதற்குக் காரணம் என்ன?

ஓர் அழகான ஓவியம். இருபது அடி நீளமும் பத்து அடி அகலமும் கொண்ட பெரிய திரையிலே பல வண்ணங்களால் தீட்டப்பட்ட அச் சித்திரம் சுவரொன்றிலே பொருத்தி வைக்கப் பட்டுள்ளது. அந்தச் சுவரை ஒட்டி நின்றுகொண்டு ஓவியத் திரையை ஒருவன் பார்க்கிறான். அவன் கண்களுக்கும் ஓவியத் திரைக்கும் இடையில் ஓரடிதான் இருக்கிறது. இப்பொழுது அவனுக்குத் தெரிவது என்ன? அவன் கண்கள் அளவில் அடங்கும் வண்ணக் கோடுகள் மட்டுமே அவனுக்குத் தெரிகின்றன. ஓவியத்தின் முழு வடிவம் அவனுக்குத் தெரியவில்லை. பிறகு சுவரினை விட்டு நூறு அடி தூரம் தள்ளிப் போய் நின்றுகொண்டு சித்திரத்தைப் பார்க்கிறான். இப்பொழுது அதன் முழு வடிவமும் அவனுக்குத் தெரிகிறது. அழகான சோலை! அங்கே தோகை விரித்தாடும் மயில்! அருகே துள்ளிக் குதித்தோடும் மான்! சித்திரத்தின் இக்காட்சி அவன் மனத்தை ஈர்க்கின்றது!

ஓவியச் சுவரை ஒட்டி அருகில் நின்று ஓவியத்தைப் பார்த்த பொழுது அவன் கண்ணுக்குத் தெரிந்தது ஓவியத்தின் மிகச்சிறிய பகுதிதான். எனவே, அது ஒரு சிறு வண்ணத் திட்டாகவே அவன் கண்களுக்குப்பட்டது. அதன் முழு உருவம் அவனுக்குத் தெரியவில்லை. ஆனால், அவன் சுவரருகிலிருந்து அகன்றுபோய் அதை முழுமையாகப் காணும்பொழுதுதான், ஓவியத்தையும் அதன் அழகையும் அவன் காண முடிந்தது.

Koviloor Digital Library



இதுபோன்றே, இயற்கை என்ற ஓவியத்தை நாம் முழுதாகக் காண முயலும் பொழுதுதான் அதன் எழிலும் ஏற்றமும் நமக்குத் தெரிகின்றன; அந்த ஏற்றத்தில் இசைந்துள்ள இறைமையினையும் நாம் உணருகின்றோம்.

இயற்கையனைத்தையும் இணைத்து முழுதாகக் காணும் முயற்சியில் முகிழ்ப்பதே இறையுணர்வு என்பதை அனுபவத்தால் உணர்ந்த ஞானிகள் கூறுகின்றனர்.

> "அண்ட பகிரண்டமனைத்தும் ஒரு படித்தாக்
> கண்டவர் கண்ட திருக்காட்சியை"
>
> (காண்பேனோ வெள்கண்ணி)

என்று பாடுகின்றார் தாயுமானவர்.

**வெண்ணிலவை எட்டிய விஞ்ஞானி கண்ட காட்சி**

அண்டபகிரண்டமனைத்தும் ஒரு படித்தாக் காணும் முயற்சியில் ஈடுபடும் விஞ்ஞானி எவ்வாறு மெய்ஞ்ஞானி ஆகின்றார் என்பதை அண்மையில் கண்டோம்!

1971ஆம் ஆண்டு ஜூலை மாதம் அப்போலோ 15-ல் சந்திரனில் போய் இறங்கிய அமெரிக்க நாட்டு விண்வெளி விஞ்ஞானி ஜேம்ஸ் பி. இர்வின் என்பவர் கூறுகின்றார்:

> "சந்திரனில் இருந்து கொண்டு அண்டத்தின் அற்புத அமைப்பைக் கண்டபொழுது என் அகந்தை அழிந்து விட்டது. உலக உருண்டையின் உருவத் தோற்றம் உண்மையிலேயே அற்புதமாக இருந்தது!
>
> தொலைவிலே, கருமை நிறம் படர்ந்த பரவெளியில் சின்னஞ்சிறு பந்துபோல் காணப்பட்ட பூமிக் கோளத்தைப் பார்த்ததும் உள்ளம் கிளர்ந்தது, உயிரும் கிளர்ந்தது!
>
> பூமியில் இருந்தபோதைக் காட்டிலும் அம்புலியில் இருந்தபொழுது ஆண்டவனுக்கு அருகில் இருப்பதாக நான் உணர்ந்தேன்"

(Looking out from the moon, Irwin said he was humbled by the perfect design of the universe, but what really struck him was the view of the earth.

Koviloor Digital Library


"It was so far away......... a little ball in the blackness of space. That does something to your mind, to your soul.........

I felt closer to God on the moon than I ever did on the earth."

This was how astronaut James B. Irwin described his religious encounter in the lunar highlands during the July 1971, Apollo 15 moon walk.

—Washington Post—reproduced in the Sunday Standard
dated 3-9-1972).

எல்லையில்லாப் பரவெளி! எங்கோ தூரத்தில் சின்னஞ்சிறு பந்துபோல் மிதந்து கொண்டிருக்கும் பூமிக் கோளம்! விஞ்ஞானத்தின் உதவியால் மனிதன் சந்திரனில் இருந்து கண்ட இந்த மாபெருங்காட்சி இறைமையின் மாட்சியை உணர்த்துகிறது!

இவ்வாறு, விஞ்ஞானத்தின் முன்னேற்றம் மெய்ஞ்ஞானத்தினைப் புகட்டும் வகையில் அமைகின்றது. ஐன்ஸ்டின் கூறியது போல் சீரிய விஞ்ஞானிகள் மெய்ஞ்ஞானிகள் ஆகின்றனர்.

உண்மை என்ற குறிக்கோளைக்கொண்டே அறிவியலும் ஆன்மவியலும் இயங்குகின்றன. இயற்கைப் பொருள்களை ஆய்ந்து உண்மையினைக் காண முயலுகிறது அறிவியல்; இயற்கைப் பொருள்களனைத்திலும் இசைந்து நிற்கும் இறைமையினையே உண்மைப் பொருளாகக் காணுகிறது ஆன்மவியல்.

"இயற்கை யுண்மை வடிவினரே யணைய வாரீர்"

என்று பாடுகிறார் இராமலிங்க அடிகள்.

இயற்கையில் நிலவும் உண்மைப் பொருளையே இறைமை என்று கண்டனர் ஞானிகள்.

**வாலறிவன்**

உள்ளத்து உணர்விலே, ஒளியாக விளங்கும் இறைமையினை "வாலறிவன்" என்கிறார் வள்ளுவர்.

Koviloor Digital Library


கற்றதனுலாய பயன் என்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்

(குறள் 2)

சாதாரண அறிவிற்கு அப்பாற்பட்டதாக ஒன்று உண்டு என்று அறிந்துகொள்ளுவதும் அறிவுதானே? அந்த அறிவு 'வாலறிவு' எனப்படுகிறது. 'மெய்யுணர்வு' காட்டும் இறைமையினை 'வாலறிவன்' என்று வழுத்துகிருர் வள்ளுவர்.

**விஞ்ஞானம் புறவியல், மெய்ஞ்ஞானம் அகவியல்**

ஐந்தும் மூன்றும் எட்டு என்ற அறிவியல் உண்மை மாறுவதில்லை. நீரகமும் உயிரகமும் சேர்ந்தது தண்ணீர் என்ற புறவியலான (objective) உண்மையினை உறுதியாகக் கூறிவிடலாம்.

ஆனுல், அகவியலான (subjective) உணர்வுகளின் நிலை வேறு. ஒரு பொருள் ஒருவருக்கு அழகாகத் தோன்றுகிறது; எனினும், அது மற்ருெருவருக்கு அவ்வளவு அழகாகத் தோன்றுவதில்லை. காரணம் அழகுணர்வு அவரவர் உள்ளத்திற்கேற்ப மாறுகிறது. அகவியலான (subjective) உணர்வு பற்றி எதையும் உறுதியாகக் கூறுவதற்கில்லை.

எனவே, அறியப்படும் பொருள் பற்றி அறுதியிட்டுக் கூறிவிடலாம்; ஆனுல், உணரப்படும் பொருளை உறுதிபடக் கூறுவது இயலாது.

அகவியலான (subjective) இறையுணர்வுபற்றி எதையும் அறுதியிட்டு உரைத்தல் இயலாது. அவரவர்கள் உளநிலைக்கேற்ப அவ்வுண்மை உணரப்பெறுகிறது. இதனை எடுத்துக் கூறுகிறது கம்பன் இயற்றிய கவிதையொன்று:

'ஒன்றே' யென்னில் ஒன்றேயாம், 'பல'வென்று உரைக்கிற்
பலவேயாம்,
'அன்றே' யென்னில் அன்றேயாம், 'ஆமெ'ன்று உரைக்கில்
ஆமேயாம்,
'இன்றே' யென்னில் இன்றேயாம், 'உள'தென்று உரைக்கில்
உளதேயாம்,
நன்றே நம்பி குடிவாழ்க்கை! நமக்கிங் கென்னே
பிழைப்பம்மா!

(கம்பஇராமாயணம் யுத்தகாண்டம்)

Koviloor Digital Library



உணர்வும் அறிவும் ஒன்றி நிற்கும் மனித உள்ளம், இறைமையினை ஒன்ருகவும் பலவாகவும், உளதாகவும் இலதாகவும், குணங்கள் உற்றதாகவும் அற்றதாகவும் காணுகின்றது!

உள்ளத்தால் ஓர்ந்து உணர்வது இறைமை என்பதைப் பகுத்தறிவால் தேர்ந்து தெளிந்த நிலையில் நம் மனத்திலே,

"ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு தெய்வம்"

(திருமந்திரம்)

என்ற தத்துவம் எழுகின்றது.

இந்தத் தத்துவம் எங்கு இருக்கிறதோ அங்கு இறைமை உண்டு, தத்துவம் இல்லாத இடத்தில் இறைமையும் இல்லாததாகி விடுகிறது என்கிருர் திருமூலர்.

"தத்துவம் எங்குண்டு தத்துவன் அங்குண்டு
தத்துவம் எங்கில்லை தத்துவன் அங்கில்லை."

(திருமந்திரம்—2817)

இதயத்து உணர்வாக இறைமை உள்ளது என்ற இந்த மெய்ஞ்ஞானத் தத்துவம் விஞ்ஞானத்துக்கு மாறுபட்டதன்று.

உள்ளத்து உணர்வாலும், உயர்ந்த அறிவாலுமே மனிதன் சிறந்து விளங்குகிருன். மனித நாகரிகத்தின் இரு கண்களாக விளங்குகின்றன உணர்வும் அறிவும், மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும்.

ஆதலால்தான், வேகமாக முன்னேறும் விஞ்ஞான அறிவு அழிவுப் பாதையை விட்டு ஆக்கப்பாதையில் செல்ல வேண்டுமெனில், விஞ்ஞான அறிவோடு மெய்ஞ்ஞான உணர்வும் இணைதல் வேண்டும் என்று கூறுகின்றனர் சான்ருேர். உணர்வும் அறிவும் ஒன்றி நிற்கும் நிலையில்தான், ஆன்மவியலும் அறிவியலும் இணைந்து இயங்கும் நிலையில்தான், மனிதன் மாமனிதனுகிருன், மாண்பு பெறுகிருன்.

Koviloor Digital Library

# 20. இயற்கையும் இறைமையும்

மலைகளும் மாநதிகளும்,
மரங்களும் மலர்களும்,
விலங்குகளும் பறவைகளும்,
எல்லாம் இறைமை,
எதுவும் இறைமை.

பட்டுப் பூச்சியும் நீதான்,
பச்சைக் கிளியும் நீதான்,
உறுமும் மேகமும் நீதான்,
ஒலிக்கும் கடலும் நீதான்.

(சுவேதாஸ்வதர உபநிடதம்)

வானத்து நிலவைக் கண்டு வளரும் குழந்தைகள் எவ்வளவு ஆனந்தப் படுகின்றன! எவ்வளவு குதூகலம் அடைகின்றன! வயது வந்த நமக்கு அத்தகைய ஆனந்தம் ஏற்படுவதில்லை. ஏன்?

மேகத் திரைக்குப் பின்னால் ஒளிந்து விளையாடும் சந்திரனைப் பார்த்துப் பார்த்து நம் சிறுவயதில் நாமும் களித்தது உண்டு. ஆனால், அக்காட்சி பழகிப் போய்விட்டதால் வயது வந்தபின் நமக்கு அதைப் பார்ப்பதிலே மகிழ்ச்சி குறைந்து விட்டது!

ஈடில்லாத அழகுடைய இயற்கைக் காட்சிகள் எத்தனையோ உள்ளன. உதயவானத்தின் ஒப்பற்ற காட்சி, அந்தி வானத்தின் அற்புதம், இரவு நேரத்தில் மின்னும் எண்ணற்ற நட்சத்திரங்கள், ஓடும் மேகங்கள், அவை ஒட்டிப்படியும் மலைகள், மலையிலிருந்து வரும் நதிகள், நதிநீர் பாயும் வயல்கள், வயல்களில் வளரும் பயிர்கள்—இவ்வாறு எத்தனை எத்தனையோ எண்ணற்ற இன்பக் காட்சிகள்!

**எத்தனை கோடி இன்பம்**

ஆடும் மயிலின் அழகுதானென்ன! பாடுங்குயிலின் இனிமை தானென்ன! ஓடும் நீரின் ஒலியுந்தானென்ன! சின்னஞ்சிறு மலர்

Koviloor Digital Library


களில்தான் எத்தனை எத்தனை வண்ணங்கள்! எத்தனை எத்தனை வடிவங்கள்!

இவ்வியற்கைக் காட்சிகளைக் காணும் கவிஞனின் உள்ளம்,

"எத்தனை கோடி இன்பம் வைத்தாய்!"

என்று இன்பத்திலே துள்ளிக் கொண்டு கேட்கிறது.

யாரைப் பார்த்து இவ்வாறு கேட்கிறது?

"எத்தனை கோடி இன்பம் வைத்தாய்-எங்கள்
இறைவா! இறைவா! இறைவா!"

(பாரதியார்)

என்று இறைவனைத்தான் கேட்கிறது!

ஆம்! இயற்கையின் அழகைக் காணும் நம் உள்ளம் இயற்கையில் இசைந்து நிற்கும் இறைமையினை உணருகின்றது!

காலை இளவெயிலின் காட்சி - அவள்
கண்ணொளி காட்டுகின்ற மாட்சி;
நீல விசும்பினிடை இரவில் - சுடர்
நேமி யனைத்தும் அவள் ஆட்சி.

(பாரதியார்)

விண்ணையும் மண்ணையும், ஒளியையும் காற்றையும், ஞாயிற்றையும் திங்களையும் புரிந்து காணும் உள்ளத்தில் பொங்கி எழும் புதுமை உணர்விலே பூத்து மலர்கின்றது இறைமையனுபவம்!

விரிந்த வானே, வெளியே, எங்கும்
விளைந்த பொருளின் முதலே,
திரிந்த காற்றும் புனலும் மண்ணும்
செந்தீ யாவும் தந்தோய்,
தெரிந்த கதிரும் நிலவும் பலவாச்
செறிந்த உலகின் வித்தே,
புரிந்த உன்றன் செயல்கள் எல்லாம்
புதுமை! புதுமை! புதுமை!

என்று பாடுகின்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

Koviloor Digital Library


கவிகளின் உள்ளம் குழந்தை உள்ளம். இயற்கைக் காட்சி களிலே இன்பங்காணும் குழந்தைகளைப் போன்றே கவிஞர்களும் இயற்கையிலே இன்பத்தைக் காணுகின்றனர், இறைமையை உணருகின்றனர்!

ஞானிகளின் உள்ளமும் அவ்வாறே இயற்கைப் பொருள் களில் இறைமையினைக் காணுகின்றது!

"என்ன இயற்கைகளால் எங்ஙனே நின்றிட்டாய், என் கண்ணே!"

(திருவாய்மொழி - 7 ப. 8 தி.)

என்று பாடும் நம்மாழ்வார் இயற்கைக் காட்சிகளிலே கண்ணனையே காண்கின்றார்!

செந்தாமரை மலரிலே திருமாலின் பாதங்களும் கைகளும் கண்களும் தெரிகின்றன அவருக்கு! கருமை நிறமான மலை திரு மாலின் உடம்பாகக் காட்சியளிக்கிறது! வளைந்த பிறைச் சந்திரன் திருமாலின் கையிலுள்ள வெண்சங்கு! சுழன்று கொண்டிருக்கும் சூரியன்தான் மதுசூதனின் சக்கரம்!

"விட்டிலங்கு செஞ்சோதித் தாமரை பாதம்
கைகள்கண்கள்
விட்டிலங்கு கருஞ்சுடர் மலையே திருவுடம்பு
விட்டிலங்கு மதியம் சீர்சங்கு சக்கரம் பரிதி
விட்டிலங்கு முடியம்மான் மதுசூதனன் தனக்கே!"

(திருவாய்மொழி – 2 ப. 7 தி.)

இவ்வாறு, அருவமான இறைமையினை இயற்கையின் உருவங் களிலே உணருகின்றனர் அடியார்கள்!

"அண்டம் அளாவிய பூரணம் - மற்று
அனைத்தும் அதன் பகுதிகள் – இவை
கொண்ட உடம்பாம் இயற்கை - அதன்
உயிராயுள்ளது இறைமை"

என்று பாடுகின்றார் போப் என்ற ஆங்கில நாட்டுக் கவிஞர்.

All are but parts of one stupendous whole
Whose body Nature is, and God the soul.

—Pope—Essay on Man.)

Koviloor Digital Library



இயற்கை என்ற உடம்பின் உயிராக உள்ளது இறைமை என்கிறார் அந்த ஆங்கில நாட்டு ஞானி!

**இயற்கையில் இலங்கிடும் இறைமை**

வெண்ணிலவை எட்டும் விஞ்ஞான அறிவு படைத்த அமெரிக்க நாட்டில் இருந்து வெளிவரும் Readers Digest என்ற திங்கள் இதழ் ஒன்றிலே இயற்கையில் இலங்கிடும் இறைமை பற்றிக் கிருத்துவச் சமய ஞானி ஸ்டீவன்ஸ் எழுதுகிறார்:

"இரவு நேர வானத்தை அண்ணாந்து பார்த்தால் எத்தனையெத்தனை நட்சத்திரங்கள்! அவை ஒவ்வொன்றுக்கும் இடையிலுள்ள தூரந்தான் எவ்வளவு! நம் கண்ணுக்குத் தெரியும் மிக அருகிலுள்ள விண்மீன் பூமியிலிருந்து நாற்பது இலட்சம் கோடி கிலோ மீட்டர்களுக்கு அப்பால் இருக்கிறது! அத்தனை தொலைவிலுள்ள நட்சத்திரங்களை நாம் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது, அவை நம் இதயத்திற்கு அருகில் வந்து இன்முறுவல் காட்டுகின்றனவே!

அண்டங்களின் அதிசயத்தை அணுவிலும் காண்கிறோம். அற்பமான புல்லிதழ் நிகழ்த்தும் அற்புதந்தான் என்ன! அதன் நுண்ணிய பசுமைத்துகள் உலகத்தையே பசுமையாக்குகிறதே! சூரியன் ஒளியையும் பூமியின் நீரையும் எடுத்து நாம் மூச்சு விடுவதற்கான உயிர் காற்றைக் கொடுக்கின்றதே!

புல்லிதழின் நுனியிலே மின்னுகிறதே பனித்துளி! வானிலிருந்து பூமிக்கு இறங்கியுள்ள அத்துளியின் மகிமையை என்னென்பது! புத்தம்புதியதுதான் அத்துளி; ஆனால், அது எவ்வளவு பழமையானது! ஊழிக்காலத் தொடக்கத்தில் உலகம் குளிர்ந்த நேரத்தில்உதித்தநீரின் துளியன்றோ அது! ஆதவனைக் கண்டதும் மினுமினுத்துத் துடிதுடித்து அந்த நீர்த்துளி ஆவியாக மாறி, மீண்டும் விண்ணகத்திற்கு ஏறி விடுகின்றதே!

இவற்றை எல்லாம் விட உயர்ந்தது மனிதனின் மாண்பு! எண்ணில்லாத பிற உயிரினங்களில் இருந்து எத்தனையோ இலட்சம் ஆண்டுகள் முன் அவன் பிரிந்து வளர்ந்தான். மாறி மலர்ச்சியுற்றான். அன்பும் அருளும்,

Koviloor Digital Library



பண்பும் பாசமும், நன்மை தீமை என்ற நல்லுணர்வும் அவன் பெற்றான். காலப்போக்கிலே அவன் கலைஞன் ஆனான், கவிஞன் ஆனான், விஞ்ஞானியாகவும் மெய்ஞ் ஞானியாகவும் விளங்குகிறான்! இம் மலர்ச்சி எத்தகைய அதிசயமானது! இத்தனை வளர்ச்சியும் ஒரு தொடக்கந் தான். இன்னும் எவ்வாறெல்லாம் வளர்ச்சியுறப் போகின்றானோ மனிதன்!

இவ்வாறு, விண்ணையும் மண்ணையும், இவற்றை இணைத்து நிற்கும் மனிதனையும் உற்று நோக்கி ஓர்ந்தால் தானே உண்மைப் பொருளின் தன்மை தெரிகின்றது! இதில்தானே இறைமையின் அருளாட்சி இலங்குகிறது!

இவற்றையெல்லாம் கண்டு உணர்ந்து அதிசயப் படும் ஆற்றலை நாம் இழந்து விட்டோமே! என்னே நமது அவல நிலை! இறைமையை இங்கு காணமல் எங்கெங்கோ அதனைத் தேடுகின்றோம்! என்னே நமது அறியாமை!

எனவே, மேலே ஆகாயத்தையும் கீழே பூமியையும் சுற்றியுள்ள பொருள்களையும் உங்கள் உடன் பிறப்பான மக்களையும் உற்று நோக்குங்கள். உண்மையினை உண ருங்கள்!

இயற்கையின் ஏற்றத்தினை எண்ணி எண்ணி வியப் பதுதான் இறைமையைக் கண்டு துதிப்பதாகும்"

இவ்வாறு கூறுகின்றார் உலகத்து அறிவியலில் உச்ச நிலை யிலுள்ள அமெரிக்க நாட்டு ஆன்மஞானி ஸ்டீவன்ஸ்.

("The way to God" by the The Reverend Weston Stevens — Readers Digest–April, 1972.)

உண்மையான ஞானம் என்பது நம்மால் உணரப்படுவதாகும். எத்தனை நூல்களைப் படித்தாலும் எவ்வளவு உரைகளைக் கேட் டாலும் உண்மை ஞானத்தை உள்ளம் எளிதில் உணருவதில்லை.

**"எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும் என்**
**இதயமும் ஒடுங்க வில்லை"**

என்கிறார் தாயுமானவர்.

Koviloor Digital Library



இயற்கையின் ஈடில்லாத அழகினைக் காணும்பொழுதுதான் நம் இதயம் அதிலே ஒன்றுகிறது, ஒடுங்குகிறது. ஒடுங்கிய இதயத்திலே உதிக்கின்றது மெய்யுணர்வு!

"ஒடுங் கருத்தொடுங்க உள்ளுணர்வு தோன்ற நினைக்
கூடும் படிக்கு இறைநீ கூட்டிடவும் காண்பேனோ"

(தாயுமானவர்]

ஓடும் கருத்து ஒடுங்கி உள்ளுணர்வு தோன்றுவதற்கு நம் இதயத்தை ஈர்க்கும் இயற்கைக் காட்சிகளே ஏற்ற சாதனங்கள் ஆகின்றன.

இந்த உண்மையினை நேரிலே கண்டு உணரும் வாய்ப்பு அண்மையில் எனக்கு ஏற்பட்டது.

**இயற்கை அழகும் இறைமை உணர்வும்**

சில நாட்களுக்கு முன்பு குஜராத் மாநிலச் சட்டமன்றக் குழுவின் உறுப்பினர்கள் சிலர் தமிழ் நாட்டிற்கு வந்திருந்தனர். தங்கள் அலுவல்களை முடித்த பின்னர் தமிழ் நாட்டிலுள்ள முக்கியமான கோவில்களுக்குச் சென்றனர். கடற்கரைக் கோவிலான திருச்செந்தூருக்கு நானும் அவர்களுடன் சென்றிருந்தேன். இரவில் அங்கு தங்கிவிட்டுக் காலையில் கோவில் வழிபாடு என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சரியாகக் காலை ஆறு மணிக்கு எங்களையெல்லாம் இறைபணியாளர் கோவிலுக்கு அழைத்துச் சென்றார். கடற்கரையில் நடந்து போய்க்கொண்டிருக்கும் பொழுது கிழக்கு வானத்தில் ஒளி பரவிக் கொண்டிருந்தது. எங்களுடன் வந்தவர்களில் இருவர் இதைப் பார்த்துக்கொண்டே நின்றுவிட்டார்கள். மற்றவர்களைக் கோவிலுக்குப் போகச் சொல்லி விட்டு அவர்கள் கிழக்கே வானத்தையும் கடலையும் உற்றுநோக்கிக் கொண்டிருந்தனர். நானும் அவர்களுடன் நின்று விட்டேன்.

அற்புதமான அந்த அருணோதயக் காட்சியை எப்படி வருணிப்பது!

கிழக்கு வானம் முழுவதிலும் பொன் நிறமான ஒளி ஏறிக் கொண்டிருக்கிறது. சிதறிக் கிடக்கும் மேகங்கள் செம்பஞ்சுத் திரள்களாகத் தோன்றுகின்றன! சிறிது நேரத்திற்கெல்லாம் சூரிய வட்டத்தின் விளிம்பு கடல் மட்டத்திற்கு மேல் சிறிதாகத் தெரிகிறது!

Koviloor Digital Library


பொற்கோளமான கதிரவன் சில விநாடிகளில் எவ்வளவு வேகமாகக் கடலில் இருந்து எழுகின்றது! "தகதக"வென்று சுழன்று கொண்டிருக்கும் இளங்கதிரவனின் பொன்னொளியிலே கருநீலக் கடல் பொற்கடலாக மாறிவிட்டது! சூரியனின் செவ்வொளி படர்ந்ததும் வானமும் பூமியும் புத்தொளி பெற்றுப் பொலிகின்றன! உதய சூரியனின் இந்த ஒப்பற்ற காட்சி நம் உள்ளத்தினுள்ளே ஏதோ உணர்வை எழுப்புகிறது!

உதயசூரியனும் ஒளிரும் உலகமும் நம் உள்ளமும் ஒன்றி நிற்கின்றன! ஒன்றிய உணர்வில் நம்மை நாமே மறந்து விடுகிறோம்!

சில நிமிடங்களே இருக்கும் இந்த அற்புதமான அனுபவத்தை என்னென்பது! எப்படிக் கூறுவது!

இயற்கை அழகோடு இணைந்து இளகும் இதயத்தில் எழும் இன்பமயமான இறையுணர்வினை எவ்வாறு வருணிப்பது!

இயற்கையின் இணையற்ற இந்த இன்பக் காட்சியில் இதயத்தைப் பறிகொடுத்து நின்ற எங்களுக்குப் பத்து நிமிடங்கள் கழிந்த பின்தான் கோவிலுக்குப் போக வேண்டும் என்ற எண்ணம் வந்தது.

"முருகனை இங்கேயே வழிபட்டு விட்டோமே!". என்றார்கள் குஜராத்திய நண்பர்கள் இருவரும். இதைக் கூறும்பொழுது உண்மையிலேயே அவர்கள் கண்களிலே கசிவையும், குரலிலே தழுதழுப்பையும் கண்டேன்!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட சங்க காலப் பாடலிலே, "கடலில் எழும் கதிரவனைப் போன்றவனே" என்று இறைமை போற்றப்பட்டிருப்பதை,

"உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு"

(திருமுருகாற்றுப்படை)

என்ற வரிகளைக் கூறி அவர்களுக்கு ஆங்கிலத்தில் விளக்கினேன்.

தமிழில் 'முருகன்' என்ற சொல்லின் பொருளே "அழகு" என்பதுதான் என்றும் அவர்களுக்குக் கூறினேன்.

Koviloor Digital Library



திருநெல்வேலி மாவட்டத்தில் முருகன்கோவில்கள்வேறு இருக்கின்றனவா என்று அவர்கள் விரும்பிக் கேட்டனர். எனவே, தென்காசி வட்டத்தில் பண்பொழில் என்ற ஊரை அடுத்துள்ள 'திருமலைக் குமரன்' கோவிலுக்கு அவர்களை அழைத்துச் சென்றோம். குன்றின் மீதேறிக் கோவிலை அடைந்ததும், 'பச்சைப் பசேலெ'ன்று பரந்து கிடந்த வெளியையும், அடுத்துள்ள மலைத் தொடர்களின் அழகையும் பார்த்துப் பார்த்து அவர்கள் மகிழ்ந்தனர்.

"உயர்ந்த குன்றுகள் மீது ஏறி நிற்கையில் நம் உள்ளமும் உயர்கின்றதே!" என்று அவர்கள் கூறினார்கள்.

குன்றுகள் தோறும் குமரன் கோவில் தமிழ் நாட்டில் உண்டு என்று கூறினேன்.

"இயற்கை அழகைக் காணும்பொழுது இறைமையுணர்வு இயல்பாகவே எழுகிறது என்ற உண்மையினைத் தமிழர்கள் நன்கு கண்டிருக்கிறார்கள்," என்று கூறி அவர்கள் தமிழ் நாட்டைப் பாராட்டினார்கள்.

"இது தமிழ்நாட்டின் சிறப்பு மட்டுமா? இந்திய நாட்டின் ஆன்மீகப் பண்புதானே இது. பனிமுடிய பர்வதங்களின் தோற்றம் பரம்பொருளை நமக்கு நினைவூட்டுகிறது! மானசரோவர் என்ற பளிங்குப் பொய்கையிலே பனிச் சிகரம் பிரதிபலிக்கும் காட்சி இணையில்லாத இயற்கை அழகல்லவா! பனி முடிய பளிங்குச் சிகரங்களுக்கு மத்தியில்தானே பண்டரி நாதரையும் கேதார நாதரையும் நாம் காணுகின்றோம்! இமயமலைத் தலங்கள் எல்லாம் இயற்கை அழகுத்தலங்கள்தானே", —இவ்வாறெல்லாம் எங்கள் சிந்தனை ஓடியது!

குன்றுதோறும் உள்ள முருகு, கடலிலே உதிக்கும் இளங் கதிரவனின் ஈடில்லாத அழகு, அவர்கள் இதயத்திலே இணைந்து விட்டன!

இவ்வாறு இயற்கை அழகும் இறைமை உணர்வும் இணைந்து நிற்பதை நம் முன்னோர்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.

அவர்கள் இயற்கையினைக் கண்டு இதயத்தால் ஓர்ந்து எழுதி வைத்துள்ள மெய்ஞ்ஞான நூல்களை நாம் படித்தாலும், இயற்கையோடு இணைந்துபெறும் இன்ப அனுபவத்தை நாமும் நேரடியாகப் பெறுதல் வேண்டும்.

இயற்கையிலே இறைமையினைக் காணும் கவி பாரதியார்,

Koviloor Digital Library


"யாதுமாய் விளங்கும் இயற்கைத் தெய்வமே"

(விநாயகர் நான்மணிமாலை)

என்று பாடுகின்ருர்.

இயற்கையின் அழகிலே இசைந்த இதயத்தில் நாம் பெறும் இன்ப அனுபவத்தை,

"தங்குமோர் இயற்கைத் தனி அனுபவத்தை"

(அஷ்டகம்)

என்கிருர் இராமலிங்க அடிகள்.

இயற்கை அழகிலே நம் இதயம் இசைவதால் எழும் இன்பம் இறையுணர்வு இன்பமாக உள்ளது. இறைமையினை உணர்வதற்கு ஏற்ற சாதனமாக இது அமைகின்றது.

இயற்கை அழகினைக் காணுவதற்கென்று நாம் கடற்கரைக்கோ மலையுச்சிக்கோ செல்ல வேண்டுமென்ற அவசியம் இல்லை. எத்தனையெத்தனையோ இயற்கைப் பொருள்கள் நம் இதயத்தைக் கவருகின்றன, இறைமையினை நினைவுபடுத்துகின்றன.

அரும்பவிழும் மலர்கள், அவற்றில் மதுவுண்ணும் வண்டினங்கள், செடிகொடிகள், மரங்கள் அனைத்துமே இயற்கையின் எழிலைக் காட்டுகின்றன.

"கருவிளை ஒண்மலர் காள்!
காயா மலர்காள், திருமால்
உருவொளி காட்டுகின்றீர்
எனக்குய் வழக்கு ஒன்றுரையீர்"

(நாச்சியார் திருமொழி-9-3)

என்று பாடும் ஆண்டாள், மலர்களிலே இறைமையினைக் காணுகின்ருர்.

குருவியின் குரல் இறைமையினை ஏத்தும் பாட்டாக ஒலிக்கிறது அடியார்களுக்கு:

"காலை எழுந்திருந்து
கரியகுரு விக்கணங்கள்

Koviloor Digital Library



மாலின் வரவுசொல்லி
மருள் பாடுதல் மெய்மை கொலோ''

(நாச்சியார் திருமொழி—9. 8.)

மதலைகளின் மழலைச் சிரிப்பிலே நம் மனம் எவ்வளவு மயங்குகிறது.

"அம்மா" என்றழைக்கும் கன்றின் கள்ளமில்லாப்பார்வையும் உள்ளத்தை உருக்குகிறது!

வண்டியில் பூட்டப்பட்ட மாடு வீதியின் ஓரத்து மரத்தடியிலே ஓய்ந்துபோய் நிற்கிறது. அதன் கண்களைப் பார்க்கும் கவிஞர்,

"நான் வாழ்வில் கற்றதனைத்திற்கும் மேலான ஒன்றைக் காணுகின்றேன் அக்கண்களிலே!"

என்று வியக்கின்றார்!

காளை மாட்டுக் கண்களிலே கருத்தினைக் கவரும் ஞானத்தைக் காணும் கவிஞர் அமெரிக்க நாட்டவர்; வால்ட் விட்மான் என்ற புகழ் பெற்ற கவிஞர்!

(Oxen that rattle the yoke and chain or halt in the leafy shade, what is that you express in your eyes?

It seems to me more than all the print I have read in my life.

—Walt whitman—in "Song of Myself")

வானத்திலும் கடலிலும் மட்டுமன்றி மரம், மேகம், பறவை இவற்றிலும், வீதியிலும் வீட்டிலும் இறைமையினைக் கண்டு இதயம் உருக வேண்டும் என்கிறார் பாரதியார்:

எளியனேன் யானெனலை எப்போது
போக்கிடுவாய், இறைவனே! இவ்
வளியிலே பறவையிலே மரத்தினிலே
முகிலினிலே வரம்பில் வான

Koviloor Digital Library



வெளியிலே கடலிடையே மண்ணகத்தே
வீதியிலே வீட்டிலெல்லாம்
களியிலே, கோவிந்தா! நினைக்கண்டு
நின்னொடு நான் கலப்பதென்றோ?

(கோவிந்தன் பாட்டு)

இவ்வாறு, இயற்கையின் எழில் நிலவும் இடங்களிலும் பொருள்களிலும் உயிர்களிலும் இறைமை மணங் கமழுகின்றது; நம் இதயம் நெகிழ்கின்றது.

---

Koviloor Digital Library
KOVILUR ADHEENAM
KOVILUR B. O.
(Via) MANAGIRI
RAMANATHAPURAM DIST.
PIN: 623 307

# 21. ஞான நாடகம்

"........................................
அலகிலா விளையாட் டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே"

(கம்ப ராமாயணம்)

மாலை நேரம். மஞ்சள் வெயில்.

பட்டுப் பூச்சி ஒன்று தோட்டத்தில் இருந்து என் படிப் பறைக்குள் பறந்து வந்தது. மலர்களின் தேனை மாந்திய மயக்கத்தோடு அது அறைக்குள் ஆரவாரமாக பறந்தது! பல்வண்ணச் சிறகுகளைப் 'படபட' வென அடித்துக்கொண்டு அது பகட்டாகப் பறந்த காட்சியினைக் கண்டு களித்துக் கொண்டிருந்தேன்.

**ஐந்து நிமிட நாடகம்**

அது என் கையிலிருந்த புத்தகத்தின் மீதுவந்து உட்கார்ந்தது. மிக அருகில் இருந்த அந்தப் பூச்சியின் அழகைப் பார்த்து அனுபவித்தேன்.

அதன் சிறு சிறகுகளில்தான் எத்தனை வகை நிறங்கள்! இயற்கையின் படைப்பில் உள்ள அழகுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அல்லவா அது இருக்கிறது! அழகில் மட்டுமா அது சிறந்திருக்கிறது? மலர்களிலே மதுவருந்தி எத்தனை மகிழ்வுடன் அது வாழ்கின்றது!

அழகோடும் மகிழ்வோடும் இருக்கும் பட்டுப்பூச்சியின் பாங்கினைக் கண்டு, இயற்கையின் கருணையை எண்ணி எண்ணி வியந்தேன்!

சில விநாடிகளில் புத்தகத்தை விட்டுப் பறந்து சென்ற அப் பூச்சி அறையின் சுவர் மீது அமர்ந்து, தன் அழகுச் சிறகுகளை ஆட்டிக் கொண்டே இருந்தது.

Koviloor Digital Library


'சரே'லென்று ஒரு பாய்ச்சல்! அடுத்த விநாடி அது ஒரு பல்லியின் வாயிலே சிக்கிக் கொண்டிருப்பதைக் கண்டேன்!

பட்டுச் சிறகுகளைப் 'படபட' வென்று அடித்துக்கொண்டு துடித்தது பூச்சி. பல்லியின் வாயிலிருந்து தப்ப முடியவில்லை. சிறிது சிறிதாக பூச்சியின் துடிப்பு குறைந்துகொண்டே வந்து முடிவில் நின்றுவிட்டது! பூச்சியின் உடலில் பெரும் பகுதி பல்லியின் வாய்க்குள் போய்விட்டது. அழகுச் சிறகுகள் அதன் உடலில் இருந்து அகன்று கீழே உதிர்ந்தன! சிறிது நேரத்திற் கெல்லாம், உணவருந்திய பல்லி உல்லாசமாக நகர்ந்துகொண் டிருந்தது!

பகட்டாகப் பட்டுப்பூச்சி பறந்து வந்ததும், பல்லிக்கு உண வாகி அது மறைந்து போனதும், நான்கைந்து நிமிடங்களில் நடந் தேறிவிட்ட ஒரு நாடகம்!

இயற்கை நடத்திய இந்த நாடகத்தைப் பார்த்துக்கொண்டி ருந்த என் இதயத்தில் ஏதோ இனம் புரியாத ஓர் உளைச்சல்!

எவ்வளவு அழகான பட்டுப்பூச்சி! எவருக்கும் அது கேடு செய்யவில்லையே! தன் உருவத்தால் அது பிறருக்கு உவகை ஊட்டியதே! அதற்கா இந்த முடிவு வரவேண்டும்?

மகிழ்வோடு இருந்த அப்பூச்சியை மரணம் எவ்வளவு விரைவில் எட்டிப்பிடித்துவிட்டது!

மலர்களின் மதுவருந்தி பட்டுப்பூச்சி வளர்ந்தது பல்லியின் பசியைத் தீர்ப்பதற்குத்தானா!

பறந்துவந்த பட்டுப்பூச்சியின் அழகையும் மகிழ்வையும் கண்டு இயற்கையின் கருணையை எண்ணி மகிழ்ந்தேனே! இது தானா இயற்கையின் கருணை!

பல்லி மீது என் சிந்தனை திரும்பியது.

இயற்கையின் கருணை இவ்வாறு இல்லாவிட்டால், பல்லிக்கு உணவு ஏது? பல்லியும் பசியார வேண்டுமே?

ஆனால், பல்லியின் பசி தீருவதற்குப் பட்டுப்பூச்சிதான் பலியாக வேண்டுமா?

ஒன்றின் துன்பத்திலா மற்றொன்றின் இன்பம்?

Koviloor Digital Library



ஒன்றின் மரணத்திலா மற்ருென்றின் வாழ்வு?

இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கும்பொழுது, வீட்டில் வளரும் பூனே தனது வாலே முறுக்கிக்கொண்டு அந்தச் சுவரின் அடியில் நின்று அண்ணுந்து பார்த்துக்கொண்டிருந்தது. சுவரின் உச்சியில் போய்க்கொண்டிருந்த பல்லியின் மீதுதான் பூனேயின் கவனம்! சிறிது நேரம் இதையும் பார்த்துக்கொண்டிருந்தேன். சுவரின் மேற்பகுதியில் இருந்த பல்லி, எதற்கோ கீழ்ப்பகுதிக்கு நகர்ந்து வந்தது. அவ்வளவுதான். சுவரின் மீது உரசிக்கொண்டு பூனே பாய்ந்தது. அடுத்த கணத்தில் பூனேயின் வாயிலே பல்லி! பல்லியைக் கௌவிக்கொண்டு ஓடியது பூனே!

பட்டுப்பூச்சியைத் தின்று பசியாறிய பல்லி, பூனேயின் பசிக்குப் பலியானதைப் பார்த்ததும் எனக்கு ஒன்றுமே ஓட வில்லே.

சிந்தனே குழம்பியது.

இயற்கையின் அமைப்பிலே மரணமும் வாழ்வும் மாயமாக அல்லவா உள்ளன!

பட்டுப் பூச்சியை பல்லிக்கு உணவாக்கி, அந்த பல்லியைப் பூனேக்கு இரையாக்கும் இயற்கையினே என்னென்பது?

ஒன்றை மற்ருென்றுக்கு இரையாக்கும் இயற்கையினே கொடுமையானது என்பதா? ஒன்றுக்கு மற்ருென்றை உண வாக்கும் அதன் செயலே கருணே நிறைந்தது என்பதா?

இதற்கு விடை காணுதல் எளிதில் இயலாது.

இவ்வாருன நிகழ்ச்சிகள் எத்தனே எத்தனேயோ நடந்து கொண்டே இருக்கின்றன.

குளத்திலே தனது அகன்ற வாயைத் திறந்தவாறே மிதந்து கொண்டிருக்கிறது தவளே. புழுப் பூச்சிகள் அருகில் வரும் பொழுது அவற்றைத் தனது நீண்ட நாக்கினுல் 'லாவகமாக' வளேத்துப் பிடித்து விழுங்கிக் கொள்கிறது. தவளேக்கு வேண்டிய உணவினே எளிதாகக் கிடைக்குமாறு இயற்கை வைத்திருக்கிறது. சரேலென்று ஒரு பாய்ச்சல்! அடுத்த கணம் நீர்ப் பாம்பு ஒன்றின் வாயிலே அகப்பட்டுக் கொள்ளுகிறது அத்தவளே!

புழுப் பூச்சிகளேத் தவளேக்கு உணவாக்கி, அந்தத் தவளேயையே பாம்புக்கு உணவாக்கும் இயற்கையினே எவ்வாறு புரிந்து கொள்ளுவது?

Koviloor Digital Library


வனங்களில் வாழும் விலங்கினங்களில் பல ஒன்றையொன்று தின்றுதானே உயிர் வாழ்கின்றன! மருண்டு ஓடும் மான்களையும் மாடுகளையும் மகிழ்ச்சியாகக் கொன்று தின்கின்றன சிறுத்தைகளும் சிங்கங்களும்!

புலியும் சிங்கமும் புல்லைத் தின்று உயிர் வாழ முடியாதே. எதையாவது கொன்றுதானே அவை இரையுண்ண வேண்டியிருக்கிறது!

**இது என்ன இயற்கை**

இயற்கையின் இயக்கத்தினைப் பற்றி இத்தகைய வினக்கள் நம் மனத்திலே எழுகின்றன.

இவற்றுக்கு என்ன விடை?

இதுதான் இயற்கையின் விதி என்ருல் அதை எவ்வாறு புரிந்துகொள்வது?

அடிப்படையான இப்புதிர்கள் குறித்து ஆன்ரோர்கள் ஆழ்ந்து சிந்தித்துள்ளனர்.

"நிகழ்வுகளுக்கான காரணங்களின் முழுமையினை மனித மனம் அறிவதில்லை. ஒவ்வொரு நிகழ்வுக்கும் எது காரணம் என்று காண விரும்புவது மனித உள்ளத்தின் இயல்பாகும். பல்கிப் பெருகும் பல சிக்கல்கள் நிறைந்த நிலைகளை ஆழ்ந்து உணர முடியாத மனிதனது உள்ளம் ஒரு செயலை ஒட்டி முன்னல் நடந்ததை மட்டும் எடுத்துக்கொண்டு, 'இதுதான் இச்செயலுக்கு காரணம்', என்று எண்ணிக்கொள்ளுகிறது." —இவ்வாறு ருஷ்யஞானி டால்ஸ்டாய் "போரும் அமைதியும்" என்ற புதினத்திலே கூறுகின்ருர்.

(Tolstoy in "War and Peace" - Book XIII – Chapter I)

நிகழ்வுகளுக்கான காரணங்களின் முழுமையினை நம்மால் அறிய முடிவதில்லை.

**இடையின்றித் தொடரும் இயற்கை நாடகம்**

உலக நாடகம் தொடர்ந்து நடக்கிறது. இதன் தொடக்கமும் முடிவும் நமக்குத் தெரியாது. இடையில் ஏதோ ஒரு காட்சியை மட்டும் பார்த்துவிட்டு அந்நாடகம் துன்பமானது அல்லது இன்பமானது என்று நாம் கூற முற்பட்டுவிடுகிரோம்!

Koviloor Digital Library



இயற்கை நடத்தும் நாடகத்திற்குக் காலக் கணக்கு இல்லை. நாம் காணும் காட்சியோ ஓடுங்கால வெள்ளத்தின் ஒரு துளி, ஒரு திவலை. இந்தத் திவலையை வைத்துக்கொண்டு கால வெள்ளத்தின் காட்சி நாடகத்தைக் கணிப்பது இயலுமா? இயலாது என்கின்றனர் ஞானிகள்.

"இயற்கை விதி என்பது ஒரு தொடர் சங்கிலி. இதற்கு ஆரம்பமும் முடிவும் கிடையாது. ஒரு நாளில் தோன்றி மறையும் வாழ்க்கையினை அளவாகக் கொண்டு இத்தகைய இயற்கை விதியினைக் கணித்திடுதல் இயலாது."

என்று பாடுகின்றார் பாரதியார்:

"இங்கிவை யாவும் தவறிலா - விதி
ஏற்று நடக்கும் செயல்களாம் - முடி
வெங்களும் இன்றி எவற்றினும் - என்றும்
ஏறி இடையின்றிச் செல்வதாம் - ஒரு
சங்கிலி யொக்கும் விதிகண்டீர் - வெறும்
சாத்திரம் அன்று இது சத்தியம் -நின்று
மங்கியோர் நாளில் அழிவதாம் - நங்கள்
வாழ்க்கை இதனைக் கடந்ததோ."

(பாஞ்சாலி சபதம்)

மேலும் அவர் பாடுகின்றார்:

தோன்றி அழிவது வாழ்க்கைதான் - இங்குத்
துன்பத்தோடு இன்பம் வெறுமையாம்.

வாழ்க்கை தோன்றி அழிவது என்பது புரிகின்றது. ஆனால், துன்பம் என்பதும் இன்பம் என்பதும் வெறுமைதானா?

**இன்பமும் துன்பமும்**

சிறிது சிந்தித்தால் இன்பமும் துன்பமும் வெறுமைதான் என்பது புலப்படும்.

பட்டுப்பூச்சி பல்லிக்கு உணவாகும்பொழுது பட்டுப்பூச்சிக்குத் துன்பம். ஆனால் பல்லிக்கோ இன்பம். பட்டுப்பூச்சியின் மரணத் துன்பம் பல்லிக்குப் பசியாறும் இன்பமாகிறது!

இவ்வாறு, துன்பத்தின் எல்லையில் இன்பம் பிறக்கும் பொழுது, இன்பத்தின் பிறப்பிடமாகத் துன்பம் இருக்கும்பொழுது இன்பம் என்றும் துன்பம் என்றும் எவ்வாறு பிரித்துக்கூறுவது?

Koviloor Digital Library



ஒரே செயல் ஒன்றுக்கு இன்பமாகவும் மற்றொன்றுக்குத் துன்ப மாகவும் அமையும் நிலையில், அச்செயலைத் துன்பச் செயல் என்பதா? இன்பச் செயல் என்பதா?

**பிறப்பும் இறப்பும்**

இது போன்றதுதான் பிறப்பும், இறப்பும்.

விதையினை முளைக்க விடுகிறோம். அந்த விதையில் இருந்து முளை தோன்றுகிறது. முளை தோன்றும் பொழுது விதை அழிந்து விடுகிறது. வித்து அழிந்துதானே அது முளையாக மாறுகிறது! எனவே, விதையின் அழிவின்றி முளையின் தோற்றம் இல்லை; வித்தின் இறப்பின்றி முளையின் பிறப்பில்லை. விதையின் இறப் புத்தான் முளையின் பிறப்பாகிறது. முளையின் பிறப்பு விதையின் இறப்பிலே உள்ளது.

இவ்வாறு, இறப்பினது முடிவைப் பிறப்பிலும், பிறப்பினது மூலத்தை இறப்பிலும் நாம் காணுகிறோம்! இறப்பின் விளைவு பிறப்பு, பிறப்பின் மூலம் இறப்பு என்ற நிலையில் இறப்பே பிறப் பாகி விடுகின்றது! இறப்பும் பிறப்பும் வேறுபாடற்றுப் போகின்றன!

பருப்பொருள்கள் எதுவும் உண்மையில் அழிந்து போவ தில்லை. அதாவது அவை இல்லாமல் மறைந்துபோய்விடுவ தில்லை. திடப்பொருள் திரவப் பொருளாக மாறலாம் அல்லது ஆவிப் பொருளாகலாம். மீண்டும் ஆவிப்பொருள் திரவப் பொருளாகவோ திடப் பொருளாகவோ மாறிவிடவாம். ஆனல், எந்தப் பருப்பொருளும் இல்லாததாகி அழிந்து போவதில்லை. இந்த விஞ்ஞான உண்மையை "பருப்பொருள்களின் அழியாத் தன்மை" (Indestructibility of matter) என்பார்கள் என்று முன்னர்க் கண்டோம்.

இவ்வாறு, பருப்பொருளுக்கே அழிவு இல்லை என்ற நிலையில் நுண்பொருளான உயிருக்கு ஏது அழிவு? உயிர்கள் என்றும் அழிவதில்லை என்பது மெய்ஞ்ஞான உண்மை.

எனில், இறப்பு என்று எதைக் கூறுகிறோம்? உடலை விட்டு உயிர் பிரிந்து இடம் மாறுவதைத்தான் இறப்பு என்கிறோம். பிறி தோர் உடலில் அவ்வுயிர் சேர்வதைத்தான் பிறப்பு என்கிறோம். எனவே, இறப்பிலும் பிறப்பிலும் உயிர் இடம் மாறுகிறது. அவ்வளவேதான்.

Koviloor Digital Library



உடம்பு என்ற கூட்டில் இருந்து உயிர் என்ற பறவை பறந்து போய் விடுகிறது, இவ்வளவுதான் உடம்புக்கும் உயிருக்கும் உள்ள நட்பு என்கிறது குறள்:

**குடம்பை தனித்து ஒழியப் புள் பறந்தற்றே**
**உடம்போடு உயிரிடை நட்பு**

**(குறள் 388)**

நீர் ஆவியாக மாறினல் நீர் மறைந்துவிட்டது என்கிறோம். நீரில் உப்பு கரைந்துவிட்டால் உப்பு மறைந்துவிட்டது என்று கூறுகிறோம். உண்மையில் நீரும் உப்பும் உருவத்தில் மட்டுமே மாறி உள்ளன, இருந்தாலும் அவை அழிந்துவிட்டன என்று கருதுகிறோம். அவ்வாறே, நீரின் ஆவி குளிர்ந்து மீண்டும் நீராக மாறும்பொழுது நீர் உண்டாக்கப்பட்டதாக நினைக்கிறோம். நீர் புதிதாக ஆக்கப்படவில்லை. ஆவிதான் மீண்டும் நீராக உரு மாறியுள்ளது.

எனவே, பருப்பொருள்களைப் பொருத்த வரையில் அவற்றின் உருவ மாற்றங்களையே அழிவென்றும் ஆக்கம் என்றும் நாம் எண்ணுகிறோம். இதுபோன்றே, உயிர்களைப் பொறுத்து அவற்றின் இடமாற்றங்களையே இறப்பு என்றும் பிறப்பு என்றும் காணுகிறோம்.

பருப்பொருள்களின் உருமாற்றமும் பல்லுயிர்களின் இட மாற்றமும் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கின்றன. இத் தொடர்நிகழ்வுகளில் ஒன்றைமட்டும் எடுத்துகொண்டு அதைப் பொருள்களின் ஆக்கம் என்றும் அழிவு என்றும், உயிர்களின் பிறப்பு என்றும் இறப்பு என்றும் குறிப்பிடுகிறோம்!

இயற்கை அனைத்துமே எல்லாமே இறைமைதான் என்ற நிலையில், பல்லியும் இறைமைதான், அது விழுங்கிய பட்டுப் பூச்சியும் இறைமைதான். தவளையும் இறைமை, அதை விழுங்கிய பாம்பும் இறைமை. இவ்வாறிருக்க, எது எதைக் கொன்றது, எது எதைத் தின்றது என்று எப்படி சொல்லுவது?

எனவேதான்,

**சக்திகள் யாவும் அதுவே - பல்**
**சலனம் இறத்தல் பிறத்தலும் அஃதே**

Koviloor Digital Library



நித்திய மாம் இவ்வுலகில் - கடல்
நீரில் சிறுதுளி போலும் இப்பூமி!

என்று பாடுகின்றார் பாரதியார்.

இயங்கும் சக்திகளனைத்தும் இறைமை, இறத்தலும் பிறத்தலும் அதன் தோற்றங்கள்; இயற்கை என்ற பெருங்கடலிலே சிறுதுளி போன்றது இவ்வுலகம்!

இவ்வாறு இறைமையின் ஏற்றத்தினை எண்ணி வியப்பதைத் தவிர, அதன் இயக்கத்தினை விளக்குவதற்கு எவ்வாறு இயலும்!

இயற்கையின் இயக்கத்தில் ஆக்கமும் அழிவும், பிறப்பும் இறப்பும் இடைவிடாது நிகழ்கின்றன. இந்த இயற்கை இயக்கம் நின்றுவிட்டாலோ ஆக்கம் இல்லை, அழிவில்லை; பிறப்பில்லை, இறப்புமில்லை.

இயற்கையின் இயக்கம் நின்றுவிடும் நிலை ஏற்பட்டுவிட்டால், அதுவே உண்மையான அழிவு நிலையாகும், இறப்பு நிலையாகும்.

ஆக்கமும் அழிவும், பிறப்பும் இறப்பும் இடையின்றி நிகழ்வது தான் இயற்கையின் இயக்கமாகிறது. இதுவே, இயற்கையின் உயிரோட்டமாகும்; இறைமையின் அருளாட்டமாகும்!

**இறைமைச் சக்கரம்**

"இந்த அண்டம் ஒரு சக்கரம். இதிலுள்ள உயிர்களனைத்தும் பிறப்பு, இறப்பு, மீண்டும் பிறப்பு, இறப்பு, என்ற சுழலுக்குள் அகப்பட்டுச் சுற்றிக்கொண்டே இருக்கின்றன. இடையறாது சுழலும் இந்த இறைமைச் சக்கரம் என்றுமே நிற்பதில்லை.[3]"

இவ்வாறு கூறுகின்றது சுவேதாஸ்வதர உபநிடதம்.

இயற்கையின் இயக்கம் என்ற சக்கரத்தில் இணைந்து சுழன்று கொண்டிருக்கும் மனிதனால் அந்தச் சக்கரச் சுழலின் தன்மையினை, அதன் உண்மையினை, எவ்வாறு அறிதல் இயலும்?

ஆயினும் மனித மனம் அதனை அறிய முயலுகிறது. முயன்று முயன்று முடியாத நிலையில், அது அறிய இயலாதது என்ற உண்மையினைக் காணுகின்றது!

Koviloor Digital Library



இறைமைச் சக்கரத்தின் இயக்கத்தினை அறிந்துகொள்ள இயலாது என்பதனை உணர்ந்த ஞானிகள்,

"சக்கரத்து அண்ணலே! என்று தாழ்ந்து கண்ணீர் ததும்ப
பக்கம் நோக்கி நின்றலந்தேன் பாவியேன் காண்கின்றிலேன்!"

(திருவாய்மொழி – 4 ப. 7 தி.)

என்று தங்கள் அறிவின் இயலாமையினைக் கூறி அலமந்து நிற்கின்றனர்! இயலாது என்ற இந்த உண்மையினை உணர்ந்துகொள்வதே உயர் ஞானம் ஆகின்றது!

### அலகிலா விளையாட்டு

கற்பனைத் திறனமைந்த கவிஞர்களாலும் இறைமை இயக்கத்தினைப் புரிந்துகொள்ளவோ நமக்குப் புரியவைக்கவோ இயலவில்லை. எனவே, படைத்தல் காத்தல் அழித்தல் என்பன இறைமையின் விளையாட்டு என்று கூறுகின்றனர்! விளையாட்டுச் செயல்களுக்கு விளக்கம் கூற இயலாதல்லவா?

உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே!

(கம்ப ராமாயணம்)

என்பது கல்வியிற் பெரிய கம்பன் பாடிய கடவுள் வணக்கம்!

இறைமையின் இந்த விளையாட்டை எவர்தாம் புரிந்து கொள்ள இயலும்?

### ஞான நாடகம்

புரிந்து கொள்ள முடியாத இவ்விளையாட்டு நமக்கு ஒரு ஞானத்தினைப் புகட்டுகிறது என்கிறார் மாணிக்கவாசகர்.

இன்று இருப்பவர் நாளை இருப்பதில்லை என்று சொல்லும் படியான நிலையற்றது இவ்வுலக வாழ்வு. ஆனால், நாம் வாழ்வினை உறுதியானது என்று எண்ணி வையகத்தின்மீது இச்சை வைக்கின்றோம். இந்த இச்சை நைந்து போகிறது இயற்கை நடத்தும் நாடகத்தைக் கண்டு என்கிறார் அந்த ஞானி!

Koviloor Digital Library



இறைவன் நடத்தும் இந்நாடகம் இந்த ஞானத்தினைப் போதிப்பதால் "ஞான நாடகம்" ஆகி விடுகிறது!

"ஞானநாடகம் ஆடுவித்தவா
நைய வையகத் துடைய இச்சையே"

(திருவாசகம்-திருச்சதகம்-95)

ஆம்! இயற்கையின் இயக்கங்கள் ஒவ்வொன்றுமே இறைமை நடத்தும் நாடகந்தான்!

நமக்கு ஞானம் புகட்டும் நாடகம்!

ஞான நாடகம்!

வேறு எப்படி இதைச் சொல்லுவது!

Koviloor Digital Library

# ஞானச் சுடர்

## இரண்டாம் பாகம்

கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்-630 307

Koviloor Digital Library

Koviloor Digital Library

# 22. இறையுணர்வால் எய்தும் நலன்கள்

"இறைமை ஞானம் பெற்றவர்கள் என்றும் துன்பம் உறுவதில்லை."

(கதோபநிடதம்)

நம் நாட்டு ஞானிகளும் மெய்யடியார்களும் இறைமை பற்றி எவ்வாறெல்லாம் நமக்குப் போதித்துள்ளனர் என்று நாம் இது வரை ஓரளவு பார்த்தோம்.

இறைமை ஞானத்தினை எந்தெந்தக் கோணங்களில் இருந்து நம் முன்னோர்கள் உய்த்து உணர்ந்தனர் என்பதை, உணர்வின் மூர்த்தி, பூத மூர்த்தி, ஒரு மூர்த்தி, ஞான மூர்த்தி, இதய மூர்த்தி, மாய மூர்த்தி, அற்புத மூர்த்தி, சொல்லரிய மூர்த்தி, அறிவரிய மூர்த்தி, நினைப்பரிய மூர்த்தி, அருவுருவ மூர்த்தி, ஆதி மூர்த்தி, காரண மூர்த்தி, ஆன்ம மூர்த்தி, ஆனந்த மூர்த்தி, பிறப்பறுக்கும் மூர்த்தி என்ற தலைப்புக்களில் கண்டோம்.

ஆனால், இதுவரை நாம் கண்டதெல்லாம் நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற ஆன்ம ஞானக் கடலில் ஒரு துளியேயாகும். எனினும் சுவைத்துப் பார்ப்பதற்குத் துளியே போதுமல்லவா? ஏன்? எதையுமே துளி அளவு எடுத்துத்தானே நாம் சுவைத்துப் பார்க்க முடியும்?

**எய்தும் நலன் என்ன**

இந்த இறைமை ஞானத்தால் நாம் எய்தும் நலன் என்ன? நாம் வாழ்வாங்கு வாழ்வதற்கு இந்த ஞானம் பயன்படுகின்றதா?

காட்டுக்குச் சென்று கண்மூடி இருப்பவர்களுக்குத்தான் இந்த ஞானம் தேவையா?

அல்லது இல்லறத்தில் வாழும் நம் அனைவருக்குமே இது வேண்டுமா?

நாட்டின் நலனுக்கும் நம் ஒவ்வொருவரின் நல்வாழ்வுக்கும் இறைமை ஞானம் எவ்வாறு உதவுகின்றது?

Koviloor Digital Library


இவை பற்றியும் சிந்தித்தால்தான் ஆன்மீக ஞானத்தால் நாம் அடையும் மேன்மைகளை நாம் தெரிந்து கொள்ள முடியும்.

மறுமையிலே நாம் பெற இருக்கும் நன்மைக்காகவே இம்மையில் இறைமை ஞானம் பெற வேண்டும் என்ற எண்ணம் நம்மிடையே பரவியுள்ளது. பெரும்பாலான சாத்திரங்களும் சடங்குகளும் மறுமை இன்பத்தின் மகத்துவத்தையே கூறுகின்றன.

"செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலாம் என்றே எண்ணியிருப்பார்
பித்த மனிதர், அவர் சொலும் சாத்திரம்
பேயுரை யாமென்றிங்கு ஊதேடா சங்கம்!"

(சங்கு)

என்று சாடுகின்றார் பாரதியார்!

இறந்த பிறகு எய்திடும் மேன்மைபற்றி மட்டுமே கூறும் சாத்திரங்களைப் "பேயுரை" என்கிறார் ஞானக் கவிஞர். அச் சாத்திரங்களை நம்பி இருப்பவர்களைப் "பித்த மனிதர்" என்று கூறி இரக்கப்படுகின்றார்!

இவ்வுலகில் இன்றைய வாழ்வில் நாம் நலம் எய்த வேண்டும்: இதை நாடுவதே உண்மையான அறிவுடைமையாகும் என்கிறார் அவர்:

"இத்தரை மீதினிலே யிந்த நாளினில்
இப்பொழுதே முக்தி சேர்ந்திடநாடி
சுத்த அறிவு நிலையிற் களிப்பவர்
தூயவராம் என்றிங்கு ஊதேடா சங்கம்"

(சங்கு)

"இப்பொழுதே இங்கேயே முக்தி சேர்ந்திட வேண்டும்" என்கின்றாரே? அவ்வாறு சேர முடியுமா?

"ஆம். முக்தி என்ற வீடு இப்பொழுதே உண்டு. இன்ப துன்பங்களைக் கடந்து நிற்கும் நிலையினை நாம் பெற்று விட்டால் அதுவே வீடு; அப்போதே வீடு" என்று உறுதியுடன் கூறுகின்றார் நம்மாழ்வார்:

Koviloor Digital Library



"சென்றுங்கு இன்பதுன்பங்கள் செற்றுக்களைந்து பசையற்றால்
அன்றே அப்போதே வீடு அதுவே வீடு வீடாமே"

(திருவாய்மொழி 8ப. 8தி.)

என்பது அவரது ஞானவாக்கு.

'முக்தி', 'சுவர்க்கம்', 'வீடு' என்பதெல்லாம் இம்மையிலேயே, இந்த வாழ்விலேயே நாம் பெறலாம் என்கின்றனர் ஞானிகள்.

இதற்கு வேண்டியது இறையுணர்வு.

"இம்மை மறுமை என்று உண்மை அறியாதவர்கள்தான் கூறுகின்றனர். வினைப் பயனால் விளையும் துன்பங்களையெல்லாம் இறையுணர்வு இங்கேயே தீர்க்கின்றது" என்று தெளிவாகப் போதிக்கின்றார் நாவுக்கரசர்:

"இம்மை அம்மை என இரண்டும் இவை
மெய்ம்மை தானறியாது விளம்புவர்
மெய்ம்மையால் நினைவார்கள்தம் வல்வினை
வம்மின் தீர்ப்பர் கண்டீர் வன்னியூரரே!"

(தேவாரம் திருவன்னியூர்)

(அம்மை—மறுமை)

"நன்மை தருகிறது, செல்வம் தருகிறது, துயரங்களைப் போக்குகிறது, வலிமை தருகிறது, பெற்ற தாயைவிட நாம் வேண்டியவற்றைக் கொடுக்கிறது, எல்லா நலன்களையும் நல்குகிறது, இறைமை ஞானம்" என்கிறார் திருமங்கையாழ்வார்;

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்பு அருளும்
அருளொடு பெருநில மளிக்கும்,
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்,
நலந்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

(பெரிய திருமொழி—1-1)

(குலம்—நன்மை)

Koviloor Digital Library



இவ்வாறு, இவ்வாழ்விலேயே நமக்கு எல்லா நன்மைகளேயும் அளிக்கின்றது இறையுணர்வு என்கின்றனர் மெய்யடியார்கள்.

உலக வாழ்விற்கு உதவாத ஞானத்தால் பயன் ஏதும் இருப்பதில்லை. ஆண்டாண்டு காலமாக சிந்தனையாளர்கள் ஓர்ந்து ஓர்ந்து கண்ட உண்மைகள். ஆன்மீக அனுபவங்கள், அன்ருட வாழ்விற்கு வழிகாட்டியாக இருத்தல் வேண்டும்.

அவ்வாறு இருக்கின்றனவா?

"ஞானங் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானங் காட்டுவர் தம்மடைந் தார்க்கெலாம்"

(தேவாரம் — திருவன்னியூர்)

என்பது நாவுக்கரசரின் நல்வாக்கு.

ஞானம் காட்டி வாழ்வுக்கான நன்னெறியையும் காட்டுகிறது இறைமை ஞானம். அது மட்டுமல்ல,

"அருந்துணையை, அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை"

(தேவாரம்-கோயில்)

என்றும் அவர் பாடுகின்ருர்.

"கெடும் இடராய எல்லாம் கேசவா என்னநாளும்."

(திருவாய்மொழி-10 ப. 2 தி)

உண்மையிலேயே இறையுணர்வு நம் அல்லல்களைத் தீர்க்கும் அருமருந்தாக உள்ளதா? இடர்களைப் போக்குகிறதா?

...மென்ற கடலிலே தோணி விடுவதையே தொழிலாகக் கொண்டிருக்கும் நம்மை, இன்பம் என்ற கரையேற்றும் திறமுடையது இறைமைஞானம், என்று ஐயத்திற்கு இடமின்றிக் கூறுகின்ருர் அப்பரடிகள்:

"துன்பக் கடலிடைத் தோணித் தொழில் பூண்ட
தொண்டர் தம்மை
இன்பக்கரை முகந்தேற்றும் திறத்தன......"

(தேவாரம்-திருவையாறு)

இது உண்மைதானு?

Koviloor Digital Library


"கந்தவார் பொழில் நாகைக் காரோணனைச்
சிந்தை செய்யக் கெடுந்துயர் திண்ணமே"

(நாவுக்கரசர்-தேவாரம்-திருநாகைக்காரோணம்).

எவ்வளவு திண்ணமாகக் கூறுகின்றார் துயர் கெடுகின்றது என்று!

"விரைவில் வந்து வழிபடுவீர் உங்கள் துயர் கெடுவதற்கு"

என்கிறார் நம்மாழ்வார்.

"துயர் கெடும் கடிதடைந்து வந்து அடியவர்! தொழுமின்!

(திருவாய்மொழி -10 ப. 1 தி.)

துயரங்கள் மட்டுமா தீருகின்றன? எத்தனையோ நன்மைகளையும் நாம் பெறுகின்றோம் என்கின்றனர் அடியார்கள்.

"எம்மனா! என்குல தெய்வமே!
என்னுடைய நாயகனே!
நின்னுள்ளேனாய்ப் பெற்ற நன்மை
இவ்வுலகினில் யார் பெறுவார்?"

(பெரியாழ்வார் திருமொழி 5-4)

இறைமையோடு இசைந்தவர்கள் பெறும் நன்மை உலகில் வேறு எவருக்கும் கிட்டுவதில்லை என்கிறார் பெரியாழ்வார்.

அந்நன்மைகள்தான் எவை?

பாரதியார் பதில் கூறுகின்றார்:

பக்தியினாலே – இந்தப்
பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடி!
சித்தந் தெளியும் - இங்கு
செய்கை யனைத்திலும் செம்மை பிறந்திடும்
வித்தைகள் சேரும் - நல்ல
வீரர் உறவு கிடைக்கும், மனத்திடைத்
தத்துவம் உண்டாம் - நெஞ்சில்
சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கிடும்

(பக்தி)

Koviloor Digital Library



பக்தியினால் சித்தம் தெளிவது எவ்வாறு? நம் செயல்களில் செம்மை பிறப்பது எவ்வாறு? வித்தை சேர்வதும் வீரம் பெறுவதும் எப்படி? மனத்திலே தத்துவம் உதிப்பதும் நெஞ்சில் சஞ்சலம் நீங்குவதும் எவ்விதம்?

இவை பற்றியெல்லாம் நாம் காண வேண்டும்!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

(குறள் 50)

வையத்திலே வாழ வேண்டிய நெறிப்படி வாழ்பவரை வானுறையும் தெய்வம் என்று போற்றுகின்றார் வள்ளுவர்.

"........தெய்வ
வாழக்கையுற்றே இங்கு வாழ்ந்திடலாம், உண்மைப்
பக்தியினாலே"

என்று உறுதி கூறுகின்றார் பாரதியார்.

வையத்திலே வாழ்வாங்கு வாழ்வதற்கு இறையுணர்வே அடிப்படை என்பது ஞானிகள் கண்ட முடிவு.

நாம் அனைவரும், வாழ்வாங்கு வாழ்வதற்கு, இடர்கள் இன்றி இன்பமாய் வாழ்வதற்கு, எல்லா நலனும் பெற்று ஏற்றமுடன் வாழ்வதற்கு, இறையுணர்வு எவ்வாறு இன்றியமையாததாகின்றது என்பது பற்றி இனிக் காண்போம்.

Koviloor Digital Library

# 23. அன்புடைமை

"அன்பினில் விளைந்த ஆரமுதே"

(திருவாசகம்)

தவழ்ந்து வரும் தளிர்க் குழந்தையை ஆர்வத்தோடு அள்ளி எடுத்து உச்சிமோந்து உவகை பூக்கின்றாள் தாய்! பெற்ற தாயின் முகத்தோடு பிஞ்சுக் குழந்தையின் முகம் ஒன்றுகிறது. அப்பொழுது தாய்க்கும் சேய்க்கும் ஏற்படும் இன்பவுணர்வை என்னென்பது!

அலுவலகத்தில் இருந்து வீட்டுக்குத் திரும்பி வரும் கணவனை எவ்வளவு ஆர்வத்தோடு எதிர்பார்த்து நிற்கின்றாள் மனைவி!

பள்ளிக்குச் சென்று வரும் பாலகன் வீட்டிற்குள் வந்ததும் வராததுமாய் எவ்வளவு பாசத்தோடு தன் அன்னையை அணைத்துக் கொள்ளுகிறான்!

இவ்வாறு, பெற்றோர்-பிள்ளைகள், கணவன்-மனைவி, உற்றார் - உறவினர் இவர்களைப் பிணைத்து நிற்பது எது?

அன்பு என்ற உணர்வுதான்.

இந்த அன்புணர்வு இல்லையெனில் உலக வாழ்வு இல்லை.

இந்த அன்புணர்வுக்கு அடிப்படை எது?

பெற்றோர்க்கும் பிள்ளைகளுக்கும், கணவனுக்கும் மனைவிக்கும், உற்றார் உறவினர்களுக்கும் இடையுள்ள உறவுணர்வுதான் அன்புணர்வின் அடிப்படையாகின்றது.

உடன்பிறந்தோர் இருவரிடை உள்ள உறவினை நாம் அறிவோம். ஒரே தாய் தந்தையரின் மக்கள் என்பதால், அவர்களிடை நிலவும் பற்றையும் பாசத்தையும் நாம் காண்கிறோம். ஒரே வயிற்றிலிருந்து உதித்தவர்கள் என்பதால் அவர்களைச் சகோ

Koviloor Digital Library



தரர்கள் (சக-ஒரே, உதரர்கள் - வயிற்றிலிருந்து பிறந்தவர்கள்) என்கிறோம். எனவே, உடன்பிறப்புக்களிடையே இந்த உற வுணர்வு எழுகின்றது.

உண்மையில் இந்த உறவுணர்வு உடன்பிறந்தார்களி டையில் மட்டும்தான் இருத்தல் வேண்டுமா?

**இறையுணர்வால் நாம் பெறும் ஞானம்**

மக்கள் அனைவருமே, எல்லா உயிரினங்களுமே இறைமையின் தோன்றல்கள் என்பதுதானே இறையுணர்வால் நாம் எய்தும் ஞானம்?

உலகனைத்துக்கும் தந்தையாகவும் தயாகவும் தானே இறை மையைக் காணுகின்றனர் மெய்யடியார்கள்!

"எந்தையாய எம்பிரான் மற்றும் யாவர்க்கும்
தந்தை தாய் தம்பிரான்........."

(திருவாசகம் – திருச்சதகம்-47)

என்று பாடும் மாணிக்க வாசகர் எல்லா உயிர்களுக்கும் தந்தை யாகவும் தாயாகவும் உள்ளது இறைமைதான் என்பதை எடுத் தோதுகின்றார்.

"பரமண்டலத்திலிருக்கும் பரம பிதாவே"

என்று கூறி எல்லோருக்கும் பிதாவாக இருப்பது இறைமைதான் என்ற உண்மையினை உணர்த்துகிறது விவிலிய நூல்.

"உண்மைச் சமயத்தினர் அனைவரும்
உற்ற சகோதரர்கள்"

(XLIX - 10)

இது புனிதக் குரானின் பொன்மொழி.

இறைமை என்ற ஒரே தந்தையை, ஒரே தாயைப் பெற்ற வர்கள் நாம் அனைவரும் என்ற உண்மையினைச் சமய நூல்கள் எல்லாமே சாற்றுகின்றன.

இறைமை என்ற தந்தையையும் தாயையும் பெற்ற நாம் அனை வருமே உடன்பிறந்தோர்கள் ஆகி விடுகின்றோம்!

**உயிர் உறவால் உதிக்கும் அன்பு**

இவ்வுலகத்திலுள்ள நம் பெற்றோர்கள் நம் உடலுக்குப் பெற் றோர்கள்; ஆனால், நம் உயிருக்குப்பெற்றோர் இருப்பது

Koviloor Digital Library



இறைமை. உடலுறவால் ஒரு சிலரே நம் உடன் பிறந்தோர் ஆகின்றனர்; ஆனால், நம் உயிருறவால் உலகோரனைவரும் நம் உடன்பிறப்புக்கள் ஆகின்றனர்.

உயிர்களனைத்தும் உலகமனைத்தும் இமைமைதான் என்கிறார் ஞானி நம்மாழ்வார்:

"தானேயாகி நிறைந்து எல்லாவுலகும் உயிரும் தானேயாய்"

(திருவாய்மொழி—10 ப. 7 தி.)

எல்லா உயிர்களும் உலகமனைத்தும் இறைமைதான் என்பதை உணர்வதுதானே இறையுணர்வு?

எல்லாப் பொருள்களிலும் எல்லா உயிர்களிலும் இறைமை இணைந்துள்ளது என்றால், எல்லாப் பொருள்களும் எல்லா உயிர்களும் இறைமையால் நம்மோடு இணைக்கப்பட்டுள்ளன என்பது தானே உண்மை. இந்த இறைமை இணைப்பை உணர்வதுதான் அன்பு என்ற இணைப்புக்கு அடிப்படையாகின்றது.

'எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங்கு இருப்பது நீயன்றோ பராபரமே"

(தாயுமானவர்)

என்ற இறைமை ஞானம் எல்லா உயிர்களோடும் நமக்குள்ள இணைப்பினை, ஈடில்லாத உறவினை நமக்கு உணர்த்துகிறது.

ஆதலால்தான், இறையுணர்வு எய்திய மனித உள்ளம் புழு, பூச்சி, பறவை, விலங்கு ஆகிய எல்லா உயிர்கள் மீதும் அன்பு செலுத்துகிறது. அவ்வுயிர்கள் வருந்துவதைக் கண்டாலும் கேட்டாலும் சகிக்க முடிவதில்லை.

"மண்ணுலகத்திலே உயிர்கள்தாம்
வருந்தும் வருத்தத்தை ஒரு சிறிதெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக்
கேட்டும் கணமும் நான் சகித்திட மாட்டேன்"

(திருவருட்பா-பிள்ளைச் சிறு விண்ணப்பம்)

என்று உருகுகின்றது ஞானியர் உள்ளம். அவர்களது அன்புணர்வு உயிரினங்களை மட்டுமன்றி உயிரற்ற பொருள்களையும் அளாவுகின்றது! வாடி நிற்கும் செடிகொடிகளைக் காணும்பொழுது கூட என் மனம் வாடுகின்றது என்கிறார் அந்த ஞானி!

Koviloor Digital Library



"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்"

(திருவருட்பா-பிள்ளைச் சிறு விண்ணப்பம்)

இவ்வாறு, புழுவும் பூச்சியும், புல்லும் பூண்டும்கூட இறையுணர்வால் எழும் அன்புணர்வுக்கு உரிய பொருளாகி விடுகின்றன!

அனைத்துயிர்கள்மேலும் அன்புகாட்டும் பண்பினையே இறையுணர்வு பெற்றோர் இறைமையிடம் வேண்டுகின்றனர்:

அப்பா நான் வேண்டுதல் கேட்டு
அருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு
செயல் வேண்டும்.

(திருவருட்பா விண்ணப்பம்)

என்று வேண்டுகிறார் இராமலிங்க அடிகள்.

மாணிக்கவாசகரும் மெய்யன்பு வேண்டும் என்று பிரார்த்திக்கின்றார்:

பெறவே வேண்டும் மெய்யன்பு
பேரா ஒழியாப் பிரிவில்லா
மறவா நினையா அளவிலா
மாளா இன்ப மாகடலே.

(திருவாசகம்)

இறையுணர்வின் பயனே அன்புணர்வுதான் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் ஈடில்லாத காட்சியொன்றைக் காட்டுகிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்:

இளம் ஞானி பிரகலாதன் முன் இறைமை தோன்றுகிறது. "வேண்டும் வரத்தைக் கேள் தருகிறேன்," என்று கூறுகிறது! எல்லாம் வல்ல இறைமையிடம் அந்த பக்தன் கேட்ட வரம் என்ன? அரசையோ அருஞ்செல்வங்களையோ வேண்டவில்லை அந்த ஞானச் சிறுவன்! அன்பு என்ற பண்பினையே அவன் வேண்டி நின்றான்!

"நான் எலும்பே இல்லாத புழுவாகப் பிறந்தாலும் அன்பு என்ற பண்பாகிய அரும்பேறு எனக்கு வேண்டும்" என்று கேட்கிறது அந்த ஞான உள்ளம்:

Koviloor Digital Library



"முன்பு பெறப்பெற்ற பேரோ முடிவில்லை
பின்பு பெறும்பேறும் உண்டோ? பெறுகுவனேல்
என்பு பெருத இழிபிறவி எய்திடினும், நின்
அன்பு பெறும்பேறு அடியேற்கு அருள்" என்ருன்.

(கம்ப இராமாயணம்—யுத்தகாண்டம் - இரணியன் வதைப்படலம்)

ஏன் இறமையிடம் அன்புணர்வினை வேண்டுகின்றனர் அடியார்கள்?

## இறைமையும் அன்பும் வேறல்ல

இறையுணர்வில் இருந்து இயல்பாய் எழுவது அன்புணர்வு. இறையுணர்வின் பயன் அன்புணர்வு. இறையுணர்வும் அன்புணர்வும் இறண்டல்ல, ஒன்றுதான் என்ற உண்மையினை உணர்ந்த ஞானிகள் அன்புணர்வை வேண்டுகின்றனர்.

இறையுணர்வும் அன்புணர்வும் இரண்டல்ல, ஒன்றுதான் என்பதை உறுதிபடக் கூறுகின்ருர் திருமூலர்:

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமானது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

(திருமந்திரம்-270)

மேலைநாட்டுச் சமய ஞானிகள், "இறைமை என்பது அன்பே யாகும்" (God is Love) என்று போதித்துள்ளனர். நம் நாட்டு ஞானிகளோ ஒருபடி மேலே சென்று அன்புக்கு முதலிடம் கொடுத்து "அன்பே இறைமை", "அன்பே சிவம்" என்று கூறுகின்றனர்.

"அன்பினில் விளைந்த ஆரமுதே"

(திருவாசகம்—பிடித்தபத்து)

என்று இறைமையை ஏத்துகிருர் மாணிக்கவாசகர்.

"அன்பிலன்றி ஆழியானை யாவர் காணவல்லரே"

(திருச்சந்த விருத்தம்—76

என்று போற்றுகிருர் திருமழிசைப்பிரான்.

Koviloor Digital Library


''நம் வாழ்வு அன்பையே அடிப்படையாகக் கொண்டது. அன்பு இல்லாதவர்களின் உடம்பு தோலால் மூடப்பட்ட எலும்புக் கூடேயாகும்,'' என்கிருர் வள்ளுவர்.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு."

(குறள்-80)

**இயல்பான அன்பும் இறைமை அன்பும்**

பெற்றோர்க்கும் பிள்ளைகளுக்கும் உள்ள அன்பு, உற்ருர் உறவினரிடையுள்ள அன்பு, கணவன் மனைவி இவர்களிடை எழும் அன்பு என்பதெல்லாம் இயல்பாகவே எழுவதுதானே. இயல் பாக எழும் இந்த அன்புணர்வுக்கு இறையுணர்வே அடிப்படை என்று எவ்வாறு கூறுவது? என்ற கேள்வி நம் உள்ளத்தில் தோன்றலாம்.

ஆம். உற்ருர் உறவினரிடை உள்ள அன்பு இயல்பாகவே எழுவதுதான். ஆனல், அது எந்த அடிப்படையில் எழுகின்றது?

இது என் பிள்ளை, என்றுதான் தாய் தனது பிள்ளை மீது அன்பு காட்டுகிருள். இவர் என் பெற்ரோர் என்றுதான் பிள்ளை தன் பெற்ரோர் மீது அன்பு செலுத்துகிருன். இவர் என் கணவர், இவள் என் மனைவி என்றுதான் மனைவியும் கணவனும் ஒருவர் மீது ஒருவர் அன்பு கொள்ளுகின்றனர். இவர் என் உறவினர், இவர் என் நண்பர், என்றுதான் உறவினர் மீதும் நண்பரிடமும் நாம் அன்பு காட்டுகிரேம்.

இவ்வாறு, என் பிள்ளை, என் தந்தை, என் தாய், என் உறவினர், என் நண்பர் என்று, நான், எனது என்பதை ஆதார மாக வைத்தே நாம் அன்பு செலுத்துகிரேம்.

இதன் விளைவு என்ன?

நான், எனது என்பதை மையமாக வைத்துச் செலுத்தும் அன்பு நிலைத்து நிற்பதில்லை.

"என் மகன் நான் சொன்னபடி கேட்பதில்லை. என் விருப்பத் திற்கு மாருகவே நடக்கிருன்," என்று தந்தை கூறுகிருர்; தன் மகன் மீதுள்ள அன்பினை மறக்கின்ருர். நாளடைவில் அன்பு மாறி வெறுப்புணர்வு வளர்ந்து விடுகிறது!

Koviloor Digital Library



"என் நண்பன் எனக்குக் கேடு செய்துவிட்டான். எனவே இனி அவன் எனக்கு நண்பன் இல்லை," என்ற நிலையில் நண்பர்களிடை இருந்த அன்பு மறைந்து போகிறது!

"ஏறுக்கு மாருக நடக்கிருள் என் மனை," என்று கணவனும் "என் விருப்பத்தை நிறைவேற்றுவதே இல்லை என் கணவர்," என்று மனைவியும் ஒருவர் மீது மற்ருெருவர் வெறுப்புக் கொள்ளுகின்றனர்.

இவ்வாறு, நம் விருப்பத்திற்கு மாருக, நம் நலத்திற்கு எதிராக எவர் நடந்தாலும் அவர் மீது நமக்குள்ள அன்பு குறைகின்றது. வெறுப்பு வளர்கின்றது! பெற்ருேர்-பிள்ளை, உற்ருர் - உறவினர், கணவன்-மனைவி என்ற உறவால் எழும் பந்தம் பலவீனப்படுகிறது, நாளடைவில் உறவு மறைகிறது, அன்புணர்வு அற்றுப் போகிறது!

இவ்வாறு, என் பெற்ருேர், என் பிள்ளை, என் உறவினர் என்ற நிலையில் எழும் உறவுணர்வு உறுதியற்றுப் போகிறது. காரணம் இது தன்னலமான அன்பு. தன்னை மறந்து தன்னலத்தை மறந்து அத்தகைய அன்பு செயல்படுவதில்லை. தன்னலத்துக்கு ஏற்றவாறு அந்த அன்பு மாறுகின்றது, மறைகின்றது.

ஆனல், இறையுணர்வால் எழும் உறவுணர்வு என்றும் நிலைத்து நிற்பதாகும்.

எல்லா உயிர்களும் இறைமை என்ற இறையுணர்வால், நமக்கு எல்லா உயிர்கள் மீதும் ஏற்படும் அன்புணர்வு மாறுவதில்லை, மறைவதில்லை.

நான், எனது என்ற எண்ணத்திற்கு இடமில்லாமல், என் பிள்ளை, என் பெற்ருேர், என் உறவினர் என்ற தன்முனைப்பு இல்லாமல், இறைமை இணைப்பால் எல்லோரும் உறவுடையோம் என்ற அடிப்படையில் எழும் அன்புணர்வுதான் அழியாத அன்புணர்வு, உறுதியான அன்புணர்வு, உண்மையான அன்புணர்வு.

இத்தகைய அன்புணர்வு பிறந்து விட்டால் பிறர்நலம் பேணும், பிறர்க்கென வாழும் பண்பு நமக்கு வந்து விடுகிறது. எனவேதான்,

> அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு.

(குறள் 72)

என்று கூறுகின்ருர் வள்ளுவர்.

Koviloor Digital Library



பிறர்க்கென வாழ்வதோடு நிற்காமல், நமக்குத் துன்பம் விளைவிப்போர்மீதுகூட அன்பு காட்டுகின்றனர் உண்மை அன்பின் உறுதியில் நிற்போர்கள்.

"தின்ன வரும்புலி தன்னையும் அன்பொடு
சிந்தையிற் போற்றிடுவாய் - நன்னெஞ்சே!
அன்னை பராசக்தி அவ்வுரு வாயினள்
அவளைக் கும்பிடுவாய்"

(பகைவனுக்கருள்வாய்)

என்கிறார் பாரதியார்.

அன்னை பராசக்திதான் புலி உருவத்தில் உள்ளது என்ற இறையுணர்வு நமக்கு இருந்தால்தான் தின்னவரும் புலியையும் நாம் அன்போடு சிந்தையில் போற்ற முடியும்.

நமக்கும் உலகத்துயிர்களுக்கும் உள்ள அன்பிணைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் காட்டும் வகையில் ஒப்பற்ற உதாரணம் ஒன்றைக் கூறுகின்றார் வள்ளுவர்.

நம் உடம்பு வேறு, உயிர் வேறு என்பதை நாம் அறிவோம். இருப்பினும், உடம்பிலே காயம் பட்டால் உயிரல்லவா வேதனைப் படுகின்றது! உடம்பு அனுபவிக்கும் இன்ப உணர்வு உயிருக்கும் மகிழ்ச்சியூட்டுகிறது! அது போன்றே உள்ளம் சோர்ந்திருந்தால் உடலும் சோர்வடைகிறது. திடீரென்று உள்ளத்திலே துயரம் தோன்றிவிட்டால் உடலுறுப்புக்கள் பாதிக்கப்படுகின்றன. இத்தகைய நெருங்கிய தொடர்பு நம் உடலுக்கும் உயிருக்கும் உள்ளது.

இதுபோன்ற நெருக்கமான தொடர்பு உலகத்துயிர்களுக்கும் நமக்கும் வேண்டும் என்கிறார் வள்ளுவர். அதுதான் உண்மையான அன்பாகிறது.

அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.

(குறள்-73

என்பது குறள்

உயிருக்கும் உடலுக்கும் உள்ள உறவுபோல் உலகத்துக்கும் நமக்கும் உள்ள உறவு, அன்புறவு இருக்க வேண்டுமெனில்,

Koviloor Digital Library



உலகம் வேறு நாம் வேறு என்ற எண்ணம் அற்றுப் போக வேண்டும்? இரண்டும் வேறல்ல ஒன்றுதான் என்ற உணர்வு உதிக்க வேண்டும்.

இந்த உணர்வு எப்பொழுது உதிக்கிறது?

"நாம் காணும் பொருள்களனைத்தும் பிரமம், காணுப் பொருள் களும் பிரமம்" என்கிறது பிரிகதாரண்யக உபநிடதம்.

உலகனைத்திலும் உயிர்களனைத்திலும் உள்நின்று இலங்குவது இறைமைதான்; நம்முள் உறைவதும் இறைமைதான்; எனவே, உலகனைத்தும் உயிர்களனைத்தும் நாமும் இறைமையால் இணைக்கப் பட்டு ஒன்றுகவே உள்ளோம் என்ற இறையுணர்வுதான், உலகமும் நாமும் ஒன்று என்ற அன்புணர்வினைத் தோற்றுவிக் கிறது.

எனவேதான் இறைமையும் அன்பும் வேறல்ல, அன்புதான் இறைமை, இறைமைதான் அன்பு என்று உறுதியாகக் கூறு கின்றனர் உண்மையுணர்ந்த ஞானிகள்.

### அன்பாழியான்

இறைவனை "அன்பாழியான்" என்று போற்றுகிறுர் பொய்கை யாழ்வார்:

> "அன்பாழியானை யணுகென்னும், நா அவன்றன்
> பண்பாழி தோள் பரவி ஏத்தென்னும்......"
>
> (முதல் இயற்பா – திருவந்தாதி-72)

இறைவனை அன்புருவாகவே காணுகின்றுர் இராமலிங்க அடிகள்:

> "அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே,
> அன்புருவாம் பரசிவமே."

இவ்வாறு,இவ்வுலக வாழ்விற்கு இன்றியமையாதபண்புஅன்பு. அந்த அன்புணர்வுக்கு அடிப்படையாக உள்ளது இறையுணர்வு.

எனவே, இறையுணர்வால் எழும் அன்புணர்வே உண்மை யானதுஉ,றுதியானது, மாருதது, மறையாதது.

Koviloor Digital Library

# 24. அறம் பேணல்

"பிரமம் எல்லாவற்றையும் காண்கிறது, அனைத்தையும் அறிகிறது"

(முண்டக உபநிடதம்)

குழந்தைகள் குலுங்கக்குலுங்கச் சிரிக்கின்றன. பெரியவர்கள், அதிலும் ஞானிகள் அவ்வாறு சிரிப்பதில்லை. புன்முறுவலாகவே அவர்கள் சிரிப்பு இருக்கும்.

ஆனால், ஞானி நாவுக்கரசர் குலுங்கக்குலுங்கச் சிரிக்கின்றார். சிரித்து அவர் விலாப்புறங்கள்கூட வலியெடுக்கின்றன! இது ஆச்சரியமல்லவா? நம்ப முடியவில்லையே!

"விலாவிறச் சிரித்திட்டேனே!"

என்று அவரே கூறுகின்றார்.

"ஏன்?" என்று கேட்கிறோம்.

"வெள்கினேன் வெள்கி நானும்
விலாவிறச் சிரித்திட்டேனே!"

என்று அவர் பதிலளிக்கிறார்.

**ஞானச் சிரிப்பு**

நாவுக்கரசரைப் போன்ற ஞானி வெட்கப்படவாவது! அவர் வெட்கப்பட்டுச் சிரிக்கும்படி, அதுவும் விலாப்புறங்கள் வலிக்கும் அளவுக்குச் சிரிக்கும்படி என்ன நடந்து விட்டது?

அதற்கும் அவரே விடையளிக்கின்றார்!

"நான் கள்ளத்தனமாக மனத்திலே எத்தனையோ தீய எண்ணங்களை மறைத்து வைத்துக் கொண்டு காலத்தைப் போக்கினேன். சிறிது மனம் தெளிந்தது. இறைமையைத் தேடினேன்.

Koviloor Digital Library



என்ன அதிசயம்! அது என் உள்ளத்திலேயே இருக்கிறது! நான் உள்ளத்தில் எண்ணியவற்றை யெல்லாம் இறைமை அறிந்து கொண்டு இருக்கிறது!

"என் எண்ணங்கள் எவருக்கும் தெரியாது என்று நினைத்துக் கொண்டிருந்த எனக்கு, இறைமை இவ்வாறு உள்ளத்திலேயே இருந்து கொண்டு நான் உள்ளியதை எல்லாம் அறிந்து கொள்ளு கிறது என்பது தெரிந்ததும் எனக்கு வெட்கம் தாங்க முடியவில்லை. இதனால்தான் நான் விலாப்புறங்கள் வலிக்கும் அளவுக்கு விழுந்து விழுந்து சிரிக்கிறேன்!"

என்கின்றார் அந்த ஞானி!

"கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக்
கழித்துப் போக்கி
தெள்ளியே னாகிநின்று தேடினேன் நாடிக்கண்டேன்
உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந்து
அறிதிஎன்று
வெள்கினேன் வெள்கிநானும் விலாவிறச்
சிரித்திட்டேனே"

(நாவுக்கரசர்–தேவாரம் பொது)

விலாவிறச் சிரிக்கும் நாவுக்கரசரின் சிரிப்பொலியோடு தொண்டரடிப் பொடியாழ்வாரின் சிரிப்பொலியும் சேர்ந்து கேட் கிறது! நாவுக்கரசரோடு சேர்ந்து தொண்டரடிப் பொடியாழ் வாரும் விலவறச் சிரிக்கின்றார்!

"உள்ளத்தில் உறையும் இறைமையினை உணராமல் கள்ளத் தனமான எண்ணங்களை மறைத்து வைத்துக்கொண்டு, தொண் டனைப்போல் வேடம் பூண்டேன். இதயத்தில் உறையும் இறைமை இவ்வெண்ணங்களை அறியும் என்பது தெரிந்த உடன் நான் வெள்கிப்போய் எனக்குள்ளேயே விலவறச் சிரித்திட்டேன்" என் கிறார் அந்த ஞானி.

"உள்ளத்தே உறையும் மாலை
உள்ளுவா னுணர்வொன்றில்லா,
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த்
தொண்டுக்கே கோலம் பூண்டேன்,
உள்ளுவார் உள்ளிற்றெல்லாம்

Koviloor Digital Library



உடன் இருந்து அறிதி என்று,
வெள்கிப் போய் என்னுள்ளே நான்
விலவறச் சிரித்திட்டேனே!

(திருமாலை-34)

சிவனடியாராக இருந்தாலும், திருமாலடியாராக இருந்தாலும் அவர்கள் காணும் உண்மை ஒன்றுதானே!

இவ்விரு ஞானிகளும் நம்முடைய அறியாமையைக் கண்டு கோபப்படவில்லை, சிரிக்கின்றனர்! நமது அறியாமை சாதாரணமாக இருந்தால் அவர்களுக்குக் கோபம் வரலாம்; ஆனால், அது அளவு கடந்த அறியாமையாக இருப்பதால் கோபம் சிரிப்பாக மாறிவிடுகிறது!

அத்தகைய அளவு கடந்த அறியாமை என்ன?

"நம் இதயத்து எண்ணங்கள் வெளியே தெரிவதில்லை. எவரும் அவற்றை அறிய மாட்டார்கள். ஆதலால், நாம் எத்தகைய தீய எண்ணங்களுக்கும் இதயத்தில் இடம் கொடுக்கலாம்", என்று நாம் கருதுகிறோம். இதன் விளைவாக எண்ணற்ற தீயெண்ணங்கள் நம் இதயத்திலே எழுந்து நிலைபெறுகின்றன. எவரும் இவ்வெண்ணங்களை அறியமாட்டார்கள் என்ற உறுதியால் தீய எண்ணங்களை நாம் வளர்த்துக் கொண்டே போகிறோம்!

ஆனால், உண்மை நிலை என்ன?

எல்லாமாகி எங்கும் நிறைந்துள்ள இறைமை நம் இதயத்திலும் உள்ளது. நம் இதயத்தில் இருந்துகொண்டு நம் எண்ணங்கள் அனைத்தையும் அது அறிகின்றது!

இந்த உண்மையினை உணராமல்தான் நாம் கள்ளத்தனமான எண்ணங்களை நம் உள்ளத்தில் உரம் பெறச் செய்கின்றோம்!

இது எவ்வளவு மடமையான செயல்!

இந்த மடமையினைக் கண்டுதான் நாவுக்கரசர் நகைக்கின்றார்! சீரடித்தொண்டர் சிரிக்கின்றார்!

எத்தகைய மகத்தான உண்மையினை இந்த ஞானிகளின் சிரிப்பு, ஞானச் சிரிப்பு நமக்கு உணர்த்துகிறது!

Koviloor Digital Library



**சிந்தனையும் செயலும்**

சிந்தனைகளே செயல்களாக உருவெடுக்கின்றன. நம் செயல்களுக்கெல்லாம் மூலமாக இருப்பது சிந்தனையேயாகும். சிந்தனை இன்றிச் செயல் இல்லை.

தீய செயல்களுக்கெல்லாம் ஆதாரமாக உள்ளவை தீய எண்ணங்கள்தான். சிந்தனையில் தீமை இல்லையெனில் செயலிலும் இருப்பதில்லை. சிந்தனை தூய்மையாக இருந்தால் செயல்களும் தூய்மையாகி விடுகின்றன.

"மனிதனை மாசு படுத்துவது புறப்பொருள்கள் அல்ல, அவன் இதயத்தினில் எழும் இழுக்கான எண்ணங்கள்தாம்"

(மார்க்-7)

என்கிறது விவிலிய நூல்.

தீய எண்ணங்கள் ஏதுமின்றி மக்களை இருக்கச் செய்வது எவ்வாறு?

குற்றங்களை மக்கள் செய்தால் அரசாங்கம் அவர்களைத் தண்டிக்கிறது. சட்டமும் காவல்துறையும் இதற்குத் துணை செய்கின்றன. ஆனால், தீச்செயல்களுக்கு மூலமாகத் தீய எண்ணங்கள் அல்லவா இருக்கின்றன? மக்கள் மனத்திலே தீய எண்ணங்கள் எழாது இருந்தால்தானே தீய செயல்கள் நிகழாது இருக்க முடியும்? அத்தீய எண்ணங்களைத் தடுப்பது எப்படி?

உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்களைக் காட்டும் கருவி இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. மனத்திலே எழும் மாசுபடிந்த எண்ணங்கள் வெளியே தெரிவதில்லை. எனவே, அவற்றைத் தடுப்பதற்கான சக்தி சட்டத்திற்கும் இல்லை, காவல் துறைக்கும் இல்லை.

மக்கள் ஒருவருக்கொருவர் தீங்கு செய்யாது இசைந்து இன்பமாக வாழ வேண்டும் என்ற நோக்கத்துடன் இயங்கும் அரசாங்கத்தால், தீங்கான செயல்களுக்கு மூலமான தீய சிந்தனைகளைத் தடுக்க இயலுவதில்லை!

**சிந்தனைக்குக் கண்காணி**

சட்டத்தால் செய்ய முடியாத இதனைச் சமயம் செய்கின்றது!

Koviloor Digital Library



மனத்திலே மாசு இன்றி நாம் இருப்பதற்கு ஈடில்லாத் துணையாக நிற்பது இறையுணர்வேயாகும.

எப்படி?

"நம் உள்ளத்திலே நிகழும் எண்ணங்களைக் காணும் கண் காணி இல்லையென்று நினைத்துத்தானே கள்ளத்தனமான எண்ணங்களை நாம் வளர்க்கிறோம்? கள்ளமான உள்ளத்துடன் நாம் இருப்பது கண்காணி இல்லையென்ற தைரியத்தால் தானே? எங்கும் நிறைந்துள்ள இறைமை நம் இதயத்திலும் கலந்து நின்று நம் கள்ள எண்ணங்களைக் கண்காணிக்கின்றது என்ற உண் மையினை நாம் உணர்ந்துவிட்டால் கள்ளம் அகன்றுவிடு மல்லவா?" என்று கேட்கின்றார் ஞானி திருமூலர்!

"கண்காணி இல்லென்று கள்ளம்பல செய்வார்
கண்காணி இல்லா இடமில்லை காணுங்கால்
கண்காணியாகக் கலந்தெங்கும் நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந்தாரே."

(திருமந்திரம்-2067)

இவ்வாறு, கடவுளைக் கண்காணியாகக் காட்டி நம் கள்ளமான எண்ணங்களை அகற்றுகின்றது இறையுணர்வு.

"நீ செய்வது அனைத்தையும் அல்லா கண்காணித்துக் கொண்டிருக்கிறார்"

(2: 110)

என்று எச்சரிக்கின்றது புனிதக் குரான்.

இதயத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்வதற்கு, மனத்திலே மாசு இல்லாமல் காத்துக் கொள்ளுவதற்கு இதைவிட வேறு உபாயம் ஏது?

"எவருக்கும் தெரியாது என்று எண்ணிக் கொள்ளாதே. இதயத்திலே கலந்து நிற்கும் இறைவன் எண்ணங்களையும் கண்காணித்துக் கொண்டிருக்கிறான். எனவே, தீய எண்ணங் களுக்கு இடங்கொடாதே," என்று எச்சரித்து, நம் மனத்தை மாசு இன்றி வைத்துக் கொள்ளச் செய்கின்றது இறையுணர்வு.

Koviloor Digital Library



**மனத்து மாசு அகலுதல்**

மனத்தின் மாசினை அகற்றுவது இறையுணர்வுதான் என்பதை அறுதியிட்டுக் கூறுகின்றார் அப்பரடிகள் :

"...................................
தனத்தினைத் தவிர்ந்து நின்று தம்மடி பரவுவார்க்கு
மனத்தினுள் மாசுதீர்ப்பார் மாமறைக் காடனாரே"
(தேவாரம் – திருமறைக்காடு)

நம் வாழ்விலே பலரைப் பார்க்கிறோம். பக்தர்களாகக் காணப்படுகின்றனர். பரமன் பெயர்களையே உச்சரித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் செய்யும் வழிபாடும் வந்தனையும் நமக்கு வியப்பூட்டுகின்றன. ஆனால், அவர்கள் பிறருக்கு கேடு செய்வதற்குத் தயங்குவதில்லை. வஞ்சித்து மற்றவர்களைக் கெடுப்பதில் வல்லமையுடையவர்களாக இருக்கின்றனர். இது எப்படி என்ற ஐயப்பாடு நமக்கு எழுகிறது.

உண்மையில் அவர்கள் இறைமையில் ஈடுபடவில்லை. அவர்கள் இதயத்திலே இறையுணர்வு சிறிதும் இல்லை என்பதே இதற்கு விடையாகும்.

வஞ்சனை நிறைந்த உள்ளத்துடன் ஐந்தெழுத்தைச் சொல்லிக் கொண்டே இருந்தாலும் அவர்கள் இதயத்தில் இறைமை விளங்குவதில்லை. அவர்களிடமிருந்து வெகுதூரம் போய்விடுகிறது இறைமை என்கிறார் நாவுக்கரசர் :

"............ ............வஞ்சனையால் அஞ்செழுத்தும்
வழுத்துவார்க்குச் சேயானை"
(தேவாரம் – திருவீழிமழலை)

தங்க அட்டிகை ஒன்றை விலைக்கு வாங்குகிறோம். அதை வைத்துக் கொள்ளுவதற்கென்று அழகான பெட்டி ஒன்றைக் கடைக்காரர் தருகின்றார். நீலநிற "வெல்வெட்" துணி அந்தப் பெட்டிக்குள் ஒட்டப்பட்டிருக்கிறது. மெல்லிய பட்டுப் பதிந்துள்ள அப்பெட்டியில்தான் தங்க அட்டிகையை நாம் வைத்துக்கொள்ளுகிறோம்.

அழகான "பர்சில்" தான் பண நோட்டுகளையும் நாணயங்களையும் வைத்துக் கொள்ளுகிறோம்.

சாதாரண நகையையும் நாணயங்களையும் வைத்துக்கொள்வதற்கே அழகான பெட்டியையும் பையையும் நாடுகின்றோம் என்றால், ஈடேதும் இல்லாத இறைமை உறையும் நம் இதயம்

Koviloor Digital Library



எவ்வளவு தூய்மையானதாக இருத்தல் வேண்டும்? எவ்வளவு பரிசுத்தமானதாக, பவித்திரமானதாக இருத்தல் வேண்டும்?

உள்ளத்திலே கள்ள எண்ணங்கள் இல்லாமல் இருந்தால் தான், மனத்திலே மாசு படிந்த சிந்தனைகள் இல்லாது இருந்தால் தான் நம் இதயம் தூய்மையாக இருக்கிறது என்று கூறமுடியும்.

நம் இதயத்தில் இறைமை இலங்குகிறது என்ற இறையுணர்வு நமக்கு இருந்தால், நம் உள்ளத்தைப் புனிதமாக வைத்திருப் போம்; பொய்மைக்கு இடங்கொடோம். தீய எண்ணங்களால் மனத்திலே மாசு படராமல் தடுத்துவிடுவோம். கள்ளமான எண்ணங்கள் தோன்றினால் அவற்றை முளையிலே கிள்ளி எறிந்து விட்டு, உள்ளத் தூய்மையினைப் பாதுகாப்போம்.

இத்தகைய தூய்மையான உள்ளத்தில்தான் இறைமை விளங்குகிறது.

கள்ள நெஞ்சமும் வஞ்சகக் கருத்தும் இல்லாமல் ஒன்றி நினைபவர் உள்ளத்தில்தான் இறைமை உள்ளது என்கிறார் திருஞானசம்பந்தர்:

> "கள்ளநெஞ்ச வஞ்சகக் கருத்தை விட்டருத்தியோடு
> உள்ளம் ஒன்றி உள்குவார் உளத்துளான்"

(தேவாரம்)

**உருகும் உள்ளம்**

செம்பு, பித்தளை போன்ற உலோகத்தில் உள்ள அழுக்கைப் போக்குவதற்கு அதை உருக்குகிறோம். உருகும் உலோகத்தி லிருந்து அதில் கலந்திருந்த அழுக்கு அகன்று விடுகிறது. "அது போல், இறையுணர்வு நம் உள்ளத்தை உருக்குகிறது. உருகிய உள்ளத்திலிருந்து அதில் கலந்திருந்த கள்ளம் அகன்றுவிடுகிறது" என்கிறார் நாவுக்கரசர்:

> "உருகுவித்தென் உள்ளத்தின் உள்ளிருந்த
> கள்ளத்தைத் தள்ளிப் போக்கி..."

(தேவாரம்–திருவாரூர்)

இறையுணர்வால் உருகும் உள்ளத்தில் கலந்திருந்த கள்ளம் அகன்று விடுகிறது. உள்ளம் தூய்மையாகி விடுகின்றது.

இவ்வாறு உள்ளத்தை உருக்கி மனத்திலுள்ள மாசினை அகற்றுகின்றது இறையுணர்வு!

Koviloor Digital Library



**அறம்**

மனத்திலே மாசு இல்லா விட்டால் பொய் ஏது, புரட்டு ஏது? கள்ளம் ஏது, களவு ஏது? வஞ்சனையும் வன்கண்மையும் ஏது?

பொய்யும் புரட்டும், சூதும் வாதும் தானே மக்களின் இன்ப வாழ்விற்கு இடையூறுகளாக இருக்கின்றன. நம் மனத்திலே மாசு இல்லையெனில் மாசு படிந்த செயல்களுக்கு இடமே இல்லை. மக்களின் இன்ப வாழ்விற்கு இடையூறு இல்லை.

எனவே, மனத்திலே மாசு இல்லாமல் இருப்பதுதான் "அறம்" என்கிறார் திருவள்ளுவர்.

> **மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்**
> **ஆகுல நீர பிற.**

(குறள் – 14)

அறம், அறம் என்று சொல்லுவதெல்லாம் நாம் மனத்திலே மாசின்றி இருப்பதுதான், தீயெண்ணங்கள் இன்றி இருப்பது தான் என்று திட்டவட்டமாகக் கூறுகின்றது குறள்.

இத்தகைய அறத்தால் விளைவது என்ன? மக்களின் இன்ப வாழ்வு. தீச்செயல்கள் இல்லையெனில் மக்களது இன்பம் நிலைக் கிறது.

அறத்தால் விளைவது மக்களது இன்பந்தான் என்பதையும் வள்ளுவர் தெளிவாகக் கூறுகின்றார்:

> **அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
> **புறத்த புகழும் இல.**

(குறள் 39)

எனவே, மக்களுக்கு இன்ப வாழ்வினைக் கொடுப்பது அறம். அறம் என்பது மனத்திலே மாசின்றி இருத்தல்.

மனத்திலே மாசின்றி இருப்பதற்கு உறுதுணையாக இருப்பது இறையுணர்வு. உள்ளத்திலே உறையும் இறைமை கள்ளமான எண்ணங்களையும் அறிகின்றது என்ற ஞானந்தான் கள்ளமான எண்ணங்கள் மனத்திலே வளராமல் காக்கின்றது. மனத்தை மாசின்றி வைக்கின்றது. ஆதலால்தான்,

> **"மனத்தினுள் மாசு தீர்ப்பார் மாமறைக்காடனுரே"**

(தேவாரம்—திருமறைக்காடு)

என்று பாடுகின்றார் நாவுக்கரசர்.

Koviloor Digital Library



இறையுணர்வால்,

"மனமாசு தீரும் மறுவினையும் சாரா,
தனமாய தானே கைகூடும்"

(இயற்பா - முதல் திருவந்தாதி-43)

என்று பாடுகின்றார் பொய்கையாழ்வார்.

**அறவாழியான்**

மனத்திலே மாசின்றி இருப்பதுதான் அறம் என்று கூறும் வள்ளுவர், அந்த அறத்திற்கு ஆதாரமாக உள்ள இறைமையினை "அறவாழி அந்தணன்" என்கிறார் (குறள் - 8). அறக் கடலாக உள்ளது இறைமைதான்.

முந்திய கட்டுரையில், இறைவனை "அன்பாழியான்" என்று பொய்கையாழ்வார் குறித்ததைக் கண்டோம். இங்கு, "அறவாழியான்" என்று இறைவனைக் குறிக்கின்றார் வள்ளுவர்.

இன்பமான சமுதாய நல்வாழ்விற்கு இன்றியமையாதவை அன்பும் அறமும். இவ்விரு பண்புகளுக்கும் அடிப்படையாக இருப்பது இறையுணர்வு. எனவேதான், இறைவனை "அன்பாழியான்" என்றும், "அறவாழியான்" என்றும் போற்றுகின்றனர் அடியார்கள்.

Koviloor Digital Library

# 25. அச்சமின்மை

"இறைமை இன்பத்தில் திளைத்தவர்கள் எதற்கும் அஞ்சுவதில்லை"

(தைத்திரீய உபநிடதம்)

இருட்டைக் கண்டால் குழந்தைகள் பயப்படுகின்றன. குழந்தைகள் மட்டுமா? நாமும்தான் பயப்படுகின்றோம்!

ஆனால், நாம் அஞ்சுவது இருட்டைக் கண்டு மட்டுமல்ல. எத்தனைஎத்தனையோ காரணங்களைக் கண்டு நாம் அச்சப்படுகிறோம்!

இருட்டைக் கண்டால் பயம், இடியோசைக் கேட்டால் பயம். எதிரிகள் குறித்துப் பயம், எஜமானர் பற்றிப் பயம்! பணம் வராதோ என்ற பயம், வந்த பணம் போய்விடுமோ என்ற பயம், இப்படி நமக்கு அச்சத்தை விளைவிக்கும் காரணம் ஒன்று இரண்டா? எத்தனைஎத்தனையோ உள்ளன!

இந்த அவல நிலையினைக் கண்டு நெஞ்சு பொறுக்காமல் பாடுகின்றார் பாரதியார்.

நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
அஞ்சியஞ்சிச் சாவார் - இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே!

ஆம்! நாம் அஞ்சியஞ்சித்தான் சாகின்றோம்.

அச்சத்தால் எழும் கோழையுணர்வால் நாம் பலமுறை செத்துப் பிழைக்கின்றோம். ஆனால், வீரர்கள் மரணம் எய்துவது ஒரே ஒருமுறைதான் என்கிறார் ஷேக்ஸ்பியர்:

Cowards die many times before their deaths;
The valiant never taste of death but once.

(Julius ceaser)

Koviloor Digital Library


எனவே அச்சத்திற்கு ஆட்பட்டு நாம் வாழும் வாழ்வு மரண வாழ்வாகின்றது! செத்துப் பிழைக்கும் சீர்குலைந்த வாழ்வாகி விடுகின்றது.

**இந்த அச்சத்தினை அகற்றுவது எப்படி.**

முதலாவதாக அச்சவுணர்வு எழுவது ஏன் என்று நாம் சிந்திக்க வேண்டும்.

இருட்டைக் கண்டு நாம் அஞ்சுகிறோம். எதனால்? இருட்டிலே இருப்பது என்னவென்று நமக்குத் தெரியவில்லை. இருள் சூழ்ந்த நிலையில், நம்மைச் சுற்றி இருப்பவை என்ன என்பதை நாம் அறிய முடிவதில்லை. இந்த அறியாமை என்ற இருளால் தான் அச்சவுணர்வு நம் உள்ளத்திலே தோன்றுகிறது.

புறத்திலுள்ள இருளால் அறியாமை எழுவதுபோல், அகத்தி லுள்ள இருளாலும் அறியாமை எழுகின்றது. இந்த அறியாமை யால்தான் உலகப் பொருள்களும், பிற உயிர்களும் வேறு வேறனவை, நம்மிலிருந்து மாறுபட்டவை என்று கருதுகிறோம். மாறுபட்ட பொருள்களைக் கண்டு மனம் மருளுகின்றது. அதனால் அச்சம் தோன்றுகிறது.

ஆனல், இறையுணர்வு என்ற ஒளி தம் இதயத்தில் உதித்த உடன் எல்லாமே இறைமைதான் என்ற அறிவு நமக்குப் பிறக் கின்றது.

"உயிர்களெல்லாம் தெய்வமன்றிப் பிறவொன்றில்லை;
ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்;
பயிலுமுயிர் வகைமட்டு மன்றி யிங்குப்
பார்க்கின்ற பொருளெல்லாம் தெய்வம் கண்டீர்;
வெயிலளிக்கும் இரவி, மதி, விண்மீன், மேகம்
மேலுமிங்குப் பலபலவாம் தோற்றங் கொண்டே
இயலுகின்ற ஜடப்பொருள்கள் அனைத்தும் தெய்வம்;
எழுதுகோல் தெய்வமிந்த எழுத்தும் தெய்வம்."

(பாரதியார்—சுயசரிதை)

இவ்வாறு எல்லாமே இறைமை, இறைமையின்றி எதுவும் இல்லை என்ற அறிவு பிறந்த பின் அச்சத்திற்கு இடமேது?

சாதாரணமாக, ஒன்று மற்றொன்றைப் பார்த்துப் பயப்படு கிறது, ஒருவர் மற்றொருவரைக் கண்டு அஞ்சுகிறார் என்கிறோம். ஆனல், ஒன்று மற்றொன்று, ஒருவர் மற்றொருவர் என்ற வேறுபாடு

Koviloor Digital Library



தோற்றத்தில் மட்டுமே உள்ளது. உண்மையில் வேறுபாடு இல்லை. எல்லாமே ஒன்றுதான், இறைமைதான் என்ற நிலையில் எது எதைக்கண்டு அஞ்சுவது, யார் யாரைக் கண்டு பயப்படுவது?

நமக்கு அச்சம் விளைவிக்கும் பொருள் நம்மிலிருந்து வேறுபட்டது அல்ல; நாமே தான் அந்தப் பொருளாகவும் இருக்கிறோம் என்ற உண்மையினை நாம் உணர்ந்துவிட்டால் அச்சத்திற்கான காரணம் அடியோடு மறைந்துவிடுகிறது.

பார்க்கின்ற பொருள்களெல்லாம் இறைமை, எல்லா உயிர்களும் இறைமை, நாமும் அவற்றோடு இணைந்தேயுள்ளோம் என்ற ஞானம் பிறந்து விட்டால் அச்சத்தின் அடிப்படை அகன்றுவிடுகின்றது.

இறைமை இணைப்பால் எழும் அன்புணர்வுக்கு முன் அச்சவுணர்வுக்கு இடமேது? அன்புணர்வு வளர வளர அச்சவுணர்வு தானாக மறைந்துவிடுகிறது.

எல்லாம் இறைமை, இறைமையின்றி ஏதும் இல்லை என்ற மெஞ்ஞானம், ஆன்மவொளி, பெற்றவர்களுக்கு அச்சம் என்பது ஏது என்று வினவி, அவர்கள் மனத்திலே இன்பத் தேனல்லவா பெருகவேண்டும் என்கிறார் ஞானக்கவி பாரதி:

"ஆன்ம வொளிக்கடல் மூழ்கித் திளைப்பவர்க்கு
அச்சம் உண்டோடா? - மனமே
தேன்மடை இங்கு திறந்தது கண்டு
தேக்கித் திருவமடா."

(தெளிவு)

அச்சம் என்கிற உணர்வைச் சுட்டு அதன் சாம்பல் கூட இல்லாமல் செய்து விடுகிறது இறையுணர்வு என்கிறார் அவர்.

"அச்சத்தைச் சுட்டங்கு சாம்பருமின்றி
அழித்திடும் வானவனை"

(தீ வளர்த்திடுவோம்)

வானமே உச்சிமீது இடிந்து விழுந்தாலும் கூட அச்சமில்லை அச்சமில்லை என்று முழங்குகிறது அந்த ஞான உள்ளம்:

"உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே."

Koviloor Digital Library


சாதாரணமாக மாவட்டத்திலுள்ள ஒருபெரிய அதிகாரி நமக்கு உறவினர் என்று வைத்துக் கொள்வோம். நாம் அங்குள்ள மற்ற அதிகாரிகளுக்குப் பயப்படுவோமா? மாட்டோம். மாநிலத்தை ஆளும் மந்திரி ஒருவர் நமக்கு நெருங்கிய உறவினர் என்றால் நாம் எவ்வளவு தலைநிமிர்ந்து நடக்கிறோம்! எவருக்காவது அஞ்சுவோமா? அற்பமான அதிகாரி, இன்றிருந்து நாளைப் போய்விடும் அமைச்சர் போன்றவர்களின் உறவு இருந்தாலே அச்சமின்றி நடக்கும் நாம், எல்லாம் வல்ல, என்றும் உள்ள இறைமையோடு உறவுடைய நாம் எதைக் கண்டு அஞ்ச வேண்டும்? நமக்கு அச்சம் விளைக்கும் பொருள் தான் உண்டா?

"இல்லை" என்று உறுதியாகச் சொல்லுகின்றார் நாவுக்கரசர்: "இறைமையோடு உறவுடையேன் நான். எனவே, நான் எதைக் கண்டும் அஞ்சுவதில்லை. என்னை அச்சுறுத்த வருவதும் ஏதுமில்லை" என்று பாடுகிறார் இந்த ஞானி:

"ஒடுங் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்சவருவதும் இல்லை"

(தேவாரம் — திருஅதிகை வீரட்டானம்)

(தமர் - உறவினர்)

இறைமையுணர்விலே திளைத்து நிற்கும் அடியார்கள்,

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்திலிடர்ப் படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

(நாவுக்கரசர் – தேவாரம் பொது)

என்றும்,

"யாமார்க்கும் குடியல்லோம் யாதும் அஞ்சோம்"

(திருவாசகம்)

என்றும் முழங்குகின்றனர்.

இவ்வாறு இறையுணர்வு அச்சவுணர்வின் அடிப்படையினையே தகர்த்து விடுகின்றது.

"இதயத்தில் அச்சம் இருந்தால், இறையுணர்வு இல்லை என்பதே பொருள்" என்கிறார் காந்தியடிகள்.

(நவ இந்தியா-2-9-1926)

Koviloor Digital Library



ஒன்றைக் கண்டு நாம் அஞ்சுகிறோம் என்றால் அதற்குக் காரணம் அதனால் நமக்குத் தீங்கு விளையலாம் என்பதுதான். எனவே நமக்குத் தீங்கு விளைவிக்கும் பொருளையோ, ஆளையோ கண்டு நாம் வெறுக்கிறோம். இவ்வாறு, அச்சம் விளைவிக்கும் பொருள்களெல்லாம் நம் வெறுப்புணர்வுக்கு இலக்காகின்றன.

பிறரைக் கண்டு அஞ்சுவது போன்று நம்மைப் பற்றியே நாம் அச்சப்படுவதும் உண்டு. நம் எதிர்காலம் பற்றிய அச்சம், வாணிபத்தில் ஊதியம் வருமா வராதா என்ற அச்சம், உத்தியோகம் உயருமா உயராதா என்ற அச்சம், இவ்வாறு எத்தனையோ வகை அச்சங்கள். இவற்றால் ஓயாத கவலை நமக்கு ஏற்படுகின்றது. நாம் கருதியது கை கூடுமா கை கூடாதா என்று எண்ணியெண்ணி ஏங்குகிறோம், கவலைப்படுகின்றோம்.

இவ்வாறு அச்சத்தால் வெறுப்பும், கவலையும் விளைகின்றன.

அச்சம், வெறுப்பு, கவலை· இவ்வுணர்வுகளால் நம் உள்ளமும், உடம்பும் மிகவும் பாதிக்கப் படுகின்றன. நரம்புகள் முறுக்கேறுகின்றன, இரத்தக் குழாய்கள் இறுகுகின்றன. இதன் விளைவாக எத்தனையோ நோய்களுக்கு நாம் ஆளாகின்றோம். ஓயாத கவலையால் கண்கள் ஒளியிழக்கின்றன, உடல் பொலிவிழக்கின்றது.

"கவலைப்படுதலே கடுநரகு அம்மா!
கவலையற்று இருத்தலே முக்தி"

என்கிறார் பாரதியார்.

கவலையற்ற முக்தி நிலையினை எய்துவது எப்படி?

1966 ஆம் ஆண்டு, மே மாதம், முதலாவது உலகத் தமிழ் மாநாடு கோலாலம்பூரில் கோலாகலமாக நடந்தது. அவ்விழாவிலே கலந்துகொண்ட தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் சிங்கப்பூரில் இருந்து விமானத்தில் சென்னை திரும்பிக் கொண்டிருந்தோம்.

இரவு 9·30 மணி இருக்கும். விமானம் வெகு உயரத்தில் பறந்து கொண்டிருக்கிறது. திடீரென்று அபாய அறிவிப்புக் கொடுத்தனர் விமானப் பயணிகளுக்கு! "இடியும் புயலும் எதிர்நோக்கியுள்ளன. எல்லோரும் ஆசனங்களில் உள்ள பெல்ட்டை இறுக்கமாக மாட்டிக்கொள்ளுங்கள்" என்று நாங்கள் எச்சரிக்கப்பட்டோம். பயணிகள் பேச்சரவம் திடீரென்று ஓய்ந்தது. நாங்கள் ஒவ்வொருவரும் இருக்கையோடு இணைக்கும்

Koviloor Digital Library


பெல்ட்டை மாட்டிக்கொண்டு இதயத்துடிப்போடு இருந்தோம். சிறிது நேரத்துக்கெல்லாம் விமானம் ஏதோ ஒரு பெரிய பள்ளத்தில் விழுவதுபோன்று பெரிய ஓசையுடன் கீழே இறங்கியது. வானமண்டலத்தில் காற்று சூன்யமாக உள்ள இடங்களில் இவ்வாறு திடுதிப்பென்று விமானம் ஐநூறு அடி, ஆயிரம் அடி கீழே இறங்குவது உண்டு. இப்படி நாலைந்து தடவை விமானம் இறங்கி இறங்கி ஏறியது. பயணிகள் எல்லோரும் மிகுந்த பயத்தோடு இருந்தோம்.

என் அருகில் அமர்ந்திருந்த அமரர் அவ்வை சண்முகம் அவர்களைப் பார்த்தேன். அவர் எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தார், அவர் கண்கள் மூடியிருந்தன!

சில நிமிடங்கள் சென்றதும் அபாயக் கட்டம் கடந்துவிட்டது என்று அறிவித்தார்கள். பயணிகள் அனைவரும் பெருமூச்சு விட்டனர்.

நான் அவ்வை சண்முகம் அவர்களிடம், "ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தீர்களே, என்ன?" என்று கேட்டேன்.

"நான் திருவாசகத்திலுள்ள நமச்சிவாயப் பதிகத்தை (சிவபுராணத்தை) மனனம் செய்து கொண்டிருந்தேன். விமானத்துக்கு ஆபத்து என்றால் நம்மால் செய்யக்கூடியது என்ன இருக்கிறது? ஏதோ இறைவன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு விமானியின் திறனை நம்பி இருந்துவிட வேண்டியதுதான், வேறு என்ன செய்ய முடியும் நம்மால்?'' என்று கூறினார்கள்.

அவர்கள் கூறியது எவ்வளவு உண்மை!

இந்த உண்மை விமானப் பயணிகளுக்கு மட்டுமா பொருந்துகிறது. வாழ்க்கைப் பயணிகளுக்கும் பொருந்துவதுதானே இது.

வாழ்க்கையிலே வரும் இடர்களை நம்மால் தடுக்க முடியுமா? முடியாது. என்னென்ன இடர்கள் எதிர்நோக்கியுள்ளன என்பதையாவது தெரிந்துகொள்ள இயலுமா? இயலாது. இந்நிலையில் விமானி மீது வைக்கும் நம்பிக்கையை நாம் இறைமைமீது வைப்பது தானே முறையாகும்?

இதைவிட்டு நெஞ்சிலே கவலையைப் பயிராக்கி அஞ்சி உயிர் வாழ்தல் எவ்வளவு அறியாமை? என்கிறார் பாரதியார்:

Koviloor Digital Library



"நெஞ்சிற்கவலே நிதமும் பயிராக்கி
அஞ்சி உயிர்வாழ்தல் அறியாமை—தஞ்சமென்றே
வையமெலாங் காக்கும் மகாசக்தி நல்லருளே
ஐயமறப் பற்றல் அறிவு".

(மகாசக்தி வெண்பா)

"இறைமையோடு இசைந்துள்ளோம் என்ற உண்மையினை உள்ளம் மறந்த நிலையில், நான் என்ற அகந்தை பிறக்கிறது. அப்பொழுதுதான் துன்பமும், துயரமும் தோன்றுகின்றன. இறைமையே இதயத்தில் உறையும் ஆன்மா என்பதை உணர்ந்தவுடன் துன்பமும், துயரமும் மறைந்துவிடுகின்றன."

(முண்டக உபநிடதம்)

இவ்வாறு இறைமையிடம் தஞ்சம் புகுந்தவர்களுக்கு 'அஞ்சேல்' என்று அபயம் அளிக்கிறது இறைமை என்கிறார் நாவுக்கரசர்:

"நைஞ்சு நைஞ்சு நின்னுள் குளிர்வார்க்கெலாம்
அஞ்சலென்றிடும் ஆனைக்கா அண்ணலே"

(தேவாரம் – திருஆனைக்கா)

அவர்களுக்கு அல்லல் இல்லை என்கிறார் நம்மாழ்வார் :

"வேதநாவர் விரும்பும் திருக்கண்ணபுரத்து
ஆதியானை அடைந்தார்க்கு அல்லல் இல்லையே"

(திருவாய்மொழி –9 ப. 10 தி.)

எனவே, நம் அச்சத்தை அகற்றும் அருந்துணையாக, அல்லலைத் தீர்க்கும் அருமருந்தாக உள்ளது இறைமை என்கின்றனர் அடியார்கள் :

"அருந் துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை"

(நாவுக்கரசர் – தேவாரம் - கோயில்)

"அச்சம் தவிர்த்த சேவகன் வாழ்க"

(திருவாசகம் – திருவண்டப் பகுதி)

இவ்வாறு, நம் அச்சம் அகற்றும் அருந்துணையாக, அல்லல் தீர்க்கும் அருமருந்தாக உள்ளது இறையுணர்வு!

Koviloor Digital Library

# 26. ஒழுக்கமுடைமை

"இதயத்தில் இறையுணர்வினை இசைத்து நிற்பவன், சிந்தனையைச் சிதறவிடாமல், ஐம்புலன்களையும் நெறிப் படுத்தித் தன்னை ஆளும் தகைமை பெறுகிறான்"

(தைத்ரீய உபநிடதம்)

"இந்த உலகமே பொய். நாம் காணும் பொருள்களெல்லாம் பொய்யானவை. நம் வாழ்வும் பொய்தான். எல்லாம் வெறும் மாயை."—

இதுதான் உண்மையான ஞானம் என்று ஒரு சிலர் கூறுகின்றனர் இது நம் சமய நூல்களின் சாரத்தைச் சரிவரப் புரிந்து கொள்ளாததால் ஏற்படும் குழப்பமேயாகும்.

**உலகம் பொய்யா?**

பாலில் நெய் மறைந்துள்ளது; விறகிலே நெருப்பு அடங்கியுள்ளது; இதுபோல், இயற்கையிலே இறைமை உறைகின்றது என்கின்றன ஞான நூல்கள்.

பாலில் நெய் மறைந்துள்ளதால் நெய்தான் உண்மைப் பொருள், பால் பொய்யானது என்று கூறிவிட முடியுமா? விறகில் மறைந்துள்ளது நெருப்பு என்பதால் விறகுபொய்யாகிவிடுமா? அது போல், இயற்கையில் இசைந்து நிற்பது இறைமை என்பதை வைத்து இயற்கைப் பொருள்களெல்லாம் பொய்யானவை என்று கொள்வது பொருந்தாததுதானே?

"காலை இளவெயிலின் காட்சி - அவள்
கண்ணொளி காட்டுகின்ற மாட்சி"

(பாரதியார்)

என்று பாடி இளவெயிலின் காட்சியில் இறைமையின் மாட்சியைக் காணும் கவியுள்ளம் எவ்வாறு இளவெயிலினையும், வானத்தையும்,

Koviloor Digital Library



தாவரங்களையும் பொய்த் தோற்றமெனக் கொள்ளமுடியும் எனவே பாரதியார் கேட்கின்றார்;

"வானகமே, இளவெயிலே, மரச்செறிவே
நீங்களெல்லாம்
கானல்நீரோ? - வெறுங்
காட்சிப் பிழைதானோ?"

(பொய்யோ? மெய்யோ?)

மேலும் அவர் கூறுகின்றார்:

"இந்த உலகமே பொய்" என்று நமது தேசத்தில் ஒரு சாத்திரம் வழங்கிவருகிறது. சன்னியாசிகள் இதை ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கட்டும். குடும்பத்தில் இருப்போருக்கு இந்த வார்த்தை பொருந்துமா? நடுவீட்டில் உச்சரிக்கலாமா? அவச் சொல்லன்றோ? நமக்குத் தந்தை வைத்துவிட்டுப்போன வீடும் வயலும் பொய்யா? தங்கச் சிலைபோல் நிற்கிறாள் மனைவி; நமது துயரத்துக்கெல்லாம் கண்ணீர்விட்டுக் கரைந்தாள்; நமது மகிழ்ச்சியின் போதெல்லாம் உடல் பூரித்தாள்; நம் அன்புக் குழந்தைகளை வளர்த்தாள்; அவள் பொய்யா? குழந்தைகளும் பொய்தாமா? பெற்றவரிடம் கேட்கிறேன், குழந்தைகள் பொய்யா?

இவ்வாறு உணர்ச்சியுடன் கேட்கும் கவிஞர்,

"காண்பதுவே உறுதிகண்டோம்
காண்பதல்லால் உறுதியில்லை.
காண்பதும் சத்தியமாம் - இந்தக்
காட்சி நித்தியமாம்"

என்று உறுதிபடக் கூறுகின்றார்!

எனவே, உலகில் நாம் பிறந்தது கண்மூடித் துறவியாகிக் காட்டிலே திரிவதற்கன்று. உலகத்து இன்பங்களை உற்றபடி அனுபவிப்பதே இயல்பான வாழ்வாகிறது.

### இயல்பான இன்ப வேட்கை

இன்ப வேட்கை என்பது உயிர்களின் இயல்பான பண்பாகும். இனிய தேனை நாடும் வண்டுபோல் இன்ப அனுபவங்களை நம் மனம் நாடுகின்றது. இந்த இன்ப நாட்டமே நம் வாழ்வுக்கு வளம் ஊட்டுகிறது. இயல்பான இந்த இன்ப நாட்டம் இல்லையெனில் நம் வாழ்வு வறண்ட பாலைவனமாகிவிடும்.

Koviloor Digital Library



மக்களின் இன்ப வேட்கைதான் ஓவியமாகவும் காவியமாகவும் மலர்கின்றது. அதைத்தான் இசையிலே நாம் கேட்கின்றோம், நாட்டியத்தில் நாம் காண்கின்றோம். அந்த வேட்கையின் விளைவுகளே விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும்.

இன்பங்களெல்லாம் இறைமையின் இயல்பு; எனவே இதயம் மகிழ்ந்து அவற்றைத் துய்ப்பது நலம் என்கிறார் ஞானக்கவி பாரதியார்:

"மாதரோடு மயங்கிக் களித்தும்
மதுர நல்லிசை பாடிக் குதித்தும்
காதல் செய்தும் பெறும் பல இன்பம்,
கள்ளில் இன்பம், கலைகளின் இன்பம்,
பூதலத்தினை ஆள்வதில் இன்பம்,
பொய்மை அல்ல இவ்வின்பங்களெல்லாம்,
யாதும் சக்தி இயல்பெனக் கண்டோம்
இனைய துய்ப்பம் இதயமகிழ்ந்தே"

(மது)

ஆதலால், "வாழ்க்கை வாழ்வதற்கே" என்ற உறுதியுடன் உலகத்து நலன்களை உற்றபடி நுகர்ந்து இன்பமாக வாழ்வதே ஏற்ற வாழ்வாகும்.

**பொல்லாத புலன்கள்**

ஆனால், நம்மில் பலர் இன்பத்தை நாடித் துன்பத்தையே அடைகிறோம். இன்ப வேட்கை நம்மைத் துன்பத்தில் ஆழ்த்தி விடுகிறது.

காரணம் என்ன?

அளவோடு இன்பங்களை நுகர்ந்தால்தான் வளமோடு நாம் வாழமுடியும். ஆனால், அளவோடு நம்மால் நிற்கமுடிவதில்லை. ஏன்? உலகத்து இன்பங்களை நாம் அனுபவிப்பதற்கு உற்ற கருவிகளாக இருப்பவை நம் ஐம்புலன்கள். மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளின் உதவியால் தான் எல்லாவகையான இன்பங்களையும் நாம் நுகர்கின்றோம்.

ஆனால், நம் ஐம்புலன்களும் சாதாரணமானவை அல்ல, பொல்லாதவை: கருவியாக இருக்கவேண்டிய அப்பொறிகள் ஐந்தும் பெரும்பாலும் நமக்கு எஜமானர்களாகி விடுகின்றன: நம்மையே ஆட்டிப் படைக்கின்றன! இதனால் விளைவதுதான் எல்லாக் கேடுகளும்!

Koviloor Digital Library



இன்பங்களை நுகரும் புலன்கள் அளவுக்கு மீறி அவ்வின்பங்களை நாடுகின்றன. அந்த வேட்கை மிகுதியாகிறது! வேட்கையின் வேகம் பெருகிக் கொண்டே போகிறது! வேட்கை வெள்ளத்தின் வேகத்திலே நம் அறிவும் இழுத்துச் செல்லப்படுகிறது! நாளடைவில் நம் புலன்களுக்கு நாம் அடிமையாகி விடுகின்றோம்.

கருவிகளாகச் செயல்படவேண்டிய புலன்கள் கர்த்தாவாகி, கட்டுப்பாடின்றி இன்பத் தேட்டத்திலே ஈடுபடும்பொழுது எத்தனை யெத்தனையோ இன்னல்கள் எழுகின்றன. வாழ்விலே ஒழுக்கம் குன்றுகிறது; உயர்நெறி தவறுகின்றது.

இன்பத்தை நாடுவதே ஏற்ற தொழிலென ஐம்புலன்களும் அயராது இயங்கும்பொழுது இன்ப வேட்கை ஒரு வெறியாக மாறிவிடுகின்றது. இந்த வெறியின் வேகத்தினால், நாம் எத்தனையோ இழிச்செயல்களில் இறங்கிவிடுகிறோம்! நன்மை என்றும் தீமை என்றும் பாராமல், புகழ் என்றும் பழி என்றும் கருதாமல் இன்பம் ஒன்றையே நாடுகிறோம். இதன் பயனாய் எத்தனையோ இன்னல்களுக்கு நாம் ஆளாகின்றோம்! முடிவில், இன்ப வெறியால் நமக்குத் துன்பமே விளைகின்றது!

இவ்வாறு நமக்குத் துன்பம் சேர்க்கும் ஐம்புலன்களைப்பற்றி நம்மை எச்சரித்துப் பாடியுள்ளனர் அடியார்கள்.

ஐம்புலன்களும் ஐந்து மதம் பிடித்த யானைகளாக இருக்கின்றன; அவற்றைத் தறியிலே கட்டிப்போட இயலுவதில்லை என்கிறார் திருமூலர்;

"ஆக மதத்தன ஐந்து களிறுள
ஆக மதத்தறியோடு அணைகின்றில"

(திருமந்திரம் – 2023)

(களிறு - யானை)

"நான் எவ்வளவு சொன்னாலும் அடங்காத ஐம்புலன்கள் என்ற வன்கயவர்களை உன் திருவருள் இல்லையேல் எவ்வாறு வெல்ல முடியும்?" என்று கேட்கின்றார் நம்மாழ்வார்:

"ஒன்று சொல்லி ஒருத்தனில் நிற்கிலாத ஓரைவர்
வன்கயவரை
என்று யான் வெல்கிற்பன் உன் திருவருளில்லையேல்"

(திருவாய்மொழி - 7ப. 1தி.)

Koviloor Digital Library


"நம் வாழ்க்கையைச் சூறைகொண்டு தூய நெறியில் செல்லா மல் தடுக்கும் கள்வர்" என்று புலன்களைச் சாடுகின்றார் நாவுக் கரசர்:

"புள்ளுவர் ஐவர் கள்வர் புனத்திடைப் புகுந்துநின்று
துள்ளுவர் சூறைகொள்வர் தூநெறி விளையவொட்டார்"

(தேவாரம் – பொது)

மதம் பிடித்த யானைகள் என்றும், வன்கயவர் என்றும், கள்ளர் என்றும் மெய்யடியார்கள் கூறும் ஐம்புலன்களையும் நாம் அடக்கு வது எப்படி?

உடனே சிலர் கூறுகின்றனர், ஐம்புலன்களையும் நாம் அவித்து விடவேண்டும், அவை ஒரு சிறிதும் செயற்படாமல் முழுதுமாக அடக்கிவிட வேண்டும் என்று. இது இயலும் காரியமா? ஐந்து புலன்களும் முழுதுமாக அடங்கிவிட்டால் நாம் அசேதனப் பொருளாக, ஜடப்பொருளாக அல்லவா ஆகிவிடுவோம். நாம் எப்படி வாழ்வது? எனவே, ஐம்புலன்களையும் முழுதுமாக அடக்கி விடவேண்டும் என்று கூறுவது அறிவில்லாதவரின் யோசனை என்கிறார் திருமூலர்:

"அஞ்சும் அடக்கு அடக்கு என்பர்
அஞ்சும் அடக்கும் அமரரும் ஆங்கிலை;
அஞ்சுகம் அடக்கில் அசேதனமாம் என்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவறிந்தேனே"

(திருமந்திரம் – 2033)

## இறையுணர்வும் புலனொழுக்கமும்

ஐம்புலன்களையும் முழுதுமாக ஒடுக்கி, அடக்கி, அவித்துவிட வேண்டாம். அவ்வாறு செய்தலும் இயலாது. பிறகு, எப்படித் தான் அவற்றை ஒழுங்குபடுத்துவது?

நம் ஐம்புலன்களையும் நெறிப்படுத்த வேண்டும். அதைத் தீய வழிகளில் செல்லாமல் தடுக்க வேண்டும். இதுவே புலனொழுக்கம் ஆகும். புலனொழுக்கம் என்ற அரிய பண்பினை நாம் பெற்று விட்டால் நல்லொழுக்க வாழ்வினை நாம் எய்தி விடுகிறோம். ஒழுக்கத்தால் உயர்ந்து உலகம் புகழ வாழ்கிறோம்.

ஒழுக்கம் என்ற உயர் பண்பினை நாம் எய்துவதற்கு இறை யுணர்வுதான் இன்றியமையாத் துணையாகின்றது.

Koviloor Digital Library


எவ்வாறு?

ஈக்கள் மொய்த்துக்கொண்டிருக்கும் இனிப்புப் பண்டங்களைப் பார்த்ததும் அவற்றை விரும்பிக் கேட்கிறது குழந்தை. அந்தப் பண்டங்கள் கெடுதலானவை என்று சொல்லிக் குழந்தையின் விருப்பத்தை அடக்கிவிட முடியுமா? முடியாது. அது அடம்பிடித்து அழத்தான் செய்யும். நாம் என்ன செய்கிறோம்? நல்ல அழகான 'சாக்லெட்' பெட்டி ஒன்றை வாங்கிக் குழந்தையின் கையில் கொடுக்கிறோம். சுவையான 'சாக்லெட்' மிட்டாய் கிடைத்ததும் ஈ மொய்க்கும் பண்டத்தை ஏறெடுத்தும் குழந்தை பார்ப்பதில்லை.

இதைப்போலவே, நம் ஐம்புலன்களையும் நாம் நெறிப்படுத்த வேண்டியிருக்கிறது. எப்படி?

இன்பவுணர்வினை நாடித்தானே ஐம்புலன்களும் ஆட்டம் போடுகின்றன?

அப்புலன்கள் நாடும் இன்பத்தையெல்லாம் விட மிகுதியான மேலான இன்பத்தை அவற்றுக்கு அளித்து விட்டால், புலனின்ப வெறி மறைந்து விடும் அல்லவா? அளவில்லாத இன்பத்தை அப்புலன்கள் சுவைத்து விட்டால் அளவுடைய பிற இன்பங்களில் அவற்றுக்குள்ள நாட்டம் குறையத்தானே செய்யும்?

அத்தகைய அளவில்லாத இன்பம் எது?

அதுதான் இறையுணர்வால் நம் இதயத்தில் எழும் ஈடில்லாத இன்பம்.

"ஆனந்தமூர்த்தி" என்ற தலைப்பிலே, இறையுணர்வு இன்பம் எவ்வாறு 'தேனாக', 'பாலாக', 'தீங்கரும்பாக', 'ஆராவமுதாக' 'மாளா இன்ப மாகடலாக' உள்ளது என்பதை விரிவாகக் கண்டோம்.

"எல்லையே இல்லாத பரவெளி. அதில் எண்ணில்லாத அண்டங்கள். இவற்றை அணுவும் தவறாது ஆட்டிவைக்கும் பேராற்றல். ஈடில்லாத அந்த ஆற்றலே இறைமை. அந்த இறைமை நம் இதயத்திலும் இசைந்து நிற்கிறது. இவ்வாறு, எண்ணுதற்கும் எட்டாத இறைமையோடு நாமும் இணைந்துள்ளோம்." இந்த உண்மையினை ஓர்ந்து உணர்ந்து நிற்கும்பொழுது நம் இதயத்தில் எழுகிறதே ஓர் இன்பவுணர்வு, அந்த இணையில்லாத ஆனந்தத்தை என்னென்பது!

Koviloor Digital Library



"அற்புதமான இந்த ஆனந்தம் அமுதமாகப் பாய்கின்றது நம் எலும்புகளுக்குள்ளும்!" என்கிறார் மாணிக்கவாசகர்:

"அற்புதமாக அமுத தாரைகள்
ஏற்புத்து ளைதொறும் ஏற்றினன்"

(திருவாசகம்-திருவண்டப்பகுதி)

அற்புதமான இந்த அமுத வெள்ளத்தை அள்ளிச் சுவைத்து அனுபவித்தபின் புலன்களின்பம் அற்பமாகத்தானே போய்விடுகின்றன! தேனைச் சுவைத்தபின் தெங்கிள நீருக்குச் சுவை ஏது? ஆதவனின் ஒளி முன்னால் அகல்விளக்கு ஒளி ஏது? எனவே இறைமை இன்பத்திலே திளைக்கும் இதயம் புலனின்பங்களின் புன்மையினை உணருகின்றது. ஆதலால், புலன்களில் இன்ப வேட்கை குறைகின்றது. புலன்களை நெறிப்படுத்துவது எளிதாகின்றது.

ஐம்புலன்களுக்கும் நாம் அடிமையாக இருந்த நிலை மாறி, அப்புலன்கள் நமக்கு அடங்குகின்றன. எனவே, உலகத்து இன்பங்களை அளவாக அனுபவித்து வளமான வாழ்வினைப் பெறுகின்றோம்.

இவ்வாறு, இறையுணர்வால் புலனொழுக்கம் என்ற பேராற்றலை நாம் எளிதாகப் பெறுகின்றோம்; ஒழுக்கத்தால் உயர்கின்றோம்.

"இறைஞானம் என்பது ஈடில்லாத ஆனந்தம். அந்த ஆனந்த அருள் கிட்டிவிட்டால், இறைஞானம் என்ற ஆனந்தத் தறியிலே பூதங்கள் போல் நிற்கும் ஐம்புலன்களையும் பூட்டிவிடலாம். பிறகு அவை கட்டுக்கடங்கிவிடும்" என்று தெளிவாகக் கூறுகின்றார் திருமூலர்:

"பாய்ந்தன பூதங்கள் ஐந்தும் படரொளி
சார்ந்திட ஞானத்தறியினில் பூட்டிட்டு
வாய்ந்துகொள் ஆனந்த மென்னும் அருள்செய்யில்
வேய்ந்துகொள் மேலை விதியதுதானே"

(திருமந்திரம்-2038)

இறையுணர்வால் எழும் ஆனந்தம் என்ற அருமருந்து தான் புலன்களை நெறிப்படுத்த உதவுகிறது. இதனையே மாணிக்கவாசகரும் கூறுகின்றார்:

Koviloor Digital Library



"இறைமை என்ற பரஞ்சோதி என்னுள்ளத்திலே ஆனந்த அமுதமாக ஊறுகின்றது. அவ்வாறு ஊறிநிற்கும் ஆனந்த அமுதம் ஐம்புலன்களின் வஞ்சகமான வழிகளை அடைத்து விடுகிறது", என்கிறார் அந்த ஞானி.

"மாறிநின்றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்து அமுதே
ஊறிநின்று என்னுள் எழு பரஞ்சோதி"

(திருவாசகம் - கோயில் திருப்பதிகம் – 1)

இறையுணர்வு என்ற ஆனந்த அமுதம் நம் புலன்களைக் கட்டுப் படுத்துவதற்கு உதவும் உத்தியினை நாம் ஒவ்வொருவரும் அனுப வத்தால் எளிதிலே உணரலாம்.

புலனின்ப வெறி நமக்குத் தோன்றும்பொழுது இறையுணர் வினை நம் இதயத்திலே இசைத்தல் வேண்டும். ஓரிரு நிமிடங்கள் நினைத்தால் போதும், அதன் அற்புதமான ஆற்றலை நாம் காணலாம்!

எல்லையில்லாத பரவெளியையும், அதிலே சுழலும் எண்ணற்ற அண்டங்களையும், அவற்றை ஆட்டிவைக்கும் இறைமை என்ற ஈடில்லாத சக்தியையும், அந்த இறைமை நம் இதயத்திலும் இசைந்துள்ளது என்ற உண்மையினையும் ஓர்ந்து உணரும் நிலையில் உள்ளத்திலே உதிக்கிறது இணையில்லாத இன்பவுணர்வு! இந்த இன்பப் பெருக்கிலே புலனின்ப வெறி தானாக மறைந்துவிடுவதை நாம் நன்கு உணரலாம். கட்டுக்கடங்காது சீறி நின்ற புலன்கள் பெட்டிப் பாம்புகளாய் ஒடுங்கிப்போவதை நாம் காணலாம்!

அழகு உருவங்களை நாடி அலமந்து நிற்போர்க்கும், காம வெறியால் கண்மூடித் திரிவோர்க்கும், மதுவினைத் தேடி மதி மயங்கிக் கிடப்போர்க்கும் இறையுணர்வு இன்பம் எத்தகைய மருந்தாகின்றது!

எனவேதான், புலன்களால் வரும் நோய்களில் இருந்து நம்மைக் காக்கும் நாயகன் இறைவன் என்று ஏத்துகின்றனர் அடியார்கள் :

"மூக்கு வாய் செவி கண் உடலாகி வந்து
ஆக்கும் ஐவர்தம் ஆப்பை அவிழ்த்தருள்

Koviloor Digital Library



நோக்குவான் நமை நோய்வினை வாராமே
காக்கும் நாயகன் கச்சியே கம்பனே.

(நாவுக்கரசர் — தேவாரம் — திருக்கச்சியேகம்பம்)

(ஆப்பு-அசை)

**ஒழுக்க வாழ்வு**

புலனடக்கத்தோடு வாழ்வதுதான் ஒழுக்கமான வாழ்வாகும், உயர் வாழ்வாகும்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்

என்பது பொய்யாமொழி.

உயிரினும் மேலான ஒழுக்கம் புலன்களை நெறிப்படுத்துவதையே அடிப்படையாகக் கொண்டது. புலன்களை நெறிப்படுத்துவதற்கு ஆதாரம் இறையுணர்வு. எனவே, ஒழுக்கமான வாழ்விற்கு உறுதுணையாக நிற்பது இறையுணர்வே ஆகும்.

இவ்வாறு, இறையுணர்வால் "ஒழுக்கமுடைமை" என்ற உயர் பண்பினை நாம் எளிதாக எய்துகிறோம்.

Koviloor Digital Library

# 27. அடக்கமுடைமை

"ஆன்ம ஞானத்தில் ஆழ்ந்திருப்போர் உணர்ச்சி வெறிக்கு உள்ளாகாமல் அமைதியான மனத்துடன் அமைந்து இருக்கின்றனர்."

(முண்டக உபநிடதம்)

நீண்ட நெடுஞ்சாலே, சிமெண்ட் போட்டுச் சீரானதாக இல்லே இச்சாலே. மேடும் பள்ளமுமாக, குண்டும் குழியுமாக அது இருக்கிறது.

கட்டை வண்டி ஒன்று அதில் சென்று கொண்டிருக்கிறது. சாலேயிலுள்ள சிறு பள்ளங்களில் இறங்கி இறங்கி அது ஏறும் பொழுதெல்லாம் 'கடக்' கடக்' என்று ஒரே சத்தம். வண்டியில் இருப்பவர்கள் வண்டியோடு சேர்ந்து ஆடுகின்றனர், குலுங்குகின்றனர். சாலேயின் நொடிகளில் வண்டிச் சக்கரங்கள் திடீரென்று விழுந்து எழும்பொழுதுதெல்லாம் வண்டியில் உள்ளவர்களுக்கு அதிர்ச்சி! ஆடி அலமந்துகொண்டு உடம்பெல்லாம் வலியெடுக்கப் பயணம் செய்கின்றனர் கட்டை வண்டியில் செல்பவர்கள்.

அச்சாலேயில் மோட்டார் கார் ஒன்று செல்கிறது. பெரிய அயல் நாட்டுக் கார் அது. கார் எவ்வளவு வேகமாகச் சென்ருலும் அதில் இருப்பவர்கள் அலுங்காமல் குலுங்காமல் பயணம் செய்கின்றனர். காரின் சக்கரங்கள் சாலேயின் மேடு பள்ளங்களில் ஏறி இறங்கினுலும் பயணிகள் பாதிக்கப்படவில்லே. ஏதோ உல்லாசப் படகிலே செல்லுபவர்களேப் போல் அவர்கள் சொகுசாக அமர்ந்திருக்கின்றனர்!

ஏன் கட்டைவண்டிப் பயணிகள் இவ்வாறு அல்லற்படுகின்றனர், கார்ப் பயணிகள் தொல்லே ஏதுமின்றி சுகமாக இருக்கின்றனர்?

வலுவான சுருள்கம்பிகளும் (springs) அதிர்ச்சிகளேத் தணிக்கும் கருவிகளும் (shock absorbers) காரின் அடிப்பகுதியில் உள்ளன.

Koviloor Digital Library



மேலும் காரின் இருக்கைகளில் மெல்லிய சுருள்கம்பிகளும், மெத்தையும் பொருத்தப்பட்டிருக்கின்றன. மேடு பள்ளங்களைத் தாண்டி கார் ஓடும்பொழுது ஏற்படும்அதிர்ச்சிகளையும் ஆட்டங்களையும் இக் கருவிகள் தாங்கிக் கொள்கின்றன. எனவே காரில் உள்ளவர்கள் அலுங்காமல், குலுங்காமல் சுகமாக இருக்கின்றனர். கட்டைவண்டியில் இத்தகைய கருவிகள் ஏதும் இல்லை. ஆதலால், வண்டியில் உள்ளவர்களின் உடம்பெல்லாம் ஆடி, அலுங்கி வேதனைக்குள்ளாகின்றது.

**வாழ்க்கைப் பயணம்**

நமது வாழ்க்கைப் பயணம் கட்டை வண்டிப் பயணமாக இருக்க வேண்டுமா, கார்ப் பயணமாக இருக்க வேண்டுமா? வாழ்க்கைப் பாதையிலுள்ள மேடுபள்ளங்களாலும், குண்டு குழிகளாலும் பாதிக்கப்பட்டு அல்லற்படும் துன்பப் பயணமாக அது இருப்பதா, இவற்றால் பாதிக்கப்படாமல் இன்பப் பயணமாக இருப்பதா?

இன்பமும் துன்பமும், ஏற்றமும் இறக்கமும் நிறைந்துள்ள உலக வாழ்வை நாம் எவ்வாறு சமாளிக்கின்றோம் என்பது நம்மையே பொறுத்துள்ளது.

வாழ்க்கை என்ற நெடுஞ்சாலையில் உள்ள மேடு பள்ளங்களும், குண்டு குழிகளும் எத்தனை யெத்தனை? மேட்டிலே ஏறும் போது மகிழ்ச்சி, பள்ளத்தில் இறங்கும் பொழுது துயரம். குண்டு குழிகளில் இறங்கி ஏறும்பொழுது நம் உள்ளத்தில் அதிர்ச்சி; திடீர்ப் பள்ளங்கள் வந்துவிடக்கூடாதே என்று கவலை; மேடாகத் தோன்றிய இடத்தில் எதிர்பாராமல் பள்ளம் வந்தவுடன் ஏமாற்றம்!

நம் வாழ்வில் நாம் ஆசையுடன் எதிர் பார்ப்பதை அடைந்து விட்டால் இன்பம், அதை அடைய முடியவில்லை என்றால் துன்பம். ஏதாவது கேடு வந்துவிடக்கூடாதே என்று கவலை, அது வந்து விட்டாலோ துயரம்; அது வேண்டும், இது வேண்டும் என்ற ஆசை, அதனால் ஏற்படும் அல்லல்!

இப்படியாக நம் உள்ளம் களிப்பு, கவலை, எதிர்பார்ப்பு, ஏமாற்றம் முதலிய உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டு அல்லற்படுகிறது. இந்த அல்லல் நம் வாழ்க்கைப்பயணம் முழுவதும் தொடர்ந்து இருக்கிறது!

உற்றார் உறவினர்களின் மரணம், நண்பர்களின் பிரிவு, தொழில் இழப்பு இவை போன்ற எத்தனையோ துன்ப நிகழ்ச்சிகளும், இதயத்துக்கு இசைந்த இல்வாழ்க்கை, செல்வம் சேர்த்தல்,

Koviloor Digital Library



புகழ் இவை போன்ற எத்தனையோ இன்ப நிகழ்ச்சிகளும் நம் வாழ்வில் மாறிமாறி வருகின்றன. பிறரால் நமக்குக் கேடு விளைகின்றது. நண்பர்கள் எதிரிகளாகின்றனர். நாம் நம்பியவர்கள் நம்மைக் கைவிடுகின்றனர். நாம் வாழ்க்கைப் பயணத்தில் இவற்றையெல்லாம் சந்திக்கின்றோம்!

இவ்வாறான புற நிகழ்வுகளால் நம் உள்ளம் பாதிக்கப்படுகிறது. எனவே, உள்ளத்தில் உணர்ச்சிகள் தோன்றுகின்றன. இவ்வுணர்ச்சிகளை நாம் தவிர்ப்பதற்கில்லை. உணர்ச்சிகள் இன்றி வாழ்வு இல்லை. உணர்ச்சிகளின் இயக்கமே நம் வாழ்வாகிறது. ஆனால், அவ்வுணர்ச்சிகள் அளவோடு அமைதல் வேண்டும், மிதமாக இருத்தல் வேண்டும்.

**அளவு மீறிய உணர்ச்சிகள்**

அளவுமீறிய உணர்ச்சிகளால்தான் அல்லல்கள் விளைகின்றன. ஓயாத கவலை, தீராத கோபம், திடீரென்று அதிர்ச்சி, மிதமிஞ்சிய களிப்பு இவை போன்ற உணர்ச்சிகள் நம் அறிவையே மறைத்து விடுகின்றன. இதனால் எத்தனையோ இழி செயல்களில் நாம் இறங்கி விடுகிறோம். உணர்ச்சிகளின் வேகத்தில் நாம் இழுத்துச் செல்லப் பட்டு எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கு இலக்காகி விடுகின்றோம்.

மேலும், இவ்வுணர்ச்சிகளின் மிகுதியால் நம் உடலுக்கும் ஊறு விளைகின்றது. இரத்தக் கொதிப்பும் இதயப் படபடப்பும், நரம்புத் தளர்ச்சியும் நாளங்களின் பலவீனமும் அளவு மீறிய உள்ளத்து உணர்ச்சிகளால் உண்டாகின்றன என்று மருத்துவ நூல்கள் கூறுகின்றன. மிதமான உணர்ச்சிகளே இதமான உடல் நலத்துக்கு அடிப்படை என்பதை உளநூல் அறிஞர்களும் உடல் நல வல்லுநர்களும் வலியுறுத்துகின்றனர். மன அமைதி இன்றி உடலமைதி இல்லை என்பது அவர்கள் கண்ட உண்மையாகும்.

எனவே, இன்ப துன்ப உணர்ச்சிகளையும் கோபதாபங்களையும், விருப்புவெறுப்புக்களையும் மட்டுப்படுத்தி, அவற்றைக் கட்டுப்படுத்தி நாம் வாழ வேண்டியிருக்கிறது. இல்லாவிடில் அவற்றால் ஏற்படும் அதிர்ச்சி நம் உள்ளத்தையும் உடலையும் பாதித்து எத்தனையோ கேடுகளை விளைக்கிறது.

இந்த அதிர்ச்சிகளைத் தாங்குவது எப்படி?

நெடுஞ்சாலையில் செல்லும் மோட்டார் காருக்கு இருக்கும் அதிர்ச்சி தாங்கிகள் போல் நமக்கும் அதிர்ச்சி தாங்கி தேவைப்படுகிறது.

Koviloor Digital Library



இதற்கு எங்கே போவது?

"எங்கும் போக வேண்டாம், இதோ இருக்கிறது அதிர்ச்சி தாங்கி" என்கிறார் திருநாவுக்கரசர்.

அதிர்ச்சிகள் என்ன? அண்டமே புரண்டாலும் அதையும் தாங்கலாம். "வானமே இடிந்தாலும், பூகம்பம் வந்தாலும், மலைகள் உருண்டு விழுந்தாலும், கடல் பொங்கினாலும், ஏன், சூரியனே பொடிந்து விழுந்தாலும் இறைவனுக்கு ஆட்பட்ட உத்த மர்கள் அதைப் பொருட்படுத்த மாட்டார்கள்" என்று அடித்துக் கூறி இறையுணர்வின் ஏற்றத்தினை உணர்த்துகிறார் அந்த உத்தம ஞானி;

"வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடுமாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண்டு
ஊனமொன்றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே"

(தேவாரம் – பொது)

ஞானி திருமூலரும் இதையே கூறுகின்றார். "வானம் இடிந் தாலென்ன? மாகடல் பொங்கினாலுமென்ன? காட்டுத்தீயிலே நாம் வெந்தாலும் சண்டமாருதப் புயலிலே நாம் சிக்கினாலும் இறைவனை ஒன்றியவர்க்கு இல்லையொரு சஞ்சலமும்," என்கிறார் அந்த மெய்ஞ்ஞானி:

"வானின்று இடிக்கிலென் மாகடல் பொங்கிலென்
கானின்ற செந்தீக் கலந்துடன் வேகிலென்
தானொன்றி மாருதஞ்சண்டம் அடிக்கிலென்
நானொன்றி நாதனை நாடுவன் நானே."

(திருமந்திரம் – 2850)

அதிர்ச்சிகளைத் தாங்கும் ஆற்றல் இறையுணர்வால் எவ்வாறு நமக்கு வருகின்றது?

நம் நண்பர் ஒருவர் நம்மைக் காண வருகிறார். அப்பொழுது நாம் ஏதோ சஞ்சலத்துடன் இருக்கிறோம். "என் மனது சரி யில்லை. சிறிது நேரம் கடற்கரையில் இருந்துவிட்டு வரலாம்" என்று கூறி அவரையும் அழைத்துச் செல்லுகிறோம்.

பொன்னிறமான மாலை நேரம். கருநீலக் கடலின் அலைகள் கரையில் வந்து மோதி மோதிக் கரைந்துபோய்க் கொண்டிருக் கின்றன. மேற்கு வானத்தில் பல்வண்ண மேகத் திரள்கள்

Koviloor Digital Library



மறைந்து கொண்டிருக்கும் மாலைச் சூரியனின் மஞ்சள் வெயிலில் உலகப் பொருள்களெல்லாம் உற்சாகமாகத் தோன்றுகின்றன! இந்த அந்தி நேர அமைதி நம் உள்ளத்திலும் ஓர் அமைதியினைத் தோற்றுவிக்கிறது! உளைந்து கொண்டிருந்த நம் உள்ளத்தில் ஏதோ ஒரு நிம்மதி பிறக்கிறது. சிறிது நேரம் சென்றபின் வானத்திலே நட்சத்திரங்கள் பூத்துப் பொலிகின்றன. மேலே வானத்தில் பிறைமதி மிதந்து கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் காணும்பொழுது நம் இதயத்தில் எழும் இன்பவுணர்வில் நம் கவலைகளை நாம் மறக்கிறோம். மலைபோன்று பெரிதாகத் தோன்றிய கவலைகள் அற்பமாகத் தோன்றுகின்றன. இச்சூழ்நிலையில் கடற்கரையை விட்டு நாம் எழுந்து வரும்பொழுது இதயத்தை அழுத்திக் கொண்டிருந்த கவலையுணர்வு சிறிது மறைந்துபோய், மனத்தில் ஓர் அமைதி நிலவுகிறது.

இது நமக்கு ஏற்படும் அனுபவமாகும்.

சாதாரண இந்த இயற்கைக் காட்சியே நம் மனத்தில் அமைதியை இவ்வாறு தோற்றுவிக்கிறது என்றால், இறைமையினை நாம் இதயத்தில் இசைக்கும்பொழுது எத்தகைய அமைதி பிறக்க வேண்டும்?

எல்லையில்லாப் பரவெளியையும் எண்ணற்ற அண்டங்களையும், இத்தனைக்கும் அப்பாலான இறைமையின் தன்மையினையும் சிறிதே சிந்தனையில் கொண்டால் போதும், அலையற்ற ஆழ்கடலாய் நம் மனம் அமைதி பெறுகின்றது. இத்தகைய இறமையோடு நாமும் இணைந்துள்ளோம் என்று எண்ணும்போது அந்த அமைதியோடு இன்பவுணர்வும் சேருகின்றது. இவ்வாறு, இன்ப அமைதி நிலவும் உள்ளத்தில் கவலைக்கும் கலக்கத்துக்கும் இடமேது? அதிர்ச்சிகளுக்கும் அல்லல்களுக்கும் இடமேது? உள்ளம் ஒடுங்கி அடங்கிய நிலையில் மிதமிஞ்சிய உணர்ச்சிகளுக்கும் இடமேயில்லை.

> "திரையற்ற நீர் போல் சிந்தை தெளிவார்க்குப்
> புரையற்று இருந்தான் புரிசடையோனே"
>
> (திருமந்திரம் - 2955)

என்கிறார் திருமூலர்.

**அடக்கம்**

உள்ளத்தில் அமைதி என்றால் உணர்ச்சிகளே அற்றுப்போய்த் தன்னை மறந்து இருக்கும் நிலை அல்ல. உள்ளத்து உணர்ச்சிகள்

Koviloor Digital Library



அளவோடு அமைந்துள்ள நிலையைத்தான் அமைதி என்கிறோம். மிதமிஞ்சிய பல்வகை உணர்ச்சிகளால் உந்தப்பட்டு அலைகடல் துரும்பாக ஆடி அவதிப்படுகிறது நம் உள்ளம். அலைகடல் துரும்பாக இல்லாமல் ஆழ்கடல் அமைதியுடன் நம் உள்ளம் இருத்தல் வேண்டும். அதுவே உள்ளத்தில் நிலவும் அமைதியாகும்.

அலையற்ற ஆழ்கடல் போல் அமைதியுறுகின்றது நம் உள்ளம் இறையுணர்விலே இசைந்து நிற்கும் நிலையில்.

இத்தகைய அமைதி நிலையினைத்தான் "அடக்கம்" என்ற பண்பாகச் சிறப்பித்துக் கூறுகின்றனர். உணர்ச்சிகளால் உந்தப் படாமல் அவற்றை அடக்கி நிற்பது அடக்கம் என்ற அரிய பண் பாகின்றது. தந்நிலைத் தடுமாறாது அடக்கத்துடன் இருப்பவரின் தோற்றம் மலையைவிட உயர்ந்தது என்கிறார் வள்ளுவர்;

**நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது**

**(குறள்-124)**

**அமைதி**

ஓடை நீரின் ஓட்டத்தில் "சல சலப்பு" உண்டு. ஆனால், அணையினால் தேங்கி நிற்கும் நீர்ப்பரப்பில் எவ்வளவு அமைதி நிலவுகிறது! அந்த அமைதியில் அடங்கியுள்ள ஆற்றல்தான் எவ்வளவு? அணைக்கட்டின் மடை ஒன்றைத் திறந்தவுடன் தேங்கி நின்ற நீர் எத்தனை வேகத்தில் இரைச்சலோடு பாய்கின்றது! பாய்ந்தோடிச் செல்லும் அந்த நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் பெரிய பெரிய சக்கரங்களைச் சுழற்றுகின்றது! இவ்வாறு ஓடும் நீரின் ஆற்றலால் மின்சாரம் உற்பத்தி ஆகிறது! இந்தச் சக்தி நீருக்கு எப்படி வந்தது? அடக்கி நிறுத்தப்பட்ட நீர்ப்பெருக்கு தேங்கி நின்று இந்த ஆற்றலைப் பெறுகின்றது. அணையால் அடங்கி நிற்கும் நீர்ப் பெருக்கில் அடங்கியுள்ள ஆற்றல் நமக்குத் தெரிவதில்லை. ஆனால், அடங்கி நிற்கும் அமைதியில்தான் இத்தகைய ஆற்றல் அமைந்துள்ளது.

நாமும் இறையுணர்வால் நம் உணர்ச்சிகளை அடக்கி உள்ளத்து அமைதியினை எய்துகின்றோம். அந்த அமைதியில் அடங்கியுள்ள ஆற்றலையும் நாம் பெறுகின்றோம்.

அடியார்களெல்லாம் அமைதியை நாடி இறைவனை வேண்டுகின்றனர்.

Koviloor Digital Library



"அச்சம் வேண்டேன், அமைதி வேண்டினேன்"

என்று வேண்டுகின்றார் பாரதியார்.

உள்ளத்தின் அமைதியே உயர்ந்த மெய்ஞ்ஞானம் என்கிறார் அவர்:

"போருக்கு நின்றிடும் போதும் - உளம்
பொங்கல் இல்லாத அமைதி மெய்ஞ்ஞானம்"

(பாரதியார்)

"என்றுமுள்ள பிரமம் அமைதி வடிவானது"

என்று போற்றுகிறது தைத்திரீய உபநிடதம்.

இயந்திர நாகரீகம் நிலவும் இன்றைய உலகில் உள்ளத்து அமைதியின்றி உளைந்து வாடுகின்றனர் பெரும்பாலான மக்கள். அமைதியினை நாடி அலமந்து நிற்கின்றனர். தூக்க மாத்திரைகளும், சுயநினைவை மறக்க வைக்கும் மருந்து வகைகளுந்தான் அமைதியில்லாதவர்களுக்கு அருந்துணையாக இன்று இருக்கின்றன! இறையுணர்வு என்ற பெருந்துணையே உண்மையான அமைதியினை அளிக்க வல்லது என்பதை அவர்கள் அறிவதில்லை.

"எனது உடலிலும் உயிரிலும் புகுந்து இறைமை நிறைந்து நிற்கும் நிலையில், கடல் அலைகள் போல் வந்து கொண்டிருக்கும் கலக்கம் மறைந்து விடுகின்றது", என்கிறார் மாணிக்க வாசகர்:

"கடலின் திரையது போல் வரு கலக்க மலம் அறுத்தென்
உடலும் எனது உயிரும் புகுந்து ஒழியா வண்ண
நிறைந்தான்."

(திருவாசகம்—உயிருண்ணிப்பத்து)

இறையுணர்வினை இதயத்தில் இசைத்து விட்டால் அமைதி நிலை தானாகவே வந்து விடுகின்றது. அச்சமும் கவலையும் மறைந்து போகின்றன. எவ்வித அதிர்ச்சியும் நம் உள்ளத்தைப் பாதிப்பது இயலாது என்ற நிலையினை நாம் எய்தி விடுகின்றோம்.

இறையுணர்வோடு இசைந்து நிற்பவன்,

"இன்பத்தை இனிதெனவும் - துன்பம்
இனிதில்லை என்றுமவன் எண்ணுவதில்லை"

என்கிறார் பாரதி.

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்.

(குறள்-629)

Koviloor Digital Library



இறையுணர்வு என்ற ஈடில்லாத இன்பத்தில் திளைப்பவர்களுக்கு வேறு இன்பம் ஏது? துன்பம் ஏது? இன்ப ஊற்றினை இயத்திலே தேக்கி வைத்திருப்போர்க்கு எல்லாம் இன்பமாகவே தோன்றுகிறது. வாழ்விலே இன்பத்திற்கு ஆதாரமானவை எல்லாம் இயல்பாகவே அவரை வந்தடைகின்றன என்று பாடுகின்றார் பாரதியார்:

"கண்ணன் எனதகத்தே கால்வைத்த நாள் முதலாய்
எண்ணம் விசாரம் எதுவுமவன் பொறுப்பாய்ச்
செல்வம், இளமாண்பு, சீர்சிறப்பு, நற்கீர்த்தி,
கல்வி, அறிவு; கவிதை, சிவயோகம்,
தெளிவே வடிவாம் சிவஞானம் என்றும்
ஒளிசேர் நல்மனைத்தும் ஓங்கி வருகின்றன காண்!
கண்ணனை நான் ஆட்கொண்டேன்! கண் கொண்டேன்!
கண் கொண்டேன்!

(கண்ணன் பாட்டு)

"எண்ணம் விசாரம் எதுவும் அவன் பொறுப்பு" என்ற இறையுணர்வால் நம் இதயம் அமைதியினைப் பெறுகின்றது. ஒருவரின் அகத்திலே நிலவும் அமைதியை அவர் முகத்திலே நாம் காணலாம். அவர்தம் சொல்லிலும், செயலிலும் சஞ்சலம் நீங்கிச் சாந்தம் தவழுவதை நாம் பார்க்கிறோம். அவர்களது இதயத்து அமைதியினை எத்தகைய இடர்ப்பாடும் பாதிப்பது இயலாது. அத்தகைய அமைதியால், அடக்கத்தால் அவர்கள் வாழ்வு அமர வாழ்வாகின்றது.

எனவேதான்,

"அடக்கம் அமரருள் உய்க்கும்"

(குறள் 121)

என்கிறார் வள்ளுவர்.

இவ்வாறு, அமரருள் உய்க்கும் அடக்கம் என்ற பிண்பினை இறையுணர்வால் நாம் எய்துகின்றோம்.

Koviloor Digital Library

# 28. கடமையாற்றும் கலை

''பற்றுதல் இன்றிப் பணிகளைப் புரிவோர், ஆண்டுகள் நூறு அமைதியாய் வாழ்வர்''

(ஈசோப நிடதம்)

பகல் பத்தரை மணி. மாவட்ட 'செஷன்ஸ்' நீதிமன்றம் கூடும் நேரம். ஒரு கொலை வழக்கில் தீர்ப்புக் கூறவேண்டிய நாள் அது. ஆதலால், கோர்ட்டில் கூட்டம் அதிகமாகவே இருந்தது.

**நீதிமன்றக் காட்சி**

நீதிபதி வந்து தமது ஆசனத்தில் அமர்ந்தார். குற்றம் சாட்டப்பட்ட எதிரிகள் மூவரையும் குற்றவாளிக் கூண்டில் கொண்டுவந்து போலீசார் நிறுத்தினர்கள். 'நிசப்தம்,' நிலவியது. நீதிபதி தமது தீர்ப்புரையைப் படித்தார். முடிவில், குற்றம் சாட்டப்பட்ட மூவரில் இருவருக்குத் தூக்குத் தண்டனை என்றும், ஒருவருக்கு விடுதலை என்றும் தீர்ப்புக் கூறினர்.

திடீரென்று அமைதி கலைந்தது! தூக்குத் தண்டனை விதிக்கப் பட்ட இரு குற்றவாளிகளின் குடும்பத்தினரும் தீர்ப்பைக் கேட்ட வுடன் துக்கந் தாளாமல் கண்ணீர்விட்டுக் கதறி அழுதார்கள். ஒரு குற்றவாளி மணமானவர். அவர் மனைவியின் அலறலும் அவள் இடுப்பிலிருந்து குழந்தை வீறிட்டுக் கதறியதும் சோகக் காட்சியாக இருந்தது. அங்கு வந்திருந்த கிராமத்துப் பெரிய வர்கள் நீதி தவறுமல் குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைத்து விட்டது என்று மன நிறைவுடன் பேசிக் கொண்டனர்.

இந்த ஆரவாரம் எல்லாம் இரண்டு நிமிடங்கள்தான். தூக்குத் தண்டனை பெற்ற இரு குற்றவாளிகளையும் போலீசார் பிடித்துச் சென்று போலீஸ் வண்டியில் ஏற்றினர்கள். விடுதலை பெற்றவரை அவர் குடும்பத்தினர் குதூகலத்துடன் கூட்டிச் சென்றனர். கூட்டம் கலைந்தது. நீதிமன்றத்தில் அடுத்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Koviloor Digital Library



இத்தனை ஆரவாரத்துக்கிடையிலும், தீர்ப்புக் கூறிய நீதிபதியின் முகத்திலோ நீதிமன்ற உதவியாளர்கள் முகங்களிலோ எவ்விதச் சலனமும் காணப்படவில்லை! கொந்தளிப்பு, குறுகுறுப்பு ஏதும் இன்றி "கடமையை ஆற்றுகிறோம்" என்ற ஒரே உணர்வோடு அவர்கள் தமது பணியிலே ஈடுபடுகின்றனர்!

இது, ஒவ்வொரு மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்திலும் வாரத்தில் ஓரிருமுறை நடக்கும் காட்சியாகும்.

"இரண்டு பேர்களுக்குத் தூக்குத் தண்டனை விதித்து விட்டேனே" என்ற கவலையோ, "ஒருவரை விடுதலை செய்து விட்டேன்" என்ற மகிழ்ச்சியோ நீதிபதிக்கு ஒரு சிறிதும் இல்லை. தீர்ப்பைக் கேட்டவர்களுக்கு ஏற்பட்ட துயரமோ மகிழ்வோ நீதிபதியைச் சிறிதுகூடப் பாதிக்கவில்லை.

இதற்கு என்ன காரணம்?

தீர்ப்பளித்த நடுவர் உணர்ச்சியேஅற்ற ஜடப்பொருளா? இரக்க உணர்வு இல்லாத கல்நெஞ்சம் படைத்தவரா?

இல்லை. நடுநிலை உணர்வும் நேர்மைத்திறனும் கொண்ட நீதிபதி தான் அவர். இளகிய இதயம் படைத்தவர்தான் அவர். அப்படி இருந்தும் அவர் ஏன் எவ்வித உணர்ச்சிகளுக்கும் ஆளாகவில்லை?

காரணம் இதுதான்.

**நீதி செலுத்தும் நெறி**

கொலைக் குற்றம் இழைத்தவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்க வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. குற்றவாளிகள் இருவரும் கொலை செய்தனர் என்பதைச் சாட்சியம் ஐயத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கிறது. எனவே, சட்டமும், சாட்சியமும் காட்டும் நெறியில் குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனையை விதிக்கிறார் நீதிபதி. தமது சொந்த விருப்பு, வெறுப்பு என்ற அப்படையில் நீதிபதி தண்டனை விதிக்கவில்லை. சட்டத்தை நிறைவேற்றும் வகையில் நீதியின் காவலராக உள்ள நீதிபதி, சட்டம் நீதி இவற்றின் கருவியாகவே இயங்குகிறார். ஆதலால், தூக்குத் தண்டனை விதிப்பில் அவருக்கு வெறுப்போ விருப்போ, துன்பமோ இன்பமோ எதுவும் இல்லை.

Koviloor Digital Library


சட்டப்படி தமது கடமையை ஆற்ற வேண்டும், அதனால் விளையும் பயனைப்பற்றி அக்கரையில்லை என்ற அடிப்படையில் நீதிபதி செயற்படுகின்றார். கடமையினைச் செய்வதால் விளையும் பயன் எதுவாக இருந்தாலும் அதில் பற்று வைக்காமல் தமது கடமையை அவர் ஆற்றுகின்றார். எனவே, அவரது தீர்ப்பினால் பிறருக்கு விளையும் இன்ப துன்பங்கள் அவரைப் பாதிக்கவில்லை. ஆதலால்தான், கலக்கம் ஏதுமின்றி நடுவுநிலை தவறாமல் அவரால் தமது கடமையைச் செய்ய முடிகிறது.

விளையும் பயன் மீது விருப்பு வெறுப்பு ஏதுமின்றி கடமையினை ஆற்றும் பண்பு நீதிபதிக்கு மட்டுந்தான் இருத்தல் வேண்டுமா?

இல்லை.

நாம் ஒவ்வொருவருமே நம் கடமைகளைச் செய்கையில் அவற்றால் விளையும் பயன் எதுவாயினும் அதன்மீது பற்று வைத்தல் ஆகாது என்கின்றனர் ஞானிகள்.

"செய்தலுன் கடனே - அறம்
செய்தலுன் கடனே - அதில்
எய்துறும் விளைவினில் எண்ணம் வைக்காதே"

(பாரதியார் — ஆரிய தரிசனம்)

என்பதே அறநூல்கள் அறிவுறுத்தும் சீரிய நெறியாகும்.

**கீதை புகட்டும் ஞானம்**

இந்த ஞானத்தைப் போர்க்களப் பின்னணியிலே போதிக்கின்றது கீதை!

குரு க்ஷேத்திர யுத்தகளம். பாண்டவர் படைகளும் கௌரவரின் படைகளும் எதிர் எதிராகப் போர்க்கோலம் பூண்டு நிற்கின்றன. கையில் காண்டீபத்துடன் களத்திலே இறங்கி ரதத்திலே செல்கிறான் வில் வீரன் விஜயன். அவனுக்கு எதிரில் உற்றாரும் உறவினரும் போருக்கு அணிவகுத்து நிற்கின்ற காட்சியை அவன் காணுகின்றான்! அக் காட்சி அவன் உள்ளத்தை உலுக்கிறது, உறுதியினைக் குலைக்கிறது! இவர்களையா நான் கொல்வது, போரில் வெல்வது என்று மருகி நிற்கிறான் மாவீரன் அர்ச்சுனன்!

Koviloor Digital Library


சுற்றங் கொல்வேனே? – என்றன்
சுற்றங் கொல்வேனே? – கிளை
அற்றபின் செயும் அரசுமோர் அரசோ?"

(பாரதியார்)

என்கிறது, உறுதி குலேந்த வீரனின் உள்ளம்! அவன் கையிலிருந்து காண்டீபம் மெல்ல நழுவுகிறது!

கர்ம வீரனாக இயங்க வேண்டிய அர்ச்சுனன் கடமையிலிருந்து நழுவப் பார்ப்பதைக் காணுகின்றான், அவனுக்குச் சாரதியாக விளங்கும் கண்ணபிரான்.

"வில் வீரன் விஜயனே! உனது கடமை இப்பொழுது போரிட்டு எதிரிகளை அழிப்பதுதான். இதை மறந்து விடாதே", என்று கடமையை நினைவூட்டுகிறான் கண்ணன்.

"என் உறவினர்களை நான் எப்படிக் கொல்லுவேன்"

என்று மீண்டும் பார்த்தனின் மனம் பதறுகின்றது!

இதைவிட நெருக்கடியான நிலை ஏது! கண நேரத்தில் தமது கடமையினை தொடங்க வேண்டிய நிகரில்லாத வீரன் நெஞ்சு குலேந்து நிற்கின்றான்! இந்த நிலையிலே, நேர்மையாகக் கடமையாற்றும் நெறி எது என்பதை தேரோட்டும் தேவன் தெளிவாக்குகிறான்!

வாடி நில்லாதே; - மனம்
வாடி நில்லாதே. - வெறும்
பேடியர் ஞானப் பிதற்றல் சொல்லாதே

(பாரதியார்)

என்று பரம ஞானத்தைப் போதிக்கின்றான் பார்த்தசாரதி.

"அர்ச்சுனா! போர்க்களத்தில் இறங்கி நிற்கும் வீரனின் கடமை எதிரிகளைத் தாக்கி வெற்றி பெறுவதுதான். ஆதலால் போர் புரிதல் உன் கடமை. இக்கடமையினை ஆற்றுவதால் விளையும் பயன் என்ன என்று எண்ணிக் கடமையில் நீ தவறுவாயானால் அது கோழைத்தனமாகும்.

"ஆன்மாவுக்கு அழிவு என்பதே இல்லை. எனவே, உன் எதிரிகளை கொல்லுவதாக நீ நினைப்பது அறியாமை.

Koviloor Digital Library



"நான்தான் அவர்களைக் கொல்லுகிறேன்," என்று நீ நினைப்பது அகந்தை!

"இறைமையின் கையில் நீ ஒரு கருவி, அதிலும் அற்பமான கருவி.

"எனவே, 'நான்' என்ற அகந்தையை அகற்றி, உற்ற கருமத்திலே உறுதியுடன் நின்று, வினையும் பயனில் பற்று வைக்காமல், உன் கடமையினை ஆற்றுவாயாக".

"வில்லினை எடடா: - கையில்
வில்லினை எடடா! - அந்தப்
புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா!
செய்தலுன் கடனே - அறம்
செய்தலுன் கடனே - அதில்
எய்துறும் விளைவினில் எண்ணம் வைக்காதே"

(பாரதியார்)

இவ்வாறு இணையற்ற ஞானமான "கருமயோகம்" போதிக்கப்படுகிறது.

இந்த ஞானம் பெற்றவுடன் துவண்டு நின்ற வில் வீரன் துள்ளிக் குதித்தான். காண்டீபம் ஒலித்தது. கடமையைச் செய்தது. அதர்மம் அழிந்தது. தர்மம் நிலைத்தது!

வாழ்க்கை என்பது போர்க்களம்; உடல் என்பது தேர்; ஐம்புலன்களும் அதன் குதிரைகள்; மனது கடிவாளம்; தேரை ஓட்டுவது புத்தி. தேரிலே அமர்ந்திருப்பது உயிர். எனவே, புத்தி நமக்குப் புகட்டும் புகலரிய ஞானமாகவும் இதைக் கொள்ளலாம் என்கிறார் விவேகாநந்தர்.

"நிஷ்காமிய கருமம்" அல்லது "பற்றுதலற்ற பணி' என்ற கொள்கை ஒப்புயர்வற்ற ஒரு தத்துவமாகும். நம் வாழ்க்கைக் கடலில் வழிகாட்டி நிற்கும் கலங்கரை விளக்கமாகும்.

சிறிது சிந்தித்தால் இக்கொள்கையின் உயர்வினையும் உண்மையினையும் நாம் உணருகின்றோம்.

**வாழ்வைத் துறப்பதா**

உலக வாழ்வில் மாணவனாக, கணவன்-மனைவியாக, தாய்-தந்தையாக, நண்பனாக, உறவினராக, பணியாளராக, சமுதாயத்

Koviloor Digital Library



தின் உறுப்பினராக நாம் ஆற்றவேண்டிய கடமைகள் எத்தனையோ உள்ளன. இக்கடமைகளை செய்யும்பொழுது பல விளைவுகள் உண்டாகின்றன. அவ்விளைவுகளால் பிறருக்கு இன்பம் நேரலாம், அல்லது துன்பம் நேரலாம். இன்பம் என்றால் நமக்குப் புண்ணியம், துன்பம் என்றால் நமக்குப் பாவம். இப்படி எழும் புண்ணியம், பாவம் என்ற பலன்கள் நம்மைப் பிணிக்கின்றன! அவற்றின் பயனை நாம் அனுபவிக்க வேண்டுமே! இவ்வாறு, நாம் செய்யும் கருமங்களின் விளைவுகள் முடிவே இல்லாத பந்தங்களைத் தோற்றுவித்து நம்மை பிறவிக்கடலிலே என்றும் ஆழ்த்திவிடுகின்றன! ஆதலால், பிறவிக்கடலைவிட்டுக் கரையேற வேண்டுமெனில், கருமங்கள் எதுவும் செய்யாது, வாழ்வைத் துறந்து, கைகட்டிக் கண்மூடி காட்டிலே இருக்கவேண்டும். இதைத் தவிர வேறு வழியில்லை, பிறவிப் பிணியிலிருந்து விடுதலை பெறுவதற்கு. எனவே உலக வாழ்வைத் துறந்துவிடுவதுதான் விடுதலைக்கு உகந்த வழி.

இப்படி ஒரு வேதாந்தம் தோன்றிப் பரவி மக்களின் வாழ்க்கை வளத்தை வற்றச் செய்து கொண்டிருந்தது!

கருமங்கள் செய்யாது கல்லாக, மண்ணாக இருக்க வேண்டும் என்று கூறும் இக் கொள்கையினை ஏற்றுக் கொள்ளுவதா? பிறந்தவர்கள் எல்லோரும் பிண்டங்களாக மாறுவதா? உப்புக்கும் சப்புக்கும் உதவாத நிலையல்லவா இது?

**உண்மைத்துறவு**

மெய்யுணர்வு பெற்ற ஞானிகள் உண்மைத் துறவு என்பது என்ன என்று போதித்தனர்.

துறவுதான் விடுதலைக்கு வழி என்பதில் ஐயமில்லை. ஆனால், துறவு என்பது வாழ்வைத் துறப்பது அன்று, கடமைகளைத் துறந்து விடுவது அன்று. கருமத்தின் பயனைத் துறப்பதேதுறவு, உற்ற கடமைகளை ஆற்றுவதால் உதிக்கும் பயன்மீது பற்றுதல் வைக்காமல் கடமைகளை உறுதியுடன் ஆற்றுவதுதான் உண்மையான துறவாகும்.

**எனவே, உண்மைத்துறவு என்பது உற்ற கடமைகளைத் துறப்பது அன்று, அவற்றால் உறும் பயனைத் துறப்பதுதான்.**

இந்த ஒப்பரிய ஞானத்தை அவர்கள் புகட்டினார்கள்!

மேலே கண்டோம், நீதிபதி இரு குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை விதித்தார் என்று. இதனை நிறைவேற்றும் வகையில் சிறை அதிகாரி குற்றவாளிகள் இருவரையும் தூக்கிலிட்டுக்

Koviloor Digital Library



கொல்லுகின்றார். ஆனால், அந்த அதிகாரி மீது கொலைக்குற்றம் சாட்டப்படுவதில்லை. ஏன்? பயன்மீது பற்று வைக்காமல் அவர் தமது கடமையைச் செய்தார். எனவே கருமத்தின் பயன் அவரைப் பாதிப்பது இல்லை.

இதே போல்தான், பற்று இன்றிக் கடமையாற்றும் பொழுது அதனால் நாம் பாதிக்கப்படுவதில்லை, பந்தப்படுவதுமில்லை.

ஈசோபநிடதம் இந்த உண்மையினைத் தெளிவாகக் கூறுகிறது:

> "உலகவாழ்வும் ஆன்மீக நெறியும் முரண்பட்டதல்ல. கருமங்களைச் செய்வது கடவுள் ஞானத்திற்கு மாறுபட்டதல்ல. பற்றுதலைத் துறந்து கடமைகளை ஆற்றுவதே பரமனைப் பற்றுவதற்கு உற்ற சாதனமாகும். துறவு என்பது 'தன்னை மறப்பது தந்நலம் துறப்பது' என்பதுதான். வாழ்வையே துறந்து விடுவதன்று துறவு.
>
> பற்றற்ற கருமமே அகமும் புறமுமாக உள்ள பரமனைக் காணும் நெறியாகும்"

"தன்னை மறப்பது, தன்னலம் துறப்பது, பற்றுதல் இன்றிப் பணியினைத் தொடர்வது. இதுவே ஞானம்."

என்பதில் எத்தகைய உண்மை அடங்கியுள்ளது!

உலக வாழ்வில் உற்சாகத்துடன் ஈடுபட்டுக் கொண்டு, நம் கடமையில் வழுவாமல் கருமத்தில் தவறாமல், அதே சமயம் கருமத்தின் விளைவால் கட்டுண்டு போகாமல், விடுதலையான வாழ்வு வாழ்வதற்கு இதைவிட வேறு உபாயம் ஏது?

பற்றுதல் இன்றிப் பணிபுரிவது என்பது கடமையாற்றும் கலை மட்டுமன்று, வாழ்க்கைக் கலையுமாகும்.

இந்த இடத்தில் ஒரு பெரிய சிக்கலும் எழுகின்றது.

விளையும் பயனில் விருப்பு, வெறுப்பு இன்றிக் கடமையினை ஆற்ற வேண்டும் என்பது சரிதான். ஆனால், எந்தக் காரியத்தை நாம் செய்தாலும் அதனால் விளையும் பயனை விரும்பித்தானே நாம் செய்கிறோம். அந்த விருப்பத்தைப் போக்குவது எப்படி?

Koviloor Digital Library


வினையும் பயனில் வைக்கும் பற்றுத்தானே கருமத்தைச் செய்யத் தூண்டுகிறது. பிறகு எப்படிப் பற்றுதல் இன்றிக் கருமத்தைச் செய்வது?

**இறையுணர்வே உதவுகிறது**

இங்குதான் இறையுணர்வு நமக்குக் கைக்கொடுக்கின்றது.

ஒன்றை நாம் எப்பொழுது விரும்புகிறோம்? நமக்கு இன்பத்தைக் கொடுப்பதை நாம் விரும்புகிறோம். அதுபோல் நம் இன்பத்திற்கு மாறானதை வெறுக்கின்றோம். எனவே தந்நலத்தின் அடிப்படையில்தான் ஒன்றின்மீது விருப்பு, வெறுப்பு என்ற உணர்வுகள் எழுகின்றன.

தந்நலம் எப்பொழுது எழுகின்றது? நம்மைத் தனியாகப் பிரித்து 'நான்' 'எனது' என்று எண்ணும் எண்ணத்தின் அடிப்படையில்தான் தந்நல உணர்வு எழுகின்றது.

'நான்' 'எனது' என்று பிரித்து எண்ணும் நிலை இல்லையெனில் தந்நலத்திற்கு இடமில்லை. தந்நலம் இல்லையெனில் விருப்பு, வெறுப்புக்களுக்கு இடமில்லை. ஆதலால், கருமங்களின் விளைவுகள் மீது பற்று இன்றி நாம் இருக்க வேண்டுமானால் 'நான்' 'எனது' என்ற எண்ணம் அறவே ஒழிய வேண்டும்.

இறையுணர்வினை இதயத்திலே இசைத்தவர்கள் இறைமை வேறு, தான் வேறு என்று பிரித்து எண்ணுவதே இல்லை. எங்கும் நிறைந்துள்ள இறைமையே இதயத்திலும் இசைந்துள்ளது என்பதுதானே இறையுணர்வின் சாரம்! அவ்வாறு இசைந்துள்ள நிலையில் 'நான்' 'எனது' என்ற அகந்தை உணர்வுக்கு ஏது இடம்?

"அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்கும்
தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கே!"

(மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்)

என்று பாடுகிறார் குமர குருபரர்.

"என்னை அறியாத காரணத்தால் 'நான்' 'எனது' என்று பிரித்து எண்ணிக் கொண்டிருந்தேன். நான்தான் நீ, நீதான் என் உடைமை, என்று இறைமையினை ஏத்துகின்றார் ஞானி நம்மாழ்வார்.

Koviloor Digital Library



"யானே என்னை அறிகியலாதே
யானே என் தனதே என்றிருந்தேன்
யானே நீ என்னுடைமையும் நீயே
வானே யேத்தும் எம் வானவரேறே"

(திருவாய்மொழி-2 ப. 9தி.)

நானே நீ என்பது மட்டுமல்ல. நான் செய்யும் கருமம், கருமத்தின் பயன், கருமத்திற்கான காரணம் எல்லாம் இறைமைதான் என்கிறார் அந்த ஞானி.

"கருமமும் கரும பலனுமாகிய காரணன்தன்னை"

(திருவாய்மொழி-3 ப. 5 தி.)

எல்லாவற்றுக்கும் காரணமாக உள்ளது இறைமைதான் என்பதைக் "காரணமூர்த்தி" என்ற தலைப்பிலே விரிவாகக் கண்டோம்.

எனவே 'நான்' என்பது இறைமை; 'செயல்' இறைமை; செயலுக்கான காரணம் இறைமை; செயலின் பயனும் இறைமை. இந்நிலையில் நாம் செய்யும் செயலால் விளையும் பயன் மீது எப்படிப் பற்றுவைக்க முடியும்?

எனவே இறையுணர்வுதான், 'நான்' என்ற அகந்தையை அகற்றி, பற்றின்றிப் பணியாற்றும் திறனை நமக்கு அளிக்கின்றது.

**இறைமையின் கருவியாகவே இயங்குகிறோம்**

மேலும், இறைமையின் கருவியாக நாம் செயற்படுகிறோம் என்ற உண்மையையும் நாம் உணருகின்றோம்.

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே,
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே"

(தேவாரம்-பொது)

"ஆட்டுவது இறைமை, ஆடுவது நாம்" என்ற உண்மையினைக் கூறி, நாம் இறைமையின் கருவியாகவே இயங்குகிறோம் என்பதை உணர்த்துகிறார் நாவுக்கரசர்.

இதோ, காக்கி உடை அணிந்து கடமையினை ஆற்றுகின்றார் ஒரு போலீஸ் அதிகாரி. பயங்கர ஆயுதங்களுடன் பயமுறுத்தி நிற்கும் பெருந்தடியனை ஒருவனைத் தனியாகவே பிடித்து மடக்குகிறார் காவல்துறை வீரர். அந்த மனவுறுதி அவருக்கு எதனால் வந்தது? "வல்லமையுடைய அரசின் கருவியாக நான் இயங்குகின்றேன்," என்ற எண்ணம்தான் அவருக்கு உள்ளவுறுதியைக் கொடுக்கின்றது.

Koviloor Digital Library



சாதாரண ஒரு அரசாங்கத்தின் கருவி என்ற எண்ணமே இத்தகைய உறுதியைக் கொடுக்கும் பொழுது, நாம் ஆண்டவனின் கருவி என்ற உண்மையினை உணர்ந்து கடமையாற்றினுல் எத்தகைய ஆற்றலை நாம் பெறுவோம்?

மேலும், இறைமையின் கருவியாக நாம் இயங்கினுல், காரியம் கைகூடாத நிலையிலும் நாம் கவலைப் படுவதில்லை. வினையும் பயனுல் துன்பமோ, துயரமோ நமக்கு வருவதில்லை. பக்தியுணர்வோடு பயன் கருதாது பணியாற்றினுல் துன்பமும் துயரமும் வருவதில்லை என்பதை தெளிவாகக் கூறுகின்றுர் பாரதியார்;

"பயனெண்ணுமல் உழைக்கச் சொன்னுள்,
பக்தி செய்து பிழைக்கச் சொன்னுள்;
துயரிலாது எனைச் செய்துவிட்டாள்;
துன்பம் என்பதைக் கொய்துவிட்டாள்".

(மகாசக்தி)

**கடமையாற்றும் கலை (கரும யோகம்)**

இவ்வாறு, உலக வாழ்விலே நமக்கு உற்ற கடமைகளை ஆர்வத்தோடு ஆற்றுகின்றோம். இறைமையின் கருவியே நாம் என்ற இறையுணர்வுடன் கடமைகளைச் செய்கின்றோம். 'தான்' என்ற அகந்தையை மறக்கின்றோம், 'தந்நலம்' என்ற ஆசையைத் துறக்கின்றோம். இதனுல் வினையும் பயன்மீது பற்றுதல் அற்றுவிடுகிறது. பற்றுதலற்ற பணியால் பந்தம் ஏற்படுவதில்லை, துன்பம் தோன்றுவதில்லை.

இந்நிலையில், கடமையினை ஆற்றும் செயல் கடவுளைப் போற்றும் செயலாக உயர்ந்து விடுகிறது! "கரும யோகம்" என்ற பெயர் பெறுகிறது!

வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டும் இந்த ஞானநெறியினை, கடமையாற்றும் கலையினை என்னென்பது!

இறையுணர்வால் எய்தும் இந்தக் கடமையாற்றும் கலைஞானம் உலகுக்கெல்லாம் ஓர் ஒளி விளக்காகும்!

Koviloor Digital Library

# 29. ஆற்றலுடைமை

"முடியாதது என் எனக்கேல் இனி ? முழுவேழுலகும்
உண்டான் உகந்துவந்து
அடியேனுள் புகுந்தான், அகல்வானுமல்லன் இனி"
(திருவாய்மொழி)

தேடிச் சோறு நிதந்தின்று-பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி-மனம்
வாடித் துன்பமிக உழன்று-பிறர்
வாடப் பல செயல்கள் செய்து-நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி-கொடும்
கூற்றுக்கு இரையெனப் பின்மாயும்-பல
வேடிக்கை மனிதரைப் போலே-நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ ?

(பாரதியார் — யோகசித்தி)

நம் ஒவ்வொருவரின் இதயக் குரலைத்தான் இப்பாடல் எதிரொலிக்கின்றது.

நாம் தேடிச் சோறு நிதம் தின்கிறோம்; சின்னஞ்சிறு கதைகள் பேசுகிறோம்; துன்பத்தால் வாடி உழலுகிறோம்; பிறர் வாடும் வகையில் பல செயல்களைச் செய்கிறோம்; நாளடைவில் நரை கூடிக் கிழப்பருவம் எய்துகிறோம்; முடிவில் எமனுக்கு இரையாகி மாய்கிறோம்!

வேறு பயனுள்ள காரியங்களைச் சாதிக்காத நிலையில் நாம் அனைவரும் வேடிக்கை மனிதர்தாமே! வேடிக்கை மனிதர்களாக நாம் வாழ்ந்து மடிதல் கூடாது என்கிறார் பாரதியார்.

நம்மில் பெரும்பாலோர் சாதாரணமான தொழில்களில்தான் ஈடுபட்டுள்ளோம். இருப்பினும் நம் ஒவ்வொருவருக்கும் தனித் திறன் இருக்கிறது என்பதில் ஐயமில்லை. அந்திறனை வெளிக் கொணர்ந்து மலரச் செய்வதில் நமக்குப் போதிய ஆர்வம் இருப்ப தில்லை.

Koviloor Digital Library


அலுவலகப் பதிவுப் புத்தகங்களையும் வங்கியின் கணக்குப் புத்தகங்களையும் புரட்டிப் புரட்டி எழுதுவதைத் தவிர வேறு ஆற்றல் எதுவுமே நம்மிடம் இல்லையா? அன்றாடச் செய்தித்தாள் களையும், வார இதழ்களையும் படித்துவிட்டு மறப்பதைத் தவிர வேறு எதுவும் நம்மால் இயலாதா? எதை எதையோ பற்றிப் பேசிப் பொழுதுபோக்குவதை விடப் பயனுள்ள எதையும் செய்வ தற்கான அருகதை நமக்கு இல்லையா? இவ்வாறெல்லாம் சில வேளைகளில் நாம் நினைக்கிறோம், பிறகு மறந்து விடுகிறோம்!

உலகிலே எண்ணில்லாதவர்கள் உள்ளனர். அவர்களில் ஒருவரது முகத்தைப்போல் இன்னொருவருக்கு இருக்கின்றதா? இல்லையே! எத்தனையோ கோடி மக்கள் இருந்தும் அவர்கள் ஒவ் வொருவர் முகத் தோற்றமும் வெவ்வேறு விதமாகத்தானே இருக் கிறது! இது அதிசயம் அல்லவா! இவ்வாறு மக்கள் ஒவ்வொரு வருக்கும் வெவ்வேறான முகத்தோற்றத்தினை அளித்துள்ள இயற்கை, அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறான தனித் திறன்களை அளித்திருக்காதா? அளித்திருக்கத்தான் வேண்டும். ஆனால், நாம் அத்திறனை ஆய்ந்து காண முயலுவதில்லை. உண்டு உறங்கி உழலும் சாதாரண வாழ்விலேயே நாம் மனநிறைவு எய்தி விடுகிறோம். இவர்களைத்தான், "வேடிக்கை மனிதர்கள்" என்று கூறிப் பச்சாத் தாபப் படுகின்றார் பாரதியார்.

**அடங்கிக் கிடக்கும் ஆற்றல்கள்**

நம் ஒவ்வொருவர் இதயத்திலும் இறைமை இசைந்துள்ளது என்ற உண்மையினை நாம் கண்டோம். எங்கும் நிறைந்த பரம் பொருளே நம் உள்ளத்தில் உறையும் ஆன்மாவாக இலங்குகிறது என்பதையும் கண்டோம். இவ்வாறு, எல்லாம் வல்ல இறைமை யினை இதயத்தில் கொண்ட நாம் ஏதோ பிறந்தோம், எப்படியோ வாழ்ந்தோம், இறுதியில் மறைந்தோம் என்ற நிலையினை ஏற்று மனநிறைவு கொள்ளலாமா?

ஊர்க் கோவில் மூலையிலே உலோகச் சிலையொன்று கிடக் கிறது. களிம்பு ஏறிக் கவனிப்பாரற்றுக் கிடந்த சிலையினை ஒரு நாள் எடுத்தார்கள். படிந்திருந்த தூசியையும் படர்ந்திருந்த களிம்பையும் துடைத்து மெருகேற்றினார்கள். அவ்வளவுதான். அற்புதச் சிலையாக அது காட்சியளித்தது. கலைப் பொருள்கள் கண்காட்சியில் அச்சிலை முதலிடம் பெற்றது!

மூலையில் கிடந்த அழகுச் சிலை போல்தான் நம்முள் ஆற்றல்கள் முடங்கிக் கிடக்கின்றன.

Koviloor Digital Library



"வல்லமை தாராயோ - இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி, சிவசக்தி! - நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?

(பாரதியார் - 'நல்லதோர் வீணை')

ஆம், பூமிக்குச் சுமையென வாழாமல் மாநிலம் பயனுற நாம் வாழவேண்டும், உலகுக்குப் பயன்பட நாம் வாழுதல் வேண்டும், என்ற ஆர்வம் நம் சிந்தையில் பொங்கி விட்டால் போதும், நம் உள்ளுறையும் ஆற்றல் உருப் பெறத் தொடங்கி விடுகிறது.

"நம் உள்ளத்தில் உறையும் இறைமை எல்லையில்லா ஆற்றல் உடையது. இந்த ஆற்றல் நம் வழியாக வெளிப்பட்டு உலகுக்கு உதவும்" என்று திண்ணமாக நாம் நம்பினுல் போதும், அந்த ஆற்றலின் இயக்கத்தை நாம் காணலாம்.

"எள்ளளவு நம்பிக்கை நமக்கு இருந்தாலும் போதும். 'மலையே இங்கிருந்து நீ நகர்ந்து அங்கு போ,' என்ருல் மலை நகர்ந்து விடும். அசையாத நம்பிக்கையால் ஆகாத காரியம் ஏதுமில்லை" –

(மர்த்யு - 17)

இது இயேசுநாதரின் பொன்மொழி.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

(குறள் - 666)

என்பது பொய்யாமொழியாகும்.

"முடியாததென் எனக்கேல் இனி?
முழுவேழுலகும் உண்டான் உகந்து வந்து
அடியேனுள் புகுந்தான் அகல்
வானுமல்லன் இனி"

(திருவாய்மொழி-2 ப. 6 தி.)

"என்னல் முடியாதது என்ன இருக்கிறது? இறைமையினை இதயத்தில் இசைத்துள்ள எனக்கு இயலாதது எதுவுமே இல்லை", என்று திண்ணமாகக் கூறுகின்ருர் நம்மாழ்வார்.

25 அல்லது 100 "வாட்ஸ்" மின்சாரத்தில் விளக்குகள் எரிகின்றன. இன்னும் அதிகமான "வாட்ஸ்" மின்சாரத்தில் விசிறிகள்

Koviloor Digital Library



சுழலுகின்றன. இதற்கும் அதிகமான 1000 வாட்ஸ் மின்சார ஆற்றலால் பெரிய பெரிய இயந்திரங்கள் இயங்குகின்றன. மின் சாரத்தின் ஆற்றலுக்கு அளவுண்டு. இறைமையின் ஆற்றலுக்கு அளவேது? எனவே, இறைமையில் இசைந்துள்ள இதயம் படைத்த நம்மால் இயலாதது எதுவுமில்லை.

மின்சாரம் பாய்வதற்குக் கம்பி சாதனமாக இருப்பது போல், இறைமையின் ஆற்றல் இயங்குவதற்கு நாம் ஒரு கருவியாக இருக்கிறோம். இந்த நம்பிக்கை நம் உள்ளத்தில் உறுதியாகப் பதிந்து விட்டால் இறைமையின் ஆற்றல் நம் வழியாக இயங்குவதை நாம் காணலாம்.

ஆண்டவனைப் பாடும் அடியார்கள் அவ்வாறு பாடுவதும் கூட தாம் அன்று, ஆண்டவன்தான் என்று கூறுகின்றனர்! "என்னையே தானாகச் செய்து என் வழியாகத் தன்னைப் பாடிக் கொள்ளும் பரமன்" என்று ஏத்துகின்றார் நம்மாழ்வார்.

ஏர்விலா என்னைத் தன்னாக்கி என்னால் தன்னை
பார்பரவி இன்கவி பாடும் பரமரே''

(திருவாய்மொழி-7 ப. 9 தி.)

"என் நெஞ்சில் உள்ள இறைமைதான் இனிய தமிழ் பாடல்களை மொழிகின்றது'' என்கிறார் அந்த ஞானி:

''என்னெஞ்சத்து உள்ளிருந்து இங்கு
இருந்தமிழ் நூலிவை மொழிந்து"

(திருவாய்மொழி-10 ப. 6 தி)

''தன்னை நன்றாகத் தமிழிலே பாடும் படியாக இறைவன் என்னைப் படைத்து இயக்குகிறான்'', என்கிறார் திருமூலர்;

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

(திருமந்திரம்-91.)

அவரவர் அனுபவத்தால் உணர்ந்த உண்மை இது.

### ஆற்றலின் ஊற்று

அமெரிக்காவில் தலைசிறந்த உரைநடை ஆசிரியர் எமர்சன் (Emersen) என்ற ஞானி. அவர் சிறிய சிந்தனையாளருங்கூட. அவர் கூறுகின்றார் :

Koviloor Digital Library


"நான் எழுதியனவெல்லாம் என்னுடையவை அல்ல. ஏதோ ஓர் ஆற்றல் என் உள்ளத்திலே புகுந்து காட்டிய கருத்துக்களே என் எழுத்திலே இடம் பெற்றுள்ளன".

இங்கிலாந்து நாட்டின் புகழ்பெற்ற கவிஞர் ஜான் மில்டன் (John Milton) என்பவர். கண்ணிழந்த நிலையிலும் அவர் உயர்ந்த காவியங்களை இயற்றியுள்ளார். "இழந்த சுவர்க்கம்" (Paradise Lost) என்பது அவர் எழுதிய புகழ் பெற்ற காவியமாகும். தாம் கவிதைகளை எழுதிய திறம் பற்றி அவர் சொல்லுகிறார்:

"சில வாரங்கள் எதுவுமே எழுத வராது. திடீரென்று இரவிலே ஏதோ ஒன்று என் இதயத்தைத் தட்டி எழுப்பும். உடனே என் மகளைக் கூப்பிடுவேன். வெள்ளமாகப் பெருகிவரும் கவிதைகளை வேகமாகச் சொல்லுவேன். அவள் அதை விரைவாக எழுதிக் கொள்வாள்."

உலகப் புகழ்பெற்ற ஓவியர் ஒருவர் கூறுவதைக் கேட்போம்:

"நான் எந்தச் சித்திரத்தை வரையத் தொடங்கினாலும், ஏதோ ஒன்று என்னுடன் சேர்ந்து வரைந்துகொண்டே இருக்கும்", என்று தம் அனுபவத்தைக் கூறுகிறார் பிகாசோ (Picasso) என்ற ஓவியர்.

நீராவியால் ஓடும் இரயில் இன்ஜினைக் கண்டுபிடித்தவர் ஜேம்ஸ் வாட் (James Watt) என்ற விஞ்ஞானி. "நானா இதைக் கண்டுபிடித்தேன்! கணத்திலே தோன்றி மறைந்த உள்ளுணர்வு உணர்த்தியதுதான் இது", என்கிறார் அவர்.

(Sunday Standard 11—4—1971)

காவியங்களையும் கலைகளையும் அருட்கவிகள், அருட்கலைகள் என்று நாம் போற்றுவது அவை இறைவன் அருளால் இயற்றப் பட்டது என்பதால்தான் போலும்!

**தெய்விகக் கலைகள்**

இறைமையில் இசைந்த இதயத்தோடு ஒருவன் ஓவியம் வரைந்தால் அவனையறிமலே அந்த ஓவியத்தில் உயிரோட்டம் அமைந்துவிடுகின்றது! இறைமையில் தோய்ந்த இதயம் எழுப்பும் கீதம் தெய்விக நாதமாக ஒலிக்கின்றது; இறையுணர்வில் ஈடு பட்டு இயற்றும் நடனத்திலே தெய்வீகக்களை கூடுகின்றது. தம்மை மறந்து பாடும் அல்லது ஆடும் கலைஞர்கள் இறையுணர்

Koviloor Digital Library



விலே ஒன்றி விடுகின்றனர். இதயம் ஒன்றிய கலைஞர்களின் வழியாக இறைமை துலங்குவதால் பாடலும் ஆடலும் தெய்வீகச் சிறப்பை எய்துகின்றன.

"கலை பயின்ற உளத்து இனிக்கும் கரும்பினை"

என்று இறைவனைப் பாடுகின்றார் இராமலிங்க அடிகள்.

இயற்கைக் காட்சிகளில் எல்லாம் இறைமை துலங்குகிறது. எனவே தான் அவற்றை எத்தனை முறை பார்த்து அனுபவித்தாலும் சலிப்புத் தட்டுவதில்லை. அருணோதயத்தின் அழகு, அந்தி வானத்தின் அற்புதம், ஓங்கி நிற்கும் மலைகள், ஓடிவரும் நதிகள், பூத்துக் குலுங்கும் செடிகள், பொய்கையில் மிதக்கும் மலர்கள் இவற்றையெல்லாம் எத்தனைமுறை கண்டுகளித்தாலும் நமக்கு அலுத்துப் போவதில்லை. காரணம், இயற்கைப் பொருள்களின் அழகைக் காணும் பொழுது அவற்றுக்கு அப்பாலுள்ள இறைமையின் அழகினை நாம் உணருகின்றோம். இறைமையின் அழகை உணரும் நம் இதயத்திற்கு அலுப்பு ஏது, சலிப்பு ஏது?

இதுபோன்றே, இறையுணர்வால் எழும் கலைகளில் தெவிட்டாத இன்பந்தரும் தெய்வீகத் தன்மையை நாம் காணுகின்றோம்.

"நாவியல் கலைகளென்கோ? ஞானநல்லாவி யென்கோ?
பரவுசீர்க் கண்ணன் எம்மான் பங்கயக் கண்ணனையே,"

(திருவாய்மொழி – 3 ப. 4தி)

என்று கலைகளாகக் காணுகின்றார் கண்ணனை நம்மாழ்வார்.

"கலையாரு நூலங்கமாயினான் காண்
கலைபயிலும் கருத்தன்கான்..."

(தேவாரம் - திருச்சிவபுரம்)

என்று இறைவனை ஏத்துகின்றார் நாவுக்கரசர்.

உயர்ந்த கவிதை ஒன்றை நாம் ஊன்றிப் படிக்கும் பொழுது, சொல்லுக்கும் பொருளுக்கும் அப்பால் நிற்கும் ஒன்று நம் உள்ளத்திற்கு உவப்பூட்டுகிறது. சிறந்த ஓவியம் ஒன்றை நாம் காணும் பொழுது அந்த அழகுக் காட்சிக்கு அப்பால் உள்ள அழகு ஒன்றை நாம் உணருகிறோம்! தேர்ந்த சிற்பங்களின் சிறப்பு அழகு உருவங்களில் மட்டும் அமைவதன்று. அழகுக்கு அழகு ஊட்டும் அபூர்வமான ஓர் அழகினை நாம் அச்சிற்பங்களில் காணுகிறோம்.

Koviloor Digital Library


இனிய இசையின் கீதத்தைக் கேட்கும் பொழுது, அக் கீதத்தின் உயிரான நாதத்தினை நாம் கேட்கிறோம்.

எனவேதான், தெவிட்டாத இன்பந்தரும் கலைகளெல்லாம் தெய்வீகக் கலைகளெனப் போற்றப்படுகின்றன.

இறையுணர்வு இல்லாமல் கவிதைகளை இயற்றலாம், ஓவியங் களைத் தீட்டலாம். ஆனால், அக் கவிதைகளில் கனிவு இருக்காது, ஓவியங்களில் உயிர் இருக்காது. இறையுணர்வு இல்லாத கலை முயற்சிகள் காகிதப் பூக்கள் போல் மணமற்றுப் போகின்றன மதிப்பற்று மறைகின்றன.

இறையுணர்வில் தோய்ந்து வரும் எழுத்துக்கள் அதைப் படிப் போரின் இதயத்தை ஈர்ப்பது இயல்பேயாகும். ஆதலால்தான் எழுதுகோலையும் எழுத்தையும் தெய்வம் என்கிறார் பாரதி:

"இயலுகின்ற ஜடப்பொருள்கள் அனைத்தும் தெய்வம்
எழுதுகோல் தெய்வம் இந்த எழுத்தும் தெய்வம்''

**தொழில்கள் யாவும் கலைகளே**

இலக்கியமும் இசையும் ஓவியமும் காவியமும் போன்றவை மட்டுமே கலைகள் என்று நாம் கருதுவதற்கில்லை. ஆற்றலோடு நாம்செய்யும் தொழில்கள் எல்லாமே கலைகள்தாம். வாணிபமும் கலைதான், வைத்தியமும் கலைதான். வழக்குரைப்பதும் தீர்ப் பளிப்பதும் கலைகள்தாம். வஞ்சமற்ற தொழில்கள் எல்லாம் தெய்வீகக் கலைகள்தாம் என்று கலைமகளைத் துதிக்கின்றார் பாரதியார்:

"வஞ்சமற்ற தொழில் புரிந்துண்டு
வாழும் மாந்தர் குலதெய்வமாவாள்
வெஞ்சமர்க் குயிராகிய கொல்லர்
வித்தையோர்த்திடு சிற்பியர், தச்சர்,
மிஞ்சநற்பொருள் வாணிகஞ் செய்வோர்,
வீர மன்னர்பின் வேதியர் யாரும்
தஞ்சமென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறிவாகிய தெய்வம்''

(வெள்ளைத்தாமரை)

நாம் ஒவ்வொருவருமே புகழ்பெற்ற கவிஞராகவோ கலைஞ ராகவோ ஆகிவிட இயலாது. அவ்வாறு ஆகவேண்டும் என்ற அவசியமும் இல்லை.

Koviloor Digital Library


நாம் சாதாரண எழுத்தராக இருக்கலாம், எழுத்தாளராக இருக்கலாம், வணிகராக இருக்கலாம், வைத்தியராக இருக்கலாம். எந்தத் தொழிலில் நாம் ஈடுபட்டிருந்தாலும் அதனைச் செம்மையாகச் செய்தல் வேண்டும். அதற்குத் துணையாய் நிற்பது இறைமை என்கிறார் கவி பாரதி:

"செய்வ மென்றொரு செய்கை எடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்;
கைவருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம்"

(வெள்ளைத்தாமரை)

**கைகொடுக்கும் தெய்வம்**

நாம் எதைச் செய்தாலும் அதைச் செம்மையாகச் செய்ய வில்லையெனில் நம் வாழ்வு வளங்குன்றி விடுகிறது. அவ்வாறு நம் செயல்களனைத்தும் செம்மையுற வேண்டுமெனில் இறையுணர்வு இன்றியமையாததாகும். நம் கையாளாக நின்று நம் செயல் களிலே கலந்து உதவுகிறது இறைமை என்கிறார் அதனை அனுபவத்தால் உணர்ந்த ஆன்மீகக் கவிஞர் பாரதி:

"கையாளென நின்றடியேன் செய்
தொழில்கள் யாவும் கைகலந்து
செய்வாள்; புகழ்சேர் வாணியுமென்
உள்ளே நின்று தீங்கவிதை பெய்வாள்"

தீங்கவிதை எழுதுவதற்கு எவ்வாறு இறைமை உதவு கின்றதோ அவ்வாறே சாதாரணத் தொழில்களையும் செவ்வனே செய்வதற்குக் கைகொடுத்து உதவுகின்றது இறைமை. எனவே, இறையுணர்வோடு நாம் செய்யும் செயல்களெல்லாம் சிறப்படை கின்றன.

மேலும், நம் உள்ளே உறங்கிக் கிடக்கும் ஆற்றல் வெளிப்பட்டு விளங்குவதற்கு இறையுணர்வே பெருந்துணையாகிறது. இறை யுணர்வோடு எழும் முயற்சிகளிலெல்லாம் நம் ஆற்றல் துலங்கு கிறது, அறிவு விளங்குகிறது. அதனால் நாம் ஏற்றம் பெறுகின் றோம்; இன்பம் அடைகின்றோம்.

Koviloor Digital Library

# 30. அருளுடைமை

அறிவினல் ஆவதுண்டோ பிறிதின் நோய்
தந்நோய் போல் போற்ருக்கடை.

(குறள்.)

ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன் வந்த பத்திரிக்கைச் செய்தி இது:

காலை ஒன்பது மணி இருக்கும். சென்னை மாநகரின் மையமான "ஜெமினி" சந்திப்பு அருகில் வேகமாகச் சென்று கொண்டிருந்த காரில் அடிபட்ட ஒருவர் வீதியின் ஓரத்தில் கிடந்தார். மண்டையிலிருந்து இரத்தம் பெருகிக்கொண்டிருந்தது. மயங்கிய நிலையில் உயிருக்குப் போரடிக் கொண்டிருந்தார் அவர். எத்தனையோ பேர்கள் காரிலும் சைக்கிளிலும் நடந்தும் அந்த வீதியில் சென்று கொண்டிருந்தனர். இரத்த வெள்ளத்தில் மயங்கிக் கிடந்த வரைப் பார்த்துக் கொண்டுதான் அவர்கள் சென்றனர். ஆனல், ஒருவரும் அடிபட்டுக் கிடந்தவரின் அருகில் வரவில்லை! இவ்வாறு ஒரு மணி நேரம் சென்றது!

அன்ருடக் கூலிக்கு வேலை தேடிச் செல்லும் இலட்சுமி என்ற பெண்மணி அந்த வழியே வந்தாள். அடிபட்டுக் கிடந்தவரைக் கண்டாள். அவளது இளகிய உள்ளத்தில் இரக்கம் சுரந்தது. அங்கு போய்க்கொண்டிருந்த வாடகைக்கரை நிறுத்தி, காயப் பட்டவரை அதில் ஏற்றினள். பொது மருத்துவ மனையில் அவரைச் சேர்த்தாள். வாடகைக் காருக்குப் பணம் கொடுக்க வேண்டுமே? அவளிடம் ஏது பணம்! தன் காதில் இருந்த கம்மலைக் கழற்றி வாடகைக் காரின் "டிரைவரிடம்" கொடுத்தாள்! அடிபட்டு வீதியிலே அனதையாகக் கிடந்தவர் மருத்துவர்களின் சிகிச்சையால் உயிர் பிழைத்தார்.

ஏழைப் பெண்மணி இலட்சுமியின் இதயப்பண்பினை எல்லோ பாராட்டினர்கள். பத்திரிக்கைகள் புகழ்ந்து எழுதின. புகைப்படங்கள் செய்தி இதழ்களில் வந்தன!

Koviloor Digital Library



உண்மையில் இலட்சுமி பாராட்டுக்குரியவள்தான். அவளது தியாகச் செயல் போற்றத்தக்கதுதான். ஆனால், ஒரு மணி நேர மாக அந்த வீதியில் இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்தவரைப் பார்த்தும் பார்க்காதவர்கள் போல் சென்றார்களே ஆயிரக்கணக் கான மக்கள். இவர்களை என்னென்பது? மனிதாபிமான உணர்வே இல்லாமல் நடந்து கொண்டார்களே! இவர்கள் செயலை எப்படி நாம் புரிந்து கொள்வது?

ஏன்! அன்று நடந்ததுதான் இன்றும் நடக்கிறது!

ஆடம்பரமாக அலங்கரித்துக்கொண்டு ஆலயங்களுக்குப் போகிறோம். ஆர்வத்துடன் வழிபடுகிறோம். ஆலயத்தைச் சுற்றி அனாதைகள் அமர்ந்திருக்கின்றனர். கையிழந்தோர், கால் இழந் தோர், வயிற்றுக்கு உணவின்றி வாடி நிற்போர், ஆதரவு ஏது மின்றி அலமந்து தவிப்போர், தொழு நோயால் துடித்துக்கொண் டிருப்போர், இப்படி எத்தனை எத்தனையோ பேர்கள்! இவர்களை யும் பார்க்கிறோம்! காரில் அடிபட்டுக் கிடந்தவரைக் கண்டும் காணாதவர்களாய்ச் சென்று கொண்டிருந்தவர்களைப் போல்தான் நாமும் செல்லுகிறோம். ஏதோ சில்லரையாக ஐந்து அல்லது பத்துக்காசுகள் இருந்தால் அவர்களில் எவர் முன்பாவது எறிந்து விட்டுப் போகிறோம்! நம்மால், இயன்ற தருமத்தைச் செய்து விட்டோம் என்ற திருப்தி நமக்கு!

சமுதாயத்தின் உதவியை நாடி நிற்கும் இவர்களின் அவல நிலையினைப் போக்கவேண்டும் என்ற ஆர்வம் நமக்கு ஏன் இல்லை!

நம் உள்ளம் உணர்ச்சியற்றுப் போய்விட்டதா! இதயம் இறுகிப் போய்விட்டதா!

ஆம்! நம் அகத்திலே அருளுணர்வு இல்லாத காரணத்தால் கனிந்து உருகவேண்டிய நம் இதயம் கல்லாக இறுகிவிட்டது!

**அருளுணர்வு என்றால் என்ன**

நம் உயிருக்கு உயிரான இறைமைதான் எல்லா உயிர்களிலும் உறைகின்றது என்ற ஞானத்தால் எல்லா உயிர்களும் நம் உயிரோடு உறவுடையன என்பதை உணருகின்றோம். இந்த உறவுணர்வைத்தான் அன்பு என்கிறோம்.

இந்த உறவுணர்வால் உதிக்கும் பயன் யாது? பிற உயிர்க வருந்தினால் அந்த வருத்தம் நம்மையும் பாதிக்க வேண்டும். உயிர்கள் துன்பப்பட்டால் அதைக் கண்டு நாமும் துன்

Koviloor Digital Library



வேண்டும். உயிர்களெல்லாம உறவுடையன என்றால் ஓருயிர் படும் துன்பத்தைக் கண்டு மற்ற உயிர்களும் துன்பப்படுவது தானே இயல்பு. எனவே, உலகத்து உயிர்கள் பெறும் இன்ப துன்பங்களோடு இணைந்து நாமும் இன்பதுன்ப உணர்வினைப் பெறவேண்டும். இந்த உணர்வினைத்தான் "அருள்" என்கின்றனர்.

அயலார்மீது நாம் உறவு கொள்வது அன்பு. அவர் துன்பத்தை கண்டு நாம் இரக்கப்படுவது அருள். அன்பு என்ற உறவுணர்வில் உதிக்கும் பயன்தான் அருள் எனபது. அன்பின் பண்புதான் அருளாக மலர்கின்றது.

அன்பு என்ற பண்பின் பயனாக விளைவதுதான் அருள். அன்பு என்பது மலர் என்றால் அதன் மணம் அருள். சுடராக உள்ளது அன்பு எனில் அதன் ஒளியாக உள்ளது அருள். அன்பு என்பது கனி, அதன் சுவை அருள். எனவே, அன்பு கனிந்த உள்ளத்தில் அருள் சுரக்கின்றது.

அருள் என்பது அன்பின் குழந்தை என்கிறார் வள்ளுவர் :

அருள் என்னும் அன்பீன் குழவி பொருள் என்னும்
செல்வச் செவிலியால் உண்டு.

(குறள்–757)

இவ்வாறு, அன்பு அருள் இரண்டும் பண்பும் பயனுமாக இருக்கின்றன.

எனவே, அன்புணர்வும் இறையுணர்வும் வேறல்ல என்று பாடும் அடியார்கள், அருளுணர்வும் இறையுணர்வும் ஒன்றுதான் என்பதையும் உணர்த்துகின்றனர்.

"அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

என்று பாடும் திருமூலர்,

"அருள் அல்லது இல்லை அரன் அவனன்றி
அருள் இல்லை"

என்றும் பாடுகின்றார்.

(திருமந்திரம்–475)

"அன்பாழியான்" என்று பொய்கையாழ்வார் போற்றும் கண்ணனை, "அருளாழி அம்மான்" என்று ஏத்துகின்றார் நம்மாழ்வார்.

"அன்பினில் விளைந்த ஆரமுதாய்"க் கண்ட ஈசனை "அருளா ரமுதப் பெருங்கடலாக"வும் காண்கின்றார் மாணிக்கவாசகர்.



307 ... [library stamp]

Koviloor Digital Library



"அன்புருவாம் பரசிவமே" என்று அன்புருவாக இறைமையைக் காணும் இராமலிங்க அடிகள், "அருள் வடிவம்பொருளே" என்று அருள்வடிவிலும் இறைமையினைக் காணுகின்றார்.

### அருளுணர்வே உரைகல்

எனவே, இறையுணர்வு, அன்புணர்வு, அருளுணர்வு இவை வேறல்ல. இறையுணர்வு இசைந்துள்ள இதயத்தில் அன்புணர்வும் அதன் பயனாக அருளுணர்வும் இயல்பாகவே எழுகின்றன. ஒருவருக்கு அருளுணர்வு இல்லையெனில் இறையுணர்வும் இல்லை என்பதே பொருளாகும்.

அகத்திலே அருளுணர்வு இல்லாததால்தான் சாலையோரத்தில் சாகக் கிடந்தவரைக் கண்டுசென்ற நூற்றுக்கணக்கானவர்களுக்கு இதயம் இளகவில்லை, இரக்கம் பிறக்கவில்லை!

இவர்களில் எத்தனையோ பேர் சமயச் சின்னங்களை அணிந்திருப்பார்கள் சமயச் சடங்குகளை ஆற்றுவார்கள். ஆனால், உண்மையான இறையுணர்வு ஒருவர் இதயத்தில் உள்ளதா என்பதைக் காண்பதற்கான உரைகல் அவருக்குள்ள அருளுணர்வுதான். எவருக்கு அருளுணர்வு இல்லையோ அவருக்கு இறையுணர்வு இல்லை என்று எளிதாகக் கூறிவிடலாம்.

நம் சமுதாயத்தில் பெரும்பாலோர் சமயச் சடங்குகளை ஆற்றுகிறோம். ஆயினும் நம் உள்ளத்தில் அருளுணர்வு போதிய அளவு இல்லை என்றுதான் கூறவேண்டும். நம்மைச் சுற்றி வாழ்வோர்களில் நம் உதவியினை நாடி நிற்போர் எத்தனையோ பேர்கள் உள்ளனர். வறுமையால் வாடுபவர்கள், நோயினால் நொந்தவர்கள், உடலிலே ஊனமுற்றோர், உள்ளத்தில் உறுதியற்றோர், இவ்வாறாக எத்தனை எத்தனையோ பேர்கள்! இவர்களுக்கு நாம் உதவுகின்றோமா? இவர்கள் நிலை குறித்தாவது நம் உள்ளம் உருகுகிறதா? இல்லையே! இது அதிசயந்தானே?

இவர்கள் நிலை கண்டு உருகிய உள்ளத்துடன் உதவுகின்றனர் சில உத்தமர்கள்.

ஆப்பிரிக்க மக்களுக்கு மருத்துவப்பணி செய்வதற்கு என்று தம் வாழ்வினை அர்ப்பணித்த ஆல்பர்ட் சுவைட்சர் என்ற ஆன்ம ஞானியை உலகம் போற்றியது.

எங்கோ ஐரோப்பியக் கண்டத்தில் யூகோஸ்லாவிய நாட்டில் பிறந்து இந்தியாவிற்குக் கிருத்துவ சமயத்தொண்டாற்ற வந்த

Koviloor Digital Library



புனித அன்னை தெரிசா (Mother Theresa) கல்கத்தா நகரின் சேரிகளில் கவனிப்பாரற்று மாண்டு கொண்டிருந்த அனாதைகளைக் கண்டார், திடுக்கிட்டார்.

உலகத்தில் பிறந்து வளர்ந்து உழைத்த மனிதன் உதவிக்கு ஒருவரும் இன்றி உயிர் துறப்பதா? காகம் ஒன்று இறக்கும் பொழுது அதைச் சுற்றி எத்தனை காகங்கள் இருந்து கரைகின்றன. காகங்களுக்கு இருக்கும் கருணை கூட மனிதனுக்கு இல்லையா? அந்த அன்னையின் உருகிய உள்ளத்திலே உறுதி பிறந்தது.

இனி அனாதைகளாக இறப்பவர்களின் அருகில் இருந்து கவனித்து அவர்களைக் காப்பாற்ற முயலவேண்டும். காப்பாற்ற முடியவில்லையெனில் அவர்கள் இறக்கும்போது தம்மைக்கண்டு இரங்கி உதவுவோர் உண்டு என்ற எண்ணத்துடனாவது அவர்கள் இறக்க வேண்டும். இத்தகைய உயர்ந்த நோக்கத்துடன், கருணைப்பணியகங்களைப் பல இடங்களில் நிறுவினார். இந்த அருட் செயலைக் கண்டு உலகம் வியக்கின்றது, பாராட்டுகின்றது.

1976 ஆகஸ்டு மாதத்தில் அமெரிக்க நாட்டில் நடந்த அகில உலகக் கத்தோலிக்கர் மாநாட்டிலே புனித அன்னை தெரிசாவைப் "புண்ணியப் பிறவி" என்று போற்றினார்கள். நம்நாட்டு ஏழை மக்களின் நிலையினை அவர் வருணித்த பொழுது, அங்கு கூடியிருந்த இலட்சக்கணக்கான மக்களின் கண்கள் கசிந்தன!

"நலிந்து நிற்போர் நம்மிடம் வேண்டுவது வெறும் ஈவிரக்கத்தை அல்ல. நம் அன்பும் அருள் நிறைந்த பரிவுமே அவர்களுக்கு வேண்டும். நாம் அவர்களுக்கு அளிப்பதைவிட அவர்களிடமிருந்து நாம் பெறுவது எவ்வளவோ மேலானதாகும்" என்று அன்னை தெரிசா அங்கு கூறினார்.

(Indian Express– 9. 8. 76)

## இறையுணர்வே அருளுணர்வு

அன்னை தெரிசா, ஆல்பர்ட் சுவைட்சர் போன்ற அருளாளர்கள் மக்களுக்குத் தாம் செய்யும் சேவையினை மகேசனின் சேவையாகவே கருதினார்கள். தொண்டாற்றுவதை தொழுகையாகப் போற்றினார்கள். இறையுணர்வின் பயன் அருளுணர்வைப் பெறுவதுதான் என்ற உண்மையினை உணர்ந்து செயலாற்றிய சீலர்கள் அவர்கள்!

Koviloor Digital Library



இறையுணர்விலே தோய்ந்து நிற்கும் அடியார்கள் இந்த உண்மையினை எவ்வாறெல்லாம் கூறுகின்றனர்!

தொண்டு செய்வதே தூய பணி என்கிறார் நம்மாழ்வார்!

"தொண்டேசெய்து என்றும் தொழுது வழியொழுக
பண்டே பரமன் பணித்த பணிவகையே"

(திருவாய்மொழி-10 ப. 5 தி )

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

(தேவாரம்—திருக்கடம்பூர்)

என்கிறார் நாவுக்கரசர்.

அன்பர்களுக்குச் செய்யும் பணியில்தான் இன்பமிருக்கிறது என்று கூறுகிறார் தாயுமானவர்:

"அன்பர் பணி செய்யவெனை ஆளாக்கிவிட்டு விட்டால்
இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே"

"உலகத்து உயிர்கள் படும் வருத்தத்தைக் கண்டும் கேட்டும் என்னால் கணநேரம் கூடச் சகிக்க முடியவில்லை. எனவே, உயிர்கள் படும் வேதனையைப் போக்கும் திறமையை எனக்கு அருள வேண்டும். இந்த வரத்தைக் கொடு" என்று இறைவனை வேண்டுகிறார் இராமலிங்கஅடிகள்:

"மண்ணுல கதிலே உயிர்கள் தாம் வருந்தும்
வருத்தத்தை யொரு சிறிதெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும் நான் சகித்திட மாட்டேன்
எண்ணுறு மெனக்கே நின்னருள் பலத்தால்
இசைத்த போதிசைத்த போதெல்லாம்
நண்ணுமவ் வருத்தம் தவிர்க்க நல்வரந்தான்
நல்குதல் எனக்கிச்சை எந்தாய்".

(திருவருட்பா - பிள்ளைச்சிறு விண்ணப்பம்)

மக்கள்மீது மட்டுமின்றி மற்ற உயிரினங்கள் மீதும் நாம் அருள் காட்டவேண்டும் என்பதே அடியார்கள் புகட்டும் அருள்நெறி.

இத்தகைய அடியார்கள் வழிவந்த ஆன்ம ஞானி அல்லவா பாரதியார்! அவர் துணிந்து கேட்கும் வரமும் இதுதான்!

Koviloor Digital Library



"பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்,
கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன்,
மண் மீதுள்ள மக்கள், பறவைகள்,
விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள்,
யாவும் என் வினையால் இடும்பை தீர்ந்தே,
இன்புற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திடவே
செய்தல் வேண்டும், தேவ தேவா!

*மக்கள், விலங்குகள், மரங்கள் எல்லாம் இடும்பை இன்றி இன்பமாக இருக்க வேண்டுமாம்! அதற்கேற்ற பணியினை அவர் செய்ய வேண்டுமாம். எத்தகைய பிரார்த்தனை!*

**இன்னுயிர்களுக்குச் செய்யும் பணியே இறைவனுக்குச் செய்யும் பணியாகும் என்பதை எல்லாச் சமயங்களும் தெளிவாகக் கூறுகின்றன.**

*இதோ ஏசுநாதர் போதிக்கின்றார், இறுதி நாளிலே மனிதனின் செயல்கள் எவ்வாறு மதிக்கப்படுகின்றன என்பதனை. இறந்த மனிதன் இறுதி நாளிலே இறைவனின் குரலைக் கேட்கின்றான்:*

*"நான் பசியோடு இருந்தேன்; பக்குவமாய் நீ உணவளித்தாய். தாகத்தால் தவித்தேன்; தண்ணீர் அளித்துத் தாகத்தைத் தணித்தாய். முன்பின் தெரியாத என்னை உன் வீட்டிற்கு இட்டுச் சென்றாய். கந்தையை அணிந்திருந்த எனக்குக் கட்டிக் கொள்ளத் துணி கொடுத்தாய். நோயால் வாடிய எனது நோய் தீர்த்து உதவினாய். சிறையில் இருந்த எனக்குத் தேறுதல் கூறினாய். ஆதலால் நீ நற்கதி அடைகின்றாய்." இது இறைவனின் குரல்.*

*"ஐயோ! கடவுளை நான் எங்கு பார்த்தேன்! பரம்பொருளின் பசியை நான் தீர்க்கவாவது, தாகத்தை நான் தணிக்கவாவது! ஆண்டவனுக்கு நான் ஆடை கொடுத்து உதவுவதாவது!" என்று வியப்பிலே ஆழ்ந்தான் மனிதன்.*

*இறைவனின் குரல் எதிரொலித்தது: "அன்பனே! உலகிலே நீ பலருக்கும் உதவினாயே அவர்களெல்லாம் நான்தான். நலிந்தோரை நாடி நற்பணிகள் செய்தாயே அவ்வாறு நலிந்து நின்றோரெல்லாம் நானே தான். எனக்கு உதவிய உனக்கு ஈடில்லா நற்பதம் அளிக்கிறேன். வறியோர்க்கு உதவாத வன்கணர்கள் என்மீது அன்பில்லாத ஈனர்கள். அவர்களுக்கு நற்பதம் கிடைப்பதில்லை".*

(மத்தேயு-25

Koviloor Digital Library



அயலாருக்குச் செய்யும் தொண்டே ஆண்டவனுக்கு ஆற்றும் தொண்டாகும் என்பதை இதைவிட எவ்வாறு தெளிவாக எடுத்துக் கூற முடியும்?

**நடமாடும் கோவில்**

"மக்களனைவரும் நடமாடும் கோவில்கள். இந்த நடமாடும் கோவில்களான மக்களுக்குச் செய்யும் தொண்டு கோவிலில் படமாக உள்ள இறைவனைச் சேர்கின்றது. ஆனால், கோவில்களில் மட்டுமே செய்யப்படும் எதுவும் மக்களைச் சேருவதில்லை. எனவே, நடமாடும் கோவில்களான நலிந்தோர்க்கு உதவுங்கள்", என்று உறுதிபடக் கூறுகின்றார் ஞானி திருமூலர்:

> "படமாடுங் கோவிற் பகவற்கொன் றீயில்
> நடமாடுங் கோவில் நம்பர்க்கு அங்கு ஆகா
> நடமாடுங் கோவில் நம்பர்க்கு ஒன்றீயில்
> படமாடுங் கோவில் பகவற்க தாமே".

(திருமந்திரம் – 1857)

ஏழைகளுக்குச் செய்யும் தொண்டே இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்று இவ்வளவு உறுதியுடன் கூறப்படும் உண்மை நம் உள்ளத்தில் உறையவில்லையெனில் குற்றம் நம்முடையதுதானே ?

**ஒன்றே குலம்**

உலகில் உள்ளோர் அனைவரும் இறைமையின் தோன்றல்கள் என்ற இறைமை ஞானம் பெற்ற அருளாளர்கள் மக்களிடை நிலவும் ஏற்றத்தாழ்வுகளை ஏற்பார்களா ? சாதி வேறுபாடுகளைச் சகிப்பார்களா ? இறையுணர்வு பெற்றவர்கள் எல்லோரும் ஒன்றுதான் என்பதை ஓங்கிக் கூறுகின்றனர்.

> "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"

என்கிறார் திருமூலர்.

சாதியில் சண்டாளர்கள் என்று கருதப்படுவோர் இறைவனின் அடியார்கள் என்றால் அவர்களுக்கு நான் அடிமை என்கிறார் நம்மாழ்வார்:

> "குலம்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து எத்தனை
> நலந்தானிலாத சண்டாள சண்டாளர் களாகிலும்
> வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்கு
> ஆளென்று உள்
> கலந்தார் அடியார் தம் அடியார் எம்மடிகளே".

(திருவாய்மொழி – 3 ப. 7 தி.)

Koviloor Digital Library



"பசுவினை உரித்துண்ணும் புலையர்களாயினும் இறைவனுக்கு அன்பரானால் அவரை நான் வணங்கும் கடவுளாக மதிக்கிறேன்" என்கிறார் நாவுக்கரசர் :

"அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்,
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
இவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே".

(தேவாரம் – பொது)

தீண்டாமை என்னும் சமுதாயத் தீமையினை இதைவிடக் கடுமையாக எவ்வாறு சாட முடியும் ?

சமய ஞானிகள் எல்லோரும் இவ்வாறு போதித்துங்கூட தீண்டாமைக்கு ஆதாரம் தெய்வச்சாத்திரங்கள் என்று சிலர் கூறுகின்றனர். இது எவ்வளவு விந்தை !

சாதி, குலம், பிறப்பு என்ற அடிப்படையில் வேற்றுமை காட்டுவது வெள்ளச் சுழிப்பிலே அகப்பட்டுத் தவிப்பது போலாகும் என்கிறார் மாணிக்கவாசகர்:

"சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை"

(திருவாசகம் - கண்டபத்து)

இறைமை என்ற அருட்சோதியினைக் காண வேண்டுமெனில் சாதி, சமயம் என்ற வழக்குகளை விட்டுவிட வேண்டும் என்கிறார் வள்ளலார்:

"சாதிசமயச் சழக்கை விட்டேன் அருள்
சோதியை கண்டேனடி".

எல்லா உயிர்களும் இறைமையின் உறைவிடம் என்ற உண்மை ஞானத்தினை உணர்ந்தவர்கள், சாதிகள் என்ற அடிப்படையில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்று மக்களை வேறுபடுத்தி நினைக்க முடியுமா? முடியாது. அவ்வாறு நினைப்பது பாவச் செயலாகும் என்கின்றார் ஞானக்கவிஞர் பாரதி:

"சாதிகள் இல்லையடி பாப்பா! குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்".

Koviloor Digital Library



இவ்வாறு சமய ஞானிகள் அனைவரும் சாதிப் பிரிவுகளைச் சாடியுள்ளனர்.

"பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்"

என்று வள்ளுவர் கூறும் பேருண்மையினை சமயப் பெரியார்கள் அனைவரும் வலியுறுத்திக் கூறியுள்ளனர். மேலும் இறையுணர்வும் அருளுணர்வும் வேறல்ல என்பதைக் காட்டி, அருளுணர்வோடு நாம் சமுதாயப்பணியில் சார்ந்திட வேண்டும் என்பதையும் அறிவுறுத்துகின்றனர்.

எனவே, சாதி ஒழிப்பு என்பதும் சமுதாயப்பணி என்பதும், புதுமைக் கருத்துக்களல்ல, புரட்சிக்கருத்துக்களல்ல. இறையுணர்வு பெற்றோர்கள் எத்தனையோ காலமாக எடுத்துப்புகட்டிய நெறிகள் தாம் இவை. இருப்பினும் இவற்றை ஏற்று நடக்கும் திறனை நம் இதயம் இன்னும் பெறவில்லை. காரணம், நம் அகத்திலே போதிய அருளுணர்வு பெருகவில்லை. உறுதியான இறையுணர்வு உள்ளத்தில் பதிந்துவிட்டால் அகத்திலே அருளுணர்வு ஆறுகப் பெருகிவிடும். வேற்றுமைகள் மறைந்து ஒற்றுமை ஓங்கும். இந்நிலையில்தான்,

"மருட்சமய வாதுகளும் மாமாலச் சடங்குகளும் மண்ணைக் கௌவும்
இருட்சாதி வேற்றுமைகள் இடர்செய்யும் பிரிவினைகள் இரிந்து தேயும்"

(திருவருட்பா - சற்குரு தோத்திரம்)

என்கிறார் இராமலிங்க அடிகள்.

இவ்வாறு,

அருள்நெறியே அறநெறி
அதுவே இறைநெறி

என்ற உண்மையினையே இறைவனடியார்கள் எடுத்தெடுத்து ஓதியுள்ளனர்.

Koviloor Digital Library

# 31. ஞானச் சுடர்

"மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!"
(திருவாசகம்)

விஞ்ஞான அறிவு இன்று எவ்வளவோ பெருகியுள்ளது. அறிவியலில் வளர்ந்துள்ள மனிதன் சந்திரனில் தன் காலடியைப் பதித்து விட்டான்! செவ்வாய்க் கிரகத்துக்குக் கருவிகளை அனுப்பி அதனை ஆய்கின்றான்! விமானத்தின் வேகப் பயண வசதியால், ஆயிரம் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள அயல் நாடுகள் அடுத்துள்ள ஊர்கள் போலாகிவிட்டன! வளரும் விஞ்ஞானத்தினால் வளம் பெறாத மக்கள் எவரும் இல்லை என்றே கூறலாம். சின்னஞ் சிறு கிராமங்களில் கூட மின் விளக்கு எரிகின்றது. மின் விசையால் கிணற்று நீர் வயல்களில் பாய்கின்றது. விஞ்ஞானத்தின் உதவியால் நம் வீட்டு வாழ்வும் நாட்டின் வளமும் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்துள்ளன.

எனவே, நாம் விஞ்ஞானத்தைப் போற்றுகிறோம். இன்றைய உலகத்தை விஞ்ஞான உலகமென வியந்து பாராட்டுகிறோம்!

**விஞ்ஞான உலகம்**

இவ்வாறு, தன் அன்றாட வாழ்க்கையுடன் அறிவியல் வளர்ச்சியை ஆர்வத்துடன் இணைத்து வாழும் இன்றைய மனிதனை நாகரிக மனிதன் என்கிறோம். அவன் வாழ்க்கையினை நாகரிகமான வாழ்க்கை என்கிறோம்!

உண்மையில் இது நாகரிக வாழ்க்கைதானா?

ஒருவன் மற்றொருவனைக் கொல்லுவதும் ஒரு கூட்டத்தினர் மற்றொரு கூட்டத்தினரைத் தாக்கி மாய்ப்பதும் காட்டுமிராண்டித் தனமான செயல், அநாகரிகமான செயல். இந்த அநாகரிகம் மறைந்து விட்டதா?

ஒரு காலத்தில் மனிதன் மற்றொருவனைக் கொல்லுவதற்குக் கல்லை எறிந்தான். கருவிகள் செய்யக் கற்றுக் கொண்டபின் வில்

Koviloor Digital Library



லைப் பயன் படுத்தினன். இப்பொழுது வெடியைப் பயன் படுத்திக் கொல்லுகிருன். எனவே, கொலைச் செயலில் மாற்றம் இல்லை. கொலைக் கருவிகளிலே மனிதன் முன்னேற்றம் கண்டிருக்கிருன்! அறிவியல் இந்த முன்னேற்றத்திற்குப் பயன் படுகிறது!

அந்த நாட்களில் ஒரு நாடு மற்ருெரு நாட்டின் மீது படையெடுப்பதற்கு காலாட்படையும், குதிரைப்படையும் பயன் பட்டன. இப்பொழுது கடற்படையும், விமானப்படையும் பயன் படுகின்றன. எனவே போர்ச் செயல்கள் மாறவில்லை. ஆனல், போர்க் கருவிகள், போர் முறைகள் மாறியுள்ளன.

பழங்காலப் போரில் வாளால் வெட்டியோ, ஈட்டியை வீசியோ ஒரு தடவையில் ஒருவரைத்தான் கொல்ல முடிந்தது. இப்பொழுதோ, ஒரு குண்டை வீசி பலரைக் கொன்று விடலாம். விமானத்தில் இருந்து அணுகுண்டை வீசினல் எத்தனையோ இலட்சம் பேர்கள் இமைப் பொழுதில் மாண்டு மறைகின்றனர்!

விஞ்ஞான வளர்ச்சியால் ஏற்பட்டுள்ள இந்நிலை உண்மையில் முன்னேற்ற நிலையா? நாகரிக நிலையா? இல்லை. அநாகரிகம் அப்படியேதான் இருக்கிறது. அதற்குரிய சாதனங்கள் தான் மாறியுள்ளன. அநாகரிகச் செயலின் கொடுமை பல்லாயிரம் மடங்கு பெருகியுள்ளது!

ஏவுகணைகளின் எல்லையற்ற சக்தியால், ஒரு நாட்டில் இருந்து கொண்டு பொத்தானை அழுத்தினல், ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள அந்நிய நாடு சுடுகாடு ஆகிவிடும் என்ற நிலை இன்றுள்ளது. இந்த அச்சத்தால் ஒவ்வொரு வல்லரசும் மற்ற வல்லரசுகளைக் கவலையுடன் கண்காணித்து வருகிறது! ஏதோ கருவிகளின் கணிப்பிலே சிறு தவறுதல் ஏற்பட்டு விட்டால் கூட உலகப்போர் மூண்டுவிடலாம் என்ற ஆபத்து நிரந்தரமாக உள்ளது!

இவ்வாறு உலக அமைதி ஊசலாடிக் கொண்டிருக்கிறது!

விஞ்ஞான உலகத்தின் விந்தையான நிலை இது!.

இது எத்தகைய கேவலமான, கேலிக்குரிய நிலை!

**மெய்ஞ்ஞானம் இணையாத விஞ்ஞானம்**

அறிவு வளர்ச்சியால் எவ்வளவோ முன்னேறியுள்ள மனித சமுதாயம் மனிதனைக் கண்டு மனிதன் அஞ்சும் இழிவான நிலையில் இருப்பதன் காரணம் என்ன?

Koviloor Digital Library



காரணம் இதுதான்.

அறிவியலை வளர்த்த மனிதன் ஆன்மவியலை வளர்க்கவில்லை. விஞ்ஞானத்தை தன் வாழ்வோடு இணைக்கும் மனிதன் மெய்ஞ்ஞானத்தை அவ்வாறு இணைக்கவில்லை!

இதனால், அறிவியலும் ஆன்மவியலும், விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் உலகில் ஒரே சீராக வளரவில்லை.

**மெய்ஞ்ஞானம் இல்லாத விஞ்ஞானத்தால் அஞ்ஞான நிலையே இன்று வளர்ந்துள்ளது!**

அறிவை வளர்க்கும் மனிதன் ஆன்ம உணர்வினை வளர்க்காததால் விளையும் கேடுதான் இன்றைய உலகத்தில் இன்னல்கள் யாவும். இதனை உலகச் சான்றோர்கள் ஒவ்வொருவரும் கூறிக் கொண்டே இருக்கின்றனர்.

உலகநிலை இருக்கட்டும். நம் ஒவ்வொருவரின் வாழ்க்கை நிலைதான் என்ன?

உலக மன்றத்தில் ஒரு நாடு பிற நாட்டைக் கண்டு அஞ்சுகிறது என்றால், நமது தனி வாழ்விலும் ஒருவர் மற்றொருவரைக் கண்டு அஞ்சுகிறோம். பொறாமைப் படுகிறோம்! அழுக்காறு, அச்சம், ஆசை முதலிய உணர்ச்சிகளால் உந்தப்பட்டு வாழ்க்கையில் நாம் படாதபாடு படுகிறோம்! அயலார்கள், உற்றார் உறவினர்கள் இவர்களுடன் நாம் ஒன்றி வாழ முடிகிறதா? முடியவில்லையே! நம் குடும்பத்திற்குள்ளேயே எத்தனை யெத்தனை பூசல்கள், போராட்டங்கள்! பாரதக் கதையில் படிக்கும் பங்காளிப் போராட்டம் இன்றும் நம்மிடையே நடந்து கொண்டுதானே இருக்கிறது! சகுனி பேணிய சூதாட்டம் சற்றும்குறைந்தபாடு இல்லையே இன்றும்! போட்டியும் பொறாமையும் நாட்டிலுள்ளது போல் நம் வீட்டிலும் உள்ளன!

இதற்கெல்லாம் மாற்றே இல்லையா?

இருக்கிறது.

விஞ்ஞானத்தை நம் வாழ்வோடு இணைத்து வாழ்வதைப் போல் மெய்ஞ்ஞானத்தையும் இணைத்து நாம் வாழ வேண்டும். மெய்ஞ்ஞானம் நம் வாழ்விற்கு அடித்தளமாக அமைதல் வேண்டும்.

Koviloor Digital Library



மெய்ஞ்ஞானம் என்றதும் கடவுளைப் பற்றி நாம் நினைக்கிறோம். கடவுளைப் பற்றிப் பேசுவதும், அறிந்து கொள்வதும்தான் ஞானம், ஆதலால், அதுவே போதும் என்று எண்ணிவிடுகிறோம்!

**கயவர்களும் கடவுளும்**

மெய்ஞ்ஞானம் என்றால், "இறைவன்" "ஈசன்" "எம்பெருமான்" என்றெல்லாம் ஆரவாரமாகப் பேசுவது, சமயச் சடங்குகளை ஆற்றுவது, சமயச் சின்னங்களை அணிந்து கொள்வது என்று பலரும் நினைக்கின்றனர்.

உலக வரலாற்றைப் பார்த்தால் கடவுளின் பெயரால் பெரும் போர்கள் நடைபெற்றதைக் காணுகிறோம்!

சென்ற இரண்டாம் உலகப்போருக்குக் காரணமாக இருந்த ஹிட்லர் தன்னுடைய பேச்சு ஒவ்வொன்றின் முடிவிலும் "கடவுள் நம்மைக் காப்பார்" என்று கூறித்தான் முடிப்பது வழக்கம்! இலட்சக் கணக்கான யூதப் பெருமக்களை ஈவிரக்கம் இன்றி வதைத்துக் கொன்ற கொடியவன் இந்த ஹிட்லர். இவ்வளவு கொடியவன் இறைவனைத் தனக்குத் துணை சேர்த்துக் கொள்ளுகிறான்!

"விஷ ஊசி வழக்கு" என்ற பிரபலமான கொலை வழக்கு ஒன்று சென்னை நகரில் அண்மையில் நடந்தது. விஷ ஊசி போட்டுப் பலரைக் கொன்று விட்டுப் பணத்தைக் கொள்ளையடித்தவர்கள் தாம் அவ்வழக்கில் எதிரிகளாக இருந்தனர். கொலைக் குற்றத்தில் சம்பந்தப்பட்ட "அப்ரூவர்" கூறிய சாட்சியம் நம்மையெல்லாம் அதிர வைத்தது! கொள்ளையடித்த பணத்தில் இருந்து இருபதாயிரம் ரூபாயைத் திருப்பதி உண்டியலில் போட்டுக் காணிக்கை செலுத்தினார்களாம் கொலை பாதகர்கள்!

கயவர்கள் எப்படிக் கடவுளையே தங்கள் பாதகச் செயல்களுக்கு பங்காளியாக்கிக் கொள்ளப் பார்க்கிறார்கள் என்பதை எண்ணும்பொழுது நம் உள்ளம் பதறுகின்றது!

கொலை செய்வதற்கும் கொள்ளையடிப்பதற்கும், பக்கத்து நாடுகள் மீது படையெடுத்து அழிப்பதற்கும் இறைவனின் துணை கிடைக்குமென்று எண்ணும் ஈனர்களை என்னென்பது!

இன்றைய சமுதாயத்தில் நாம் பார்க்கிறோம், கள்ளச் சந்தை வணிகர்களும், கையூட்டுப் பெறுவோரும், கடவுளைக் கும்பிடத் தவறுவதில்லை!

Koviloor Digital Library



கயவர்கள் அனைவருமே கடவுள் பக்தர்களாகத்தான் காட்சி யளிக்கின்றனர்!

...ஆகையால்தான் அப்பர் அடிகள் கூறுகின்றார்:

"சமயச் சடங்குகள், நெறிகள், கோவில்கள் இவை பற்றிஎல்லாம் கூறும் ஆயிரம்வேதங்களை நாம் ஓதினாலும், நம் மனம் மெய்ஞ்ஞானத்தினை உணரவில்லையெனில் பயனேதும் இல்லை"

"குறிகளும் அடையாளமும் கோவிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியிலீர் மனம் என் சொல் புகாததே!

(தேவாரம் – பொது)

எனவேதான், 'இறைவன்' 'கடவுள்' என்றெல்லாம் ஆயிரம் சாத்திரங்கள் பேசினாலும் பயனில்லை; உண்மையான இறைமை ஞானம் நம் உள்ளத்தில் பதிய வேண்டும் என்கின்றனர் ஞானிகள்.

**இறைமை ஞானம் எது**

அந்த இறைமை ஞானம் எது என்பதை நாம் எளிதாகப் புரிந்து கொள்ளும்படி இனிதாகப் பாடுகின்றார் நம்மாழ்வார்:

"எஞ்ஞான்றும் எங்கும் ஒழிவற நிறைந்து நின்ற
மெய்ஞானச் சோதிக் கண்ணனை மேவுதுமே"

(திருவாய்மொழி — 3ப. 2தி )

"எஞ்ஞான்றும் எங்கும் ஒழிவற
நிறைந்து நிற்பது இறைமை"

என்பதே அந்த மெய்ஞ்ஞானம்.

அருவ மூர்த்தி என்றும், அருவுருவ மூர்த்தி என்றும், அற்புத மூர்த்தி என்றும் ஆதி மூர்த்தி என்றும், அறிவரிய சொல்லரிய நினைப்பரிய மூர்த்தி என்றும், ஆன்ம மூர்த்தி என்றும் ஆனந்த மூர்த்தி என்றும் இறைமை பற்றி ஞானிகள் கூறுவதெல்லாம்,

"எப்பொழுதும் எங்கும் எல்லாமாய் நிற்பது இறைமையே"

என்ற மெய்ஞ்ஞானத்தினை விளக்குவதற்காகத்தான்.

"பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரண ஆனந்தமே..."

(தாயுமானவர்)

Koviloor Digital Library



"எல்லாம் சிவனென்ன நின்ருய் போற்றி
எரிசுடராய் நின்ற இறைவா போற்றி"

(தேவாரம்—திருவதிகை-வீரட்டானம்)

என்று இந்த உண்மை ஞானத்தினை உணர்த்துகிருர் நாவுக்கரசர்.

இந்த மெய்ஞ்ஞானத்தினை நாம் அறிந்து கொண்டால் மட்டும் போதாது. நாம் அதை உணர வேண்டும், ஆழ்ந்து உணர வேண்டும். அந்த ஞானம் நம் உள்ளத்தோடும் உயிரோடும் கலந்து நம் அன்ருட வாழ்விலே அது பிரதிபலிக்க வேண்டும்.

**உண்மைச் சமயம்**

"சமயம் என்பது வெறும் அழகுப் பேச்சல்ல, கொள்கையல்ல, கோட்பாடு அல்ல. அதை நாம் உணர்தல் வேண்டும். உணர்ந்து அதுவாகவே நாம் ஆகிவிட வேண்டும். ஒன்றைக் கேட்டு ஆமோதித்து விடுவதல்ல உண்மைச் சமயம். நாம் உணரும் உண்மை எதுவோ அதுவாகவே நம் ஆன்மா மாறி மலர வேண்டும். சமயம் என்பது இதுதான்"—என்று கூறுகின்ருர் சுவாமி விவேகானந்தர்.

"Religion is realisation; not talk, nor doctrine, nor theories, however beautiful they may be. It is being and becoming, not hearing or acknowledging; it is the whole soul becoming changed into what it believes. That is religion"

(Essentials of Hinduism—Swami Vivekananda)

எனவே, "எல்லாம் இறைமை" என்ற மெய்ஞ்ஞானம் நம் உயிரோடும் உணர்வோடும் ஒன்ற வேண்டும். இதற்கு என்ன செய்வது?

"எல்லாம் இறைமை, எங்கும் இறைமை" என்ற மெய்ஞ் ஞானத்தினை இதயத்தில் இசைத்து நிற்பது எளிது என்கிருர் ஞானக்கவி பாரதியார்:

Koviloor Digital Library



"யாண்டும் இந்த இன்ப வெள்ளம்
என்று நின்னுள் வீழ்வதற்கே
வேண்டும் உபாயம்
மிகவும் எளிதாகுமடா!

*எளிதான உபாயம் எது?*

எங்கும் நிறைந்திருந்த
ஈசவெள்ளம் என்னகத்தே
பொங்குகின்றது என்றெண்ணிப்
போற்றி நின்றால் போதுமடா

*மேலும் கூறுகிறார்!*

சாத்திரங்கள் வேண்டா
சதுமறைகள் ஏதுமில்லை,
தோத்திரங்கள் இல்லை உளம்
தொட்டு நின்றால் போதுமடா!

(பரசிவ வெள்ளம்)

*மெய்ஞ்ஞானத்தை நம் உள்ளத்தில் பதிய வைப்பது இவ்வளவு எளிதாகவா இருக்கிறது என்று நாம் ஆச்சரியப்படுகிறோம்.*

*உண்மையிலேயே அது அவ்வளவு எளிதுதான் என்பதை நாம் ஒவ்வொருவரும் சிறிது முயன்றால் அனுபவித்துக் காணலாம்!*

**இறையுணர்வின் ஏற்றம்**

*ஒவ்வொரு நாளும் நாலைந்து நிமிடங்கள் கண்களை மூடிக் கொண்டு இவ்வாறு நினைத்தால் போதும்;*

*"இவ்வுலகம்; இதுதான் எவ்வளவு பெரியது! பரந்த கடல்கள், உயர்ந்த மலைகள், நீண்ட நதிகள்! இவ்வளவு பெரிய பூமிக்கோளம் பந்துபோல் சுழலுகின்றது பரவெளியில்! பரவெளியோடு ஒப்பிட்டால் பூமி அணுவுக்கும் அணுவாக அல்லவா ஆகிவிடுகின்றது! இப்பூமியைப் போல் எத்தனை ஆயிரம் மடங்கு பெரியது சூரியன்! இச்சூரியனைப்போல் பலகோடி சூரியன்கள் நட்சத்திர மண்டலத்திலே ஒளித்திரள்களாகத் தெரிகின்றனவே! இவற்றை எல்லாம் அடக்கி நிற்கும் பரவெளியின் எல்லைதான் எது? அதன் மூலம் எது? முடிவு எது? ஆதி எது? அந்தம் எது?*

*"ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெரும் ஜோதியாக அல்லவா இறைமை இலங்குகிறது.*

Koviloor Digital Library



"அண்ட பகிரண்டங்களையும் அடக்கி நிற்கும் பரம் பொருளின் பகுதியாகத் தானே நானும் இருக்கிறேன்!

"நான்", "நான்" என்று இதையெல்லாம் எண்ணிப் பார்க்கிறேனே, நான் வேறு, பரம் பொருள் வேறு? இல்லையே! பரம் பொருள் இன்றி நான் யார்? பரம் பொருளும் நானும் வேறல்ல. அண்டங்களனைத்தையும் அடக்கி நிற்கும் இறைமையோடு நானும் இணைந்துள்ளேன். இறைமையும் நானும் வேறல்ல.

"எல்லையில்லாப் பர வெளியில் எங்கோ ஒளிருகின்றதே எண்ணற்ற நட்சத்திரங்களின் ஒளித்திரள், அதே ஒளிதான் என் இதயத்திலும் ஒளிர்கின்றது!"

இவ்வாறு இதயம் ஒன்றி எண்ணினால் போதும், எல்லையில்லாப் பரம் பொருளான இறைமையோடு நம் இதயம் இசைவதை நாம் உணருகிறோம்! பரமாத்மாவோடு ஜீவாத்மா ஒன்றுவதை நாம் உணர்கின்றோம்!

இப்படி இறைமையோடு நம் இதயம் இசையும் பொழுது இதயம் இளகி இன்பம் பெருகுகிறது! எல்லையில்லாத இன்பம் அது!

இந்த நிலையில்தான், இறைமையினை "ஆற்றின்ப வெள்ளமே" "மாளா இன்ப மாகடலே" என்றெல்லாம் ஏத்துகின்றனர் அடியார்கள்.

"தேனும் பாலும் கன்னலும்
அமுதுமாகித் தித்தித்து என்
ஊனில் உயிரில் உணர்வினில்
நின்ற ஒன்றை உணர்ந்தேனே!"

(திருவாய்மொழி - 8 ப. 8 தி.)

"ஊனாய் உயிராய் உணர்வாய் என்னுட் கலந்து
தேனாய் அமுதமுமாய் தீங்கரும்பின் கட்டியுமாய்..."

(திருவாசகம் – திருவம்மானை)

என்று, இறையுணர்வால் எழும் இன்பத்தைக் கூறுகின்றனர்.

இந்த இறையுணர்வினைப் பெறும் நாமும் நம் இதயத்தில் ஊறிப் பெருகும் இன்பக் கடலிலே மூழ்கித் திளைக்கின்றோம்! பேரானந்தம் என்ற பெருங்கடலிலே ஆழ்ந்து விடுகின்றோம்!

Koviloor Digital Library



இப்பொழுது "நான்" "எனது" என்று நம்மைத் தனித்து எண்ணும் எண்ணமும் அந்த இன்ப வெள்ளத்திலே கரைந்து மறைந்து விடுகிறது!

இந்த உச்ச நிலையைத்தான்,

"பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து
ஆவி யாக்கை யான் எனது என்று யாதும்
இன்றி அறுதல்"

(திருவாசகம்-பிரார்த்தனைப்பத்து)

என்கிறார் மாணிக்கவாசகர்.

தன்னை மறக்கும் இந்நிலையில் தான் மனிதன் எல்லாவற்றிலும் தன்னைக் காணுகிறான்! தன்னிலே எல்லாவற்றையும் காணு கிறான்!

ஒவ்வொரு நாளும் இச் சிந்தனையைப் பயின்று வரும்பொழுது, இந்த நிலையினை நாம் எளிதாக எய்திவிடுகிறோம்.

**ஈடில்லா இன்ப அனுபவம்**

இந்த மெய்ஞ்ஞான உணர்விலே ஊறி நிற்கும் உள்ளத்தோடு இவ்வுலகை நோக்கும் பொழுதுதான் எத்தகைய மாறுதல்!

"எங்கும் இறைமை, எல்லாம் இறைமை" என்ற மங்காத ஞானத்தை மனத்திலே நிறுத்தி நாம் உலகத்தை உற்று நோக்கு கையில் எல்லாமே ஒரு புத்தொளி பெற்றுத் துலங்குகிறது!

இறைமையோடு இணையும் நம் இதயம் புதிய அனுபவத்தைப் பெறுகின்றது!

பூத்துக் குலுங்கும் செடிகள் நம்மைக்கண்டு புன்னகை புரி கின்றன! சூரியனும் சந்திரனும் சுடர்விடும் நட்சத்திரங்களும் நம் இதயத்தோடு இணைந்து இன்ப ஒளி வீசுகின்றன! உயிரினங் களின் பார்வை ஊழிக்கால உறவை நமக்கு உணர்த்துகிறது! இயற்கைப் பொருள்கள் எல்லாம் நம் உள்ளத்தோடு ஒன்று கின்றன, உறவாடுகின்றன!

"காக்கை குருவி எங்கள் சாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்

Koviloor Digital Library



நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்"

(பாரதியார்)

என்ற எக்களிப்போடு நம் உள்ளம் துள்ளுகிறது!

"எங்கும் எல்லாமாகி இலங்கும் இறைமைதான் ஒவ்வொருவர் இதயத்திலும் இலங்குகிறது. ஆதலால் அதுவே நீயாக உள்ளாய், இறைமையும் நீயும் இரண்டல்ல"—என்ற உண்மை நம் பாரத நாட்டுப் பழம் பெரும் ஞானிகள் உலகுக்கு அளித்த ஒப்பற்ற ஞானமாகும்.

மண்ணிலே பிறந்துழலும் மனிதன் எங்கே! எண்ணுதற்கும் எட்டாத இறைமை எங்கே! இரண்டும் இணைந்துள்ளன என்ற ஈடில்லா உண்மையினை எடுத்துரைக்கும் ஞானத்தை என் னென்பது!

**தெய்வநிலை**

"யானே நீ என்னுடைமையும் நீயே
வானே ஏத்தும் எம் வான வரேறே"

(திருவாய்மொழி – 2ப. 9தி.)

"யானே நீ" என்று அழுத்தமாக கூறும் அடியார்களின் ஞானத்தை நாமும் பெறும் பொழுது உலகனைத்தோடும் நமக்குள்ள உறவினை உணரும் உயர்ந்த நிலையினை நாம் எய்துகிறோம்!

மனித நிலையிலிருந்து தெய்வ நிலையினை நாம் எட்டி விடுகிறோம்!

"மனித இனத்தின் தெய்வீகத் தன்மையினைக் காட்டி, வாழ்வின் அசைவு ஒவ்வொன்றிலும் அது ஒளிரும் படி போதிப்பதே எனது இலட்சியமாகும்" என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

"My ideal indeed can be put into a few words, and that is to preach unto mankind their divinity, and how to make it manifest in every movement of life"

(Swamy Vivekananda—

A short life of Vivekananda – Advaita Ashram–1971)

Koviloor Digital Library



ஆம். மனிதனின் தெய்வீகத் தன்மையைத்தான் ஞானிகள் உணர்த்துகின்றனர்! ஞான நூல்கள் உணர்த்துகின்றன.

மனிதன் தெய்வமாகி விடும் பொழுது மாநில வாழ்வு சுவர்க்க மாகி விடுகிறது!

மெய்ஞ்ஞானத்தால் நாம் அடையும் மேன்மை நிலை இது!

"எல்லாமாகி நிற்பது இறைமை" என்ற மெய்ஞ்ஞானத்தை உணர்ந்து மக்கள் சமுதாயம் இயங்கினல், இன்றைய விஞ்ஞான உலகம் எவ்வளவு சிறந்து விடும்! உலகில் விஞ்ஞான அறிவோடு மெய்ஞ்ஞான உணர்வும் ஒரு சீராகக் கலந்து விட்டால் இவ்வு லகம் இலட்சிய பூமியாக மாறிவிடுமே!

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற ஞானம் பரவி விட்டால் நாடுகளிடையே வேறுபாடு அற்றுப்போகும். வேறு பாடு இல்லையெனில் மாறுபாடு ஏது? போட்டி ஏது? பொருமை ஏது? பூசலும் போரும் ஏது? மனித குலத்தின் அழிவுக்கு வழி கோலும் வகையில் விஞ்ஞான அறிவை மனிதன் பயன் படுத்துவது ஏது? உலகில் வறுமை மறையும், வளமை பெருகும்! சிறுமை மறைந்து விடும், சீலம் ஓங்கி விடும்! உண்மையான உலக அமைதி உறுதியாக நிலைத்துவிடும்!

இறைமை ஞானந்துடன் இசைந்து வாழும் நம் இதயத்திலே இலங்கும் ஒளியால் நம் சிந்தனையும் செயலும் சீர்மை பெறு கின்றன.

"உலகனைத்'தொடும் உறவுடையோம் என்ற ஞானத்தால் நாம் எல்லோரிடமும் அன்பு காட்டுகிறோம். அறநெறி போற்றுகிறோம். ஒழுக்கத்தால் உயர்கிறோம். உண்மையைப் பேணுகிறோம். அச்சம் அகற்றுகிறோம். ஆற்றலைப் பெருக்கு கிறோம். பற்றின்றிக் கடமையாற்றும் பாங்கினை நாம் பயிலுகின்றோம். அருள் கொண்ட உள்ளத்தால் அன்பர் பணி செய்கிறோம். தந்நலம் மறந்து பிறர் நலம் வளர்க் கின்றோம். அடக்கத்தால் அமரநிலை எய்துகிறோம்!"

இவ்வாறு, வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டி நிற்பது இறைமை ஞானமேயாகும்.

Koviloor Digital Library



எனவே இறைமை ஞானம் என்பது ஏட்டுச் சுரைக்காய் அல்ல. வாழ்க்கைக்கு உதவாத வரட்டு வேதாந்தம் அல்ல. இன்பமான வாழ்விற்கு இன்றியமையாத நெறி முறையே இறைமை ஞானம். திக்குத் தெரியாது தவிக்கும் நம்மைத் தெய்வநிலைக்கு உயர்த்துகிறது அந்த மெய்ஞ்ஞானம்!

இப்பொருளைக் கண்டார்
 இடருக்கோர் எல்லை கண்டார்
எப்பொருளும் தான் பெற்றிங்கு
 இன்பநிலை எய்துவரே.

(பரசிவ வெள்ளம்)

என்கின்றார் பாரதியார்.

**ஞானச் சுடர்**

எண்ணத்திற்கும் எட்டாதது இறைமை. இருப்பினும், அந்த இறைமையின் இலக்கணங்கள் பற்றிக் கூற முற்படுகின்றன சமய நூல்கள்! எனவே எத்தனையோ முரண்பாடுகள், மோதல்கள் தோன்றுகின்றன. அத்தகைய சமயச் சர்ச்சைகளிலே நாம் இறங்கிச் சிக்கிக் கொள்ளுவது கூடாது என்பதற்காக, இறைமை என்பதே இறைமை ஞானந்தான், அந்த ஞானச் சுடராகவே அது உள்ளது என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளனர் அடியார்கள்.

"இறைவனின் கோலம் இது, பேர் இது, உருவம் இது என்றெல்லாம் சமய ஞானிகள் பேசலாம். ஆனாலும், இறைமை என்பது ஞானச் சுடர் விளக்காய் விளங்குகிறது என்பதை அன்றி, இறைவனின் பெருமை இது தான் என்று வேறு எதையும் அவர்களால் காண முடியாது" என்று தெளிவாகக் கூறுகின்றார் நம்மாழ்வார்:

"நிறமுயர் கோலமும் பேரும் உருவும் இவையிவை என்று
அறமுயல் ஞானச் சமயிகள் பேசிலும், அங்கங்கெல்லாம்
உறவுயர் ஞானச் சுடர் விளக்காய் நின்றது அன்றியொன்றும்
பெறமுயன்றாரில்லையால், எம்பிரான்றன் பெருமையையே!"

(இயற்பா – திருவிருத்தம்)

"எங்கும் நிறைந்துள்ளது இறைமை" என்பதே இறைமை ஞானம். "இந்த ஞானச் சுடராகவே இறைமை உள்ளது" என்கிறார் அந்த ஞானி:

Koviloor Digital Library



"சூழ்ச்சி ஞானச் சுடரொளியாகி என்றும்
எழ்ச்சிக் கேடின்றி எங்கணும் நிறைந்த எந்தாய்"

(திருவாய்மொழி -3 ப. 2 தி.)

"எல்லாவுலகமும் இறைவன், இந்த ஞானச்சுடர் விளக்காய் நிற்பது இறைமை" என்கிருர் நாவுக்கரசர்:

"எல்லா வுலகமும் ஆனுய் நீயே
ஏகம்பமேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர் விளக்காய் நின்ருய் நீயே".

(தேவாரம் – திருவையாறு)

"மெய்ஞ்ஞானமான மெய்ச் சுடர்" என்று இறைமையைப் போற்றுகிருர் மாணிக்கவாசகர்:

"மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே"

(திருவாசகம்)

"என்றும் எங்கும் எல்லாமாகி நிற்கும் இறைமை நம் இதயத்திலும் இயங்குகிறது; இவ்வாறு இறைமையோடு இசைந்துள்ள நாம் அண்டசராசரங்களோடும் அனைத்துயிர்களோடும் உறுதியான உறவுடையோம்," என்ற உண்மையினை உணர்ந்து உணர்ந்து உருகுவதுதான் இறைமை ஞானமாகும்.

**இன்பச் சுடர்**

இந்த உண்மை ஞானந்தான் உலவாத இன்பத்தை நமக்கு அளிக்கின்றது. எனவே, "ஞானச்சுடரான" இறைமையினை "இன்பச் சுடரா"கவும் காண்கின்றனர் ஞானிகள்:

"உலர்ந்து போனேன் உடையானே
உலவா இன்பச் சுடர் காண்பான்"

(திருவாசகம் – பிரார்த்தனைப் பத்து)

சாத்திரங்கள் தோத்திரங்கள், வந்தனை வழிபாடு இவையனைத்தின் பயனும் இந்த இறைமை ஞானத்தினையும் ஈடில்லாத இன்பத்தினையும் நாம் அடைவதுதான்.

Koviloor Digital Library


இதனை நாம் எய்தவில்லையெனில் பிறவிப் பயனைப் பெறாது போய் விடுகிறோம். மனிதப் பிறவியின் மாபெரும் வாய்ப்பினை இழந்து விடுகிறோம்!

ஆதலால் தான், இறைமையினை "ஞானச்சுடர்" என்றும் "இன்பச்சுடர்" என்றும் ஏத்துகின்றனர் மெய்யடியார்கள்.

நம் இதயத்தில் ஒளிரும் இந்த ஞானச்சுடர் ஒளியால் ஈடில்லாத இன்ப வாழ்வினை நாம் அனைவரும் எய்துவோமாக!

---

கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்-630 307